
# ஈழ விடுதலைப் போராட்டமும் காந்தியமும்



சூரியதீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்கள் அவர்கட்கு.

தோழமையுடன்,

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழ விடுதலைப் போராட்டமும்
காந்தியமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ விடுதலைப் போராட்டமும் காந்தியமும்

சூரியதீபன்

சோழன் படைப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழ விடுதலைப் போராட்டமும் காந்தியமும் ■ சூரியதீபன் ■ முதற்பதிப்பு : டிசம்பர் 2009 ■ சோழன் படைப்பகம், 5D, பொன்னம்பலம் சாலை, கே.கே.நகர், சென்னை - 78. கைபேசி : 94443 02967 ■ ஒளிஅச்சு வடிவமைப்பு : கீதா வேலாயுதம் ■ முகப்பு : விஜயன் ■ அச்சு : அம்மன் பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை ■ பக்கங்கள் : 160

விலை : ரூ 100/-

பதிப்பாளர் கு. பூபதி
thozhamaiboopathy@gmail.com

**Eezha Viduthalai Porattamum Gandhiyamum** ■ **Suriyadeepan** ■ First Edition : December 2009 ■ Published by : Chozhan Padaippagam, 5D, Ponnambalam Salai, K.K. Nagar, Chennai - 78. Mobile : 94443 02967 ■ Layout : Geetha Velayutham ■ Cover Design : Vijayan ■ Printed at : Amman Printing works, Chennai ■ Pages : 160

Price : **Rs. 100/-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஈழ விடுதலைப் போராட்டமும் காந்தியமும் | 9 |
| 2. | புலி எதிர்ப்பாளர்களின் இன்னும் சில முகங்கள் | 56 |
| 3. | ஈழம் — ஆன்மா செத்துப் போனவர்கள்யார்? | 72 |
| 4. | புலிகள் அல்ல புலிவேடக்காரர்கள் | 84 |
| 5. | இந்திய மௌனமும் தமிழக எதிர்வினையும் | 92 |
| 6. | எதிர்ப்பில் முகிழ்க்கும் பண்பாடு | 101 |
| 7. | தொடரும் எழுத்துலக மௌனம்: நீங்களே யோசியுங்கள் நீங்கள் எப்படி ஆனீர்களென்று | 109 |
| 8. | முத்துக்குமாரைக் கொலை செய்தோம் | 122 |
| 9. | பூக்கூடையில் மினுக்கும் கத்தி | 134 |
| 10. | காலத்தின் அவசியமா உலகத் தமிழ்மாநாடு? | 144 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. ஈழ விடுதலைப் போராட்டமும் காந்தியமும்

அந்தக் கதையின் காட்சி இப்படித்தான் தொடங்கிற்று. முதல் காட்சி அல்ல; முக்கியமான வரலாற்றுக் காட்சி அது. சேனநாயகா இலங்கையின் முதல் பிரதமராகப் பதவியேற்ற 1948–ம் ஆண்டு. நாடாளுமன்றத்தில் இந்திய வம்சாவளியினர் என்று சொல்லப்பட்ட மலையகத் தமிழரை நாடற்றவராக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களான தமிழர்கள் இந்திய அரசின் உதவிகளைப் பெற்றுக்கொண்டே, இலங்கையின் உரிமைகளையும் பெற்றுக் கொள்கிறார்கள் என்று சேனநாயகாவிலிருந்து சிங்களர் தலைவர்கள் பலரும் கூறிவந்ததை – இப்போது நடைமுறைக்குக் கொண்டுவந்தார்கள். மலையகத் தமிழர்கள் இலங்கைக்கு உரியவர்கள் என்ற பக்கத்தை மூடி – இந்தியாவுக்கு உரியவர்கள் என்ற பக்கத்தைத் திறந்துவைப்பது – சிங்கள இன மோகத்தை ஊதிப் பெருக்கச் செய்தது.

"இன்று மலையகத் தமிழர்களின் உரிமைகளைப் பறிக்கும் சிங்களத் தலைமை நாளை ஈழத் தமிழ் மக்களின் உரிமைகளையும் பறிக்க மாட்டார்களென்பது என்ன நிச்சயம்?"

– என்று கேள்வி எழுப்பினார்கள் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் போன்ற தமிழ்த் தலைவர்கள். தமிழர் உரிமைகளைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பதற்காக சமஷ்டிக் கட்சி என்ற தமிழ்அரசுக் கட்சி இவர் களின் முயற்சியால் தொடங்கப் பெற்றது.

1956 ஜூன் மாதம் 5ந்தேதி முதல் சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழியாக இருக்கும் என்ற சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. "காந்திய வழியில் நாடாளுமன்றப் படிக்கட்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் களுடன் 200 கட்சித் தொண்டர்கள் அமர்ந்து முழுநாளும் அமைதியாய் உண்ணாநோன்பு இருப்பார்கள்" என தமிழ் அரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகம் அறிவித்தார்.

"யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருக்கோணமலை ஆகிய இடங்களிலிருந்து வந்த தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் ஜூன் நான்காம் தேதி பம்பலப்பிட்டி பிள்ளையார் கோவிலில் தங்கியிருந்தனர். ஐந்தாம் தேதி காலை நாடாளுமன்றத்தின் எதிரிலுள்ள காலிமுகத் திடலின் தென்கரை முகப்பில் கூடிய வர்கள் இருவர் இருவராக கைகளில் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி, பக்திப் பாடல்கள், தேவாரம் பாடிய படி, காலிமுக மைதானத்தில் இறங்கி நாடாளுமன்றக் கட்டடத்தை நோக்கி ஒழுங்குமுறையாக நடக்கத் தொடங்கினர். இதே சமயம் சுமார் ஐநூறு சிங்களவர்களும் காலிமுகத் திடலில் வந்து திரண்டனர். இரண்டு தினங்களாகவே சில சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் சிங்களம் மட்டுமே மசோதா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் தினத்தன்று தமிழரசுக் கட்சியினர் நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு உடைக்கப் போவதாக செய்திகள் வெளியிட்டுக் கொண்டிருந்தன. தொண்டர்கள் வரிசையாகப் பின் தொடர செல்வநாயகமும், வன்னிய சிங்கமும் நடை பவனியின் முன் வரிசையில் வழி நடத்திச் சென்றனர். இவர்களிருவருக்கும் பின்னால் நாடாளு மன்ற உறுப்பினர்கள் சென்றனர். நாகநாதன் இதில் சேர் வதற்கு தாமதமாகி விட்டார்.

காலிமுக மைதானத்தில் திரண்டிருந்த சிங்களக் காடை யர்கள் ஊர்வலத்தில் வந்தவர்கள் பிடித்திருந்த சுலோக அட்டைகளைப் பறித்துக் கிழித்து, அவை கட்டப்பட்டிருந்த தடிகளால் தலைவர்களையும், தொண்டர்களையும் தாக்கினர். வன்னிய சிங்கத்தை கால்களைப் பிடித்து சிறிது தூரம் நிலத்தில் இழுத்துச் சென்றனர். புரக்டர் இராச நாயகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவரின் காதை ஒருவன் கடித்து ஒரு துண்டு எடுத்து விட்டான். தொடர்ந்து நடந்து சென்றவர்கள் காலிமுகத் திடலின் வடக்கு எல்லையில் போலிசாரால் தடுத்து நிறுத்தப் பட்டனர். இதனால் மைதானத்திலேயே தொண்டர்களும் தலைவர்களும் அமைதியாக அமர்ந்து சத்தியாக்கிரகம் தொடங்கினர். ஜி.ஜி. பொன்னம்பலமும் அங்கு வந்து சிறிது நேரம் சத்தியாக்கிரகிகளுடன் இருந்தார். வவுனியா சுந்தர லிங்கம் இவர்களுடன் இருந்து கொண்டு காடையர்களை நையாண்டி செய்து கொண்டிருந்தார். சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருந்த தலைவர்கள் மீதும் தொண்டர்கள் மீதும் காடையர் கற்களால் எறிந்து தாக்கினர். இவற்றில் ஒரு கல் செல்வநாயகத்தை நோக்கி வந்தது. இதைத் தடுக்க முயன்ற அமிர்தலிங்கத்தின் தலையில் அந்தக் கல் விழுந்து தாக்கியது. தலையில் பலத்த காயம் ஏற்பட்டு இரத்தம் கொட்டியது. நாடாளுமன்றத்தின் முன்பாகவும் காலிமுகத்திடலிலும் நின்ற போலிசார் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்களே தவிர வேறு எதுவும் செய்யவில்லை. நிலைமை மோசமாகிக் கொண்டு வந்தது. செல்வநாயகத்தின் ஒரு மகன் காரில் இருந்தார். அவரைக் காருடன் சேர்த்து காலிமுகத் திடல் கடலில் தள்ளுவதற்கு காடையர் முயன்றனர். சிலர் தலை யிட்டு தடுத்து விட்டனர். காலிமுகத்திடல் சிறிது நேரம் காடையர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. நாடாளு மன்றத்துக்குப் பின்னாலுள்ள பழைய செயலகக் கட்டடத்தி லுள்ள அலுவலகங்களில் பணியாற்றுபவர்களும் காலிமுகத் திடலுக்கு வந்தனர். மழை சிறு தூரலாக ஆரம்பித்து பெருத்தது. இச்சமயம் நாடாளுமன்ற மாடியில் பண்டார நாயகா வந்து பார்த்துவிட்டுச் சிரித்துச் சென்றார். “நன்றாக நனையட்டும் சூடு தணியும்” என்று பண்டார நாயகா ஆசிர்வதித்துச் சென்றதாக பின்னர் பத்திரிகையாளர்கள் சிலர் சொன்னார்கள்.

மழையும் காடையர்களின் அட்டகாசமும் காவல் துறை யினரின் கையாலாகாத் தனமும் காரணமாய் சத்தியாக் கிரகத்தை பிற்பகலில் கைவிடுவதாக செல்வநாயகம் அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றத்தில் சிங்களம் மட்டுமே மசோதாவைச் சமர்ப்பித்து பிரதமர் பண்டாரநாயகா சுருக்கமாகச் சில வார்த்தைகள் பேசினார். காடையரின் கல்வீச்சில் தலையில் ஏற்பட்ட காயத்துக்கு கொழும்பு மருத்துவமனை வெளி நோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெற்றுக் கொண்டு தலையில் கட்டப்பட்ட வெள்ளைத் துணியுடன் அமிர்தலிங்கத்தை வவுனியா சுந்தரலிங்கம் சபைக்குள் அழைத்து வந்தார். இதைப் பார்த்த பிரதமர் பண்டாரநாயகா "போரின் விழுப்புண்" என்று கிண்டலடித்தார்.

காலிமுகத் திடலில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த டாக்டர் நாகநாதனும் தாக்கப்பட்டார். நாகநாதன் தன் விவரிப்பாக அந்தச் சம்பவம் பற்றி அவரே சொல்லி யிருக்கிறார்.

"நாங்கள் ஏற்கனவே தீர்மானித்தபடி நாடாளுமன்றப் படிகளில் இருந்து சாப்பிடாமல் சாத்வீக முறையில் அமைதியாக இருப்பதற்குச் சென்றோம். நான் கொஞ்சம் பிந்திப் போனேன். மற்றவர்கள் முன்னே போய்விட்டார்கள். தாமதமாக வந்த நான் கோல் ஃபேஸ் ஹோட்டல் பக்கமிருந்து காலிமுகத்திடலை நோக்கி நடந்தேன். அங்கு நின்ற காடையர் களில் சிலர் என்னை அடையாளம் கண்டு கிண்டலும் கேலியும் செய்து கூச்சலிட்டனர். நான் அதைப் பொருட்படுத்தாமல் நடந்துகொண்டிருந்தேன். சிலர் எனக்கு அருகிலும் வந்தார்கள். திடீரென்று அவர்கள் என்னைத் தாக்கத் தொடங்கினார்கள். சத்தியாக்கிரகி என்ற நினைவு வர தாக்குதலைத் தாங்கிக் கொண்டேன். கும்பலிலிருந்தவர்கள் எனது வேட்டியை இழுத்து உருவிக்கொண்டனர். (பட்டு வேட்டி, பட்டுச் சட்டை, பட்டுச் சால்வை அணிந்து கட்சிப் பொதுக் கூட்டங்களுக்கு நாகநாதன் இப்படித்தான் வருவார்.) பின்னர் அந்தக் கும்பல் என்னைக் கீழே தள்ளி வீழ்த்திய பின்னரும் தொடர்ந்து தாக்கிக் கொண்டிருக்கையில் ஒருவன் எனது கொட்டை மீது (ஆணுறுப்பு) ஏறி மிதிப்பதற்கு முயன்றான். இனியும் சத்தியாக் கிரகம் என்று பொறுத்துக் கொண்டிருந்தால் என்னை உயிரோடு விடமாட்டார்கள் என்பதை உணர்ந்தேன். என் கால்கள் மீது ஏறி இருந்து தாக்கிக் கொண்டிருந்தவனை உதறித் தள்ளிவிட்டுப் பக்கத்தில் இருந்தவனை அடித்துத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளியபடி, எழுந்து கும்பலில் நின்றவர்களுக்கு கைகளாலும் கால்களாலும் விட்டேன் அடி. எல்லோரும் தலை தெறிக்க ஓடி விட்டார்கள்.

"காலிமுக ஹோட்டலில் மாடி அறை ஒன்றின் முன்பாக நின்று இக்காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டு நின்ற வெள்ளைக்காரன் ஒருவன் கீழே இறங்கி வந்து என்னை ஹோட்டலுக்குள் கூட்டிச் சென்றான். உள்ளே சென்றதும் மேசை விரிப்புத் துணியை எடுத்துக் கட்டிக் கொண்டேன். அந்த வெள்ளைக்காரன் எனக்கு தேநீர் அல்லது குளிர்பானம் எடுத்துத் தருவதற்கு முன் வந்தான். நான் இன்று உபவாசம் என்று மறுத்து விட்டேன்."

*(ஈழம் – முடிவில்லாப் பயணத்தில் முடியாத வரலாறு - - எஸ்.எம். கோபால ரத்தினம் – பக் 97—100)*

இவர்கள் அடிக்க மாட்டார்கள். அமைதி வழிக்குள்ளேயே வளையமிடுவார்கள் என்பதை சிங்கள ஆட்சியாளர்களினும் கூடுதலாய் சிங்களக் காடையர் புரிந்து கொண்டார்கள். சிங்கள மேலாதிக்கத்தை நிறுவுவது என்பதில் இது அடித்தளம் அமைத்தது.

தமிழர் வாழுமிடங்களையும் ஆக்கிரமிக்கத் தொடங்கி னார்கள். இலங்கைப் பரப்பில் 29 விழுக்காடான தமிழர் தாயகப் பகுதியில் சிங்களக் குடியேற்றம் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையும், வடக்கில் முப்பது சதவீதப் பரப்பிலும் சிங்களர் குடியேற்றப் பட்டனர். 1948–ம் ஆண்டில் கல்முனை மாவட்டத்தில் 4.5 விழுக்காடு இருந்த சிங்களர் 1990–ஆம் ஆண்டில் 38 விழுக் காடாகப் பெருகினர். பின்னர் அதுவே பெரும்பான்மைச் சமுதாயமாகி கல்முனை மாவட்டத்தையே திகாமடுல்ல என்று சிங்களப் பெயர் சூட்டுமளவுக்கு நிலைமை மோசமானது.

வடக்கையும் கிழக்கையும் பிரிக்கிறது மணலாறு. அது சிங்களப் பகுதியாக ஒலிவியா என்று பெயர் மாற்றப்பட்டு, குடியேற்றப்பட்ட சிங்களர்களுக்கு பாதுகாப்பாக, இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. பட்டிப்பாறை ஆறு என்ற தமிழ்ப் பகுதி கல்லோயா என்று மாற்றம் செய்யப்பட்டு, சிங்கள வர்கள் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்டனர். இங்கு தூர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருந்த குளத்தை தூரெடுத்து செப்பனிட்டு, சேனநாயகா சமுத்திரம் என்று பெயரிட்டிருந்தனர்.

*1956*–ல், சிங்களம் மட்டுமே மசோதாவை எதிர்க்க முன்வந்த காரணத்தாலே, காலிமுகத் திடலில் தாக்குதல் நடத்திய சிங்களர்கள் போலவே, கல்லோயாவில் குடியேற்றப் பட்ட சிங்களர்களும் அதே அராஜகத்தைத் தொடர்ந்தனர்.

கல்லோயாவிலும் அம்பாறையிலும் திட்டமிட்டுத் தமிழர்களின் வசிப்பிடங்களிலும் கல்லோயா அபிவிருத்திச் சபை அலுவலகங்களிலும் தாக்கதல்கள் நடைபெற்றன. தமிழர் களின் சொத்துகள் கொள்ளையடிக்கப்பட்டன. குடியேற்றத் திட்டங்களிலிருந்து சிங்களவர்களால் தமிழர்கள் விரட்டி யடிக்கப்பட்டனர். சில முஸ்லிம் குடும்பங்களும் பாதிக்கப் பட்டன.

கல்லோயா அபிவிருத்திச் சபைத் தலைவர் கனக சூரியரும் மற்றும் சபையின் தமிழ் உத்தியோகத்தர்களும் அலுவலகத்திலிருந்து வெளியே வரமுடியாதபடி காடையர் களால் முற்றுகையிடப்பட்டிருந்தனர். கனகசூரியருக்கும் அலுவலர்களுக்கும் என்ன நடந்ததென்ற தகவல்களே பெற முடியாதிருந்தது. கல்முனை நாடாளுமன்றப் பிரதிநிதி கேட் முதலியார், எம்.எஸ். காரியப்பர் கல்லோயாவில் நிலைமை மிக மோசமாகி விட்டதென்ற செய்தியை தலைவர் செல்வ நாயகத்துக்கு தினமும் அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருந்தார். நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை கொண்டு வந்து பேசுவார். இடது சாரித் தலைவர்களும் சுந்தரலிங்கம், பொன்னம்பலமும் தங்கள் கவலையையும் கருத்தையும் தெரிவிப்பார்கள். பிரதமர் பண்டாரநாயகா நிலைமை கட்டுப் பாட்டுக்குள்ளிருப்பதாகப் பதிலளித்தார்.

ஆதிக்க சக்திகள் தொடர்ந்து வன்முறையை விதைத்துக் கொண்டிருக்க, நாடாளுமன்றத்தில் பேச்சு, பேச்சு என்று சனநாயகம் என்ற பெயரில் வீணாய் விவாதம் நடத்துகிற முறையும், காந்தீயம் போல ஒரு முறைதான். காந்திய அமைதி வழியும், சனநாயக நாடாளுமன்ற வழியும், அடக்கு முறை யாளர்களுக்கு மேலும் மேலும் வழி அமைத்துக் கொடுப்பதில் சமமாகப் பயணித்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களம் மட்டும் மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டதை எதிர்த்து சமஷ்டிக் கட்சி நாடாளு மன்றத்தின்முன் சத்தியாக்கிரகம் செய்தனர். சிங்களக் காடையர்கள் அவர்களைத் தாக்கியதைத் தொடர்ந்து கிழக்கில் கல்லோயாவில் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்களக் காடையர்கள் திட்டமிட்டு, தமிழ்க் குடியேற்ற வாசிகளைக் கொள்ளையடித்து அவர்களின் வீடுகளுக்கு தீ வைத்துக் கொளுத்தித் தமிழர்களை கல்லோயாவிலிருந்து விரட்டினர். இதே நேரம் கல்லோயாவுக்கு சமீபமாக கல்முனைக்கு அருகே சரித்திர முக்கியத்துவமான துறை நீலாவணைக் கிராமத்துக் குள்ளும் நுழைவதற்கு சிங்களக் காடையர்கள் எத்தனித்தனர். இச்சமயத்தில் துறை நீலாவணைக் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கட்டுத் துவக்குகளை (நாட்டுத் துப்பாக்கிகள்) உபயோகித்து சிங்களக் காடையர்களை விரட்டி அடித்து கிராமத்தைக் காப்பாற்றினர். அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டது. சில இடங்களில் ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது என்றாலும், கல்லோயாக் கலவரத்தினால் 150 பேர் உயிர்ப்பலியாகினர். சொத்துக்களும் பெருமளவில் சேதமடைந்தன.

1956–ம் ஆண்டு தாக்குதலில் வெளியேறிய தமிழர்கள் மறுபடி கல்லோயாப்பக்கம் திரும்பவேயில்லை.

## 2

**சி**ங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து சனநாயக வழியில் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், சாத்வீக வழியில் வெளியிலும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்தார்கள் தமிழர் தலைவர்கள். வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து திருக்கோணமலைக்கு யாத்திரை செல்ல முடிவு செய்யப் பட்டது. திருமலை யாத்திரையைத் தொடர்ந்து நடைபெற்ற தேசிய மாநாட்டில் நான்கு அம்சக் கோரிக்கைகளை தீர்மான மாக நிறைவேற்றி, இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஒரு வருட அவகாசம் வழங்குவதென்றும், 1957 ஆகஸ்டு 20 தேதிக்குள் இலங்கையை சமஷ்டி ஒன்றியமாக (கூட்டாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்பாக) அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறினால், சாத்வீகமான நேரடி நடவடிக்கையில் கட்சி இறங்கும் என்றும் தீர்மானம் இயற்றப்பட்டது. நடவடிக்கை எடுக்க அரசு தவறிய பிறகும் சாத்வீகமான நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவது என்றே கட்சி அறிவித்தது. காந்தி காட்டிய சாத்வீகத்தினும் கூடுதலான சாத்வீக முறையைக் கடைப்பிடித்தனர்.

சாத்வீகப் போராட்டத்தை சட்டை செய்யாத அரசு தன்னுடைய அத்துமீறலை அடுக்கிக் கொண்டே போனது. இதுவரை காலமும் மோட்டார் வாகன இலக்கத் தகடுகளில் எழுதப்பட்ட வந்த 'CEY' என்ற ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக, 1957 சனவரி முதல் நாளிலிருந்து சிங்களத்தில் சிறி என்ற எழுத்தே இடம் பெற வேண்டும் என்று கட்டளை பிறப்பித்தது. யாழ்ப்பாணத்துக்கு வந்த மோட்டார் வாகனங்களில் தமிழ் எழுத்துப் பொறிக்கும் போராட்டம் தமிழர்களால் தொடங்கப்பட்டது.

இதன் எதிரொலியாக தென்னிலங்கையின் சந்திகள், வீதிகள், பொது இடங்களில் உள்ள தமிழ்ப் பெயர்கள் மீது தார் பூசி அழித்தனர் சிங்களர்கள். அவர்கள் சிங்களக் குடியேற்றங்களுள்ள பகுதிகளில் வாழ்ந்த தமிழ்ப் பெண்களின் நெற்றிகளிலும், கொழும்பில் தமிழ்ப் பெண்களின் மார்பிலும் சிங்கள சிறீ எழுத்தைப் பொறித்தனர். குங்குமத்துக்குப் பதிலாக சிறீ.

## 3

**1957** ஜூன் மாதம் 27ஆம் தேதி, பண்டா–செல்வா ஒப்பந்தம் கையெழுத்தானது. பண்டா–செல்வா ஒப்பந்தத்துக்கு சமஷ்டிக் கட்சியிலுள்ள (தமிழரசுக் கட்சி) இளைஞர் முன்னணி எதிர்ப்புத் தெரிவித்தது. "தாங்களும் இந்த ஒப்பந்தத்தை முதலில் எதிர்த்து நின்றதாகவும், பெரியவர் தெரிவித்த உறுதி மொழிகளின் பின் ஏற்றுக் கொண்டதாகவும்" கூறி, அமிர்தலிங்கம் இளைஞர்களைச் சமாதானப்படுத்தினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர்களுக்கும் போர்க்குணத்துக்கும் உள்ள இடைவிடாத நெருக்கத்தின் அடிப்படையில், பண்டா-செல்வா ஒப்பந்தம் குறித்தும் அவர்கள் கேள்வியெழுப்பினர்.

"எமது மக்கள் மகிழ்ச்சியாகவும் நட்புடனும் வாழ வேண்டுமென்பதற்காக, பண்டாரநாயகாவும் நானும் வரலாறு படைத்துக் கொண்டிருக்கிறோம். இதில் தோல்வியடைந்தால், அது பெரும் சோகமாகவே இருக்கும். அப்படி ஏதும் நடந்தால், இன்னும் பத்து வருடத்தில் தமிழர்கள் சுயாட்சி கோர மாட்டார்கள். தனிநாடு தான் கேட்பார்கள்" என்று செல்வநாயகம் எச்சரித்தார். சமஷ்டிக் கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தி உடன்படிக்கையான, பண்டா--செல்வா ஒப்பந்தம் இலங்கையின் இனப்பிரச்னைக்கு தீர்வு காணக்கூடிய சிறந்த ஏற்பாடு என்று 58ஆம் ஆண்டு, ஸ்ரீலங்கா சுதந்திராக் கட்சியின் மாநாட்டில் உரை நிகழ்த்துகையில் பண்டாரநாயகா சொன்னார்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து, சிங்கள இனவெறியைத் தூண்டி, டட்லி சேனநாயகாவும், ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் (இருவரும் இலங்கையின் முன்னாள் பிரதமர்கள்) புத்த பிக்குகளுடன் பெருந்திரளானோரைத் திரட்டி, கண்டியிலிருந்து எதிர்ப்புப் பேரணி தொடங்கினர். கண்டி யாத்திரை தொடங்கியது முதல், கொழும்பிலும், இதர சிங்களப் பகுதிகளிலும் வாழ்ந்த தமிழ் மக்கள் நிம்மதியிழந்தனர்.

1958 ஏப்ரல் மாதம் ஒன்பதாம் தேதி புத்தபிக்குகள் 200 பேர் பண்டாரநாயகாவின் ரொஸ்மிட் பிளேஸ் இல்லத்தை நோக்கி பண்டா-செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறியச் சொல்லி அணிவகுத்து வந்தனர். பிரதமரின் இல்லக் கதவுகள் மூடப்பட்டிருந்தன. இல்லத்துக்குச் செல்லும் வீதிகளும் தடுக்கப் பட்டிருந்தன. தடுப்புக்களுக்கு முன்பாக பிக்குகள் தரையில் அமர்ந்துவிட்டனர். பின்னர் தடுப்புகள் எடுக்கப்பட்டு பிரதமர் இல்லத்தின் முன்பாக பிக்குகள் அமர்ந்தனர்.

இந்த ஒப்பந்தத்திற்கு எதிரானவர்களில் ஒருவரான சுகாதார அமைச்சர் திருமதி விமலா விஜயவர்த்தனா தரையில் அமர்ந்திருந்த பிக்குகளிடம் வந்து "விரைவில் சாதகமான பதில் வரப்போகிறது. போராட்டத்தை விட்டு விடாதீர்கள்" என்று உஷார்ப் படுத்திச் சென்றார். பிரதமரின் இல்லத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு ரயில் நள்ளிரவில் பொலனறுவை ரயில் நிலையத்தை வந்தடைந்தது. இந்த ரயிலின் வரவுக்காகக் காத்து நின்ற காடையர் கூட்டம் மட்டக்களப்பு ரயிலில் ஏறித் தமிழ்ப் பயணிகளைத் தேடி அலைந்தது.

அன்று ரயிலில் தமிழ்ப் பயணிகள் அகப்பட்டிருந்தால், 1983-ல் நிகழ்ந்த ஜுலைப் படுகொலைகள் நிகழ்ந்திருக்கும். 1983 இரண்டாவது கறுப்பு ஜுலையாக அன்று ஆகியிருக்கும். தமிழர் எவருமில்லாததால் ரயில் பெட்டிகளின் ஆசனங்களையும், பெட்டிகளையும் அடித்துக் கிழித்து சேதப்படுத்தினர். இச்சமயத்தில் ஓர் ஆசனத்தின் கீழ் ஒளிந்திருந்த ஒருவரை, அவர்தான் தமிழனல்ல என்று சொன்னபோதும் காடையர் கூட்டம், அவர் மயங்கி விழும் வரை நையப் புடைத்து விட்டுச் சென்றது. பின்னர் அந்தச் சிங்களரை ரயில் நிலைய அதிபர் பொலனறுவை மருத்துவமனையில் சேர்த்தார்.

மறுநாள் பொலனறுவையிலும் அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் இருந்த தமிழர்கள் தாக்குதலுக்குள்ளானார்கள். மருத்துவமனையில் மருத்துவர்கள், நோயாளிகளும் கூட தமிழர்கள் என்று தெரிந்தவர்கள் தாக்கப்பட்டனர்.

இரண்டு நாட்கள் கழித்து மே 25ஆம் தேதி பொலன றுவையை அழித்தொழிப்பதற்காக வடக்கிலிருந்து, தமிழர்கள் படையெடுத்து வருகிறார்கள் என்ற வதந்தி காட்டுத்தீ போல வடமத்திய மாகாணம் முழுவதும் வேகமாகப் பரவியது. இதன் விளைவாக கலகம் மேலும் பல இடங்களுக்குப் பரவியது. ஹிங்குராக்கொடையில் (பொலனறுவைக்கு அருகேயுள்ள கிராமம்) இருந்த தமிழர்களுக்குச் சொந்தமான கரும்புத் தோட்டங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இதேசமயம் பதவியாவில் குடியேற்றப்பட்டிருந்த சிங்களக் காடையர்கள் சிலர் நீர்ப்பாசன இலாகாவுக்குச் சொந்தமான டிராக்டர்கள், லொறிகள், ஜீப்கள் போன்ற வாகனங்களில் கடப்பாறை, பொல்லுகள், தடிகள் மற்றும் பல ஆயுதங்களுடன் வவுனியாவை நோக்கிச் சென்றனர். இரண்டு தினங்களாகவே பதவியாவிலிருந்து காடையர் கூட்டம் வவுனியாவுக்கும் படை எடுத்து வரப்போகிறது என்ற வதந்தி பரவியிருந்தது. இதற்கான தகவல்களும் வவுனியாவுக்குக் கிடைத்துக் கொண்டிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது – அடங்காத் தமிழர் அழைக்கப் பெற்ற பேராசிரியர் செ. சுந்தரலிங்கத்தின் நாடாளுமன்றத் தொகுதி. எனவே தனது தொகுதியில் மாநாடு நடத்தும்போது அதைக் காப்பாற்றிக் கொடுப்பது அவரது கடமையாயிற்று. அவர்களுக்குப் பதில் கொடுக்க "கடவுளே வருவார்; காடுகளே சுடும்" – என்று பேராசிரியர் சுந்தரலிங்கம் பதிலளித்தார். கடவுள் வந்தாரோ இல்லையோ பேராசிரியர் சொன்னபடி பதவியாவிலிருந்து நீர்ப்பாசன இலாகா வாகனங்களில் வவுனியாவுக்கு வந்த காடையர்களை நோக்கி காடுகள் சுட்டன. காடையர்கள் வந்த வேகத்திலேயே திரும்பி பதவியாவை நோக்கி ஓட்டம் பிடித்தனர். "கடவுளே வருவார் காடுகள் சுடும்" என்ற சுந்தரரின் வாசகம் தாரக மந்திரமாக அமைந்தது.

காடுகள் சுட்ட கதையை சில வருடங்களின் பின்னர் அவர் ஒரு பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் விளக்கினார். நான்கு பேர் துப்பாக்கிகளுடன் காட்டின் இரு பகுதிகளில் நின்று மரத்துக்கு மரம் தாவி ஓடி ஓடிச் சுட்டதாகவும், இவ்விதம் சுடும்போது ஒரு பெரிய படையொன்று துப்பாக்கி யால் சுட்டபடி முன்னேறி வருவது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியதென்றும் இதுதான் அன்று வவுனியாவில் நடந்தது என்றும் தெரிவித்தார்.

சுந்தரரின் அன்றைய அதிகாரம் செல்லுபடியானதற்கு ஆயுதம் காரணமாயிற்று. துப்பாக்கிக் குழாயிலிருந்து அதிகாரம் பிறக்கிறது – என்ற செஞ்சீன வாசகம், மேலிருந்து அடக்குகிறவர் களின் அதிகாரத்தை மட்டுமல்ல, எதிர்ப்புச் சக்திகளின் அதிகாரத்தையும் வழிமொழிகிறது.

காலிமுகத் திடலில் ஆடையுருவப்பட்டு அம்மணமான நிலையில் டாக்டர் நாகநாதன் சிங்களர்களை எதிர்த்துத் தாக்கி விரட்டிய நிகழ்வும், சுந்தரர் துப்பாக்கி காட்டி, மிரட்டிய விதமும் வெளிச்சப்படுத்தும் ஒரு வரலாற்று உண்மை – அகிம்சையால் அம்மி அசையாது. அடியால் தான் அம்மி அசையும் என்பதுதான்.

ஆனால் தமிழ்த் தலைமைகள் அடிக்கத் தயாராக இருந்தார்களில்லை. ஆட்சியாளர்களோடு முட்டிக் கொள்ளாது, ஆட்சியிலிருப்போரின் மண்டை உடைக்காது, அரவணைப்பாய் போய் காரியம் சாதிக்க எண்ணினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகள் வேறொன்றைப் பேசு, வேறொன்றை எடு, வேறு திசையில் நட என்று நிர்ப்பந்தித்தன. ஆனாலும் அவர்கள் காந்தியத்தில் நம்பிக்கை கொண்டு நடந்தனர்.

கொழும்பில் இருந்த கொதிநலை பற்றி தன் சுயானுப வங்களினூடாக, எஸ்.எம். கோபாலரத்தினம் விவரிக்கிறார்.

"எங்கள் தெருவில் மீன் கொண்டு வந்து விற்கும் ஒரு சிங்களப் பெண் அன்றும் வழமை போல் மீன் கொண்டு வந்தாள். நாங்கள் சமைத்துச் சாப்பிடும் நிலையில் இல்லை. திருமதி சதாசிவம் சுருக்கமாக சைவ உணவு தயாரித்து முடித்திருந்தார். மீன் கொண்டு வந்த பெண் சொன்ன கதை திடுக்குற வைத்தது. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வழமை போல் வந்த மீன் பெட்டிகளில் சிங்களக் குழந்தை களையும் வெட்டி ஐஸ் போட்டு அனுப்பியிருந்தார்கள் என்பது தான் அந்தப் பெண் சொன்ன செய்தி. இப்படித்தான் வதந்தி களைப் பரப்பி தமிழர்கள் தாக்கப்பட்டனர். தமிழ் வீடுகள் வர்த்தக நிலையங்கள் கொள்ளையடிக்கப்பட்டதுடன் தீ வைத்தும் கொளுத்தப்பட்டன. இனக்கலகம் நாடு முழுவதும் பரவிவிட்டது. யாழ்ப்பாணத்திலிருந்து சிங்களவர்கள் இருக்கும் இடங்கள், வர்த்தக நிலையங்கள். அவற்றின் முகவரி போன்ற விபரங்கள் யாவும் போலீஸ் நிலையத்தில் பதிவு செய்து வைக்கப்பட்டிருந்தன. புத்தவிகாரை பிக்குவிடமும் இந்த விபரங்கள் இருந்தன. இது யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல தமிழ்ப் பகுதிகளில் உள்ள எல்லா நகரப் பொலிஸ் நிலையங்களிலும் அந்தந்தப் பகுதியிலுள்ள சிங்களவர்களின் விபரங்கள் பதிந்து வைக்கப்பட்டிருந்தன. இனக்கலகம் பரவத் தொடங்கியதும் யாழ்ப்பாணத்திலுள்ள சிங்களக் குடும்பங்களை பொலிசார் தமது பொலிஸ் வாகனங்களிலேயே சென்று அழைத்து வந்து பாதுகாத்து தென்னிலங்கைக்கு பாதுகாப்புடன் அனுப்பி வைத்தனர். ஆனால் சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் தனியாக விடப்பட்டனர்.

இனக்கலவரம் வெடிப்பதற்கு சில வாரங்களுக்கு முன்பாகவே கொழும்பு வாக்காளர் பதிவேட்டிலிருந்து தமிழர்கள் வீடுகளுக்கு ஒரு குழுவினர் புள்ளியிட்டு அடையாளப் படுத்தி வருவதாக நாடாளு மன்றத்திலேயே பேராசிரியர் சுந்தரலிங்கம் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தார். ஆனால் இதை யாரும் பொருட்படுத்தவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு நகரிலும் நாட்டின் இதர பகுதிகளிலுள்ள நகரங்களிலும் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வந்தன. தமிழர்கள் தங்கள் வீடுகளுக்குச் சமீபமாகவுள்ள பொலிஸ் நிலையங்களில் போய் தஞ்சம் அடைந்தனர். கொழும்பு நகருக்கு வெளியே புறநகர்ப் பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தஞ்சம் அடைந்து வரும் தமிழர்களுக்குப் பாதுகாப்பளித்துக் கவனிப்பதற்கு பொலிஸ் நிலையங்களில் வசதிகள் இருக்கவில்லை. பண்டாரநாயகா அரசாங்கம் இந்த தமிழ் மக்களைப் பற்றி கவனம் செலுத்தவில்லை. கொழும்பி லுள்ள தமிழ்ப் பிரமுகர்கள் கலந்தாலோசனை செய்து தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்கும் உடுத்திய உடையுடன் வீடு வாசல்களை இழந்தும், இருக்க முடியாமலும் அகதிகளாக வெளியேறிப் பொலிஸ் நிலையங்களிலும் தஞ்சம் கிடைக்காமல் அல்லல்படும் தமிழ் மக்களுக்கு அடைக்கலம் கொடுக்க பம்பலப்பட்டி சரஸ்வதி மண்டபத்தையும் கொழும்பு பம்பலப் பட்டி இந்துக் கல்லூரியையும் திறந்து விட்டனர். ஆதரவு எதுவுமில்லாமல் அவஸ்தைப்படும் மக்களுக்கு உணவும், உடையும் அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்தனர்.

இனக்கலகம் பரவி நிலைமை மோசமடைந்ததுடன் பாணந்துறைக் கந்தசாமி கோயில் பிரதம குருக்கள் சுந்தரராஜ சர்மா, சிங்களக் காடையர்களினால் கந்தசுவாமி கோயிலுக் குள்ளேயே ஒரு அலமாரிக்குள் வைத்துப் பூட்டி உயிருடன் எரித்துக் கொல்லப்பட்ட சம்பவம் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியது. இந்தச் சம்பவம் தான் சிறுவனாயிருந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் உள்ளத்தில் ஆயுதம் ஏந்தி தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு வழி வகுக்க வேண்டுமென்ற தூண்டுதலை ஏற்படுத்தியதென்றும் சொல்லப்படுவதுண்டு.

தமிழ் மக்கள் இப்படி சொந்த நாட்டிலேயே வாழ முடியாத நிலையில் அகதிகளாக அல்லல்பட்டு உயிரையும், உடைமைகளையும் இழந்து தவித்துக் கொண்டிருக்கையில் நிலைமை கட்டுப்பாட்டுக்குள்ளிருப்பதாக பிரதமர் பண்டார நாயகா அறிக்கை விட்டுக் கொண்டிருந்தார். டைம்ஸ் (Times) பத்திரிகை நிறுவனத்திலிருந்து இந்நாளில் மோர்னிங் டைம்ஸ் என்ற காலை நாளிதழ் வெளிவந்தது. எல்லாம் கட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டுக்குள் இருப்பது இப்படித்தானா? – என்ற தலைப்பில் மோர்னிங் ரைம்ஸ் கேள்வி எழுப்பியது. நாட்டின் நிலைமை, கொழும்பு நகரில் ஒரு பகுதியில் நடந்த சம்பவங்களை, தாங்கள் தங்களது அலுவலகக் கட்டிடத்தின் மூன்றாவது மாடியிலிருந்து பார்த்த சம்பவங்களை எழுதி "பிரதமரே இதுதான் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக நீங்கள் கூறுவதன் அர்த்தமா?" என்று கேள்வி எழுப்பி முதல் பக்கத்தில் தலையங்கம் எழுதியிருந்தது.

கொழும்பிலுள்ள இந்திய தூதரக ஊழியர்கள் சிலரும் ஒரு அதிகாரியும் கூட இனவெறிக் காடையர்களால் தாக்கப் பட்டனர். நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டி ருந்ததே தவிர திருந்துவதாகக் காணோம். புத்தபிக்குகள் சிலர் வெளிப்படையாகவே வீதியிலேயே இறங்கி கலவரத்தைத் தூண்டி விட்டனர். இந்நிலையில் மலையகத்தில் இந்திய வம்சாவளியினரான தோட்டத் தொழிலாளர்கள் வாழ்விடங் களுக்கும் இனக்கலவரம் பரவத் தொடங்கியது. தோட்டத் தொழிலாளர்கள் பலர் தோட்டங்களிலிருந்து வெளியேற நேர்ந்தது. இக்காலத்தில் இலங்கையில் இந்திய தூதுவராக வை.டி. கண்டேவியா இருந்தார். பண்டார நாயகாவுடன் தொடர்பு கொண்டு இந்தியத் தூதுவர் கண்டேவியா பேசிய போதும் எல்லாம் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகவே பிரதமர் பதிலளித்தார். மோர்னிங் ரைம்ஸ் பத்திரிகை தலையங்கத்தை வைத்துக் கொண்டு கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலாகாவைச் சந்தித்த இந்தியத் தூதுவர் கண்டேவியா "நீங்கள் நிலைமையைக் கட்டுப்படுத்துகிறீர்களா அல்லது இந்தியப் பிரதமரிடம் சொல்லி மேற்கொண்டு இந்திய உதவியைப் பெறுவதற்கு வழி செய்யவா?" என்று கேட்டாராம். இதன் பின்பு தான் அவசர கால நிலையை ஆளுநர் நாயகம் சேர். ஒலிவர் பிரகடனப்படுத்தினார்.

கொழும்பில் எங்கெங்கு தமிழர்களின் திருமண மண்டபங்கள், சத்திரங்கள் உண்டோ, அங்கெல்லாம் தமிழர்கள் அகதிகளாகக் குவிந்தார்கள். தமிழர்களே, தமிழ் அகதிகள் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். அதிகரித்து வரும் அகதிகள் தங்குவதற்கு இடவசதி இல்லை; உணவு, உடையும் போதுமானதாய் இல்லை. காயமடைந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர்களுக்கு மருத்துவ சிகிச்சையும் அளிக்க முடியாம லிருந்தது. பிரதமர் பண்டாரநாயகா போட்ட கொலைப்பழிக் குண்டினால், சிங்களக் காடையர்கள் எந்த நேரத்திலும் அகதி முகாம் வந்து தாக்கக்கூடும் என்ற நடுக்கம், அந்த அவலத்திலும், முதுகுத் தண்டு வடத்தில் ஏறிக் கொண்டிருந்தது.

இந்தப் பரிதாப நிலையை, எஸ்.எம். கோபால ரத்தினம் இவ்வாறு விவரிக்கிறார்.

"அரசாங்கத்தில் பெரிய பதவிகளில் அமர்ந்து வசதியாக வாழ்ந்தவர்களும், கூட பெரும்பாலும் அகதி முகாமிலிருந்தனர். இவர்களெல்லாரும் திடீரென எதுவுமேயில்லாத அநாதை களாக, அகதிகளாக நின்றிருந்தனர். இந்த முகாமில் காலையில் வழங்கப்படும் பாண் தமது மனைவி மக்களுக்கும் பங்கிட்டுக் கொடுப்பதற்காக இவர்கள் நீண்ட வரிசையில் கவலையுடன் நின்றதைப் பார்த்தவர்கள் கண்கலங்காமலிருப்பர்களா? அரசியல் தலைவர்கள் சிலரும் அகதிமுகாமுக்கு வந்து பார்வையிட்டனர். ஜி.ஜி. பொன்னம்பலம் வந்தார். குழந்தைகளுக்கு சில கேக் கொண்டு வந்து கொடுத்தார்.

தலைவர் செல்வநாயகம் வந்ததும் அந்த அகதி நிலை யிலும் அவரைச் சூழ்ந்து கொண்டு, "ஐயா, இனித் தனித் தமிழ்நாடு தான் நாங்கள் வாழ்வதற்குத் தகுந்தது. தனித் தமிழ் நாடு கேட்டுப் போராட்டம் தொடங்குங்கள், நாங்கள் எல்லோரும் உங்களுடன் நிற்போம்" - என்று மக்கள் உரத்துக் கோரினர்.

## 5

**த**மிழீழம் காணவேண்டும் என்ற உரத்த சிந்தனை மக்களிடம் இருந்தது. உள்ளுக்குள் கிடந்த வேட்கைதான் உரத்த குரலாய் வெளிப்பட்டது.

தமிழீழம் தனி நாடு என்ற திசையில் எழுச்சியை வடிவமைக்காமல் காந்தியம், சாத்வீகம் என்ற பாடலைப் பாடியே 28 ஆண்டுகள் கழிந்தன. ஆனால் ஒவ்வொரு முறையும் செல்வா சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பண்டா, நீங்கள் இப்போது தனிப் பிரதேசத்தை எதிர்க்கிறீர்கள். இதை ஏற்றுக் கொள்ள மறுத்தால் இனியொரு காலத்தில் என்றைக்காவது ஒருநாள் நாட்டின் பிரிவினையை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கும்."

ஆனால் இருநாடுகள் உதயமாகாமல், இலங்கையை உடைக்காமல் கூட்டாட்சிக்குள்ளே தமிழர் ஆட்சியை அமைப்பதுதான் தமிழரசுக் கட்சியின் நோக்கமாக இருந்தது. அதையும் சாத்வீகமாக அடைவதற்கு முயற்சிகள் எடுக்கப் பட்டன.

ஒவ்வொரு கட்டமாய் தனி நாடு கோரிக்கையை முன் வைத்து, போராட்டத்தை மேலெடுக்கும் கால நிர்ப்பந்தம் வருகிறபோது தவிர்த்தே வந்திருக்கின்றனர் தமிழர் தலைவர்கள்.

இலங்கை சுதந்திரம் அடைந்த தொடக்கத்தில் இரு வாய்ப்புகள் வந்தன.

இந்திய விடுதலைப் பேராட்டத்தின் மறுகுரலாக இலங்கைக்கும் சுயாட்சி என்று முதல் தடவையாக – பொன். அருணாசலம் குரல் கொடுத்தார். அதற்காக இந்திய பாணி யிலே, இலங்கை தேசிய காங்கிரஸ் என்ற அமைப்பையும் உருவாக்கினார். 1925–ஆம் ஆண்டில், கண்டிப் பகுதி காங்கிரசார், இலங்கை தேசிய காங்கிரஸிலிருந்து விலகி கண்டி தேசிய சபை (Kandyan National Assembly) என்ற அமைப்பை உருவாக்கினர். கண்டிப் பகுதிக்கு தனி சுயாட்சி அரசு வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து பிரச்சாரம் தொடங்கினர். சமவெளிப் பகுதியிலுள்ள சிங்களவர்களுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள அரசியல் சட்டரீதியாக ஏற்பாடு செய்வது, கண்டிப்பகுதி சிங்களர் நோக்கமாக இருந்தது. இதுபற்றி எஸ்.எம். கோபாலரத்தினம் குறிப்பிடுகிறார். "தமிழ்த் தலைவர்கள் சட்டமன்றத்தில் இருக்கைகளை அதிகரிப்பதி லேயே குறியாக இருந்தனர். பிரித்தானியர் கையளித்த ஒற்றையாட்சி முறையை தமிழ்த் தலைமை ஏற்றுக் கொண்டது. சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதன் மூலம் அதிகாரத்தைப் பரவலாக்கலாம் என்பதை தமிழ்த் தலைமைகள் சிந்தித்த அதே சமயம், அதிகாரத்தை பரவலாக்குவதற்கு வேறு அரசியல் முறையை கண்டிப் பகுதித்தலைவர்கள் சிந்தித்தனர்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே நேரத்தில், கண்டிய தேசிய சபையை அதன் கோரிக்கையை சிங்களத் தலைமைகள் வேறொரு கோணத்தில் எதிர்த்தனர். மலையகத்திலிருந்த தோட்டத் தொழிலாளர்கள், தங்களது உரிமைகள் பெறும் போராட்டத்தில் இடதுசாரிக் குணத்துடன் வெளிப்பட்டனர். இடதுசாரி தொழிற் சங்க இயக்கம் அவர்களை வழிநடத்தியது.

சட்டமன்றத்துக்கு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் இனவாரி பிரதிநிதித்துவம்தான் சிறுபான்மை இனங்களுக்கு பாதுகாப்பு என தமிழ்த்தலைவர்கள் வலியுறுத்தினர். ஆனால் சிங்களத் தலைவர்களோ இனவாரி தேர்தல் முறையை எதிர்த்து, பிரதேசவாரி தேர்தல் முறையே வேண்டுமென்று வற்புறுத்தினார். அந்த அடிப்படையில் கூட, கண்டிய தேசிய சபை முன் வைத்த அதிகாரப் பகிர்வையோ, கண்டிப் பிரதேசத்துக்கு பிரதேசவாரி பிரதிநிதித்துவம் என்பதையோ சிங்களம் ஏற்கவில்லை. காரணம், மலையகத் தொகுதிகளில் கணிசமான வாக்குகளை இடது சாரிகள் பெற்றனர். மலையகத் தோட்டத் தமிழர்களுக்கு வாக்குரிமையும் குடியுரிமையும் வழங்கப்பட்டால், அது இடதுசாரி கம்யூனிச மாநிலமாக மாறிவிடும் என்று அஞ்சினர். எனவேதான், மலையகத் தமிழர்களை, அவர்கள் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் எனக் காட்டி, பத்து லட்சம் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிப்பை, ஆட்சிக்கு வந்த ஆண்டிலேயே டி.எஸ். சேனநாயகா கொண்டு வந்தார். அதன் மூலம் சிங்களத் தொழிலாளர்களுக்கு எதிரிகள் தமிழர்கள். அவர்களுடைய நலன்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள் தமிழ்த் தொழிலாளிகள் என்ற பகையை உருவாக்கினார்.

தமிழ்த் தலைவர்கள் பிடித்துக் கொள்ளாது கைவிட்ட, மற்றொரு வாய்ப்பும் வந்தது. சிங்களத் தலைவர்கள் இலங்கையின் மொத்த அதிகாரங்களையும் எடுத்துக் கொள்வதில் குறியாய் செயல்பட்டனர். 1944–ஆம் ஆண்டில் தனிச் சிங்கள அமைச் சரவை அமைந்ததும், அதன் தொடர்ச்சியான செயல்பாடுகள் சிறுபான்மையர் மத்தியில் அதிருப்தியை உண்டு பண்ணியதாக சோல்பரி ஆணைக்குழு கவலை தெரிவித்தது.

சிங்களத் தலைவர்கள் அதிகாரத்தைத் தாங்களே கையகப் படுத்திக் கொள்ளாமல் தடுப்பதற்கு சமபலப் பிரதிநிதித்துவம் கோரினார் ஜி.ஜி. பொன்னம்பலம். ஐம்பதுக்கு ஐம்பது என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்பட்டு இது பிரபலமானது. சிங்களவருக்கு ஐம்பது; சிறுபான்மையினருக்கு ஐம்பது என்று இதைப் பின்னர் திருத்திக் கொண்டார் பொன்னம்பலம். தொடக்கத்தில் முஸ்லீம்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள், உள்ளூர் ஆங்கிலேய இனத்தினர் ஆகியோரிடமிருந்து கணிசமான ஆதரவு கிட்டியது. சமபலப் பிரதிநிதித்துவம் கிடைக்கக் கூடியதாக நாட்டை நூறு தொகுதிகளாகப் பிரித்து ஐம்பது தொகுதிகள் சிங்களருக்கும், 25 தொகுதிகள் பூர்வீகத் தமிழர் மற்றும் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கும் மீதி 25 தொகுதிகள் மற்ற சிறுபான்மையினர் தேர்வு செய்வதற்கான தொகுதிகளாகவும் பகிரப்பட வேண்டும் என்பதுதான் ஐம்பதுக்கு ஐம்பது திட்டம். இன அடிப்படையில் இல்லாமல் பிரதேச அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டால், பெரும் பான்மையினராக உள்ள சிங்களர்களே, சிறுபான்மையினரின் உரிமைகளை மறுக்கக் கூடியோராக இருப்பார்கள் என்ற பொன்னம்பலத்தின் அச்சம் நியாயமானதே. ஜி.ஜி.யின் யோசனைகளில் பாராளுமன்ற ஆட்சிக்கான முற்போக்கான அம்சம் ஏதுமில்லையென்று சோல்பரி ஆணைக்குழு நிராகரித்ததும், அதன் முடிவுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஜி.ஜி. பொன்னம்பலம் இங்கிலாந்து சென்றார். லண்டனில் குடியேற்ற நாடுகளின் (காலனி நாடுகளின்) விவகாரங்களுக்கான அமைச்சரை, செயலாளரை, பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரையும் சந்தித்து பிரச்னையை விளக்கிப் பேசினார். அவர் இங்கிலாந்து சென்ற சமயம், இங்கிருந்த தமிழ்ப் பிரதிநிதிகளுடன், டி.எஸ். சேனநாயகா, பேச்சு வார்த்தை நடத்தி, இன வாரிப் பிரதிநிதித்துவம் அல்ல; பிரதேச வாரி பிரதிநிதித்துவமே என்ற சோல்பரி ஆணைக் குழுவின் அறிக்கையை ஏற்கச் செய்தார். அடங்காத் தமிழர் என்று அழைக்கப்பட்ட பேராசிரியர் செ. சுந்தரலிங்கமும், சேனநாயகா கொடுத்த வாக்குறுதிகளை நம்பி ஆதரித்ததாகச் சொன்னார்.

ஜி.ஜி. பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது குரல் எழுப்பிய போதே – அதை வலியுறுத்த அவர் இங்கிலாந்திலிருந்த வேளையில், இங்குள்ள தமிழ்த் தலைவர்கள் அதற்கான போராட்டத்தை முன்னெடுத்திருந்தால், வகுப்புவாரி பிரதி நிதித்துவம் அப்போதே கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆனால் தமிழ்த் தலைவர்கள் ஒருவருக்கொருவர் குழி பறிப்பதே குறியாய்க் கொண்டனர்.

சேனநாயகா இலங்கையிலும் இந்தியாவிலும் ஏற்பட்ட எதிர்ப்பைச் சமாளிக்க ஜி.ஜி. பொன்னம்பலத்தை அமைச்சரவையில் இழுத்துப் போட முயன்றார். தமிழினத்தைப் பிளந்து போடும் இந்த சிங்கள நரித்தனம் இன்றுவரை தொடர்கிறது. (பார்க்க; இந்தியாவைத் தொடர்ந்து தோற் கடிக்கும் சிங்கள ராஜதந்திரம் – மு. திருநாவுக்கரசு) ஜி.ஜி. பொன்னம்பலமும் ஒப்பினார்; அமைச்சரவையில் காங்கிரஸ் சேருவது "சிங்கள ஆட்சிக்கு சட்ட பூர்வ அங்கீகாரமாய் ஆவதுடன், அதிக பிரதிநிதித்துவ கோரிக்கைக்கு மரணக்குழியை நாம் தோண்டுவதாகிவிடும். இதுவரை நாம் எதிர்த்து வந்த சோல்பரி ஆணைக்குழுவின் முடிவை ஏற்பதாக அமைந்து விடும்" – என்று செல்வநாயகம் எதிர்த்தார். சோல்பரி ஆணைக்குழு முடிவை எதிர்த்தவர்களே எங்களுடன் ஐக்கியமாகி விட்டார்கள் என சேனநாயகா, பிரித்தானிய அரசுக்கு எடுத்துச் சொல்ல ஏதுவாகியது.

வரலாற்றில் சில வாய்ப்புகள் மீண்டும் வராது; வரலாற்று வாய்ப்புகளை நழுவவிடுவது, கடலில் மோதிரத்தை மூழ்க விடுவதுபோல, எவ்வளவு தேடினாலும் மீண்டும் கைக்குக் கிடைப்பதில்லை.

வரலாற்று வாய்ப்பை நழுவவிட்டு, நாட்டு மக்களை அடிமைகளாய் ஆக்கி வைத்த முன்மாதிரி இந்தியாவில் நடந்தது. பிளாசி யுத்தத்தில், வடஇந்திய மன்னரான சிராஜ் உத்தெளலா தோற்கடிக்கப்பட்ட சம்பவம், இந்தியா அடிமை நாடாக ஆனதின் ஆரம்பப்புள்ளி. பிளாசி யுத்தத்தில் வெற்றியடைந்த ராபர்ட் கிளைவ் வெறும் 144 ராணுவச் சிப்பாய்களுடன் அந்த நகரைக் கடந்துபோனான். நகரின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனைக்குச் சென்று சேருகிறவரை ஈரல்குலை நடுக்கம் கொண்டவனாய் கிளைவ் நடந்து கொண்டிருந்தான். தெருக்களிலும் சாலைகளிலும் குவிந்த மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அதிசயித்துக் கண்ணுற்றார்கள். நகரின் இன்னொரு முனையை அடைந்த பின், ராபர்ட் கிளைவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்பாடா, இப்போது தான் உயிர் வந்தது. கூடியிருந்த மக்கள் ஆளுக்கொரு கல்லெடுத்து எறிந்திருந்தால், நாங்கள் அத்தனை பேரும் இல்லாமல் போயிருந்திருப்போம்”

என்றானாம். மக்களும், மக்களுக்கு வழிகாட்டி நடத்திச் செல்கிறவர்களும் செயல்முனைப்பற்று நின்ற அந்தத் தருணத்தில் வரலாறே திசை திரும்பியது.

நாம் வரலாற்றுக் காலத்தில் வாழ்கிறோம். வரலாற்றைக் கட்டமைக்கும் கட்டாயத்திலிருக்கிறோம் என்பது தலைமை களால் சுயநலத்துக்காகவோ, அசமந்தத்தினாலோ உணரப் படாமல் போகிறபோது - ஈழத்துக்கு நேர்ந்தது போன்ற விபரீதம் நடக்கும் என்று காணுகிறோம்.

ஆனால் இதே ஜி.ஜி. பொன்னம்பலம், கூட்டாட்சி அமைப்பைக் கொண்ட இலங்கையில் தமிழர் தாயகமான வடக்கையும் கிழக்கையும் இணைத்து சுயாதிபத்தியமுள்ள தமிழ் அரசு அமைப்பதே தங்கள் கொள்கை என்று கூறி தமிழரசுக் கட்சி தேர்தலில் போட்டியிட்டபோது - எதிர் நிலையில் நின்று பேசினார். “தமிழ் மக்கள் நாடு முழுதும் பரவி வாழ்தற்கு உரிமையுடையவர்கள்; அவர்களை சமஷ்டி என்று சொல்லி இரு மாகாணங்களுக்குள் முடக்கிவிடக் கூடாது” என்று பிரச்சாரம் செய்தார்.

## 6

***1958***-ல் தமிழர்களைத் தாக்கச் சொல்லி புத்த பிக்குகள் புறப்பட்டனர். கொழும்பு நகரில் ஊரடங்கு நடைமுறையி லிருந்தது. தடையை மீறி ஊர்வலம் போன புத்த பிக்குகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. கடற்படைத் தளபதி இராஜன் கதிர்காமர் என்ற தமிழர் கொழும்பில் அமைதி நிலவப் பொறுப்பாக இருந்தார். புத்த பிக்குகள் மீது நடவடிக்கை எடுத்ததால், அவர்கள் பிரதமர் மேல் கோபம் கொண்டதின் விளைவு கடற்படைத் தளபதி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை புத்த பிக்குகள் அரசியலில் தலைமைப் பாத்திரம் வகிப்பவர்களாகவே இருந்து வந்துள்ளனர். 1955-ம் ஆண்டு டாக்டர் என்.எம். பெரேராவின் லங்கா சமசமாஜக் கட்சி, விக்கிரமசிங்க, கௌமன் ஆகியோரின் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இடது சாரிக் கட்சிகள் தமிழுக்கு சமநிலை வழங்க வேண்டுமென்ற கொள்கையை ஆதரித்தனர். கொழும்பு நகர மண்டபத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய பொதுக்கூட்டத்தில் புத்த பிக்குகள் இனவெறியர் களைச் சேர்த்துக் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

தமிழ்ப் பகுதிகளில் எந்தெந்த இடத்தில் சிங்களவர் களைக் குடியேற்றலாம் என்ற திட்டமிடுவதும் நிறைவேற்றுவதும் புத்தபிக்குகள் தான். அது பற்றி எஸ்.எம். கோபாலரத்தினம் சொல்வார்.

"இலங்கை சுதந்திரம் அடைந்த 1948ம் ஆண்டில் ஐம்பது சிங்களவர் கூட இல்லாத திருகோணமலையில், இன்று எங்கு பார்த்தாலும் சிங்களவர் காட்சியளிக்கின்றனர். ஒரு அரச மரம் இருந்தால், அதை ஒரு புத்த பிக்கு பார்த்து விட்டால் போதும். அந்த மரத்தின் கீழ் ஒரு சிறிய புத்தர் சிலை பிறப் பெடுக்கும். சிறிது காலத்தில் அந்த இடத்தில் உயர்ந்து நிற்கும் புத்த விஹாரை (ஆலயம்) வரலாற்றுச் சிறப்புமிக்க தலமாகப் புகழ் பெற்று நிற்கும்."

(முடிவிலாப் பயணத்தில் முடியாத வரலாறு — எஸ்.எம். கோபால ரத்தினம்)

மதம், சிங்கள அதிகாரத்துக்கு துணை செய்கிறது என்ற கருத்தாக்கத்துக்கு வரலாம் என்பது போல் தோன்றலாம். ஆனால் மதம், சிங்கள அதிகாரத்தை வழி நடத்துகிறது – என்ற கருத்தாக்கமே இங்கு சரியானது.

தனிமனித வாழ்விலும், அரசியலிலும் மதத்தின் வகிபாகம், குறித்து தெளிவான கருத்துக்களைக் கொண்டவர் காந்தி; ஆனால் அந்த வரையறைகளை உடைத்து நொறுக்கு வதாக இருந்தது சிங்கள நடவடிக்கைகள்.

அடையாளப் படுத்தப்பட்ட அல்லது வகைப்படுத்தப் பட்ட மதம் அரசியலிலிருந்து விலக்கப்பட்டே இருக்கவேண்டும்; மதம் – அரசியல் ஆகிய இரண்டும் தனித்தனியாகவே இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்றார் காந்தி. இந்திய சூழலுக்குள்ளிருந்து சொல்லப்பட்டதாக இருந்தபோதும், உலக முழுதுமான மத, அரசியல் நடவடிக்கைகளுக்கு பொருந்துவதாக இருந்தது.

1. மதம் ஒரு சொந்தப் பிரச்னை. அதற்கு அரசியலில் இடமில்லை.

2. நான் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால் மதமும் அரசியலும் தனித்தனியாகவே இருக்கும். மதம் எனது சொந்த விவகாரம் அதில் அரசுக்கு எந்த வொரு வேலையும் இல்லை.

3. மதம் என்பது சொந்த விவகாரமாகவே இருக்க வேண்டும். சொந்த விவகாரம் மட்டத்திலேயே கட்டுப்படுத்தி வைப்பதில் நாம் வெற்றி பெறுவோ மானால், நம் அரசியல் வாழ்வில் எல்லாம் நல்ல படியாக அமையும்.

4. தேசியத் தன்மைக்கான உரைகல் அல்ல மதம். மாறாக அது கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே யான சொந்த விசயம்.

5. உலகில் எந்தப் பகுதியிலும் தேசிய இனமும் மதமும் ஒரே வரையறைக்குட்பட்டதாக இல்லை. இந்தியாவிலும் அப்படி ஒரு போதும் இருந்ததில்லை.

(மகாத்மா – மதச்சார்பின்மை, மதவெறி; பிபின் சந்த்ரா)

ஆனால் இலங்கையில் காந்தியின் கருத்துக்கு எதிரான சூழல் நிலவியது. இங்கு ஒரு இனமே மதமாக இருந்தது: பௌத்தர்கள் – சிங்களராக இருந்தனர். சிங்களர் பௌத்தராக இருந்தனர். தமிழினம் அவ்வாறில்லை. இந்து, இஸ்லாம், கிறித்துவம் என ஓரினத்துக்குள்ளேயே பல மதங்கள் ஜீவித்தன. ஒற்றை இனமே ஒற்றை மதமாகவும், அவையே பெரும் பான்மையாகவும் இருந்ததால், பெரும்பான்மைக்கே உரிய அதிகாரக் குவிப்பு, அரசியல் கைப்பற்றுதல் நடந்தது. சிங்கள-பௌத்த ஆதிக்கம் இன-மதத்தின் பெயரால் கட்டமைக்கப் பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவதாய் – இலங்கை விடுதலை பெற்ற நாளிலிருந்தும் அதற்கு முந்திய காலத்திலிருந்தும் இந்திய ஆதிக்கம் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று. அதனை தமிழர் ஆதிக்கம் எனப் பாவித்தே சிங்களம் வரலாற்றுக் காலந்தொட்டு எதிர்கொண்டது. இன்னொரு இன ஆதிக்கத்தை எதிர்ப்பதான புனைவு கட்டமைக்கப்பட்டது. இதுபற்றி விரிவாக வேறொரு தளத்தில் பேசலாம்.

மதத்தையும் அரசியலையும் தனித்தனியாக வைத்தல் என்ற காந்தியின் கருதுகோள் இங்கு செல்லுபடியாகவில்லை. தல்பவல சீவனதோர என்ற புத்தபிக்கு – மே 26, 1958—ல் சொன்னது குறிக்கப்பட வேண்டிய ஒன்று – "ஒரு சிங்களவன் உயிருக்கு ஆயிரம் தமிழர்கள் சமம்"

இலங்கை ராணுவத் தளபதி பொன் சேகா முழுமையாய் இதை தெளிவுபடுத்தினார்.

"இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு, இது சிங்களருக்குச் சொந்தமானது"

"தமிழர்களுக்குப் போவதற்கென்று இன்னொரு நாடு இருக்கிறது. இஸ்லாமியருக்கும் இன்னொரு தேசம் உண்டு. சிங்களருக்கு இதுதான் நாடு"

என்ற கருத்துக்கள் உயிர் பெறத் தொடங்கிய போது இங்கு அரசியலில் மதக் கலப்பு தெளிவாக உருவாகிவிட்டது. எல்லா மதவெறிகளுமே மோனமானவைதான் என்று காந்தி கருதினார். "பெரும்பான்மை மதவெறி மிக மோசமானது. பெரும்பான்மை என்கிற அதிகாரம் அவர்களுக்குத் தருகிற போதை அது" என்று கூறினார்.

சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்று 1956ல் கொண்டு வரப் பெற்றது போலவே பௌத்தம் மட்டுமே இலங்கையின் மதம் என புதிய அரசியல் யாப்பில் (1971) சொல்லப் பெற்றது.

1956–ல் சிங்கள இனம் உரிமை பறிப்புச் செய்த மமதை - ஒவ்வொன்றாய் உரிமை பறிப்பை செய்து காட்டும் களமாக தமிழர்களை ஆக்கியது. அரசுத் தாக்குதல் மட்டுமின்றி சிங்களர் பக்கமிருந்து காடையர் தாக்குதலும் தொடர்ந்தது. இதன் பின்னணியில் நின்ற புத்த பிக்குகள் 1958–ல் முன்னணிப் பாத்திரத்துக்கு வந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1958-ல் அகதி வாழ்வு தமிழ்ச் சமுதாயத்தில் தொடங்கிற்று. சொந்த மண்ணில் ஒண்ட இடமில்லாமல், உலக முழுதும் அகதியாய் ஓடிக் கொண்டிருக்கும் வாழ்க்கை அன்று ஆரம்ப மானது. அகதிகளை யாழ்ப்பாணத்துக்கும், வல்வெட்டித் துறைக்கும் ஏற்றிச் செல்ல 1958-ல் இரு கப்பல்களை இந்தியா அனுப்பியது. யாழ்தேவி என்ற கப்பலில் கொழும்பிலிருந்து அகதிகளை ஏற்றிச் சென்ற அனுபவங்களை பேசியது அருளரின் லங்காராணி என்ற புதினம்.

காந்தி காலத்து பிரிட்டிஷ் இந்தியா அல்ல இலங்கை; சிங்களரும் பிரிட்டீஷார் போல், வேற்று தேசத்தார் அல்ல. அந்த நாட்டுக்கே உரித்தான் பெரும்பான்மை இனமென்பதால், அதன் உள்வயத்தன்மைகளால், தனிச் சிறப்பான அடக்குமுறை வடிவங்களைக் கைக்கொள்கிறது; அதுபோலவே, வித்தியாச மான சூழலில், விடுதலைப் போராட்டமும் பிரத்யேகமான வடிவத்தை எடுத்துக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் வியட்நாமில் நடத்திய ஆக்கிரமிப்புப் படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து புத்தபிக்கு தீக்குளித்து மரணித்த செய்தி வந்தபோது உலகம் அதிர்ச்சி அடைந்தது. தன்னை மாய்த்துக் கொள்ளல் எனும் தீக்குளிப்பு வடிவம் வரலாற்றில் ஏறியது. அது ஒரு போராளியின் வெளிப்பாடு.

மனித உரிமை அமைப்பினர், ஆர்வலர்கள் இணைந்து, பத்திரிகையாளர்கள் வரிசையாய் கொலை செய்யப்பட்டு வருவதை எதிர்த்து கொழும்பில் ஒரு கூட்டம் நடத்தினர். அந்த மேடையில் ஏறி, மனித உரிமை ஆர்வலர்களைத் தாக்கி, தடை செய்ய முயன்றதும் இந்தத் துறவிகள் தாம்.

கூட்டம் கூட்டமாய் சிறுபான்மை மதத்தவரை கொலை செய்யும் இந்துக் காவிகளைப் போலவே, சிறுபான்மை தமிழினத்தை துடைத்தொழிப்பதில் முன்னிற்கும் புத்த பிக்கு களைப் புரிந்துகொள்ள இலங்கையின் மகா சங்கத்தின் வரலாற்றைத் தெரிந்து கொள்வது அவசியம்.

"உலகிலேயே மிக நீண்ட வரலாற்றைக் கொண்டதும் அமைப்பு ரீதியான ஒழுங்கமைப்புப் பெற்றதுமான முதலாவது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத நிறுவனம் இலங்கையிலுள்ள பௌத்த மகா சங்கமாகும். சுமாராக 2250 ஆண்டுக்கால தொடர்வரலாற்றைக் கொண்ட இந்நிறுவனம் இலங்கையின் அரசியல் சிந்தனை மரபை மதத்துடன் இணைத்துப் பேணி வருகின்றது. உருக்குலையில் காய்ச்சி உருக்கேறிய இரும்பாய்ப் போன பழுத்த சிங்கள ராஜ தந்திரத்தை மகா சங்கம், காலத்துக்குக் காலம் மன்னர் களுக்கோ அன்றி ஆட்சியாளர்களுக்கோ கடத்தி வரும் மரபைக் கொண்டுள்ளது" – என அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசு குறிப்பிடுவது – கவனம் கொள்ள வேண்டியதாகும்.

இலங்கையின் அரசியலையும், அந்த அரசியலில் யாரை அமர்த்துவது என்பதையும் புத்த துறவிகள் தீர்மானிக்கிறார்கள். பண்டாரநாயகாவின் அமைச்சரவையில், இடது சாரி இயக்கத் தந்தை என அறியப்பட்ட பிலிப் குணவர்த்தனா விவசாய அமைச்சராகவும் அவரது நண்பர் வில்லியம் டி. செல்வா கடல் தொழில் அமைச்சராகவும் இருந்தனர். பிலிப் குணவர்த்தனா நெற்காணிச் சட்டம் என்று ஏழை, நடுத்தர விவசாயிகளுக்குப் பயனளிக்கும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார். கோபம் கொண்ட நிலப் பிரபுக்கள் இரு இடது சாரி அமைச்சர்களையும் காலி செய்ய புத்தரகித்த தேரா என்ற மதகுருவை அணுகினர். புத்தரகித்த தேரா களனி புத்த விஹாரின் பிரதம குரு மட்டுமல்ல. அரசியலிலும் செல்வாக்குப் பெற்றவர். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரான திருமதி. விமலா விஜயவர்த்தனாவுக்கும் புத்தவிஹாரின் தலைமைத் துறவியான புத்தரகித்த தேராவுக்கும் கள்ள உறவிருந்ததை இலங்கை முழுதும் அறியும். மறைவாக ஏன் வைத்திருக்கவேண்டும், எல்லோரும் அறியட்டுமே என அந்தப் பெண்மணி ஜப்பானில் நடந்த மாநாட்டுக்குச் சென்றபோது விமான நிலையம் வந்திருந்து நீண்ட நேரம் காத்திருந்து வழியனுப்பி வைத்தார் அந்த புத்த துறவி. பிலிப் குணவர்த்தனாவும் வில்லியம் டி. செல்வாவும் வெளியேற்றப்பட்டது மட்டுமல்ல, நிலப் பிரபுத்துவ மனவியலும், கலாச்சாரமும் கொண்ட புத்தரகித்ததேரா, 1959-ம் ஆண்டு செப்டம்பர் 26-ம் நாள் பிரதமர் பண்டார நாயகாவை சோமராம தேரோ என்ற புத்தபிக்கு சுட்டுக் கொல்ல திட்டம் தீட்டிக் கொடுத்தார்.

காரணமிருந்தது. இடதுசாரி அமைச்சர்களிருவரையும் வெளியேற்றியதும், தன் செல்வாக்கே செயல்படும் என புத்தர கித்த தேரா நினைத்தார். பிரதமர் பண்டாரநாயகா சுதந்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக செயல்படத் தொடங்கியமை துறவிக்கு சகித்துக் கொள்ள முடியாமல் ஆனது.

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை – மூவாசைகளையும் துறந்தவர் துறவி என இலக்கணம் இருக்கிறது. பழைய பிரபுத்துவ இலக்கணம் தான். ஆனால் எந்த ஆசையையும் துறந்தவர்களில்லை இலங்கை புத்த துறவிகள்.

இன்று நேரடியாகவே அரசியலில் பங்கேற்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியுள்ளார்கள். ஹெலமய உறுமய என்பது புத்த சாமியார்களது அரசியல் இயக்கம்.

தமிழர்களைக் கொல்லும் போரில் களம் செல்லும் படையினர் பவுத்த துறவிகளான தேரர்களால் ஆசீர்வதிக்கப் படுகிறார்கள். போருக்குப் பயன்படுத்தப்படும் கொலைக்கருவிகளும் பவுத்த தேரர்களால் ஆசீர்வதிக்கப்படுகின்றன. படையினரின் பாதுகாப்புக்கு பிரித் (மந்திரம்) ஓதி அவர்களது கையில் மஞ்சள் கயிறு கட்டப்படுகிறது. புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி – என்று நாள்தோறும் ஓதும் புத்த தேரர்கள் இதைச் செய்கிறார்கள்.

"தமிழர்களுக்கு எதிரான போரை என்ன விலை கொடுத்தேனும் வெல்ல வேண்டுமென்று அஸ்கிரிய – மல்வத்தை பீடாதிபதிகள் குரல் கொடுக்கிறார்கள். ராமண்ய, அமரபுர, பௌத்த சியாம் ஆகிய மூன்று நிகாயங்களைச் சேர்ந்த இந்த இருபீடங்கள் தமிழருக்கு எதிரான போரை தீவிரப்படுத்தினார்கள்.

மனிதன் எல்லா உயிர்களிடத்தும் அன்பு, கருணை காட்ட வேண்டுமென்பது புத்தமத்தின் அடிநாதமான கோட்பாடாகும். புத்தர் உயிர்கள் மூவகைப்பட்டதென்று சொல்லியிருக்கிறார். அதாவது மனிதர், தாவரங்கள், விலங்குகள் -- இவற்றில் எதற்கும் தீங்கு விளைவிக்கக்கூடாது. தீங்கு விளைவித்தால், அது எல்லா உயிர்களுக்கும் கருணை காட்ட வேண்டுமென்ற கோட்பாட்டுக்கு தீங்கு விளைவித்ததாக முடியும். போர் இந்த மூவகை உயிர்களையும் கொல்கிறது"

(மகாவம்ச சிந்தனை ஒரு வரலாற்று மீள்பார்வை – தங்கவேலு, கனடா)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 7

இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டுக் கப்பல்களிலும் ரயில்களிலும் வடபகுதிக்குத் திரும்பிய மக்கள் சிலர் "இனிமேல் கொழும்பு பக்கம் தலைவைத்துப் படுக்க மாட்டோம்" – என்று சொல்லிச் சென்றார்கள்.

ஆளும் கட்சியினரின் தூண்டுதலாலும் காடையர்களின் அட்டகாசத்தினாலும் அரசாங்கத்தின் அசிரத்தையினாலும் அகதிகளாகப் பொலிஸ் நிலையங்களில் தஞ்சம் அடைந்து அல்லல்பட்டு கொழும்பு நகரிலும் புறநகர்ப் பகுதிகளிலும் நின்ற தமிழ் மக்களுக்கு, கொழும்பு நகரத் தமிழ்ப் பிரமுகர்கள் அகதி முகாம்கள் ஏற்பாடு செய்து உணவும், உடையும் கொடுத்துப் பாதுகாப்பும் அளித்துவந்தனர். அகதிகள் சொந்த ஊர்களுக்கே திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவித்தும் அரசு உதவ முன்வரவில்லை. தமிழ்ப் பிரமுகர்கள் கூடி ஆலோசித்து அல்பிரட் தம்பி ஐயாவின் கப்பல் கம்பெனி மூலமாக கப்பல் களில் அகதிகளை அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அகதிகள் திருக்கோணமலைத் துறைமுகத்துக்கும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் காங்கேசன் துறைமுகத்திலும் போய் இறங்கினர்.

பத்திரிகைத் தணிக்கை கடுமையாக அமுல் படுத்தப் பட்டது. அரசின் செய்திக்குறிப்புகள் பத்திரிகைகளுக்கும் இலங்கை வானொலியிலும் வெளிவந்தன. காங்கேசன் துறை விமான நிலையம் தீக்கிரையானது போன்ற கட்டுக்கதைகளும் அரசினால் வெளியிடப்பட்டது. கொள்ளையடிப்போரைக் கண்டதும் சுடுவதற்கு சேர் ஒலிவர் உத்தரவு பிறப்பித்தார். கொழும்பு புறக்கோட்டை, குரு நாகல், வவுனியா, மதவாச்சி, பொலனறுவை, அநுராதபுரம் ஆகிய இடங்களில் துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்றன.

நிலைமை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப் பட்டு விட்டதாக, நாடாளுமன்றக் கூட்டத்தில் 1958 ஜூன் 3ஆம் நாள் பிரதமர் பண்டாரநாயகா அறிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த அரசாங்கத்தை வீழ்த்தி விடலாமென்று தப்புக் கணக்குப் போட்ட சகல சக்திகளும் அடக்கப்பட்டுவிட்டன. சட்டத்தை மீறியவர்களையும் காடையர்களையும் அடக்குவதில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம்" - என்று அவர் கூறிய போது, சிங்கள உறுப்பினர்கள் கை தட்டி ஆரவாரம் செய்தனர்.

"மத்திய அரசைக் கவிழ்த்துவிட்டு தமிழரசுக் கட்சி யினரும் மற்ற சக்திகளும் வடக்கிலும் கிழக்கிலும் தனியாக ஒரு அரசை அமைப்பதற்கு திட்டமிட்டார்கள்" - என்று பழி சுமத்தினார். இம்மாதிரி ஒரு எண்ணத்தின் பக்கம் தலை வைத்துக் கூடப் படுத்திராத சாதிதான் தமிழ்ச் சாதி: அன்று காந்தியைவிட கூடுதலாய் அகிம்சை வழியில் நடந்தனர்.

"அவர்களுடைய முயற்சிகள் அடக்கப்பட்டுவிட்டன. தமிழர்களின் போராட்டங்களை எனது அரசு முறியடித்து விட்டது. இப்போது வடக்கிலும் கிழக்கிலும் எனது இராணுவம் தான் இருக்கிறது. இந்த இரு மாகாணங்களிலும் ஒவ்வொரு இராணுவ ஆளுநர்களைக் கொண்டு இராணுவ ஆட்சி நடை பெற்று வருகிறது. அந்த இரு மாகாணங்களிலும் வேறு நிர்வாகம் அமைக்க முயற்சி மேற்கொள்ளாமல் எனது இராணுவத்தின் மூலம் பார்த்துக்கொள்வேன்" என்றார்.

அன்று தொடங்கிய இராணுவ ஆட்சி, இன்றும் தொடர் கிறது. தோற்றத்தில் சனநாயகம்; ஆனால் பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராணுவத் தலைமைக்குத்தான் அடக்கமே தவிர, இராணுவம் இவர்களுக்குக் கட்டுப்பட்டதல்ல. ஒடுக்குமுறைக் காலங்களில் இராணுவம் காட்டியதுதான் திசையே தவிர, மக்கள் பிரதிநிதிகளுக்கென்று தனித்திசை இல்லை. தமிழினத்தின் உரிமைகள் ஒவ்வொன்றாய் அதிகாரத்தை மாற்றுதலும், தொடர்ச்சியாய் நடைபெற்று வந்தன. இலங்கையின் ஆட்சிப் பயணம் பற்றி ஒரு பார்வை வீசுகிற எவரும் எளிதாய் இதனைக் கண்டுவிட முடியும்.

குண்டுப் பொழிவால் இடம் பெயர்ந்து வதங்கும் தமிழீழ அகதிகளைப் பார்வையிட இலங்கை மனித உரிமை ஆணைக் குழு சென்றது. "பார்வையிடவும், விசாரித்து அறியவும் அனுமதி இல்லை" - என இராணுவம் மறுத்துவிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நாங்கள் நேரடியாக ஜனாதிபதியின் கீழ் இயங்கும் அமைப்பு - இடம்பெயர்ந்து அகதிகளாய் வந்துள்ள மக்களைச் சந்திப்பதற்கு எங்களுக்கு உரிமை உண்டு” என மனித உரிமை அமைப்பினர் தெரிவித்த போது

அவ்வாறு சந்திக்க வேண்டுமானால் வன்னிப் பகுதி. இராணுவத் தளபதியின், மூலமாக கடிதம் கொண்டு வந்தால் மட்டுமே அனுமதிக்கமுடியும். என்று இராணுவம் மறுத்துத் திருப்பியனுப்பியது சமீபத்திய வரலாறு.

காலனியாதிக்கத்தின் ஒடுக்குமுறைகளை சாத்வீக வழியில் எதிர்த்த காந்தி - இராணுவ ஆட்சி முறைக்கு என்ன மருந்து வைத்திருப்பார்? இட்லரைப் போன்ற சர்வாதிகார ஆட்சியாளர்களை வன்முறையாளர்கள் என்று வரையறுத்தது போலவே - அவர்களை எதிர்த்து ஆயுதம் கொண்டு போராடியவர்களையும் வன்முறையை நேசிப்பவர்கள் என்று விமர்சித்தார்.

“தனக்குத் தீங்கு இழைத்தவரின் மனத்தை வெல்ல, அவருக்கு நன்மை செய்வதையே நான் விரும்புகிறேன். இதையே புதிய ஏற்பாடும் அறமாகப் போற்றுகிறது” என்றார். இது தென்னாப்பிரிக்காவில் ஆங்கிலேயே அரசு நடத்திய போர்களில், அவர்களுக்கு உதவியாக மருத்துவப் பணிகளை அவர் மேற்கொண்டபோது கூறிய வாசகமாகும். போரை நடத்துகிற ஆக்கிரமிப்புப் படைக்கு உதவுகிற மனப்பாங்கு அதை எப்படிச் சரி செய்யுமென்றும், ஆக்கிரமிப்பால் பாதிக்கப்படும் பல்லாயிரக் கணக்கான மக்கள் தன்னை எதிரியாகக் காணமாட்டார்களா என்பது பற்றியும் அவர் கவலைப்படவில்லை. எதிரிக்கும் அருளும் நன்னெஞ்சு தனக்கு உண்டா, இல்லையா என்பதை சோதித்துணரவே அவர் சிரத்தை கொண்டிருந்தார்.

தீங்கு இழைத்தோருக்கு நன்மை செய்வது குடும்பத்துக்குள், நட்பு வட்டத்துக்குள், தனிமனித உறவில் அவர்களின் மனதைச் சரி செய்ய சாத்தியப்படலாம். அரசியல் அடக்குமுறையின் போது - ஆக்கிரமிப்புப் போரின்போது - இராணுவ ஆட்சியின் போது இந்த சாத்வீகம் — பல்லாயிரக்கணக்கான மக்களைச் சாவு கொடுக்கும் பலித் தத்துவமாகவே மாறும். அதனாலேயே மக்களைவிட மக்களின் எதிரிகள் காந்தியை நேசித்தார்கள். அரசியலை தான் மெய் என்று கருதியதை சோதித்துப் பார்க்கும் களமாக அவர் பயன்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யூதர்கள் தைரியமாக இட்லரை எதிர்கொள்ளவேண்டும்; இட்லருக்கு எதிராக வன்முறை மறுப்புக் கொள்கையை அவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறுவது நகைப்புக் கிடமானது; யூதர்கள் மத்தியில் இப்படியொரு காந்தி, தோன்றி – இவற்றைச் செய்வாரானால் அவர் உடனடியாக கழுவி லேற்றப்படுவார்" என்று யூதஇதழின் ஆசிரியர் முன் வைத்தார். அதற்கு காந்தி இவ்வாறு பதிலுரைத்தார்.

"அமைதி வழியில் அகிம்சையைக் கடைப்பிடித்து இட்லரை எதிர்த்து மாண்டோரின் தியாகம் வீண்போகாது. இட்லரின் கல்மனம் கரையாவிட்டாலும், ஜெர்மானிய மக்களின் மனச்சாட்சி என்றாவது ஒருநாள் விழுத்தெழும். அவர்கள் ஒரு காலத்தில் வாழ்த்திய தலைவர் இட்லரை அவர் களே எதிர்ப்பர். மறுதலிப்பர். பாவம் புரியும் நெஞ்சானது தன்னை ஈடேற்றிக் கொள்ளும் வகையில் பரிகாரம் செய்ய முன்வருவது போல், அவர்கள் முன்வரக்கூடும் என்ற நம்பிக்கையை தளரவிடக்கூடாது" என்றார்.

ஆனால் மெய்மையின் நிரூபணம் வேறொன்றாக இருந்தது. உலக முழுதும் இணைந்த ராணுவ பலம் மட்டுமல்ல, மக்கள் பலரும் இணைந்து (எ.கா. – ருசிய மக்கள் பங்களிப்பு) இட்லர் வீழ்த்தப் பட்டபோது, செர்மானிய மக்கள் உணர்ந் தார்கள் என்றாலும் அதுவரை தீவிர தேசியவாதத்தின் காரண மாய் இட்லரை நேசித்தார்கள்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண

நன்னயஞ் செய்துவிடல்.

என்பது தனிமனித மனம் பற்றி உரையாடுகிற வாசகம். காந்தியம் – அது தனிமனித அறக் கோட்பாடாகும். தனிமனித மனத்துக்குள் ஊடுருவி சலனப் படுத்துதல் சாத்தியமாகலாம். எதிரிமனம் அல்லது பகைநெஞ்சு என்பது இன்றைய காலத்தில் தனியான இயங்குதலில் இல்லை. குழு, சாதி, மதம், இனம், தேசம் என்ற கூட்டியக்க தன்னிலைகளில் எவ்வகை அறக் கோட்பாடுகளையும் நிராகரித்துவிட்டவை. அவை ஒற்றை மனமாக இல்லை. ஆதிக்க மனோவியலில் இயங்கும் கூட்டு மனோவியல் கட்டமைப்பாக இந்தத் தன்னிலைகள் இயங்கு கின்றன. இந்தக் கூட்டு உளவியல் அறக் கோட்பாடுகளைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிடு பொடியாக்கி விட்ட நவீன சமுதாயத்தை உருவாக்கியுள்ளது. இந்திய அரசு என்ற அமைப்பு கூட – இந்தியாவின் நீண்ட நெடுங்கால அறவியல் மரபுகளின் தொடர்ச்சியில் இல்லை. முந்தைய அறவியல் மரபுகளை வேண்டுமென்ற முற்றாகப் புறந்தள்ளி, செயல்படுபவர்களாக மாறியுள்ளனர். நீண்ட நெடுங்கால, பழம் அறிவியல் மரபுகள் என்பது என்ன? முந்தைய காலம் தொகுத்துத் தந்துள்ள ஆதிக்கக் குழுவின் மரபுகள்தாம்.

காந்தி கருதியது போல், தீங்கு, வெறுப்பு, வன்மம், பயம், நெறிகளற்ற வாழ்க்கை, கட்டுப்பாடற்ற மனநிலை என்பவை தனிமனித உளவியல், தன்னிச்சையான செயல்பாடாக மட்டுமில்லை; சமகாலத்தில் அவை வர்க்கம், குழு, சாதி, மதம், இனம், தேசம் போன்ற கூட்டு உளவியல் தன்னிலைகளாக மாறிவிட்டன. அரசியலில் அறவியலை – அவர் பிறந்து வளர்ந்த குஜராத்தில் முன்னர் நிலவிய சமணத்தின் அகிம்சைக் கொள்கையை முன்வைத்தார். அன்பு, கருணை, பிறருக்கு உதவுதல் போன்ற சமண சமயப் பண்புகளை – குஜராத்தின் நவீன பணியாக்கள் தொழிலில் நேர்மையும், கட்டுப்பாடும் பேணாது, ஊருக்குக் காட்டும் கணக்கு வழக்குகளில் பொய்த் தகவல் தந்து, மக்களை ஏமாற்றிச் சம்பாதிக்கும் பனியாக்களின் நடத்தை சமணத்துக்குப் பெருமை சேர்க்கவில்லை, என்று கண்டித்தார். சமண சமயம் மட்டுமல்ல, இன்றைய கால அனைத்துச் சமயங்களும் மக்களைச் சுரண்டிப் பிழைப் போருக்குத் துணை நிற்கின்றன. அவர் கண்டிக்கும் பனியாக்கள் – சமண அறவியல் கோட்பாடுகளில் ஊன்றி நின்றிருப்பார் களேயானால் – இன்று பன்னாட்டு முதலாளிகளாக உயர்ந்திருக்க மாட்டார்கள் என்பதை ஊகித்துப் முடியாமல் போனது.

சமணத்துக்கு சமமான அறவியல் கோட்பாடுகள் கொண்டது பௌத்தம். இலங்கையில் அது இனத்துடன் இணைந்த ஆதிக்க கூட்டு மனோவியலுக்குள் கொண்டு வரப் பெற்று வன்முறை உருவாக்கம் அடைந்தது. நவீன பயங்கர வாதத்தின் அனைத்து உத்திகளையும் கையடக்கமாக்கி – இன்னொரு இனமக்கள் மீது வன்முறையைப் பாய்ச்சுகிறது.

ஒவ்வொருமுறையும் தமிழர்கள் மீது கொடுமைகள் நிகழ்த்தப்பட்ட போது சிங்களர்களில் மனிதநேயத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயங்கியவர்களும் இருந்தார்கள். அவர்கள் தான் தமிழர்களை அகதிகளாய்ப் பாதுகாப்புடன் அனுப்பி வைத்தார்கள். உண்மை தான் என்றொரு வாதம் உண்டு. அப்போதும் ஒரு சில பேர் பாதுகாப்புத் தந்து தமிழர்களை அகதிகளாய் அனுப்பி வைக்க முடிந்ததேயன்றி – எங்களைப் போலவே அவர்களும் எனக் கேள்வி எழுப்பி – அங்கேயே தமிழர்களின் இருப்பை, வாழ் விடத்தை உறுதிசெய்ய முன்வரவில்லை. அந்தச் சிலர் அதைச் சாத்தியப் படுத்தவில்லை. சிங்கள இனத்தின் கூட்டு மனோ வியலைச் சிதைக்க அவர்களால் முடியவில்லை. இயலாது. இன, மத ரீதியான கூட்டு மனோவியலுக்குள் தொடர்ந்து வளர்க்கப்பட்டு அது இன்று நடந்த இனப்படுகொலையை சாத்தியப் படுத்தியது. அதை வெற்றிக் கொண்டாட்டமாகவும் ஆக்கியது.

## 8

**ப**ண்டா – செல்வா ஒப்பந்தத்துக்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது – அது ஏமாற்று நாடகம் என்று இளைஞர் முன்னணியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்போது செல்வா சொன்னார்.

“இதில் தோல்வியடைந்தால் அது பெரும் சோகமாகவே இருக்கும். அப்படி ஏதும் நடந்தால், இன்னும் பத்து வருடத்தில் தமிழர்கள் சுயாட்சி கோரமாட்டார்கள். தனிநாடு தான் கேட்பார்கள்” (1957)

தொடர்ந்து தனிநாடு அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற குரல்கள் எழுந்து கொண்டிருந்தன.

1958–ம் ஆண்டின் இனக்கலவரத்தின் அனுபவத்திலிருந்து தமிழ் மக்கள் பிரிந்து தனிஈழம் அமைத்து சுதந்திரமாக வாழ வேண்டும்”

என்று பேராசிரியர் செ. சுந்தரலிங்கம் தெரிவித்தார். அதற்காக ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணி என்ற அரசியல் கட்சியையும் தொடங்கினார். தனிநாட்டுக் கோரிக்கையை ஆதரிப்பது தமிழ் அரசுக் கட்சியின் கௌரவத்தைக் குலைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடும்; இளைஞர்கள் மனம் மாறிவிடுவார்கள் என்று தமிழரசுக் கட்சி தலைமை கருதியது. ஆனால் அடங்காத் தமிழர் என்றறியப்பட்ட செ. சுந்தரலிங்கம் நம்பிக்கைக்குரியவர் அல்ல என்ற அம்சத்தையும் இணைத்துக் காணவேண்டும்.

"தமிழ் மக்கள் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக் கிறார்கள். மற்றைய சில நாடுகளில் போல், தமிழர்களும் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டுமென்ற குரல் எம்மக்கள் மத்தியிலும் எழுந்துள்ளதைக் கேட்கக்கூடியதாக இருக்கிறது."

தமிழரசுக் கட்சியின் ஏழாவது தேசிய மாநாட்டுத் தலை வராகத் தெரிவு செய்யப்பட்ட எஸ்.எம். இராசமாணிக்கம் 1961-ல் தெரிவித்தார்.

இதே மாதிரியாய் அறிக்கைகள் விடுபவராகவே செல்வ நாயகம் ஆகியிருந்தார். ஒவ்வொரு முறை தமிழ்அரசுக் கட்சியின் ஆதரவைப் பெற்று – ஒவ்வொரு சிங்கள அதிபர் ஆட்சி பீடத்தில் அமருகிற போதும்,

"எங்களைப் போல் எமக்குப் பின்னால் வரும் இளைஞர்கள் இருக்க மாட்டார்கள். அவர்கள் பிரிவினை கேட்பார்கள்"

என்று குரல் கொடுத்தார். ஆனால் தமிழ் அரசுக் கட்சி காந்திய வழியில் அரசின் கொள்கைகளை எதிர்த்து சாத்வீகப் போராட்டங்களையே நடத்திக் கொண்டிருந்தது. இத்தகைய ஒரு போராட்டக் காட்சி பற்றி எஸ்.எம். கோபாலரத்தினம் விவரித்துள்ளார்.

"ஏப்ரல் 17-ந்தேதி நள்ளிரவுக்குச் சற்றுநேரம் கழித்து சத்தியாக்கிரகளினால் மறிக்கப்பட்டிருந்த ஐந்து மாவட்டங் களையும் சேர்ந்த அரசு அலுவலகங்களுக்கு ஆயுதந் தாங்கிய படைகள் சென்று முற்றுகையிட்டன. அலுவலகங்கள் முன் பக்திப் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்த நிராயுதபாணி களான சத்தியாக்கிரகிகளை எழுந்து ஓடுமாறு படையினர் கட்டளையிட்டனர். அவர்கள் எழுந்திருப்பதற்கு முன்னரே அவர்கள் மீது தடியடி நடத்தப்பட்டது. அவர்கள் அங்கிருந்து ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டனர். இந்த விரட்டுதலில் இடறி விழுந்தவர்களும், வீதிகளில் மறித்த படையினரிடமிருந்து தப்பி ஓடுதற்கு, வீதிகள், வேலிகள் சுவர்களைத் தாண்டி ஓடி இடறி விழுந்து காயமடைந்தவர்கள் பலர். காயமடைந்தவர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலர் நள்ளிரவிலும் மருத்துவமனைகளுக்குச் சென்றனர். அவர்கள் காவலர்களாலும் படையினராலும் தூக்கிச் செல்லப் பட்டு பின்னர் தொலைவான இடங்களில், காடுகளில் விடப் பட்டனர்"

காந்தி தலைமையேற்று நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டங்கள் இங்கும் இத்தகைய விளைவுகளையே சந்தித்தன. "தென்னாப்பிரிக்காவில் நடத்திய சத்தியாக்கிரகங் களாகட்டும். இந்தியாவில் காந்தி தலைமையேற்று நடத்திய உப்புப் போர் போன்ற போராட்டங்களாக இருக்கட்டும். அதிகாரம் சிரம் தாழ்த்தி உரையாடலுக்கு உடன்பட்ட போதெல்லாம், அப்போராட்டங்கள் கோரிய நியாயங்கள் முழுமையாக நிறைவேற்றப்படாததுடன், அவற்றின் பொருட்டு செய்யப்பட்ட தியாகங்களுக்கு இணையான சலுகைகளும் கிடைக்காமல் போயின" என்று வ. கீதா குறிப்பிடுவார். *(காந்திய அரசியல் – பக் 25)*

காந்தியாவது விடுதலை கேட்டார்: செல்வநாயகம் நீண்டகாலமாக தமிழருக்கான உரிமைகள் தான் கேட்டார். சட்டத்தை மீறத்தான் போய்க் கொண்டிருக்கிறேன் என்று காந்தி தண்டி யாத்திரை நடத்தினார். செல்வநாயகம் கோரிக்கை களுக்காக ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டிருந்தார். இவ்வளவு மிதமான அகிம்சைப் போராட்டங்கள் தமிழருக்கான உரிமை களைத் தருகிற அளவுக்குக் கூட சிங்களரிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தவில்லை. ஈழவிடுதலை அல்ல, உரிய உரிமைகளைத் தருவோம் என்ற மனிதநேயக் கண்ணோட்டத்தைக் கூட சிங்களத்திடம், காந்தியத்தால் உண்டாக்க முடியாமல் ஆனது. சிங்கள–பௌத்த பேரினவாத வெறியாட்டத்தை எப்படிக் கையாள்வது என்பதற்கு காந்திய அகராதியில் விடை இல்லை. ஒரு வேளை காந்தி – இன்றிலிருந்து – இன்றைய சூழலில் இதே நடைமுறையைப் பின்பற்றியிருந்தால், 1948–ல் ஒரு மதவெறி யனிடமிருந்து அவர் கொலை தவிர்க்கப்பட்டு இராசபக்ஷே போன்ற ஒரு சிங்கள வெறியனிடம் அவர் முடிவு நிகழ்ந்திருக்கும்.

ஒரு வாதத்துக்காக வைத்துக் கொண்டாலும், காந்திய மனமாற்ற வழிமுறை என்பது உயர்ந்த – நாகரிக – பண்பட்ட – அரசுகளற்ற – ஒரு சமுதாயத்தில் மட்டுமே எடுபடும். சிங்கள – பௌத்த பேரின சமுதாயத்திடம் அல்ல; காந்தியம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களத்தின் முன் தோற்ற வரலாற்றுப் படிப்பினையிலிருந்தே 1976ல் தனிநாடு தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். 1980–களின் பின் ஆயுதப் போராட்டம் மேல்வந்தது; விடுதலைக் கோரிக்கையை முன்வைத்த தமிழர்களுக்கு மட்டுமல்ல, உலக முழுதுக்கும் காந்தியத் தோல்வி ஒரு வரலாற்றுப் படிப்பினை யாக வந்துள்ளது.

## 9

**போ**ராடுபவர்களை நெறிப்படுத்துவதாக காந்தியின் போதனைகள் இருந்தில்லை. அது போராளிகளை மட்டுப் படுத்தவும் மக்களைப் போர்க்குணமற்றவராய் ஆக்கவும் பயன் பட்டன.

அடக்குமுறைக் கருவியான அரசு – அடக்குமுறை செய்யும் இன்னொரு பகுதியினர் பற்றி எதுவும் சொல்லவில்லை. அவர்கள் அரசியல் அறநெறிக்குட்பட்டவர்களாக இயங்க வேண்டுமென்பதை அழுத்திச் சொல்லத் தயங்கவில்லை. தர்ம கர்த்தாக்களாக அவர்கள் இயங்க வேண்டுமென்ற வேண்டு கோள் விடுப்பவராக செயல்பட்டார்.

இந்தியா தவிர, வேறெந்தப் பூமியிலும் அவரது அஹிம்சைப் போராட்டம் செல்லுபடியாகவில்லை. செல்லுபடியான ஓரிரண்டு நாடுகளிலும், அதைக் கொண்டு செலுத்தியவர்கள் தான் பலியானார்களே தவிர (மார்ட்டின் லூதர்கிங்) விளைவு களுக்காக நீண்ட காலம் காத்திருக்க வேண்டியதாயிற்று. நெல்சன் மண்டேலா போல், நெடிய ஆண்டுகள் சிறைவாசம் கொள்ளலாயினர். ஜெகஜால வித்தைகள் செய்யும் அதிகாரக் கூட்டத்துக்கு, சாத்வீகப் போராட்டங்களை எப்படிக் கையாள்வது எனத் தெரிந்திருந்தது.

இலங்கைத்தீவுக்குள் தமிழர்கள் நடத்திய சாத்வீகப் போராட்டங்களின் வரலாறு தெரிந்தவர்கள் நாம்.

மனித உறவுகளுக்கிடையே எழுகிற முரண்களை, பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு காந்தி முன்னெடுத்த வழிமுறை மனமாற்றம் என்பதாகும். ஆனால் ஆதிக்க சக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் மற்ற மனிதர்களுக்குமிடையே ஏற்படும் உரசலை, உறவு மோதலை, கொலைக்குத் துடிக்கும் மனோபாவத்தை எவ்வாறு கையாள்வது என்பது பற்றி அவர் பேசவில்லை. தீங்கு செய்பவரை மனம் திருந்தும்படி செய்யும் நல்வழி கோட்பாடே காந்தியம். ஆனால் தீங்கு செய்வதையே தனது ஒழுங்காக, ஆக்கிக் கொண்ட அரசமைப்பு பற்றி – அதனை இயக்கும் சக்திகள் பற்றி – அவைகளை எவ்வாறு மனம் திருந்தச் செய்வது என்பது பற்றி காந்தியம் உதடு பிரிக்க வில்லை. தனிமனித உறவுகளை, மோதல்களை சீரமைப்பது பற்றி அது பேசிய பக்கங்களைவிட – அதிகார மையங்களான நிறுவனச் செயல்பாடுகள் பற்றி அவர் பேசாதுவிட்ட பக்கங்கள் முக்கியமானவை. இதுதான் இன்று பேசப்பட வேண்டிய பிரதான கவனத்துக்குரியவை. ஆனால் மார்க்சியம் இது பற்றி ஏற்கனவே பேசியிருந்தது.

குடும்ப உறவுகள், சகோதர உறவுகள், நட்பு – போன்றவை களில் ஒருவருக்கொருவர் மனமாறுதல் மூலம் பிரச்னை களைத் தீர்க்கமுடியும். மனமாற்றத்துக்கு உட்படுத்த முடியாத, ஏற்கனவே கட்டமைக்கப்பட்ட நிறுவனங்கள், சமூகப் பிரிவு, ஆதிக்கப் பிரிவுகளிடம் உண்டு என்பதை காந்தியம் ஏற்றாக வேண்டும். அவ்விடங்களில் பிரச்னைகளை அறநெறி வழிப் பட்டுத் தீர்க்கும் சக்தியற்றதாகி விடுகிறது காந்தியம்.

ஈழத்தில் அரசியல் போராட்டம் முதல் 30 ஆண்டுக் காலம் காந்தியக் கண்ணோட்டத்தில் அகிம்சை வழியிலேயே நடந்தது; சிங்களரின் காடைத் தனங்களுக்கு, சிங்கள அரசின் அடக்குமுறைக்கு திருப்பித்தாக்காத நடைமுறை கடைப் பிடிக்கப்பட்டது. அப்போராட்டம் சிங்கள இனத்திடம் மனமாற்றத்தை எதிர்பார்த்தது.

"உண்மையிலேயே அந்தப் போராட்டத்துக்கு தலைமை யேற்ற செல்வநாயகம் காந்தியைவிட மிதவாதியாக இருந்தார்" என்று சொல்லப்படுவதுண்டு. அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள்;

"சுயநலனே மனிதனின் இயக்குவிசை என்கிறது முதலாளித் துவம். (இதை மனிதனின் வாழ்தலுக்கான விழைவு எனலாம். வாழ்தலுக்கான விழைவு சுயநலனாய் ரூபம் கொள்கிறது – ஆ.ர்) இந்த சுயநலன் தனிமனித அளவினதாக இருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப அளவினதாக இருக்கலாம். சாதி அளவினதாக, மத, அளவினதாக இருக்கலாம். இனஅளவினதாக இருக்கலாம். ஒரு நாட்டின் ஆட்சியாளர் அளவினதாக இருக்கலாம். இப்படித் தான் சுயநலனாய் எல்லாமும் இயங்குகிறது... இயக்குவிசை (சுயநலன்) என்ற எலும்புத்துண்டு இல்லாமல் தனிமனிதன் முதல் அய்-நா வரை முதலாளித்துவத்தின் எந்த அரசியல், பொருளாதார அரங்கும் இயங்காது. நீதி, நேர்மை, மனிதாபி மானம் என்பதெல்லாம் முந்திய பழம் அறவியல் தன்மை களாகவோ, அல்லது போற்றுதலுக்குரிய தெய்வீகத் தன்மை யுடையனவாகவோ ஆகிவிட்டன. இத்தகையவர்களை ஆட்சி யாளர்களில் காண்பது அரிது. ஏனெனில் ஆட்சியிருப்போர் அனைவரும், ஆளும் வர்க்கங்கள், மேலாதிக்க சக்திகள் அனைவரும் இயக்குவிசைக் கோட்பாட்டைக் கொண்டிருப்ப வர்களே. இலங்கை என்ற சின்ன எலும்புத் துண்டிற்காக இந்தியா, சீனா, மற்றும் பலநாடுகள் போட்டியிடுகின்றன. இந்தியச் சந்தை என்ற எலும்புத் துண்டை மனதில் கொண்டு உலக நாடுகள் இலங்கையைச் செல்லமாக வைத்துக் கொள் கின்றன. இலங்கை என்ற எலும்புத் துண்டு – பதிலுக்கு அனைத்து சர்வதேச சட்ட நெறிமுறைகளையும் மீறி இன அழிப்பைப் பலவடிவங்களில் தொடர்ந்து பயமில்லாமல் செய்துவருகிறது. எனவே முதலாளித்துவ உலகஅமைப்பில் – குறிப்பாக அதன் ஆட்சி அரங்குகளிலிருந்து எதையாவது பெறமுயன்றால் அதன் இயக்குவிசைக் கோட்பாட்டின் படியே பெற்முடியும்.

இந்த இயக்குவிசைக் கோட்பாட்டுக்கு எதிராக, ஈழப் போராட்டம் உலக ஆட்சி அரங்குகளில் நீதி, நேர்மை, நெறி முறை இவைகளை எதிர்பார்த்ததுதான், அதன் பின்னடைவுக்கே முழுக் காரணமானது" (பிரபா – ஈழம் – விடுதலைக்கான இறுதிக் கணக்கீடுகள் இணையக் கட்டுரை)

சுயநலன் என்ற இயக்குவிசைக் கோட்பாட்டின் தலையாய வடிவம் என அரசமைப்பைப் பற்றி காந்தி கருத்தில் கொள்ளவில்லை. அது மாற்றியமைக்கப்பட வேண்டிய அமைப்பு என்ற கருதுகோள் அவரிடம் இல்லை. அமைப்புக்கு வருகிற தனிநபர்களைப் பொறுத்து அது நலம் பயக்கும் என்ற கருத்து இருந்தது. மன்னராட்சி குறித்தும் இதே கருத்தையே வைத்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு – ஒழுங்கு படுத்தப்பட்ட வன்முறைக் கருவி என்றோ, ஆதிக்கக் குழுக்கள் மக்களை அடக்கியாள்வதற்கான உருவாக்கம் என்றோ, அவ்வாறு செயல்படும்போதே பொருத்தப்பாடு கொண்ட கருத்தியலையும் உருவாக்கம் செய்வது பற்றியோ காந்திக்கு சிந்தனை ஏதும் இருந்ததில்லை. நூற்றாண்டுகளுக்கும் மேலாக இந்த அமைப்பு கூர்மைப் படுத்தப்பட்டு வந்துள்ளது. அது வரலாற்றில் வேறு வேறு வடிவங்களைக் கொள்ளும் என்ற அதன் இயங்குவகை அவருக்கு பிடிபடவில்லை.

இதை சமகாலத்தின் வேறொரு காட்சியிலிருந்து விளங்கிக் கொள்ளமுடியும். இன்றைய அமெரிக்காவை அதன் தடுமாற்றங் களிலிருந்து எழுந்துவர, அதிபர் ஒபாமா எல்லாமும் செய்கிறார். ஆனால் ஒரு போதும் தனது நாட்டின் பொருளாதார அரசியல் முறைமையை, அதன் அரசுக் கட்டமைப்பை மாற்றியமைக்க விரும்பவுதில்லை. இதனை ஃபிடல் காஸ்ட்ரோ இவ்வாறு தெளிவுபடுத்தினார்.

“ஒபாமாவுக்கு அமைதிக்கான நோபல்பரிசு அறிவிக்கப் பட்டுள்ள இந்நேரத்தில், அமெரிக்க செனட் அதன் வரலாற்றி லேயே மிகப் பெரிய அளவில் ராணுவ பட்ஜெட்டை நிறை வேற்றியிருக்கிறது. 626 பில்லியன் டாலர்களை அனுமதித் துள்ளது. ஆப்கான் மீதான போரைத் தொடருகிறது. குண்டு வீச்சுக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. தனது நாட்டின் அரசியல், பொருளாதார அமைப்பு முறையை மாற்றியமைப்பது பற்றி அவர் யோசிப்பதில்லை”

ஒபாமா போலவே – ஒரு போதும் தனது நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பு முறையை – அதன் இயங்கு வடிவமான அரசுக் கட்டுமானத்தை மாற்றியமைப்பது பற்றி காந்தி யோசிக்கவில்லை. அமைப்பு முறையை மாற்றிய மைக்க வேண்டும். அதன்வழியே மற்ற நடைமுறை மாறும். மக்களிடம் அடிப்படையான மானமாற்றத்தை உண்டுபண்ணும் என்றவர்களை – வன்முறையாளர்கள் என்று ஒதுக்கினார். அதனடிப்படையில் மார்க்சிய தத்துவமே ஒரு வன்முறைத் தத்துவம் என்ற கருத்து அவருக்கிருந்தது. மார்க்சிய சித்தாந்தம் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளாத ஒருவர் உண்டென்றால், அது காந்தி மட்டுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி முயற்சிக்காக ஒபாமாவுக்கு வழங்கப்பட்ட நோபல் பரிசு – என்பது, ஒரு கேலிக் கூத்தாகும். தனக்கு வழங்கப்பட்ட அமைதிப்பரிசின் அவருடைய ஏற்புரை இந்த முரணை வெளிப்படுத்தியுள்ளது. "அகிம்சை வழியில் போராடிய மகாத்மா காந்தி, மற்றும் குடியுரிமைகளுக்காகப் போராடிய மார்ட்டின் லூதர்கிங் ஆகியோரே எனக்கு முன்னோடிகள். அவர்கள் கொள்கைகளில், வாழ்க்கையில் பலவீனம் என்ற பொருளில் நான் காணவில்லை. ஒரு நாட்டின் தலைவர் என்ற முறையில், அமெரிக்காவைக் காப்பாற்ற வேண்டிய கடமை எனக்கு உள்ளது. காந்தி, மார்ட்டின் லூதர் காட்டிய வழி முறைகளை மட்டுமே நான் பின்பற்ற இயலாது... அமெரிக்க மக்களுக்கு அச்சுறுத்தல் வரும்போது, அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமுடியாது. பயங்கரவாதிகள், அல்லது மோசமானவர்களின் ஆதிக்கத்திலிருந்து மக்களைக் காப்பாற்ற சில நேரங்களில் போர் நடத்த வேண்டியது அவசியமான ஒன்று.

இட்லரின் ராணுவத்தை அகிம்சைப் போராட்டத்தின் மூலம் நிறுத்தி இருக்கமுடியாது. அதேபோல், அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் அல்–கொய்தா தலைவரை ஆயுதங்களைக் கீழே போடச் செய்யமுடியாது"

ஒபாமா சுட்டிக்காட்டிய இட்லரின் ராணுவம் எழுபது ஆண்டுகளுக்கு முற்பட்டது. இன்றைய இலங்கை அரசின் இராணுவம் 70 ஆண்டுகளைத் தாண்டிய பயங்கரவாதத்தை தனக்குள் கொண்டிருக்கிறது. உலக முழுதுமுள்ள நாடுகளின் துணையை மட்டுமல்ல, அந்நாடுகளிடமிருந்து எடுத்துக் கொண்டு நடைமுறைப் படுத்திய அனுபவரீதியான தொழில் நுட்ப பயங்கரவாதத்தையும் கைக்கொண்டு தமிழ் மக்களை அழிக்கிறது.

ஆனால், தமது நாட்டின் மக்களுக்குப் பாதுகாப்புக்காக ஒபாமாவோ, அதற்கு முன்னிருந்த அமெரிக்க அதிபர்களோ போர் நடத்தியதில்லை. தமது நாட்டின் ஆளும் வர்க்கக் குழுக்கள் பாதிக்கப்படாலிருக்க, சரிவிலிருந்து அவர்களை மீட்பதற்காகவே போர் தொடுத்தார்கள். அவர்களுடைய சரிவு, மக்களுடைய சரிவாகக் காட்டப்பட்டது. நியூயார்க்கின் பெரிய பெரிய வங்கிகள் திவால் ஆகிறபோது வங்கிகளில் முதலீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தவர்களும், பணியாளர்களும் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்பதால், வங்கியின் நிதியாதாரத்தை நிலைப்படுத்துவதற்காக நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதைவிட வங்கித் தொழிலை விட லாபகரமான தொழில்களில் முதலீடு செய்திருக்கிறார்கள் இந்த ஆளும் வர்க்கக் குழுக்கள். எனவே தேசிய நலன் என்று அமெரிக்கா குறிப்பிடுவதும், ஒவ்வொரு நாடுகளும் குறிப்பிடுவதும், அதன் பொருட்டு போரும், அடக்கு முறையும் செய்வதும் மக்களின் நலன்களுக்காக அல்ல; அமெரிக்கா போலவே – காந்தியையும் மார்ட்டின் லூதர் கிங்கையும், அவர்கள் காட்டிய வழியையும் எந்த அரசும் பின் தொடர்வதில்லை.

இட்லரை விடக் கொடூரமான இட்லர்களை எதிர்த்துத் தான் தமிழ்மக்கள் இதுகாலம் போராடி வந்தார்கள். அல்–கொய்தா பயங்கரவாதத்தினும் மேலான சிங்களக் குழுக்களின் பயங்கரவாதத்தை எதிர்த்தே போராடினார்கள். அமெரிக்கா போல விடுதலைப் புலிகள் என்ற போராளிக்குழு –அங்குள்ள முதலாளித்துவ, நிலப் பிரபுத்துவ குழுக்களுக்கு ஆதரவாய் நின்றவர்களில்லை. அந்த மக்களின் விடுதலைக்காகவே போரை முன்னெடுத்தார்கள். அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரன்,

“எம்மை ஒழித்துக்கட்ட எதிரி உறுதி பூண்டு நிற்கிறான். முழு உலகமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்து வருகிறது. இந்த இக்கட்டான ஆபத்தான சூழ்நிலையில் நிற்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில் நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்த வேண்டும்”

என்ற வாசகம், மக்களைக் காப்பதற்கானதாக வெளிப் பட்டது. தம்மிடம் அழிந்து போகாது காப்பதற்கு ஒரு தற்காப்புப் போரும், அதன் தொடர்ச்சியில் தாக்குதல் போரும் தேவைப் பட்டன.

“ஆயுத வன்முறை வழியை விரும்பித் தேர்வு செய்ய வில்லை. வரலாறு எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது” என்று குறிப்பிட்டார்.

போராளிகள் எவரும் போர் விரும்பிகள் இல்லை. சமாதானத்தை, மக்களுக்கு அமைதியான வாழ்வை நிலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தவே போரைக் கையிலெடுத்தார்கள். எதிரியின் வன்முறையிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள்ள அதனினும் கூடுதலான வன்முறை தவிர்க்க முடியாத கட்டாயமானது. "வன்முறைக்கு அதை விஞ்சும் வன்முறைதான் பதிலாக இருக்கமுடியும். சுமாரான வன்முறையை வைத்து வெற்றி பெற முடியாது" என்பதை அரச அடக்குமுறையின் முழுப் பரிமாணத்தையும் வைத்தே புரிந்து கொள்ளமுடியும். வன்முறையில் உச்சபட்சம் எதுவுமில்லை. வளர்ந்து கொண்டே செல்லும் அரச வன்முறையை – அதன் எதிர்ப்பில் ஒரு புதிய கோட்பாட்டை வகுக்கும் போராளிகளின் நிலைப்பாடாகவே இதனைக் கொள்ளமுடியும்.

ஆனால் அரச வன்முறையையும், அதற்கு எதிர்வினை யாகத் தோன்றிய வன்முறையையும் ஒருசேர எதிர்க்க வேண்டு மென்ற கருத்தை காந்தி கொண்டிருந்தார். அதனடிப்படை யிலேயே செளரி செளராவில் போலீஸ்காரர்கள் மீது நடந்த தாக்குதலை கண்டித்தார். 1922 பிப்ரவரியில் விவசாயிகள் கோரக்பூருக்கு அருகே செளரி, செளராவில் எழுச்சி ஊர்வலம் நடத்தினர். ஊர்வலத்தினர் மீது சுட்ட போலீஸ்காரர்கள் மீது எதிர்த்தாக்குதல் நடத்தி 20 பேரைக் கொன்றனர் போராட்டக் காரர்கள். உடனே காந்தி ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெற்றார். "அஹிம்சை என் மூக்கில் நாறுகிறது" என்று அறிக்கை விட்டார்.

"அகிம்சையைக் கடைப்பிடித்து சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டு அரசின் அதிகாரத்தைச் சோதிப்பதைத் தவிர தனக்கு வேறு வழிதெரியவில்லையென்றும், தான் மேற் கொள்ளவிருக்கும் உப்புப் போராட்டத்தின் மூலம் ஆங்கில ஆட்சியின் மூர்க்கத்தை ஆங்கில மக்களே உணர்ந்து, இந்தியர் களுக்கு அவர்கள் இழைத்து வரும் அநீதியை அறிந்து மனங் கலங்குவர் என்றும் எழுதினார்.

பிரித்தானிய அரசாங்கம் வன்முறையை மட்டுமே முடுக்கவிட்டது. எழுச்சியுற்று, தெருக்களில் இறங்கிய மக்களை அடித்துத் துவைத்தது. வேறொரு கோணத்தில் ஆராய்ந்தால் மக்களைச் சாகடிக்கவே அஹிம்சை பயன்பட்டது.

"உப்பு சத்தியாக்கிரகம் மக்கள் எழுச்சியுறவும், தெருக்களில் இறங்கிப் போராடவும் உண்மையில் வடிகாலாக அமைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது செயலளவில் சாதித்தது என்ன என்பதை நாம் ஆராயவேண்டும். ஆங்கிலப் பேரரசின் அடக்குமுறை முழுவதும் அகிம்சா வழியில் எதிர்ப்புத் தெரிவித்து வந்த எளிய இந்தியர்களின் மீது குவிந்ததை அன்று உலகமே தவறானதாகக் கருதியது" (வ. கீதா – காந்திய அரசியல் பக் - 33–34)

ஆனால் காந்தி எந்த ஆங்கில ஆட்சியின் மூர்க்கத்தை ஆங்கில மக்களே உணர்ந்து மனங்கலங்குவர் என்று சொன்னாரோ அது நடைபெறவில்லை. ஆங்கிலேயே ஆட்சியின் மனச்சாட்சியை அசைக்கும் என்று எதிர்பார்த்ததுகூட நடக்கவில்லை. ஒன்றே ஒன்று மட்டும் நடந்தது. இதன் காரணமாய் 1932–ல் லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டுக்கு காந்தி அழைக்கப்பட்டார்.

உப்பு சத்தியாக்கிரகம் போன்ற பெரிய, எண்ணற்ற போராட்டங்களின் விழைவு பேச்சுவார்த்தைக்கு அழைப்பதே தவிர, விடுதலையை வழங்கிக் கௌரவிப்பு அல்ல.

ஆதிக்க எண்ணம் கொண்ட எதிரிகளின் நெஞ்சில் ஒருக்காலமும் அவர்களுக்குள்ளிருக்கும் மனச்சாட்சியைக் கிளறிக் கொண்டுவர முடியாது. மனமே இல்லாதவர்களுக்கு மனச்சாட்சி எங்கிருக்கும் என்ற புதிய வழிகாட்டுதலை – எல்லா விடுதலைப் போராளிகளும் கைக் கொண்டனர். ஈழப் போராட்டத்திலும் இந்த வழியில் போராளிகள் காந்தியைக் கடந்து போனார்கள்.

## 10

**வி**ழுப்புரம் செப் – 28, 2009.

"யாருக்கும் லஞ்சம் கொடுக்காதீர்"

பேருந்து நிலையத்தில் திடீரென பிரவேசித்த சத்தியாக்கிர இயக்கத்தினர் மக்கள் காலில் விழுந்து நூதனப் பிரச்சாரம் மேற்கொண்டனர். லஞ்சம், சாதிமோதல், வன்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாத நாடாக மாற்றிட வேண்டி, மக்களிடம் பரப்புரை செய்தனர். துண்டறிக்கைகள் வழங்கி பொதுமக்களின் காலில் விழுந்து கேட்டுக் கொண்டனர்.

இது காந்திய வழிமுறை: எடுத்துச் செய்தவர்கள் காந்திய வாதிகள். இந்த நடைமுறையோடு தொடர்பு கொண்ட சில கேள்விகள் எழுகின்றன.

1. லஞ்சம் கொடுக்காதீர் என்று மக்களை நோக்கி வைக்கப்பட்ட கோரிக்கையை – லஞ்சம் வாங்காதீர் என்று அதிகார வர்க்கத்தை ஏன் வைக்கவில்லை. அரசு அதிகாரிகளை, அரசியல்வாதிகளை, மிகப் பெரிய நிர்வாகக் கூட்டத்தை நோக்கி வைப்பார்களா?
2. அரசு அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவல கங்கள், தலைமைச் செயலகங்களில் பிரவேசிக்க முடியுமா? அதுவும் திடீரென
3. ஆயுதந்தாங்கிய போலீசார் எதற்கு? நீதிமன்றங்களுக் குள்ளேயும், அந்த நீதிபதிகளின் முன்னே லஞ்சம் வாங்காதீர் என்று சொல்லிவிட்டு, மீண்டுவர இயலுமா?

யாரை நோக்கி இந்தப் போராட்டங்களை எடுக்க வேண்டுமோ, அதிலிருந்து திசை மாற்றியதாக – மக்களின் மனச்சாட்சிக்கு வேண்டுகோள் விடுக்கிற காரியத்தை இதற்கு முன்னரும் காந்தியம் செய்தது; எதிரியின் மனச் சாட்சியைத் தொடச் செய்யும் வீண் விரயத்தில் ஈடுபடாமல், மக்களின் மனச்சாட்சியை உசுப்புகிற வேலையை செய்தது.

இன்னொரு பக்கத்தில் தீயசக்திகளுக்கு, உயர் மேன் மக்களுக்கு, அதிகாரக் கூட்டத்தாருக்கு நலம்புரிகிற ஒன்றாக ஆகிவிடுகிறது; குறிப்பாக முதலாளிகள், மேலாண்மைக் குழுவினர் – தமக்குச் சேதாரம் விளைவிக்காத இவ்வகைப் போராட்டங்களை வரவேற்கவே செய்தனர். இத்தகைய பரப்புரைத் தூதுவர்களை உருவாக்கினர். காந்திய தத்துவத்தால் ஈர்க்கப்பட்ட தொண்டர்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்தத் தத்துவத்தால் மூளைச்சலவை செய்யப்பட்ட மக்களால் பெரும் சொத்துக்களைக் கொள்வதும், நலன்களைக் காத்துக் கொள்வதும் வாய்ப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அது செயலளவில் சாதித்தது என்ன என்பதை நாம் ஆராயவேண்டும். ஆங்கிலப் பேரரசின் அடக்குமுறை முழுவதும் அகிம்சா வழியில் எதிர்ப்புத் தெரிவித்து வந்த எளிய இந்தியர்களின் மீது குவிந்ததை அன்று உலகமே தவறானதாகக் கருதியது" *(வ. கீதா – காந்திய அரசியல் பக் - 33–34)*

ஆனால் காந்தி எந்த ஆங்கில ஆட்சியின் மூர்க்கத்தை ஆங்கில மக்களே உணர்ந்து மனங்கலங்குவர் என்று சொன்னாரோ அது நடைபெறவில்லை. ஆங்கிலேயே ஆட்சியின் மனச்சாட்சியை அசைக்கும் என்று எதிர்பார்த்ததுகூட நடக்க வில்லை. ஒன்றே ஒன்று மட்டும் நடந்தது. இதன் காரணமாய் 1932–ல் லண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாட்டுக்கு காந்தி அழைக்கப்பட்டார்.

உப்பு சத்தியாக்கிரகம் போன்ற பெரிய, எண்ணற்ற போராட்டங்களின் விழைவு பேச்சுவார்த்தைக்கு அழைப்பதே தவிர, விடுதலையை வழங்கிக் கௌரவிப்பு அல்ல.

ஆதிக்க எண்ணம் கொண்ட எதிரிகளின் நெஞ்சில் ஒருக்காலமும் அவர்களுக்குள்ளிருக்கும் மனச்சாட்சியைக் கிளறிக் கொண்டுவர முடியாது. மனமே இல்லாதவர்களுக்கு மனச்சாட்சி எங்கிருக்கும் என்ற புதிய வழிகாட்டுதலை – எல்லா விடுதலைப் போராளிகளும் கைக் கொண்டனர். ஈழப் போராட்டத்திலும் இந்த வழியில் போராளிகள் காந்தியைக் கடந்து போனார்கள்.

## 10

**வி**ழுப்புரம் செப் – *28, 2009.*

"யாருக்கும் லஞ்சம் கொடுக்காதீர்"

பேருந்து நிலையத்தில் திடீரென பிரவேசித்த சத்தியாக்கிர இயக்கத்தினர் மக்கள் காலில் விழுந்து நூதனப் பிரச்சாரம் மேற்கொண்டனர். லஞ்சம், சாதிமோதல், வன்முறை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இல்லாத நாடாக மாற்றிட வேண்டி, மக்களிடம் பரப்புரை செய்தனர். துண்டறிக்கைகள் வழங்கி பொதுமக்களின் காலில் விழுந்து கேட்டுக் கொண்டனர்.

இது காந்திய வழிமுறை: எடுத்துச் செய்தவர்கள் காந்திய வாதிகள். இந்த நடைமுறையோடு தொடர்பு கொண்ட சில கேள்விகள் எழுகின்றன.

1. லஞ்சம் கொடுக்காதீர் என்று மக்களை நோக்கி வைக்கப்பட்ட கோரிக்கையை – லஞ்சம் வாங்காதீர் என்று அதிகார வர்க்கத்தை ஏன் வைக்கவில்லை. அரசு அதிகாரிகளை, அரசியல்வாதிகளை, மிகப் பெரிய நிர்வாகக் கூட்டத்தை நோக்கி வைப்பார்களா?
2. அரசு அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவல கங்கள், தலைமைச் செயலகங்களில் பிரவேசிக்க முடியுமா? அதுவும் திடீரென
3. ஆயுதந்தாங்கிய போலீசார் எதற்கு? நீதிமன்றங்களுக் குள்ளேயும், அந்த நீதிபதிகளின் முன்னே லஞ்சம் வாங்காதீர் என்று சொல்லிவிட்டு, மீண்டுவர இயலுமா?

யாரை நோக்கி இந்தப் போராட்டங்களை எடுக்க வேண்டுமோ, அதிலிருந்து திசை மாற்றியதாக – மக்களின் மனச்சாட்சிக்கு வேண்டுகோள் விடுக்கிற காரியத்தை இதற்கு முன்னரும் காந்தியம் செய்தது; எதிரியின் மனச் சாட்சியைத் தொடச் செய்யும் வீண் விரயத்தில் ஈடுபடாமல், மக்களின் மனச்சாட்சியை உசுப்புகிற வேலையை செய்தது.

இன்னொரு பக்கத்தில் தீயசக்திகளுக்கு, உயர் மேன் மக்களுக்கு, அதிகாரக் கூட்டத்தாருக்கு நலம்புரிகிற ஒன்றாக ஆகிவிடுகிறது; குறிப்பாக முதலாளிகள், மேலாண்மைக் குழுவினர் – தமக்குச் சேதாரம் விளைவிக்காத இவ்வகைப் போராட்டங்களை வரவேற்கவே செய்தனர். இத்தகைய பரப்புரைத் தூதுவர்களை உருவாக்கினர். காந்திய தத்துவத்தால் ஈர்க்கப்பட்ட தொண்டர்களைப் பயன்படுத்திக் கொண்டார்கள். இந்தத் தத்துவத்தால் மூளைச்சலவை செய்யப்பட்ட மக்களால் பெரும் சொத்துக்களைக் கொள்வதும், நலன்களைக் காத்துக் கொள்வதும் வாய்ப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்திய வழிப் போராட்டங்களால் இன ஒடுக்கு முறையை சற்றும் தளர்த்திக் கொள்ளாத இலங்கை அரசு, தான் மட்டுமே தனியாய் நின்று அடக்கிக் கொண்டிருந்தது. தமிழர்கள் காந்தியத்தைக் கடந்து, ஆயுதத்தைக் கைப்பிடித்த போது – அதன் தண்டுவடம் நடுக்கம் கொண்டது. 30 வருட கால நடுக்கத்தை, இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா என்று உலக முழுதுமிருந்த அரச பயங்கரவாதிகளின் துணை கொண்டு, இனப் படுகொலையை நடத்தித் தீர்த்துக் கொண்டுள்ளது.

ஒன்று உண்மை – காந்திக்கும் இலங்கைக்கும் வெகு தூரம். இன்றைய இந்தியாவுக்கும் காந்திக்கும் எத்தனை தூரமோ, அதேயளவு தூரமே இலங்கைக்கும் காந்திக்கும், முன்பொரு காலத்தில் புத்தர் நாடு கடத்தப்பட்டார். இப்போது காந்தியும்.

1927–ம் ஆண்டு காந்தி, யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரசாரால் அழைக்கப்பட்டு இலங்கை சென்றார். அப்போது அவர் விதித்த இரு நிபந்தனைகள்:

1. இலங்கையில் இன முரண்பாடு இருப்பதை நான் அறிவேன். அதனால் பெரும்பான்மையினரான சிங்களர் வாழும் தென்னிலங்கைக்குச் சென்றுவிட்டுத் தான், தமிழர் பிரதேசத்துக்கு வருவேன்.
2. இந்திய விடுதலைப் பேராட்டத்துக்கு தமிழர்கள் ஒரு லட்சம் ரூபாய் நிதி சேகரித்து தரவேண்டும்.

அவர் கூறியபடி – முதலில் தென்னிலங்கை சென்றார். கொழும்பில் கப்பலிலில் வந்திறங்கிய அவரை யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசார் விமரிசையாய் வரவேற்று தங்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றனர். சிங்களரின் வரவேற்பு சம்பிரதாயமாக இருந்தது.

காந்தி இலங்கை சென்றிருந்த அதே சமயம், புதிய அரசியல் யாப்பை உருவாக்குவதற்காக பிரித்தானிய அரசால் நியமிக்கப்பட்ட டொனாமூர் ஆணைக்குழுவும் இலங்கை வந்திறங்கியது. காந்திக்கு யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் அளித்த எழுச்சியான வரவேற்பைக் கண்டு திடுக்கிட்டது. இந்தியாவில் பிரிட்டிஷ் அரசை எதிர்த்து நடத்தும் விடுதலைப் போராட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் இலங்கைக்குள் கொண்டுவர முயலுகிறார்கள் என்று எண்ணியது. காந்திக்கு தமிழ்ப் பகுதிகளில் அளிக்கப்பட்ட ஆதரவை தமது இலங்கை ஆட்சிக்கும் எதிர்ப்பாகக் கருதியது. அவர்கள் எண்ணியது பொய்யாகவில்லை. காந்தி இந்தியா திரும்பியதும், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசார் முழு இலங்கைக்குமான விடுதலை கோரி தமிழர் பகுதிகளில் பிரிட்டீஷ் ஆட்சிக்கு எதிராகப் போராட ஆரம்பித்திருந்தார்கள்.

வெள்ளையர்களை எதிர்த்து, சிங்கள சமூகத்தில் உருவானது சூரியமல் இயக்கம். மலேரியா நோய் ஒழிப்பில் மருத்துவரான எஸ்.ஏ. விக்கிரசிங்காவும், அவரது துணைவி யாரும் இந்த இயக்கத்தைத் தொடங்கினார்கள். ஏனைய இடதுசாரிகளும் இதில் இணைந்து கொள்கின்றனர். யாழ்ப் பாண இளைஞர் காங்கிரஸ் போல் வலுவான ஆதரவைப் பெற்றதாக இல்லாவிடினும் இரு இயக்கங்களுக்குமிடையே பிரிட்டிஷாரை எதிர்த்த பரஸ்பர ஒத்துழைப்பிருந்தது.

பிரித்தாளும் தந்திரம் என்பது, பெரும்பான்மையினருக்கு எதிராக சிறுபான்மையினரைப் பயன்படுத்துவது; இதுவரை சிங்களருக்கு எதிராக தமிழ் உயர்குழாத்துத் தலைவர்களை அரவணைத்துக் கொள்ளும் போக்கு பிரித்தானியரிடம் இருந்தது. இப்போது, காந்தியின் வருகைக்குப் பின், இந்திய விடுதலைப் போராட்டத்துடன் தமிழர்கள் இலங்கையை இணைத்துக் கொண்டது, பிரித்தானியர்களை தமிழர்களை எதிரியாகக் கருதச் செய்தது. சிறுபான்மையினருக்கு எதிராக பெரும்பான்மையினரைப் பயன்படுத்துவது என்பதாக பிரிட்டிஷ் பிரித்தாளும் தந்திரம் மாறியது.

இதைப் புரிந்துகொண்ட சிங்கள உயர்குழாம் டொனாமூர் குழுவையும் பிரித்தானியரையும் அரவணைத்துக் கொண்டது. இது முதல் சிங்களத் தலைவர்கள் பிரித்தானியரை அரவணைத்து தமிழர்களுக்குப் பாதகமாகவும், தமக்குச் சாதகமாகவும் அரசியலைக் கையாளும் உத்திக்குப் போனார்கள்.

காந்தியின் வருகையை தமிழர்களுடன் தொடர்புபடுத்தி, ஈழத்தமிழருக்கும் இந்தியாவுக்கும் எதிரான அரசியல் வியூகத்தை பிரித்தானியர் வகுக்க சிங்கள உயர்குழாத் தலைவர்கள் இதனைப் புரிந்துகொண்டு பிரித்தானியரை தமக்குச் சாதக மாகக் கையாளத் தொடங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. புலி எதிர்ப்பாளர்களின் இன்னும் சில முகங்கள்

இந்தக் கட்டுரை எழுதுகிற இன்று தினமணி நாளிதழில் (09.09.2009) "இலங்கைத் தமிழரின் தற்போதைய நிலைக்குக் காரணம்" – எனும் கருத்துக் கணிப்பு வெளியாகியுள்ளது.

விடுதலைப் புலிகள் – 19.8%

இலங்கை அரசு – 21.33%

இந்திய அரசு – 58.69%

– மக்களின் கருத்துக்கள் முடிவுகளாய் வந்துள்ளன.

புலிகளின் 20 விழுக்காட்டை, நூறு விழுக்காடாய் ஊதிப்பெருக்கி பழியைப் புலிகள் மீது சுமத்துகிற வன்மம் இங்குள்ள சிலருக்குள் ஆணிவேர் போட்டுள்ளது.

இலங்கை இராசபக்சேக்களும் இந்திய மன்மோகன்களும் இந்தச் சிலரின் பழியிலிருந்து தப்பி விடுகிறார்கள். இலங்கை அரச பயங்கரவாதம், இந்திய ஏகாதிபத்தியம் இணைந்து எதைப் பேசி, எவ்வழியில் நடக்கிறார்களோ அதையே பேசுவது, அதே வழநடப்பது என்பதாக ஆகிவிடுகிறது இந்த மகானுபாவர் களின் செயல்கள்.

இதற்கான ஆதாரம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் எதைப் பேசுகிறார்கள் என்பதைவிட, எதைப் பேசாமல் விடுகிறார்கள் என்பதில் அடங்கி உள்ளது. புலி களின் பாசிஸம் பற்றி மேளம் அடிப்பவர்கள், புலிகளுக்கும் முந்தி – கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த சிங்களப் பாசிசம் பற்றி மௌனம் காப்பார்கள். இவர்கள் உயர்த்திப் பிடிக்கும் பக்கங்களை விட, ஒளித்து வைக்கும் பக்கங்கள் அநாகரிகமானவை. இவை இவர்கள் யாரென வெளிச்சப் படுத்துபவை.

இருபத்தேழாயிரம் பேர் விடுதலைப்புலிகளாக இருப்பார் களோ என்ற சந்தேகம். ஆள் காட்டிகளின் துணையோடு முகாம்களிலிருந்து அகற்றப்பட்டதும், ஆம் அவர்கள் புலிகளே தான் என்ற குதூகலம் அரசுக்கு. இராணுவத்தால் முகாம் களிலிருந்து அகற்றப்பட்டு, தனி சித்திரவதை முகாம்களுக்கு கொண்டு செல்லப்பட்ட 27 ஆயிரம் பேர் பற்றி இவர்கள் பேசியதில்லை.

8 – வயது முதல் 14 வயது வரையுடையோர் நமக்குச் சிறுவர்கள்; இலங்கை இனவெறிக்கு இளைஞர்கள். பெற்றோர் களிடமிருந்து, சேத்தாளிகளிடமிருந்து விசாரணைக்காக பிரிக்கப்பட்ட 14 ஆயிரம் சிறுவர்கள் எங்கு கொண்டு செல்லப்பட்டனர்? எல்லோரும் கேட்டாயிற்று. இவர்கள் மட்டும் கேட்கவில்லை.

கைதுசெய்யப்பட்ட போராளித் தலைவர்கள் – பெயர் வெளியுலகுக்குத் தெரியவந்தது; ஒருவர், இருவராய், குழுக் குழுவாய் அழித்தொழிப்பு செய்ததும் உலகத்துக்குத் தெரிய வந்தது.

உலகமட்டம் வரை தெரிந்த சேதி – இவர்களுடைய கண்ணோட்டத்தில் ஒரு கண்டன சம்பவமாகக்கூட பதிவாக வில்லை. கேட்டால் புலிகள் செய்யவில்லையா என எதிர்க் கேள்வி எழுப்பத் தயார். பதிலாய், அரசபயங்கரவாதம் பழி எடுக்கிறது என்பார்கள்.

நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள் அ. மார்க்ஸ் அவர்களே?

வதைமுகாம்களில் சாகிறவர்களை, அவரவர் ஊர்களில், நிலத்தில், வீடுகளில் போய்ச் சாகவிடுங்கள் என்று கேட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துண்டா? கொன்று போட்டவனின் கரங்களுக்கு பூமாலை சுற்றுவது மட்டுமே செய்கிறவர்களை எந்த மனித உரிமைப் போராளி ரகத்தில் சேர்ப்பது?

தமிழகத்தில் செயல்படும் பலமனித உரிமை அமைப்புகள், இயக்கங்கள் இணைந்து "வன்னி வதைமுகாம் தமிழர் விடுதலைக்கான இயக்கம்" என்றொரு அமைப்பு சென்னையில் உருவாக்கப்பட்டுள்ளது. மூன்று தீர்மானங்கள் அடிப்படையில் செயல்பட முடிவெடுக்கப்பட்டுள்ளது.

1. தமிழகத்தில் பரப்புரை செய்து, எழுச்சியை உருவாக்கி அழுத்தம் தருவது.
2. இந்தியாவில் பிற மாநில மனிதஉரிமைச் செயற் பாட்டாளர்களுடன் இணைந்து –இந்திய அளவில் விழிப்பை உருவாக்குதல்.
3. இராசபக்சேக்களை போர்க் குற்றவாளிகள் என விசாரித்து தண்டிக்க –ஐ. நா. மன்றத்துக்கு எடுத்துச் செல்வது.

என மூன்று நடைமுறைகளை மேற்கொள்ளுவது என முடிவு செய்தார்கள். இலங்கையில் இதே முனைப்போடு செயல்படும் மனித உரிமை ஆர்வலர்களை அழைத்து இங்கே பேசவைப்பது, அவர்களை நம்முடன் இணைந்து செயல்பட வைப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த குரலில் ஒன்றில் கூட உங்கள் குரல் காணப்பட வில்லையே அ. மார்க்ஸ் அவர்களே!

நீங்கள் எப்போதுமே தன்னடையாளத்தை முன்னி நிறுத்தி தனித்து செயற்படும் நபர். இவர்களோடு இணைய முடியவில்லை என்றால் அவர்கள் எழுப்பும் இந்தக் குரல் களில் ஏதாவது ஒன்றையாவது நீங்கள் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். தன்னடையாளத்தை எப்போதுமே பிரதானப் படுத்தி வருகிற நீங்கள் தனியாக மனித உரிமைத் தளத்தை உருவாக்கி உடுக்கடித்திருக்கலாம்! இம்மாதிரி அனுபவத் தொகுப்பின் அடிப்படையில் பாவப்பட்ட வன்னிமுகாம் மனிதர்களை மீட்க குரல் கொடுத்திருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமினிசிட்டி இன்டர்நேசனலின் முன்னாள் இயக்குனரும் இல்லினாய்ஸ் பல்கலைகழகத்தின் முன்னாள் பேராசிரியருமான பிரான்சிஸ் பாய்ல் மனித உரிமைத்தளத்தில் செயல்படுகிற ஒருவர். மனித உரிமைத் தளத்திலேயே நடந்து, இனப்படு கொலைக்கு தீர்வு என்னவாக இருக்கமுடியும் என்பதை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

"பன்னாட்டுச் சட்டங்களின்படியும் செயல் முறைகளின் படியும் தங்கள் சுயநிர்ணய உரிமையை இலங்கைத் தமிழர்களே முடிவு செய்யவேண்டும். எனினும் இங்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வரலாற்று ரீதியாகப் பார்க்கும்போது, இலங்கைத் தமிழர்களைப்போல இனப்படுகொலைக்கு ஆளாகும் எந்த மக்கள் குழுவும், தங்களுக்கென்று ஒரு சுதந்திரமான தனி நாட்டை உருவாக்கிக்கொண்ட பிறகுதான் அதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர்.

"கடந்த சில மாதங்களில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் வன்னியில் படுகொலை செய்யப்பட்டபோது, எந்த ஒரு நாடும் அந்த வெறித்தனமான படுகொலை நிகழ்வைத் தடுக்க முயலவில்லை. 1948ஆம் ஆண்டு சர்வதேச இன அழிப்பு எதிர்ப்பு ஒப்பந்தத்தின்படி, எல்லா நாடுகளும் தாங்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்யத் தவறிவிட்டன. எனவே, இலங்கை அரசிடமிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, தனி நாடு ஒன்றை உருவாக்கிக் கொள்வதே இலங்கைத் தமிழர் களுக்கு ஏற்புடையது. பன்னாட்டுச் சட்டதிட்டங்களின்படி, இன அழிப்பால் பாதிக்கப்பட்டவர்கள் தனி நாடு ஒன்றை உருவாக்கிக் கொள்வதே பயனுள்ள தீர்வும் உரிய இழப்பீடும் ஆகும்"

*(தலித் முரசு ஜுலை 2009 - பேராசிரியர் பாய்ல் நேர் காணல்)*

மனித உரிமைத் தளத்தில் அ. மார்க்ஸும் அவர் போன்றவர்களும் நேர்மையான பயணியாக இருந்திருந்தால், பிரான்சிஸ் பாய்ல் வந்தடைந்த அந்தப் புள்ளியில் வந்து சேர்ந் திருப்பார்கள். இவர்களோ விடுதலைப் புலிகளின் மீதான வன்மத்தை ஒரு இனத்தின் விடுதலைப் போருக்கு எதிராக மாற்றியுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் விடுதலைப்புலிகளுக்கு எதிராக கருத்துக்களைப் பரப்புவதற்காக கிழக்கு மாகாணத்தில் இருந்து பேராசிரியர் சிராஜ் மசூரை அழைத்து வந்து மேடை தயார் செய்கிறார்கள். ஷோபாசக்திகளுடன், சுகன்களுடன் கூட்டாய்ச் சேர்ந்து விடுதலைப்போராட்டத்திற்கு எதிராய் விதைதூவுகிறார்கள்.

"அவர்கள் புலிகளின் அரசியல் தவறுகளைப் பற்றிப் பேசுவதின் வழியே தெற்காசியாவில் நிகழ்த்தப்பட்டிருக்கும் மாபெரும் இனப்படு கொலையை சமன்படுத்தி விடக் கூடும்."

கவிஞர் மனுஷ்யபுத்திரன் குறிப்பிட்டது போல் பணி யாற்றும் இந்த இலங்கையர்கள் தமிழகம் வந்திருக்கிறார்கள். விடுதலைப்போராட்டங்கள், புரட்சிகர எழுச்சிகள், இன விடுதலைப் போராட்டங்களில் அக்கறை கொண்ட மானுடர்கள் இவர்களை மக்களிடையே அடையாளம் காட்டவேண்டிய புதிய பணி நம் முன்வந்துள்ளது.

"இந்தக் காயம், இந்த வீழ்ச்சி - புலிகளின் வீழ்ச்சி அல்ல. வேட்டையாடப்பட்ட சமூகத்தின் வீழ்ச்சியின் சரித்திரம் இது"

மனுஷ்யபுத்திரன் போல ஆவேசம் கொள்ள முடியாத இவர்கள் எதிர் நிலையில் நின்று கொண்டாடுகிறவர்களுக்கு தளம் உண்டாக்கித் தருகிறார்கள்.

வீரச் சாவுகளுக்கு எதிர் நிலையில் நின்று மரணத்தைக் கொண்டாடும் மனம் பாசிஸ்டுகளுக்கு மட்டுமே வாய்க்கும். ஒரு இலட்சம் மனிதர்கள் சர்வதேச அரச பயங்கரவாதத்தால் அழிக்கப்பட்ட நிகழ்வு-ஒரு இனத்தின் இரத்தசாட்சியமாக உணரப்படாமல், துயரங்களின் சாம்பலில் கும்மியடித்துக் கொண்டாடும் மனத் துணிவு சிங்களர்களுக்கு அல்லாமல் வேறு யாருக்குக் கிட்டும்?

## 2

**க**டந்த ஆறேழுமாதங்கள் ஈழத்தமிழின அழிப்புக்கு எதிராக தமிழகத்தில் பரவலாய் ஏற்பட்ட எந்த எழுச்சி களிலும் அ. மார்க்ஸின் முகம் இல்லை. இனப்படுகொலை முற்றுப் பெற்று, ஈழப்பிரதேசம் அவலத்தின் உச்சத்தில் நிற்கிற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் இவருடைய குரல் இல்லை. மரணவாசனை உலக நாசியைப் புடைக்கச் செய்யும் சூழலிலும், விடுதலைப் புலிகள் மீதான அ. மார்க்ஸின் வன்மம் தீர்ந்த பாடில்லை.

இவருக்கும், இவரே போல் குரல் தரும் ஷோபாசக்தி, சுகன், சுசீந்திரன், புதிதாய் இணைந்து கொண்ட ஆதவன் தீட்சண்யா வகையறாக்களுக்கும் இன்னொரு பக்கம் இருக்கிறது. பாசிசம் இவர்களை உள்வாங்கி அங்கீகரித்துக் கொண்டதின் இன்னொரு பக்கம்தான், சிங்களப் பாசிசத்தை நேரடியாய் கண்டிக்காத, அதற்கென அணிதிரளாமல் இருக்கிற இவர்களின் செயல்.

லசந்த விக்கிரமதுங்கே - என்ற உலகறிந்த ஊடகவிய லாளர் படுகொலை, யாரால், எதற்காக நடத்தப்பட்டது என்பதை உலகறியும். தன் கொலைக்கு முன் அவர் எழுதி வைத்துச் சென்ற மரண சாசனம் இதை அம்பலப்படுத்தியது. அந்தக் கொலையைக் கூட புலிகள் செய்திருப்பதாக சந்தேகப் படுகிறார் சுகன். “வாழ்க நீ எம்மான்” என கருணா அம்மானுக்கு வாழ்த்துப் பா இசைக்கிறார். லண்டன் புகழ் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் முதல் கனடா, ஆஸ்திரேலியா நாடுகள் முதல் ஜெர்மனியின் சுசீந்திரன் வரை பங்கேற்ற திருவனந்தபுரத்தில் ஒரு திங்கள் முன்பு நடைபெற்ற கருத்தரங் கத்திற்கு இலங்கை அரசாங்கச் செலவு 60 இலட்சம் என்று ஒரு புள்ளிவிவரம் கூறுகிறது.

இந்த புலம்பெயர் அறிவு ஜீவிகளை சிங்களத் தேசியம், தமிழ்த் தேசியத்துக்கு எதிராய் பரப்புரை செய்ய அழைக்கிறது. வரிந்து கட்டிக்கொண்டு இவர்கள் முதலில் உள்ளேன் ஐயா சொல்கிறார்கள். தமிழ்த் தேசியம், இஸ்லாமியத் தேசியம் எல்லாவற்றுக்குமான அச்சுறுத்தலாக சிங்களத் தேசியம் மாறி யுள்ளது. தேசியத்திலிருந்து பாசிசமாக அது உருக் கொண்டுள்ளது. நாமெல்லாம் இலங்கையர்கள் என்னும் மஹிந்த ராசபக்சேயின் அழைப்பு - பிற இனங்களை மயிருக்குச் சமமாக கருதும் குரல் தான். இலங்கையர் எனும் ஒற்றை அடையாளம் போது மென்றால் மதம் சார்ந்த குழும அடையாளத்துக்கு (இஸ்லாமியர்), வட்டார அடையாளத்துக்கு (மலையகம்), தலித் அடையாளத்துக்கு எந்த வித அவசியமும் இல்லை. தமிழ்த் தேசியம் பேசியவர்களை, கொன்றொழித்த சிங்கள தேசியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற அடையாளங்களையும் கொன்றொழிக்கும். பிற தேசியங்களை இலங்கையில் ஒரு புள்ளி கூட இல்லாமல் அழிப்பதற்குரியவன் யார்? இன்றைய மஹிந்தாதான் அந்த ஆள். இவனைவிட உயரம் கூடியவர்களாக எதிர்கால மஹிந்தாக்கள் வருவார்கள். மக்களை சனநாயகத்துக்கு எதிரானவர்களாய் பயங்கரவாதியாய் கருதும் உலக அரசுகள், தமிழ் மக்களையே பயங்கரவாதி களாய்க் காணுகிற இலங்கைக்கு துணையானதின் வழியே இந்த அரசுகளும் மஹிந்தா அரசுகளாக மாறியுள்ளன.

அனைத்துத் தேசியங்களையும் அடக்கும் சிங்களத் தேசியத்தைக் கண்டிக்கும் அவசரத்தை கருதாமல் பேராசிரியர் சிராஜ் மசூரை அழைத்து வந்து, இஸ்லாமியர்களுக்கு எதிரான வர்கள் புலிகள் என்று பேசவைப்பது தனக்கிருக்கும் வன்மத்தை வெளிப்படுத்தக் கையாளுகிற உத்தியாக மட்டும் மிஞ்சும். அது மட்டுமல்லாமல் மதப் பழமை வாதத்துக்கு அரவணைப்பாய் நடந்துசெல்கிற மற்றொரு பணியையும் செய்கிறது.

விடுதலைப்புலிகள் மட்டுமே ஆயுதக் குழுக்களாம்; சிராஜ் மசூரின் கணிப்பில் அவர்கள் மட்டுமேதானாம். இலங்கையி லிருந்து இங்கு வந்து, இலங்கையின் தூதுவராய் எதை வேண்டு மானாலும் பேசலாம்; கேள்விகேட்க நாதியில்லை எனத் துணிந்துவிட்டார் போல.

புதுவிசை இதழில் (2009 – ஜூலை – செப்டம்பர்) இலங்கையில் "இஸ்லாமிய ஜிகாத்" ஆபத்து என்று பாலசந்திரன் போன்றோர் எழுதுகிறார்களே என்ற கேள்விக்கு "புலிகளுக்கு பிந்திய சூழலை "இஸ்லாமிய ஜிகாத்" என்ற போலிக் கண்டு பிடிப்பின் மூலம் மாற்றீடு செய்யலாம் என சில சக்திகள் திட்டமிட்டுச் செயற்படுகின்றன... தனது மன அரிப்புகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இவ்வாறான புதிய அபாயங்களை இவர்கள் கட்டமைக்கின்றனர்" என்று பதிலளிக்கிறார்.

இல்லாத ஒன்றைக் கட்டமைப்பது அல்ல; இருக்கிற ஒன்றைத்தான் பாலசந்திரன் போன்றோர் எடுத்து வைக்கி றார்கள். விடுதலைப் புலிகளுக்கு எதிராய் அவர்களை ஒழிக்கவும் அவர்களுக்கு ஆதரவாய் இருக்கும் கிழக்கு மாகாண தமிழ் மக்களை அரட்டி ஒடுக்கவும் இலங்கை ராஜதந்திரிகளால் பாகிஸ்தானிய மூளையால் உருவாக்கப்பட்ட ஜிகாத் அமைப்பினர் ஆயுததாரிகளாய் வலம் வந்தார்கள். ஆயுதங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களால் பேசினார்கள். அரசாங்கத்தின் ஆசியில் ஒரு பயங்கர வாத அமைப்பை உருவாக்கியாகிவிட்டது. இன்று ஜிகாத் அமைப்பிடமிருந்து ஆயுதங்களைக் களைவது எப்படி என்பது இலங்கை அரசபயங்கர வாதத்துக்கே பெரும் சிக்கலாகியுள்ளது. ஜிகாத் அமைப்பு என்ன நோக்கத்துக்காக உருவாக்கப் பட்டதோ, அது முடிந்துவிட்டது (புலிகள் அழிப்பு) இனி ஜிகாத் அமைப்பினர் ஆயுதக் குழுவாக செயல்படாமல், ஒரு மத அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்று கெஞ்சும் வேண்டுகோள் அரசிடமிருந்து வெளியாகியுள்ளது. ஊடகங் களிலும் இடம் பிடித்தது.

இத்தனைக்குப் பிறகும், யதார்த்தத்தை மறைக்கிற அறிவு ஜீவிப் பணியை சிராஜ் மசூர் தன்தோள் மேல் எடுத்துப் போட்டுக் கொள்கிறார்.

“போர் உக்கிரமாக நடைபெற்ற சூழல் ஆயுத சூனிய சூழலாக இருக்குமென்று யாரும் கனவு காணத் தேவை யில்லை” என்று ஜிகாத் போன்ற ஆயுதக் குழுக்கள் நீடிப்பதற்கான நியாயத்தை முன்வைக்கிறபோது, இதற்குமுன் ஒரு பொய்யை முன்னுரைத்தார் என்பது வெளிப்பட்டுப் போகிறது.

இதையேதான் நாங்களும் பேசுகிறோம். ஒடுக்குமுறை எல்லை கடந்துவிட்டபோது, ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர் வினைகள் அழகானவையாக இருக்கமுடியாது என நாங்களும் முன்வைக்கிறோம்.

நாங்கள் மட்டுமே இதைப் பேசவில்லை. இந்தியாவிலுள்ள தாரிக் அலி போன்ற இடதுசாரிகள் தீர்க்கமாய் இதைப் பரிந் துரைக்கிறார்கள்.

“நீங்கள் ஒரு குரூரமான ஆக்கிரமிப்பை எதிர்கொள் கையில், உங்களின் எதிர்ப்பு அழகானதாக இருக்கமுடியாது” என்கிறார் தாரிக் அலி.

“When you have an ugly occupation, you can’t have a beautiful resisstance”

பாலஸ்தீனத்தில் ஹமாஸ் இயக்கம் நடத்தும் தற்கொலைத் தாக்குதல்கள், ஈராக்கியர் நடத்தும் கார்க் குண்டுத் தாக்குதல்கள் ஆகியவற்றுக்கு இந்த வாசகம் பொருந்துமானால் விடுதலைப் புலிகளின் எதிர்வினைக்கு ஏன் பொருந்தாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

**அ.** மார்க்ஸின் புதுவிசை (ஜூலை - செப்டம்பர் - 2009) கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, சில விவாதங்களை முள்னெடுக்க வேண்டியுள்ளது. வாய்க்கு வந்தபடி பேசுவது போலவே கைக்கு வந்தபடி எழுதப்பட்ட ஒரு கட்டுரை தான் அது. அருள்எழிலன், யமுனா ராசேந்திரன், பாலமுருகன் – ஆகிய எழுத்தாளர்கள் இக்கட்டுரைக்கு கீற்று இணையத்தில் எதிர்வினை செய்துள்ளார்கள். எதிர்வினைகளை புதுவிசை இதழுக்கும் அனுப்புமாறு அவர்களைக் கேட்டேன். புதுவிசை இதழ் சனநாயகத்தின் மிகப்பெரிய திறந்தவெளி என கருதப் படுவதால், அவ்வாறு நான் சொன்னபோது – அவர்கள் வெளி வராது என்று உறுதியாகத் தெரிவித்தார்கள். ஆனாலும் புது விசையின் சனநாயக வெளியைச் சோதிப்பதற்காக இக்கட்டுரையை புதுவிசைக்கும் அனுப்பினேன்.

புதுவிசையில் அ. மார்க்ஸ் எழுதுகிறார்.

“தமிழ் அறிவு ஜீவிகள் மத்தியில் மரண அமைதி நிலவுகிறது; அதையும் வேறொருவர் சொல்லி வருத்தப்பட்டார்”.

பொய் பேசுகையில் மற்றொருவரை துணைக்கழைத்துக் கொள்வது அ. மார்க்ஸின் வழக்கம். தனது குடும்ப அட்டையை அரசிடம் திருப்பிக் கொடுக்கப் போவதாக கன்னியாகுமரியி லிருந்து ஒரு எழுத்தாளர் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தாராம். எழுத்தாள நண்பர் பெயரைத் துணிவாய்க் குறிப்பிட வேண்டியது தானே? தான் முன்வைக்க வருகிற கருத்துக்கு பெயர் குறிப்பிடாமல் முன்வைப்பது அ. மார்க்ஸின் சிந்தனைக் கலாச்சாரத்தின் ஒரு கூறு.

அலட்சியப்படுத்தப்பட்ட சில பிரச்னைகளை முன்னி றுத்திப் போராடும் மக்கள் – குறிப்பான போராட்ட வடிவமாக ரேஷன் அட்டைகளை அரசிடம் திருப்பிக் கொடுக்கின்றனர். அவர்களது ஒற்றுமையை எடுத்துரைக்கும் புதுமையான, யுக்தியான போராட்ட முறை இது. தான் சொல்லவருவதற்கு வலுச்சேர்க்க அதையும் கொச்சைப்படுத்துகிறார் அல்லது தன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயரத்துக்கு மாற்றீடு தெரியாத அந்த நண்பர் கொச்சைப் படுத்தியிருக்கிறார்.

எழுத்தாளர்களின் ஆறுமாதகால பருவ நிலையை கணிக்கிற வானிலை அதியாரியாக தன்னைத் தீர்மானித்துக் கொண்டார் அ. மார்க்ஸ். மற்ற எழுத்தாளர்களைப் பற்றிக் கணிப்பது – இவருக்கு மதுரை அல்வா சாப்பிடுவதுபோல. கணிப்பு அல்ல, விமர்சனமும் அல்ல, அவதூறுகளின் மட்டத்துக்கே அது மிஞ்சும்.

அ. மார்க்ஸின் பெரும்பாலான ஒதுக்குதல்கள், அரவணைப்புகள் பிரச்னையின் தாரதம்மியத்தை அடிப்படை யாகக் கொண்டவையல்ல. தனி மனிதர்கள் மீதான அவருடைய வெளிப்பாடுகள் விருப்பு வெறுப்புகள் மீது எழுபவை. பிறரோடு கொள்ளும் உறவையும் இந்த வகையிலேயே அமைத்துக் கொள்வார். நேற்றிருந்தார் இன்றில்லை, இன்றிருப்பார் நாளை இல்லை – இவருடைய அறிவு ஜீவிப் பயணிப்பில்.

நேற்றுவரை சிறந்த தலித்தியப் போராளியாக தூக்கி வைத்துக் கொண்டாடிய எழுத்தாளர் சிவகாமியை "நம்ம ஐ. ஏ. எஸ். மேடம்" என்று கிண்டலடித்து கீழே வீசியெறிவார். சுந்தர ராமசாமியை பிராமணியச் சிந்தனையாளர் என்று ஒதுக்கித் தள்ளுவார். இவர் தூக்கி எறியும் வரிசையில் கவிதா சரண்களும், சாருநிவேதிதாக்களும், எஸ். ராமகிருஷ்ணன்களும் தப்பமுடியாது. இவர் ஒருவர் மட்டுமே சுத்த சுயம்பு என்பது போல், அந்த விமரிசனமிருக்கும்.

நிறப்பிரிகை சார்பில் 16.10.1996 அன்று கும்பகோணத்தில் நடந்த விளிம்பு நிலைப் போக்கு பற்றிய கலந்துரையாடலில் தலித்துகளைப் புறக்கணிக்கும் போக்கு தென்பட்டதால் ரவிக்குமார் கலந்துகொள்ளவில்லை. தலித்துகள் பற்றிய உரை யாடல் தீவிரப்பட்டுக் கொண்டிருக்கும் கால கட்டத்தில் வேறொன்றை அந்த இடத்துக்குக் கொண்டு வந்து நிரப்புகிற காரியமாக இதனை மற்றவர்களும் கண்டனர். இதைக் கடுமையாக எதிர்த்து விமரிசித்தவர்களுள் பேராசிரியர் க. பஞ்சாங்கம் ஒருவர். அந்த நிகழ்வு பற்றியும் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் பற்றியும் தினமணியில் எழுதிய கட்டுரையில் க. பஞ்சாங்கத்தின் பெயர் குறிப்பிடுவதை முற்றாகத் தவிர்த்தார் அ. மார்க்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவிசை கட்டுரையில்;

தகவல் தொழில் நுட்பவியலாளர்கள் மீது தனக்குப் பெரிய மரியாதை கிடையாது எனத் தெரிவிக்கிறார். (I.T.Professionals)

இவர் எந்த அளவுக்கு மரியாதை தருகிறார் என்பதைப் பொறுத்து தகவல் தொழில்நுட்பவியலாளர்கள் தமது பணியை முன்னெடுக்கவில்லை. தமக்கு ஒரு சமூகக் கடமையுள்ளது எனத் தீர்மானித்து 'போரை நிறுத்து' என ஒருநாள் உண்ணா நிலைப் போராட்டத்தையும் பின்னர் தொடர்ச்சியான பணி களையும் மேற்கொண்டனர். போர் என்ற பெயரில் நிறைவேறிய இனப்படுகொலையைக் கண்டித்து இருமாதங்கள் முன்பு பேரணி நடத்தினர். அவர்களுடன் இணைந்திருக்க வேண்டும். ஈழப் போராட்டத்துக்கு எதிரான நிலைப்பாடுடைய இவரால் அவர்களுடன் இணைய முடியவில்லை. ஈழப்போராட்டம் பற்றி, ஈழவிடுதலைப் போராளிகள் பற்றி இவருக்கு எந்த மரியாதையும் இல்லை என்பது தான், அதற்கு ஆதரவானவர்கள் மீதும் எந்த மரியாதையும் கிடையாது என்பதாக வெளிப்பட்டிருக்கிறது.

நக்கீரன், ஜூ.வி, ரிப்போர்ட்டர் போன்ற வாரஇதழ்கள் வியாபாரப் போட்டியில் கடந்த ஆறுமாதங்களாக புலிகளைப் பற்றிய செய்திகளை – ஆதார பூர்வமற்ற செய்திகளை வெளி யிட்டன என்கிறார் அ. மார்க்ஸ். அத்துடன் நின்றிருந்தால் பரவாயில்லை. தமிழ்த் தேசியம் பேசுபவர்களும் புலி ஆதரவு மாவோயிசம் பேசும் இளைஞர்களும் நாளிதழ்களைத் தேடிப் படிப்பதில்லை என்கிறார்.

வார இதழ்களுக்கிடையேயான வியாபாரப் போட்டியை நாங்கள் அறிவோம். நக்கீரன் – வெளிப்படையாக புலிகளை வைத்து – வியாபாரம் பண்ணுவதையும் அறிவோம். அதனுடைய ஒற்றைத் தனத்தோடு எல்லா இதழ்களையும் சமப்படுத்திவிடக் கூடாது.

தமிழ்த் தேசிய ஆதரவாளர்கள், புலி ஆதரவு மாவோயிசம் பேசும் இளைஞர்கள் நாளிதழ்களைக் கூடத் தேடிப் படிப்ப தில்லை என்கிறார். தமிழ்நாட்டின் நாளிதழ்கள் மட்டுமல்ல; இந்திய நாளிதழ்களும் இராசபக்சேயிசம் பேசின; பரப்பின. இலங்கை அரசும் இந்திய ஏகாதிபத்திய அரசும் என்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கிறார்களோ அந்தச் செய்திகளை அப்படியே "ஈயடிச்சாங் காப்பி" பண்ணின. எந்த நாளிதழ்களைத் தேடிப் படிக்கச் சொல்கிறார்? தினமலரையா? தினமணியையா? தி ஹிந்துவா, இன்டியன் எக்ஸ்பிரஸ்ஸா? ஈழப்பிரச்னை பற்றி துளி அக்கறையும் காட்டாத இந்திய நாளிதழ்களில் எதைத் தேடி இளைஞர் களை வாசிக்கச் சொல்கிறார்?

அதே பொழுதில் வார இதழ்கள் ஓரளவு சுயத்தன்மை யுடன் அவர்களே தேடி, விசாரித்து எடுத்த ஈழச் செய்தி களைத் தந்தன. அதனாலேயே கடந்த ஐந்தாறு மாதங்களில் அவைகளின் விற்பனை பெருகின. களப்பிர தேசத்திலிருந்து தமிழகத்தை ஏதோ ஒருவகையில் வந்து சேரும் சிலரையும் பலரையும் சந்தித்து செய்திகள் சேகரித்து / அலசி, பெரு முயற்சிக்குப் பின் வெளியிட்ட வார இதழ்கள்களின் இந்த நடைமுறைக்கும், இலங்கை இந்திய நாடுகளின் ஊதுகுழல் களாகச் செயற்பட்ட நாளிதழ்களின் நடைமுறைக்கும் இடை யிலான வேறுபாட்டை வெளிப்படையாகக் காணமுடியும். வார இதழ்கள் வெளியிட்ட செய்திகள், கட்டுரைகள் புலிகளுக்கு ஆதரவாகவும், மக்கள் பக்கமும் இருந்தன என்பதும் இயல் பானது. அதன் காரணமாகவே அ. மார்க்ஸுக்கு ஏற்படுகிற ஆத்திரமும் இயல்பானது. இலங்கைப் பாசிசத்தின் தூண்களாய் செயற்பட்ட இந்திய நாளிதழ்களை தேடிப் படியுங்கள் என்று அவர் சொல்வது ஒன்றை உறுதிப்படுத்துகிறது. அவருடைய இந்தப் பார்வை அவரை நோக்கியே விரல் நீட்டுகிறது.

"நீர் ஒரு விடுதலை எதிர்ப்பாளர்"

அவர் குற்றம் சுமத்துகிற தமிழ்த் தேசியர்கள், புலிகளின் முகவர்கள் இதையே வேறொரு மொழியில் சொல்வார்கள். "நீரொரு தமிழினப் பகைவர்"

இதன் பொருள் வேறொன்றுமில்லை. மக்களின் எதிரி என்பதே.

கிறித்துவப் பாதிரிமார்கள், போதகர்கள், கன்னியர் எல்லோரும் இணைந்து ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக இரு மாதங்களுக்கு முன் உண்ணா நிலைப் போராட்டம் நடத்திய போது தொடங்கிவைக்க இவரை அழைத்தார்களாம். அழைத் திருக்கக்கூடாது; அழைத்தார்கள். இவரும் போயிருக்கக் கூடாது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார். ஏனெனில் ஈழத்தமிழருக்கு ஆதரவான போராட்டம் அது. ஈழத்தமிழருக்கு ஆதரவாய் போரை நிறுத்து என்ற முழக்கம் விடுதலைப் போராளிகளுக்கு ஆதரவானது தானே என்று அவர்களும் நினைத்துப் பார்க்கவில்லை. இவரும் நினைத்துப் பார்க்கவில்லை. கொள்கை அடிப்படையில் தீர்மானிக்கிறபோது மட்டுமே எந்த மேடையையும் பயன் படுத்திக் கொள்வது என்ற சந்தர்ப்பவாதம் இல்லாமல் போகும்.

முதிய வயதில் முதல்வர் கருணாநிதி ஓய்வு பெறுவது நல்லது என்ற கருத்தை பரிக்ஷா ஞாநி முன்வைத்தார். இந்தக் கருத்தை ஞாநி மட்டுமே முன்வைக்கவில்லை. "ஒரு தலைவனுக்கு எப்போது தலைமையேற்கவேண்டும் என்பது தெரியவேண்டும். அதைவிட முக்கியமாக எப்போது வெளியேறுவது என்பதும் தெரிந்திருக்கவேண்டும்" என்ற பொதுக்கருத்து நிலவுகிறது. இதன் சரியான நிரூபணமாய் நம்முன் நிற்கிறார் ஃபிடல் காஸ்ட்ரோ. இன்ஸ்டன்ட் காப்பி என்பது போல் ஞாநியை சாடுவதற்காகவே உடனே ஒரு புதிய அமைப்பை உருவாக்கி அதன் பேரில் வாணிமகாலில் ஒரு கூட்டத்தையும் ஏற்பாடு செய்தார்கள் தி.மு.க. சார்பு எழுத்தாளர்கள் சிலர். அதில் ரவிக்குமார் (சட்டமன்ற உறுப்பினர்) எழுத்தாளர் இமயம், அ. மார்க்ஸ் போன்றோர் பங்கேற்றார்கள். என்னையும் பங்கேற்குமாறு தொலைபேசியில் கேட்டார்கள். ஞாநி எழுதிய அந்தக் குறிப்பிட்ட கருத்தில் எனக்கு உடன்பாடு உண்டு. அதனால் கலந்து கொள்ளஇயலாது என மறுத்தேன். அ. மார்க்ஸ் கலந்து கொள்கின்ற செய்தி எனக்கு ஆச்சரியம் அளித்தது. தொலைபேசியில் அவரிடம் கேட்டபோது, "என்ன இருந்தாலும் ஞாநிக்குள் ஒரு பிராமண சிந்தனை ஓடிக் கொண்டிருக்கிறது. கலைஞரைப் பற்றி விமரிசிக்கிறபோது எதிர்வினையாற்றுகிற இவர்கள் பெரியாரை காமுகன், பெண் விடுதலைக்கு எதிரானவர் என்று பழிசுமத்தியபோது எங்கே போய் இருந்தார்கள் என்று கேள்வி எழுப்பப் போகிறேன்" என்றார். அவ்வாறு பேசியதாகவும் நான் கேள்விப்பட்டேன். கலைஞரைத் தாக்கி எழுதியதை கண்டிப்பது மட்டுமே ஏற்பாட்டாளர்களின் நோக்கம். இதைத் தாண்டி வேறொரு பிரச்னையை அங்கு பேசுவது விவாதிப்பது அவர்களின் நோக்கம் அல்ல. அதனால் அவர்கள் அதற்குப் பதிலளிக்கவும் இல்லை. இதிலிருந்து கூட்ட ஏற்பாட்டாளர்கள் பற்றி ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுக்கு வருவதை விட, எந்த அரங்கையும் பயன்படுத்தி தனது அறிவாளி மேன்மையை நிறுவுகிறவர் இவர் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

புலிகள் எதிர்ப்பு என்ற அடிப்படையில் மட்டும் உறுதியாய் நின்றிருந்தால் கூட கிறித்துவ பாதிரியார்கள், கன்னியர் நடத்திய ஈழ ஆதரவு கூட்டத்துக்கு அ. மார்க்ஸ் போயிருக்கக்கூடாது. அந்தக் கூட்டத்தில் பேராசிரியர் சரசுவதி பேசிய பேச்சில் சென்னையில் நந்தம்பாக்கத்தில் பாதுகாப்புத் துறை மருத்துவ மனையில் இலங்கையில் படுகாயமுற்ற 122 இந்திய இராணுவ வீரர்கள் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் – தான் கூறும் செய்திகள் ஆதாரபூர்வமானவை என வலியுறுத்தியதாகவும் அ. மார்க்ஸ் குறிப்பிடுகிறார். அதன் பின்னர் வரும் கேள்வி தான் மிகப்பெரிய முரண் நகைச்சுவை.

"பல்வேறு ஆதரவுப் போராட்டங்களை நிகழ்த்திக் கொண்டிருந்த தாங்கள் ஏன் அந்த மருத்துவமனையை முற்றுகை யிடும் போராட்டம் ஒன்றைச் செய்ய முனையவில்லை?" என்று பேராசிரியர் சரசுவதியை நோக்கி அ. மார்க்ஸ் எழுப்புகிற கேள்வி அது.

பெரியார் திராவிடக் கழகத்தினர், தமிழ்த் தேசப் பொது வுடைமைக் கட்சியினர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தினர் ஈழ ஆதரவுப் போராட்டங்களை மட்டும் நடத்தவில்லை. இந்திய அரசுக்கு எதிராக விமான நிலையத்தை முற்றுகையிடுதல், மத்திய அரசின் வருமானவரி அலுவலகங்களை இழுத்துப் பூட்டுதல், ஆயுதங்களுடன் வந்த இராணுவ லாரிகளை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தல் என அவர்கள் தொடர்ந்து போராடித் தான் வருகின்றனர். அ. மார்க்ஸ் போல அறிக்கை மட்டுமே விட்டுக் கொண்டிருப்பவர்கள் அல்ல.

இவர்கள் தாம் தொடர்ச்சியாக களத்தில் நிற்கும் பெரியார் தி.க. மற்றும் தமிழ்த்தேசிய அமைப்புக்கள் மீது சேற்றை வாரியிறைக்க முற்படுவார்கள்.

இவருடைய கற்றல் நேர்மை, சிந்திப்பு நேர்மை, செயல் பாட்டு நேர்மை ஆகியவை குறித்த கேள்விகள் முக்கிய மானவை. கற்றதும் பெற்றதுமான கருத்து எந்தச் சூழலுக்கு சொல்லப்பட்டதோ, அதில் இருந்து பிரித்து வேறொன்றிற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்திவிடுவதை ஒரு புதிய கண்டுபிடிப்புப் போல செய்வது அதன் பயன்பாட்டு நேர்மை குறித்த சந்தேகத்தையும் எழுப்பு கிறது. புதிதாக கற்றுப் பெற்ற ஒன்றை உடனே தன் சுயசிந்தனையிலிருந்து பெற்றதுபோல் இறக்கி வைத்துவிடுவது கைவந்த கலை. எந்த விசயத்திலும் தானே அத்தாரிட்டி என்ற அறிவின் கருவம் உச்சமாக வெளிப்படும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பியின் பணிகளைப் பாராட்டி சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக்கியத்துறை சார்பில் நடைபெற்ற அரங்கில் ருசியாவில் நிலவிய சர்வாதிகாரத்திற்கு வித்திட்டவர் லெனின் என்று பேசினார்.

அந்த இடத்திலேயே அவருடைய கருத்துக்கு எதிர் வினையாற்றியிருக்க முடியும். நிகழ்ச்சியின் தன்மை குறித்தும், அரங்க நாகரிகம் கருதியும் அமைதி காத்தோம் – அதற்கு முன்னான தருக்கம் (Logic) எதுவுமின்றி, திடு, திப்பென்று ஒன்றை கையெறி குண்டாய் வீசிவிட்டு போய்கொண்டிருக்கிற ஆத்மா அவர். அதன் பின்னான உரையாடல், விவாதம், விளக்கம் எதற்குமே இடமில்லை. அதுபற்றி பின்னாளில் கூட கட்டுரை எதிலும் விளக்கப்படுத்தி எழுதியதாகத் தெரியவில்லை.

உலகமயமாதல் இன்றைய காலத்தின் அவசியம்; அந்த ஜோதியில் கலப்பதற்கு அனைவரும் ஆங்கிலம் கற்கவேண்டும் என வக்காலத்து வாங்குவார். தலித்துகள் ஆங்கிலம் கற்க வேண்டியது அவசியம் என்பார். தலித்துகளின் வாழ்வு நிலை பூமிக்கு அடியில் இருக்கிறபோது, ஆரம்பக்கல்விகூட வாய்க்கப் பெறாத அவலம் நிலவுகிறபோது, தலித்தோ அடித்தட்டு மக்களோ ஆங்கிலத்தை கைப்பற்றுவது எங்கனம் என்ற கேள்வி எழுவது நியாயமானது. அதற்கான எந்தப்பதிலும் அவருடைய விவாதத்தில் இருக்காது.

இறுதியாக ஒன்றைச் சொல்லி· வைப்போம்;

சிதிலங்களில் இருந்து மேலெழுந்து வருவது பற்றி சமூகவிஞ்ஞானி சிந்திப்பான். அவ்வாறு இல்லாமல் மாட்டுப் புண்ணைக் கொத்திக் கொண்டேயிருக்கும் காக்கையாக இருப்பவன் குதர்க்க விஞ்ஞானி.

"மனிதர்கள் இதுவரை படைத்துள்ள அகிம்சைத் தத்துவங்கள், புரட்சிகர தத்துவங்கள், மனிதநேயக் கோட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகள், உரிமைச் சாசனங்கள் இவை எவையாலுமே இதுவரை ஈழமக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. சிங்களத்தின் முன்னே காந்திய அகிம்சை தோற்றுள்ளது. மார்க்சியத்தின் மக்கள் வன்முறை தோற்றுள்ளது. சர்வதேச நெறிமுறைச் சட்டங்கள் அமைதியாகி உள்ளன. இந்நிலைமைகள் இதுவரை நாம் பின்பற்றிவந்த அனைத்து சமூகக் கோட்பாடுகளையும் மீள் பரிசீலனை செய்யக் கோருகிறது. அவற்றில் நமது தோல்விக்கு காரணமானவற்றை உடனடியாகக் கைவிடவேண்டும். இவற்றிலிருந்து ஈழவிடுதலைப் போராட்டத்தின் தீர்வுக்கான அணுகுமுறைகளை நாம் வகுத்தாக வேண்டும்."

ஈழம் – விடுதலைக்கான இறுதிக் கணக்கீடு – என்ற கட்டுரையில் சிதிலங்களில் இருந்து மேலெழும் பார்வையில் பிரபா எழுதிய அறிவார்ந்திரமான சிந்திப்புகளுக்கு நாம் முகம் கொடுக்கவேண்டும். இவ்வாறு ஆக்க பூர்வமாக சிந்திப்பது தான் புதிய சிந்தனையின் அடையாளம். வாய் புளித்ததோ கைபுளித்ததோ என்று விமர்சனம் என்ற பெயரில் எதையாவது எழுதிக்கொண்டிருப்பதைவிட்டு ஆக்கபூர்வமான செயல் பாட்டுக்குரிய சிந்தனைகளை முன்வைப்பது மட்டுமே சமூக விஞ்ஞானம்.

**கீற்று இணையம் - 12.09.2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஈழம் – ஆன்மா செத்துப் போனவர்கள் யார்?

**ம**த்தியிலும் மாநிலத்திலும் 1950–களில் பேராயக் கட்சி (காங்கிரஸ்) ஆட்சியிலிருந்த காலம். தமிழகத்தைச் சேர்ந்த ஓ.வி. அழகேசன் அப்போது நடுவணரசில் தொடர்வண்டித் துறை (ரயில்வே) அமைச்சர். திருச்சி மாவட்டம் அரியலூர் அருகே மழைவெள்ளம் பெருகி, பாலம் உடைந்து ரயிலிலிருந்த இருபது – முப்பது பேர் வரை பலியானார்கள்.

“அரியலூர் அழகேசா ஆண்டது போதாதா

மக்கள் மாண்டது போதாதா”

வளர் பருவத்திலிருந்த தி.மு.க வெளியிட்ட இச் சுவரொட்டி

1. நிர்வாகத் திறனின்மை

2. மக்கள் துயர்

3. மொழிவீச்சு

மூன்றையும் சரியாய்கோர்த்து, மக்களை ஒரு கணம் உற்றுப் பார்க்க வைத்தது.

1960–களின் தொடக்கம், சென்னைத் துறைமுகத் தொழிலாளிகள் போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தது. ஒரு தொழிலாளி மரணமடைந்தார். 1962–ல் சட்டப் பேரவைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் வந்த போது, ரத்தக்கறை படிந்த சட்டையைக் கையில் ஏந்தி கண்ணீர் வடிக்கும் பெண்ணின் படம்.

"கூலி உயர்வு கேட்டான் அத்தான்

குண்டடி பட்டுச் செத்தான்"

நீட்டு வசத்தில் போடப்பட்ட சுவரொட்டி நியாயம் கேட்டு தமிழ்நாடு முழுக்கப் பயணித்தது.

அடுக்கு மொழியில், அளவான வார்த்தைகளில் சுவரொட்டி போடும் உத்தியை தி.மு.க கையிலெடுத்தது. கருத்துப்படம் போடுதல், அதை சிறு சிறு சுவரொட்டிகளாக்கி வெளியிடுதல் மக்களிடையே வரவேற்பைப் பெற்றது.

1. பத்திரிகை

2. சுவரொட்டி

3. நாவன்மை

மூன்றையும் கலையாக்கி, மக்களிடம் கொண்டு வந்தது; நான்காவதாய் அதிவீச்சுள்ள திரைப்படக் கலையை கைவசப் படுத்தியது.

அரசு ஒரு அடக்குமுறைக் கருவி என்ற சமூக விஞ்ஞானக் கருத்து சரியானதாக இருந்தாலும், அப்போதிருந்த பேராயக் கட்சி (காங்கிரஸ்) அரசு, ஒவ்வொரு சுவரொட்டியும் காகிதத்தில் சுருட்டப்பட்ட குண்டு என அறியவில்லை. காங்கிரஸ் ஆட்சியில் சுவரொட்டிகள் அச்சிட, ஒட்ட தடை ஏதுமில்லை. நேரடி யாகவோ, மறைமுகமாகவோ அறிவிக்கப்பட்ட, அறிவிக்கப் படாத உருட்டல், மிரட்டல் இல்லாததால் அச்சகப் பெயர் துணிச்சலுடன் போடப்பட்டது.

ஈழத்தமிழ்ப் பகுதிகளில் பீரங்கி வெடித்து மூளை சிதறிய சிறுமி, பிணமாய்க் கிடக்கும் கர்ப்பிணித் தாயின் வயிற்றி லிருந்து பிணமாய்த் துருத்திய குழந்தை, இறந்து போன தாயின் மார்பகத்தைச் சப்பியபடி எழும் பாப்பா, அறுபட்ட கோழிகள் போல் கழுத்து துண்டான மனித உடலங்கள் – கொஞ்சம் முன்னர்தான் அவர்கள் உயிரோடு உலவினார்கள் என்று நம்ப முடியாத பிணக்குவியல் – இக்கொடூரங்களை இன்றுள்ள டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் பெரும் வீச்சைத் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவரொட்டிகளாகக் கொண்டுவர முடியும். கையளவு வெளியீடு களாய் முட்டைத்தோடு போன்ற வழவழப்பில் தேர்தல் பரப்புரைக்கு எடுத்துச் சென்றிருக்கமுடியும். ஆனால் தி.மு.க. ஆட்சியாளர்கள், கடந்த காலங்களில் எந்தக் கதவுகள் வழியாக வந்தார்களோ, அந்தக் கதவுகளை இறுக்கிச் சாத்தினார்கள்.

உரிமைகளை எடுத்துக் கொள்ளல் என்ற பக்கத்துக்கு முன் – உரிமைகள் வழங்கல் என்ற முதல்பக்கம் ஒன்றுள்ளது. இந்த முதல்பக்கத்தை ஆட்சிக்கு வருகிற எவரும் மறந்து போவர். தான் எடுத்துக்கொண்ட ஒவ்வொரு உரிமையையும் மற்றவர்க்கும் வழங்குதல் என்ற சனநாயகத்தின் விதியை ஐந்தாவது முறையாக ஆட்சியில் ஏறிய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாளர்கள் புறக்கணித்தனர்.

"தமிழினப் படுகொலைக்குத் துணை போகும் காங்கிரசைத் தோற்கடிப்பீர்"

மதுரையில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நண்பர்கள் 2009 மே நாடாளுமன்றத் தேர்தலின்போது சுவரொட்டி அச்சடித்து வெளியிட்டார்கள். தமிழினப் படுகொலையை நடத்துவது இலங்கை சிங்கள இனவெறி அரசு. அதன் உட்கோடு வழயாக நடந்து போனால் உண்மையில் இந்தியாதான் இந்தக் கொடூரத்தை நிகழ்த்துகிறது என்ற அதிர்ச்சி இடத்தை வந்தடைய முடியும்.

"நமது இலங்கை ராணுவம் களத்தில் நிற்பது என்பது ஒரு பேருக்குத்தான். இந்திய ராணுவத்தினர்தான் இந்தப் போரை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்" என்று இலங்கை ராணுவத் தளபதி ஒருவர் இந்த அதிர்ச்சியை எளிதாகத் துடைத்தெறிவது போல் கூறினார்.

"இந்தியாவின் துணையில்லாமல் நாம் இவ்வளவு பெரிய வெற்றியை எட்டியிருக்கமுடியாது. இந்தியா எல்லாவகையிலும் நம்முடன் வந்ததால் விடுதலைப் புலிகளை ஒழிக்க முடிந்தது"

டி. சில்வா என்ற அமைச்சர் இலங்கை நாடாளு மன்றத்தில் ஒப்புதல் தந்துள்ளார்.

அதனால் –

"தமிழினப் படுகொலையை நடத்தும் காங்கிரசைத் தோற்கடிப்பீர்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தானே இருக்கவேண்டும் என்று சுவரொட்டி அச்சிட்ட மதுரை நண்பர்களிடம் கேட்டேன்.

"அப்படித்தான் போடும்படி சொன்னோம். அச்சகத்துக் காரர் மறுத்துவிட்டார்" என்றார்கள். அச்சகத்தின் பெயரில் லாமல் வெளியானது.

"யாருக்காக பேசுகிறார் அ. மார்க்ஸ்" என்றொரு சிறு வெளியீட்டை நான் கொண்டு வந்தேன். ஈழப் பிரச்னையை மையப்படுத்திய அ. மார்க்ஸ் நேர்காணல் ஒன்றுக்குப் பதிலுரையாக அது பின்னப்பட்டிருந்தது. அச்சிறு வெளியீட்டில் அச்சகத்தின் பெயர் இருக்காது. "ஈழப்பிரச்னைதானே அச்சகத்தின் பெயர் வேண்டாம்". என்று உரிமையாளர் தவிர்த்து விட்டார். காவல்துறையின் அச்சுறுத்தல், அரசு அதிகாரத்தின் நெருக்கடி இவைகளால், ஈழவிடுதலை ஆதரவாளர்கள், தமிழுணர்வாளர் களின் விருப்பத்தை வணிகப் பார்வையில் கூட நிறைவேற்ற முடியாதவர்களாய் அச்சகத்தினர் ஆகிவிட்டனர்.

அதனால் அண்டை மாநிலங்களுக்குச் சென்று தேர்தல் நேரத்தில் சுவரொட்டிகள், வெளியீடுகள் அச்சிட்டுக் கொண்டு வரப்பட்டன. அதுவும் அச்சகப் பெயரில்லாமல்.

"காங்கிரசுக்குப் போடும் வாக்கு - தமிழினத்துக்குப் போடும் தூக்கு" - என்ற முழக்கம் நாடாளுமன்றத் தேர்தலில் முதலிடத்தில் நின்றது. ஈரோட்டில் காங்கிரஸ் வேட்பாளரான ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை விமரிசித்து கருத்துப்பட (கார்ட்டூன்) சுவரொட்டியை அச்சிட்டு ஒட்டிய தமிழ்தேசப் பொதுவுடமைக் கட்சியினர் கைது செய்யப்பட்டனர்.

உரிமைகள் சட்டத்தை பயன்படுத்தலை எதிர்க்கட்சியாக இருக்கிறபோது ஒரு மாதிரியாகவும், ஆளுங்காட்சியாகிற போது எதிர் நிலையாகவும் கையாளுவதில் தி.மு.க.வினர் திறமை சாலிகள் என்பதை 2009 - மே 16-ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தல் காட்டிவிட்டது. இது தி.மு.கவுக்கு மட்டுமே உரித்தான குணம் என்பதல்ல. ஆட்சிக் கட்டிலில் அமருகிற கட்சி எதுவாக இருந்தாலும், உரிமை மறுப்புக்குண்டும் வந்துவிடும்.

இவர்கள் எதிர்பார்க்காத ஒரு திசையிலிருந்து புதிய புயல் கிளம்பியது. ஈழத்தமிழர் துயரத்தை, விடுதலையைப் பேசுகிற என்ன செய்யப் போகிறோம், எமக்காகவும் பேசுங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களேன், இறுதி யுத்தம், கருணாவின் துரோகம் போன்ற குறுந் தகடுகள் விநியோகமும் திரையிட்டுக் காட்டலும் முனைப்புடன் நடந்தன. எதிர்ப்பையும் தடையையும் முன்னுணர்ந்த தமிழுணர் வாளர்கள் எடுத்த எடுப்பில் ஆயிரக்கணக்கில் பிரதிசெய்து விநியோகித்தனர். பத்திரிகைத் தடைச்சட்டம், அச்சக விதிகள், திரைப்படத் தணிக்கை போன்ற தணிக்கை விதிகள் குறும் படங்களுக்கு இல்லாததால் மளமளவென்று தீ கீழே இறங்கிப் பரவியது.

குறிப்பாக குறும்படங்களைத் திரையிடத் தடையில்லை என்ற உயர்நீதிமன்றத் தீர்ப்பு தேர்தலுக்கு முந்திய நாள் வந்தது. தடைநீக்கம் செய்யப்பட்ட குறும்படங்களை மக்கள் தொலைக் காட்சி மாலையிலிருந்தே மக்கள் பார்வைக்கு ஒளிபரப்பியது. 12.5.09 மாலை முதல் மறுநாள் 13.5.09 காலை வாக்குச் சாவடிக்குப் போகிறவரை மக்களை விழிப்புப்படுத்தியபடி அனுப்பிக் கொண்டிருந்தது.

2001-ல் ஜெயலலிதா இரண்டாம் முறை ஆட்சிக்கு வந்ததும் கருணாநிதியை நள்ளிரவில் கைது செய்தார் "ஐயோ என்னைக் கொல்றாங்க, என்னைக் கொல்றாங்க" - என்று பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்ட கருணாநிதியின் அலறலுடன் சன்தொலைக்காட்சி, சன்செய்திகள், கே.டி.வி மூன்றும் விடியலில் மக்களை எழுப்பின. தேநீர்க்கடைக்கோ, காலை நடையாகவோ, அலுவலக வேலைக்கோ சென்ற ஒருவர் "என்னைக் கொல்றாங்க, என்னைக் கொல்றாங்க" என்ற அலறலைக் கேட்டபடியே ஒவ்வொரு வீடாய்த் தாண்டிப் போனார். காட்சி ஊடகத்தின் அசுரத்தனத்தை தமிழகம் உணர்ந்த அந்த முதல் வாய்ப்புக்குப் பிறகு, இப்பொழுதுதான் மக்கள் தொலைக்காட்சி மூலம் அதன் ஆக்கப்பூர்வமான பயன்பாட்டை உணரமுடிந்தது.

பெரியார் திராவிடர் கழகம், இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம், ஈழத்தமிழர்களால் நடத்தப்பெறும் கணினி தமிழ் நிறுவனம் (புதிய பராசக்தி, மனோகரா, கொலைஞர் - போன்ற ரீமிக்ஸ் குறும்படங்கள்) - போன்றவை மீது போலீஸ் பாய்ந்து பறிமுதல் பண்ணி கைது, வழக்கு என பிரவேசித்தது. இது ஊடகங்களின் மீது அரசு செலுத்திய வன்முறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னொரு வன்முறையும் நிகழ்ந்தது; அது ஊடகங்கள் மக்கள் மீது செலுத்திய வன்முறை.

ஊடகங்கள் மீதான அரச வன்முறை, ஊடகச் செயல் பாட்டின் எல்லைப் பரப்பைச் சுருக்கியது என்றால், ஊடக வன்முறை மக்களின் கருத்தறியும் உரிமையில் சுருக்குக் கயிற்றை இறுக்கியது.

எடுத்துக்காட்டு பிரபாகரன் மரணம் பற்றிய பரப்புரை.

ஒரு செய்தி பற்றி குறைந்த பட்ச உண்மைத் தேடல் கூட இல்லாமல் மே-17 மாலை, மே-18 ஆகிய நாட்களில் வடஇந்திய ஆங்கில ஊடகங்கள் நடத்திய வன்முறை பற்றி கொழும்பி லிருந்து தமிழ் ஆய்வறிவாளர் ராஜசிங்கம் கூறுகிறார்.

"அது இலங்கையிலிருந்து வந்தது. 3-மணி நேரத்தில் போர் முடிந்துவிடும் என உறுதியாக அந்தச் செய்தி கூறியது. இதுவே எனக்கு பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் எனப் புரியவைத்தது. ஆனால் அவர் காலைவரை இருக்கமாட்டார் என்பதாகவும் அந்தச் செய்தி கூறியது. அதற்குப் பொருள் காலையில் அவரைக் கொன்றுவிடுவார்கள் என்பதாக நமக்குப் புரியவைக்க முயற்சித்த செய்தி அது. இதையடுத்து கொழும்பி லிருந்து ஒரு செய்திவந்தது. அதில் பிரபாகரனும் சூசையும் இறந்துவிட்டார்கள் என்று கூறினார்கள். அவர்கள் சரணடைந் தார்கள், ஒரு வெள்ளைப் பவுடர் அவர்கள் வாயில் வீசப் பட்டது. நாளை அவர்கள் தற்கொலை செய்துகொண்டதாக செய்தி கூறப்படும்".

எல்லைகளற்று, எது பற்றிய கவலையுமற்று, எந்த அறமதிப்பீட்டுக்கும் உட்படாது செயல்படுகிற ஊடக பயங்கர வாதத்துக்கு மற்றுமொரு சான்று இலங்கை ராணுவத் தாக்குதலில் காயமடைந்த 25,000 மக்கள் மரணம் என்று கடற்புலிகள் தலைவர் சூசை களத்திலிருந்து கொடுத்த செய்தியை அலட்சியப்படுத்தி, துளிச்சிந்தனையும் கவனமும் அதில் பதிந்துவிடக்கூடாது என்பதில் இலங்கை பயங்கர வாதத்துடன் இந்திய ஊடக பயங்கரவாதம் கைகோர்த்த புள்ளி.

புலிகள் முழுமையாய் அழிக்கப்பட்டு விட்டார்கள் என்ற செய்தியை வடஇந்திய ஊடகங்கள் இறக்கை கட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு பரப்பின. "எமது யுத்தம் புலிகளுக்கு எதிரானது. அப்பாவித் தமிழர்களுக்கு எதிரானது அல்ல" என்று நாடாளு மன்றத்தில் ராசபக்ஷே அறிவித்தார். எந்த விமரிசனமும் அற்று ஊடகங்கள் வழிமொழிந்தன. போராளிகள், தலைவர்கள் மரணம், பிரபாகரன் மகன் சார்லஸ் ஆண்டனி மரணம் – என இலங்கை ராணுவமும் அரசும் தந்த எல்லாவற்றையும் அப்படி அப்படியே ஆயிரம் தடவை காட்டி, ஆயிரம் தடவை அறிவித்தன. குறிப்பாய் வட இந்திய ஆங்கில தொலைக்காட்சிகள் சலிக்காமல் தொடர்ந்தன. இலங்கை அரசு கொடுத்ததை அப்படியே வாந்தி எடுத்த ஊடகங்களில் ஒருவருக்காவது "அந்த இடத்துக்கு எங்களை அழைத்துப் போய்க் காட்டு," – என்று கேட்கிற துணிவு வரவில்லை. ஏன் அந்த இடத்திற்கு எங்களை அழைத்துப் போக மறுக்கிறார்கள் என்று கேள்வி எழுப்புகிற குறைந்தபட்ச நேர்மை கூட இந்த ஊடகங்களுக்கு இல்லாமல் போனது.

இராசபக்ஷே என்ற இட்லரைக் கண்டு நடுங்குகிறவர்கள் இவர்கள். களத்தில் உள்ளே அனுமதிக்காது, தான் வழங்குகிற செய்திகளை மட்டுமே ஊடகங்களைப் பேசவைத்தது அரச பயங்கரவாதமெனில், அதை அப்படியே வாய்பொத்தி ஏற்று, வெளியிட்டது ஊடக பயங்கரவாதம்.

அக்னி நட்சத்திர நாளில் காற்றேயில்லாது அமுங்கிக் கிடக்கிறது காலைப் பொழுது. எதனையும், எல்லாவற்றையும் உறிஞ்சிக் கொள்ளும் வெப்பம் கண்திறந்து வருகிறது. ஓரிரு நாள் இயற்கையை தாங்கிக் கொள்ளமாட்டாமல் இங்கு தமிழினம் புரளுவதை நினைத்தால் வெட்கமாய் இருக்கிறது. அங்கு கஞ்சியில்லாமல், தண்ணீரில்லாமல், காயத்துக்கு மருந்தில்லாமல், இயற்கையின் எந்த வேற்றுமையையும் உணரக் கூடாமல் பைத்திய மனோநிலையில் ஒடுக்கிவைக்கப்பட்டுள்ள தமிழ்க் கூட்டத்தின் கதி என்ன? எதையும் உணரமுடியாத பிணங்கள் நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்கள்.

"ஏனெனில் மாபெரும் மனிதப் பெருந்துன்பம் சுற்றி நிகழ்ந்து கொண்டிருக்கும்போது செத்துப்போன ஆன்மா மட்டுமே பாதிக்கப்படாமல் இருக்கும். உலகம் உண்மையிலேயே இணைக்கப்பட்டதாக இருக்கும் எனில் இந்தப் பயங்கரம் குறித்த செய்தி உலகில் எங்காவது எதிர்ப்பைத் தூண்டியிருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் 24 மணி நேர செய்தி ஊடகங்களில் ஒரு சிறு பகுதி யாவது இலங்கையில் என்ன நடக்கிறது என்பது குறித்துச் சிறிய அளவாவது உண்மைச் செய்தி வெளியிட்டிருக்கும்."

ராஜிவ் டோக்ரா என்ற முன்னாள் இந்திய ராஜதந்தரி இவ்வாறு பேசுகிறார். இந்தப் பிரச்னையைப் பேசுகிற, அலசுகிற, மனித சுபாவமே இல்லாத ஊடகங்களைப் பற்றித்தான் பேசு கிறார்கள். எவருக்கு கண்களும் காதுகளும் உண்டோ, அவரே உலகின் மற்ற காதுகளுக்கும் கண்களுக்கும் மனித அவலத்தைக் கொண்டு போகமுடியும். ஒரு நாளில் 30 ஆயிரம் மனித உயிர்கள் மரித்ததை, இதனினும் கூடுதலாய் லட்சக் கணக்கில் பட்டினிச் சாவுக்குள் போனதை – இவர் மரணம், அவர் மரணம் என்று இட்டுக்கட்டிய பரபரப்புக்குள் எளிதாய்த் தூக்கி எறிந்து விட்டுப்போக முடிந்தது ஊடகங்களால்...

"சிங்கள இனவாதம் என்ற ஒரு வஸ்து நூற்றாண்டு காலமாகச் செயல்பட்டு வருவதையே மறுக்கும் தி ஹிண்டு– வின் (The Hindu) மூடத்தனத்தைக் கண்டிக்க சொற்களே இல்லை. கருத்துச் சுதந்திரம் என்பது ஈனத்தனமான கருத்துக்களையும் பரப்பும் சுதந்திரம்தான் என்பதை உணர்ந்து பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய காலகட்டம் இது."

என்று காலச்சுவடு மார்ச் 2009 - இதழ் தலையங்கத்தில் எழுதியிருப்பது இந்து நாளிதழை பற்றியது மட்டுமேயல்ல.

சென்ற நூற்றாண்டின் மத்தியில் யூதர்கள் இருந்த நிலையில் இன்று ஈழத்தமிழர்கள் விடப்பட்டிருக்கிறார்கள். மூச்சுப் பரியாமல் கழுத்து நெறிக்கப்பட்டிருக்கிறார்கள். இரண்டாம் உலகயுத்தத்தின் பின் பிரிட்டன் பிரதமர் சர்ச்சில் பாதுகாப்பு அளிக்க, அமெரிக்க உதவியோடு இல்லாத ஒரு நாட்டை யூதர்கள் உருவாக்கிக் கொண்டார்கள். ஈழத் தமிழர்கள் இருந்த பூமியை இழந்திருக்கிறார்கள்.

ராஜிவ்டோக்ரா சொல்வது போல, இலங்கை எனும் சின்னஞ்சிறு பகுதியில் என்ன நடக்கிறது என்று கவனம் செலுத்தி யிருக்கவேண்டும். கவனம் செலுத்த வைக்கிற காரியத்தை ஊடகங்களும், அரசியல் ஆய்வு அறிஞர்களும் செய்யத் தவறினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழினம் என்ற அடையாளமே இல்லாமல் செய்கிற வேலையை பல சக்திகள் முன்னெடுத்தன. ஒரு இனவிடுதலைப் போரின் பின்னடைவை முன்னெடுப்பதில் பல சக்திகளும் தீவிரமாய் முனைந்தார்கள்.

1. அனைத்துக் கட்சிகளின் அக் - 14, 2008 துரோகம்

"பதினைந்துநாளில் போர் நிறுத்தம் செய்ய இந்திய அரசு வலியுறுத்தவில்லையென்றால் அனைத்துக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்களும் பதவிவிலகுவார்கள்" என்று தீர்மானம் நிறைவேற்றியபோது காட்டிய வீரம் செயல்முறைக்குக் கொண்டு போவதில் வெளிப்படவில்லை. முடிவு செயலாகியிருந்தால், ஈழத்தமிழரின் மண்ணில் வெளிச்ச விதை ஊன்றப் பட்டிருக்கும். முதல் பதவி விலகல் கடிதத்தை தன் மகள் கனிமொழி கொடுக்க, பிறகு ஒவ்வொரு தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினரும் தந்த கடிதங்களை – மக்களவைத் தலைவருக்கு அனுப்பாமல் தானே சேகரித்து வைத்துக்கொண்ட முதல்வர் கருணாநிதியின் அக்டோபர் 14 – துரோகம் அது.

"அரசியல்வாதி அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்கிறான். அறிஞர்கள் அடுத்த தலைமுறைகளைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்" என்று சொல்லப்படுகிற வாசகம் ஆங்கிலத்தில் உண்டு. எதில் வரும் தலைமுறைகளின் வாழ்வொளியில், தடையாய்ப் பரவும் இருட்டை முன்கூட்டி விலக்கும் தத்துவம், செயல்முறைகளைக் கொண்டோரை தலைமுறைகளின் தலைவர் எனக் குறிப்பிடு வார்கள். அரசியல்வாதியையும் அவ்வாறு குறிப்பிடமுடியும். அவர் பத்துத் தலைமுறைகளுக்குக் சொத்துச் சேர்த்து வைத்தி ருக்கிறார். ஆகவே தலைமுறைகளின் தலைவர் என்ற அர்த்தத்தில். இந்த அர்த்தத்தில் கருணாநிதியும் தலைமுறைகளின் தலைவராக முதலிடம் பிடிக்கிறார்.

2. இந்தியா, இந்தியா, இந்தியா

தேசிய இனப்பிரச்னை என்ற சோற்றுப் பானையை இந்தியா கழுவிக் கவிழ்த்து அரைநூற்றாண்டுக் காலம் கடந்து விட்டது. தேசிய இனங்களின் உரிமைகளுக்கு முகம் கொடுத் தறியாத இந்தியா, அண்டையிலுள்ள ஈழத்தமிழர் இன விடுதலைக்காக குரல் கொடுக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஏறத்தாழ அனைத்து நாடுகளும், இலங்கை இனப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகொலையைக் கண்டித்தபோது, இந்தியாவின் தொண்டைக் குழியிலிருந்து ஒரு சொல்லும் எழும்பவில்லை. தன்னுடைய ஆதிக்க நலன்களுக்கு கட்டுப்பட்ட ஒன்றாக, தனது காலடிக்குக் கீழுள்ள சின்னஞ்சிறு புழுவாகவே இலங்கையை வைத்திருக்க விரும்புகிறது. இந்தியாவின் கண்காணிப்புகளையும் மீறி சீனாவும், பாகிஸ்தானும் அந்தச் சின்னஞ்சிறு தீவில் திடமாகக் கால் பதித்துள்ளன. இந்தியாவின் கையை மீறி, அல்லது கையை உதறி சீனாவை, பாகிஸ்தானை தனக்குள் ஏந்த ஆரம்பிக்கிறது இலங்கை. ஈழத்தமிழினத்தை அழிப்பதில் எல்லாமுமாய் இருந்ததின் மூலம் தாயகத் தமிழினத்துக்கு முதல் எதிரியாய் மாறியுள்ளது இந்தியா. அதோடு இன்னொன்றையும் சொல்லியே ஆகவேண்டும். உலகத் தமிழினத்தின் முதல் எதிரி இந்தியா.

### 3. பாழ்பட்ட உலகு

ஒவ்வொரு நாடும் தனது தேசிய நலன்கள் என்ற நிகழ்ச்சி நிரலிலிருந்து உலக அசைவுகளை அளவிடுகிறார்கள். ஒரு நாட்டின் தலைமை சக்தியாய் இயங்கும் ஆளும் வர்க்கக் குழுக்களின் நலன் தான் தேசிய நலனாக இருந்து வருகிறது. ஆப்கானிலும், ஈராக்கிலும் அமெரிக்கக் கால்கள் பதிந்ததை, அங்குள்ள ஆளும் வர்க்கக் குழுக்களின் பசிக்குத் தீனிபோடும் செயலாகவே காணமுடியும். புரட்சிகரப் போராட்டமாக இருக்கட்டும், இனவிடுதலைப் போராக இருக்கட்டும், காலனிய ஆதிக்க நுகத்தடிகளிலிருந்து விடுபடுவதாக இருக்கட்டும், பயங்கரவாதத்துக்கு எதிரான போராகவே ஆளும்வர்க்கங்கள் காண்பார்கள். ஒரு நாடு இன்னொரு நாட்டின்மீது கொள்ளும் நல்லெண்ணம் என்பது, இன்னொரு நாட்டில் எவ்வளவு கை வைக்கலாம் என்ற திட்டமிடுதலில் தான் உருவாகிறது. இலங்கைக்கு உதவிய நாடுகளின் முகமும் இந்தப் புள்ளியில் குவிகிறது.

உலகில் எங்கெங்கு மக்கள் விடுதலைப் போர் இனி முளைவிட்டாலும் பயங்கரவாத முத்திரை குத்தி ஒழித்து விடலாம் என்பதற்கு சிங்களப் பேரின இலங்கை முன்மாதிரி யாகியிருக்கிறது. பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற முழக்கத்தினை 2001, அக்டோபர் 11 - க்குப் பின் அமெரிக்காவின் புஸ் முன்வைத்தார். இலங்கையின் இட்லர் அதைக் கையிலெடுத்து வெற்றி கண்டுள்ளார். எது விடுதலைப் போர், எது பயங்கர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதம் என்று பிரித்துக் காணவேண்டிய பரிதாபத்திற்கு சிந்தனையாளர்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

### 4. உண்மைக்கும் மக்களுக்கும் எதிரான ஊடகம்

பாலஸ்தீனியர்கள் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலை அனைத்துலக சமூகத்தின் தலையீட்டில், 20 நாட்களுக்குள் முடிவுக்கு கொண்டுவந்தன ஊடகங்கள். குறிப்பாக இந்தியாவைத் தாண்டி வெளியே இருக்கிற மேற்குலக ஊடகங்கள் தமது தோளில் சுமந்த பொறுப்பினால் இஸ்ரேலியத் தாக்குதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. 20 – நாட்களில் ஒரு இன அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டுவர முடிந்த இவர் களால் – அறவழிப் போராட்டத்தில் 28 ஆண்டுகளும் ஆயுத வழிப் போரில் 32 ஆண்டுகளும் என அறுபது ஆண்டு களாகியும் ஒரு பேரின வெறியை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை. உலக ஊடகங்கள் ஒரு பங்கும் ஆற்றவில்லை என்பது மட்டுமேயல்ல; எதிர் நிலை எடுத்தன. இந்திய ஊடகங்கள் திட்டவட்டமாக எதிர் நிலை கொண்டன.

மனித உரிமைகள் அமைப்பான அம்னஸ்டி இன்ட நேசனலின் உயர்மட்டக் குழு உறுப்பினராக பணியாற்றியவரும் இல்லினாய்ஸ் பல்கலைகழக பேராசிரியருமான பிரான்சிஸ் அந்தோணி பாயில் உலக ஊடகங்கள் இன வேற்றுமை பாராட்டியதை பின்வருமாறு அம்பலப்படுத்தியுள்ளார்.

“பாலஸ்தீனியர்கள் மீதும் போஸ்னியா மீதும் சர்வதேச ஊடகங்கள் மிகுந்த கவனம் செலுத்தின. கெடுவாய்ப்பாக அவை இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து கவனத்தில் கொள்ளவில்லை. இதை இனவெறி என்றே நான் கூறுவேன். இது தோலின் நிறம் பார்த்து செய்யப்படும் கொடுமை. சர்வதேச ஊடகங்கள், இலங்கையில் நடைபெறும் இனப் படுகொலைகளையும் மனிதத்திற்கு எதிரான குற்றங்களையும், தமிழர்கள்மீது கட்டவிழ்த்து விடப்படும் போர்க் குற்றங்களையும் பிடிவாதமாகக் கண்டு கொள்ளமறுக்கின்றன. உலக ஊடகங்கள் போஸ்னியா மீது கவனம் செலுத்தின. மிக அண்மையில் கடந்த டிசம்பர் – சனவரியில் காஸா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களை வெளிச்சம் போட்டுக் காட்டின. தமிழர்கள் திராவிடர்கள் உள்நாட்டு மக்கள். கறுத்த தோலுடையவர்கள். இந்தியாகூட வெள்ளைத் தோலுடைய ஆரியர்கள் என


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுபவர்களால் ஆளப்படும் நாடு. இவையெல்லாம் என் கருத்துக்களில் பாதிப்பை ஏற்படுத்துபவை."

இந்திய ஊடகங்களும், உலக ஊடகங்களும் அவர்களுக்குரிய பங்கை இனவேற்றுமை அடிப்படையில் வெளிப்படுத்தியதன் காரணமாக முள்ளிவாய்க்காலில் ஒரே நாளில் 30 ஆயிரம் உயிர்கள் பறிக்கப்பட்டதற்கும், முட்கம்பி வேலிகளுக்குள் மூன்று லட்சம் தமிழர்கள் அடைக்கப்பட்டதற்கும் காரணமாக இருந்திருக்கிறார்கள்.

இப்போது ராஜீவ் டோக்கராவின் கேள்வியை மீண்டும் கேட்போம்.

"மாபெரும் மனிதப் பெருந்துன்பம் சுற்றி நிகழ்ந்து கொண்டிருக்கும் போது, செத்துப் போன ஆன்மா மட்டுமே பாதிக்கப்படாமல் இருக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. புலிகள் அல்ல புலிவேடக்காரர்கள்

ஈழத் திசைக்கு "வடஞ்சுருட்டி" மூலை என்று ஒரு பெயர் உண்டு. ஈழத்திசையில் ஒரு மின்னல் அடித்தால் காட்டு வேலைக்குப்போய் அவிழ்த்துவிட்ட வண்டிமாடுகளின் வடத்தை (கயிறு) சுருட்டுவதற்கு முன் மழை கால் வாங்கி வந்துவிடுமாம்.

பூமி வெப்பமடைவதால் "ஓசோன்" படலங்கள் ஓட்டை யாகி தற்கால பருவநிலை சிதைந்து பாழாகியுள்ளது. அது போல், "நாடாளுமன்ற நாற்காலிக்"காக அடித்துக் கொள்ளுகிற தேர்தல் வெப்பத்தில், ஈழத்திசையில் சூல்கொண்ட மேகக் கூட்டம், திசை மாற்றி அடித்துச் செல்லப்பட்டுள்ளது. ஈழத் தமிழினத்தின் எதிர்வரும் தலைமுறைகளின் வாழ்வு பசுமை யாய் வடிவுகொள்ளும் என்றிருந்த எதிர்பார்ப்பு வீணாகி யுள்ளது.

நாசமாக்கினார்கள் தமிழ்த் தேசியம் பேசிய அரசியல் தலைமைகள். தேர்தல் கூட்டுக்காக ஒரு இடத்துக்கும், இரண்டு இடத்துக்கும் ஓடி ஓடி, இந்த அணியா, அந்த அணியா என்றலைந்து, எங்கெங்கே உட்கார வேண்டுமோ அங்கே உட்கார்ந்து கொண்டார்கள். புரட்சிப் புயல், எழுச்சித் தமிழர், தமிழ்க்குடி தாங்கி, "புதுப் புனல்" இந்தியக் கம்யூனிஸ்டு – எல்லோரும் நாற்காலிக்கு ஏங்கிகளாக மாறி அலைந்த கேவலம் மே, 2009 – நாடாளுமனறத் தேர்தலில் நிகழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் செய்தித்துறை அமைச்சர் லக்ஸ்மண் யாப்பா தேர்தலுக்கு இருமாதங்கள் முன்பு சொன்னதை இங்கு நினைவு கொள்ளவேண்டும். "இந்தியாவில் தேர்தலொன்று நடைபெறவுள்ள நிலையில், தமிழ்நாட்டில் எழுந்திருக்கும் இந்தச் சூடான நிலைமை தணிந்துவிடும். இதைக் கண்டு கொள்ளத் தேவையில்லை".

தேர்தல் குளிர் அடிக்கப் போகிறது. ஈழப்பிரச்சினையை எடுத்து வீசிவிட்டு, எல்லோரும் தேர்தல் போர்வையைப் போர்த்திக் கொள்ளப் போகிறார்கள் என்று இந்த தேர்தல் அரசியல் தலைமைகளின் நடைமுறையை நாடி பிடித்து ஊடுருவிப் பார்த்து லக்ஸ்மண் யாப்பா சொன்னதின் மெய்ப் பொருளைக் கவனத்தில் கொள்ளவேண்டும். கொள்கை யற்றதுகள் தமிழக அரசியல் தலைமைகள் என்ற உண்மையை அந்த வாசகம் மெய்ப்படுத்தியிருக்கிறது.

இங்கு பொன்சேகா, ராணுவத்தலைமை என்ற இடத்தி லிருந்து மாறி, அரசியல்வாதி என்ற இடத்துக்கு வந்து தமிழக அரசியல்வாதிகளைப் பற்றி உதிர்த்த கருத்துக்களையும் கவனிக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் சக்திகள் தங்கள் ஆற்றலை, தாங்கள் அறிந்திருக்கவில்லை; மக்களால் வழங்கப்பட்டிருந்தது இந்த ஆற்றல். எதிரிகளை துல்லியமாய் குறிபார்த்து அடிக்கும் வித்தை அது. சிறுகுடிசை முதல் உயர் நடுத்தர வாழ்வு வரை எழுந்த தமிழின உணர்வு எனும் அரிய ஆற்றலை, இச்சக்திகள் தி.மு.க, அ.தி.மு.க என்ற தலைமை பூதங்களிடம் மாற்றி அளித்தனர். ஈழப்பிரச்னையில் ஒருமித்த நிலைப்பாடுடைய ம.தி.மு.க, விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க, இந்திய கம்யூனிஸ்ட் ஆகியவை தாமே ஓர் அணியாக உருக்கொள்ள வேண்டு மென்பது மக்கள் விருப்பம்.

ஒரு தானி (ஆட்டோ) ஓட்டுநர் சொன்னார். "இவங்க ஒன்னாச் சேர்ந்தா, நாற்பது ஸீட்டையும் பிடிச்சிரலாம் ஐயா"

அவர் ஒருவர் என்றில்லை. தமிழக மக்களில் பாதிப் பேர், இந்தச் சொல்லால்தான் பதிலளித்தார்கள். தேர்தலில் பங்கேற்காத, தமிழ்த் தேசிய நலன்களை, ஈழத்தமிழரது விடுதலையை முன்வைக்கும் பெரியார் திராவிடர் கழகம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தேசிய இயக்கம், தமிழ்த் தேசப்பொதுவுடமைக்கட்சி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் போன்றவை மக்களுட னிருந்தன. முன்னர் தனித்தமிழால் தனிமைப்பட்டு, இப்போது காவிரி, முல்லைப் பெரியாறு, பாலாறு பிரச்னைகளாலும் ஈழத்தமிழர் பிரச்னையாலும் மக்களோடு இணைந்துவிட்ட தமிழுணர்வாளர்கள் தீவிரமாய் முன்வந்தார்கள். இத்தனை யையும் திரட்டி, தலைமைப் பூதங்களுக்கு எதிராய், தங்களுக் கென திடமான வாக்கு வங்கியை தமிழ்த் தேசிய சக்திகள் உருவாக்கியிருக்கமுடியும். இந்தத் தேர்தல் போல், இனியொரு தேர்தல் வரமுடியாது. தமிழ்த் தேசியம் சார்ந்த ஒரு வாக்கு வங்கியை உண்டு பண்ணமுடியும் என்ற நம்பிக்கை அவர் களுக்கு இல்லை. தமக்கென தனித்த வாக்குவாங்கியைக் கொண்டுள்ளதாக கருதப்படுகிற தலைமை பூதங்களிடம் ஓரிடத்துக்கும் இரண்டிடத்துக்கும் போய் சரணாகதியாகினர்.

சரணாகதிப் படலத்தை முதலில் தொடங்கியவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர். அகில இந்தியத் தலைமை நேரடியாக அ.தி.மு.க. மகாராணியைக் காண போயஸ் தோட்டம் புகுந்தது. உடன்பாடு பற்றிப் பேசியது. காத்திருந்த மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டுகள், அடுத்தாக போயஸ் தோட்டம் புகுந்தனர்.

ஒன்றுக்கும் இரண்டுக்குமாக அவருக்கு இவ்வளவு, எனக்கு இவ்வளவுதானா என்று கம்யூனிஸ்டுகள் பேரம் பேசினர். ஈழத்தின் பேரவலம் தூரப்போனது. அதே நேரத்தில் மூன்று கட்சிகளில் கால்வைத்து, கால் எங்கிருக்கிறது என்று கண்டுகொள்ளவிடாமல் பேரம் பேசிக்கொண்டிருந்த தமிழ்க் குடிதாங்கி ராம்தாஸ் தான் தமிழர்களை ஆச்சரியப்பட வைத்ததில் முதலிடம் பெற்றார்.

உண்மையில் – தமிழ்த் தேசிய நலன்விரும்பிகள் ஓரணி யாய் சேருவதற்கான முயற்சியை பழ. நெடுமாறனும், தொல். திருமாவளனும் மேற்கொண்டார்கள். "அப்படியொரு அணி உருவாக வேண்டுமென்கிற பெரு விருப்போடு எத்தனை முறை ஒவ்வொரு கட்சி அலுவலகத்துக்கும் அலையாய் அலைந்தேன்" என்று தொல். திருமாவளவன் ஒரு அரங்கத்தில் வெளிப் படுத்தியிருந்தார். இவர்களிருவரும் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. மக்களுடைய எதிர்பார்ப்பு ஒன்றாகவும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் இயக்கங்களின் ஆசை, செயற்பாடு வேறொரு திசையிலும் அமைந்தன.

முதலாளிகளுக்கும் ஆதிக்கக் குழுக்களுக்குமான ஜனநாயகம் இது. அதற்கான தேர்தல் இது. எல்லோரும் பங்கேற்கும் தேர்தல் என்பதின் மூலம் மக்களுக்கானதாக காட்டபட்டு வருகிறது. தேர்தல் மூலம் நிலைப்படும் முதலாளிகளுக்கான அரசியல் அதிகாரம் அனைத்து மனிதர்களையும் சீரழிக்கும், நகக் கண் அளவுகூட கொள்கையாளராய் இருக்க எவரையும் அனுமதிக்காது என்பதற்கு, ஈழத்து பிரச்சனைக்காக நிற்கிற அரசியல் தலைமைகளும் பொதுவுடைமைக் கட்சிகளும் நேரடி நிரூபணமாகினர். ஈழவிடுதலைப் போருக்கு எதிராக எப்போதும் கொடியேந்தும் ஜெயலலிதா, ஈழத்துப் பிரச்னையில் எப்போதும் நிரந்தர வேடதாரி கருணாநிதி – ஆகியோரை தலைமையாக்கி தேர்தலில் பங்கேற்கும் கேவலத்துக்கு வந்தனர். தாமே தலைமைச் சக்தியாகி ஈழத்தமிழர்களின் துயர் நீக்கும் வாய்ப்பை இடறிவிட்டனர்.

கடைசியில் ஈழத்தமிழருக்கான யாதொரு வேலைத் திட்டங்களும் இல்லாது முடங்கிய இவர்கள், தாய்த் தமிழக மக்கள் தங்களுக்கு ஏதாவது செய்வார்கள் என்ற ஈழத் தமிழரின் எதிர்பார்ப்புகளை சிதைத்தார்கள்.

யாழ்ப்பாணம், வன்னி வட்டாரங்களில் மட்டுமல்ல: கொழும்பிலும், கிழக்கு மாகாணத்திலும் இராணுவத்தின் தேடுதல் வேட்டை, சித்திரவதை, மரணக்குழி இவைகளுடனேயே வெள்ளை வேன் கடத்தல்கள், கொலை அன்றாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. போர்க்களப் பகுதிக் குள்ளும், யாழ்வட்டாரத்துக்குள்ளும் செல்ல அனுமதி மறுக்கப் பட்ட, அவுட்லுக் வார இதழின் செய்தியாளர் கவிதா முரளிதரன் “உங்கள் புத்தர் இதையா சொன்னார்” என்று கேள்வி எழுப்பினார். “அங்குள்ள நடைமுறைகள் இங்குள்ள தமிழரை இயற்கையாக பாதித்தது என்று கூறுவதைவிட பாதிக்கும் என்று கூறுவதே சரி. தொப்புள்கொடி உறவு... எல்லாவற்றையும் இழந்த அவர்களுக்கு சிறிய ஆறுதலாக போர்நிறுத்தத்தைக் கூட நம்மால் தர முடியவில்லை” என்று கூறிய அவர் தொடர்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாம் இருக்கிறோம் தோள் கொடுக்க என்று சொல்லி அவர்களை ஏமாற்றுகிறோமா என்று தோன்றுகிறது".

ஆமாம், நமது தலைவர்கள் தேர்தல் கூட்டு என்ற பெயரில் அந்த ஏமாற்றைச் செய்து முடித்துள்ளனர். ஈழத்து மக்கள் நலனில் அக்கறையோடு இருக்கும் கட்சிகள் – எதைச் செய்யமாட்டார்கள் என்று கருதினோமா, அதனைக் கொஞ்சமும் தயக்கமேதுமின்றி செய்தார்கள்.

8.4.2009 அன்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் நடத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலைஞரையும் நடுவண ரசையும் எதிர்த்து வீராவேச உரைநிகழ்த்திய புரட்சிப்புயல் வை.கோ அந்த இடத்துக்கு ஜெயலலிதாவை, அ.தி.மு.வை ஏன் கூட்டிவர முடியவில்லை? கலைஞரை, நடுவணரசை சாடுவது அந்த அம்மாவுக்கு உடன்பாடானது தானே? அவ்வாறானால், ஈழப்பிரச்சினையில் ஆத்மார்த்த ஈடுபாடில்லாத ஒரு நபர் செல்வி என்பது தானே பொருள்? திருமங்கலம் இடைத் தேர்தல் பிரச்சாரத்தில் செல்வியின் கட்டளைக்குக் கட்டுப் பட்டு ஈழப்பிரச்னை பற்றி உதடு பிரிக்காத புரட்சிப்புயல் இந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் மௌனம் காப்பார் என எதிர்பார்த்தோம். அப்படியொரு சங்கடம் அவருக்கு ஏற்படாமல் புரட்சித்தலைவி காப்பாற்றிவிட்டார். ஈழத்தமிழரின் விடுதலை பற்றி எழுச்சிமிகு அறிக்கை வெளியிட்டு, வை.கோவைக் காப்பாற்றிவிட்டார். கருணாநிதி மீது முக்கி முக்கி குற்றச் சாட்டுக் குண்டு வீசுகிற தமிழக் குடிதாங்கி ராமதாஸ், அதே குண்டுகளை போயஸ் தோட்டம் கருகும் வண்ணம் வீசக் கடமைப்பட்டவரா, இல்லையா?

கூட்டணி தர்மம் பற்றி இவர்கள் நிறைய, நிறைய முத்து திர்க்கிறார்கள்: முன்னர் பகையாளிகள் இப்போது பங்காளிகள், தோசை திருப்புவதுபோல் திருப்பிப் போடலாம். "கொள்கை முரண்பாடுகள் உள்ள கட்சிகள், தேர்தல் கூட்டணியில் இடம் பெறக்கூடாதென்றால் இந்தியாவில் யாரும் யாரோடும் கூட்டுச் சேரமுடியாது" எழுச்சித் தமிழர் திருமா கூறுகிறார், அதனால் "இலங்கைத் தமிழர்களைக் காக்க உள்ளது ஒருகை தான், அந்தக் கையை விடமாட்டேன்" என்று கருணாநிதி உறுதியுடன் கூறியதும், "சோனியாகாந்தி ஒருவர்தான் எங்களுக்கு இருக்கும் நம்பிக்கை" என்று வழிமொழிபவராக வந்து நிற்கிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சீக்கியனுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம், தமிழனுக்கு இல்லை. அமிர்தசரஸ் பொற்கோயிலில் "நீல விண்மீன் தாக்குதல்" (Operation Blue Star) என்ற பெயரில் சீக்கியர் படுகொலை நிகழ்த்தப்பட்ட 1982 முதல் சீக்கிய இனப் பயம் டெல்லி அரசின் நரம்புகளுக்குள் ஓடிக் கொண்டிருக்கிறது.

டெல்லிக்கு அருகிலேயே இருக்கிறது பஞ்சாப். டெல்லியின் தண்டுவடமாக அதன் புவியியல் அமைப்பு ஆகி விட்டது.

மற்றொன்று: சீக்கிய இனம். போர்க்குணமுள்ள வரலாற்றின் தொடக்கந் தொட்டு, படையெடுப்புகளையும் ஆக்கிரமிப்புகளையும் எதிர் கொண்டு போராடிப் போராடி வீர உயிர்ப்பு கொண்ட கூட்டம் அது. பஞ்சநதிகள் ஓடும் பூமியில் போருக்குச் சென்றவர் ஆண்கள் மட்டுமல்ல: பெண்களும். ஒவ்வொரு பெண்ணும் போர்வீரனை விரும்பினாள். போருக்குச் செல்லும்போது கூட, தன்னைக் கூட்டிச் செல்ல வேண்டுமென அவள் கேட்டுக்கொண்டாள்.

*"நீலக் குதிரை ஓட்டிச் செல்பவனே*
*என்னையும் உன்*
*முதுகுச் சேனத்தில் கட்டிக்கொள்.*
*இரவு இறங்குகிற போது*
*நீலக் குதிரை வீரனே*
*என்னை வெளியே எடுத்து*
*கைகளில் ஏந்திக் கொள்"*
(பஞ்சாபி நாட்டுப்புறப் பாடல்)

சீக்கிய இனம் வீரமும் மானமும் உள்ள இனமாக இன்றும் பரிணமிப்பதற்கு இத்தகு வலுவான அடிப்படைகள் உள்ளன.

"முதுகில் வேல்பட்டு, என் மகன் இறந்தானெனக் கண்டேனாகில், அவனுக்குப் பால்தந்த மார்பகங்களை அறுத் தெறிவேன்" என்று வீரம் பேசிய புறநானூற்றுத் தாய் தமிழில் உண்டு. அவள் செத்துவிட்டாள். வாய் வீரம் பேசிப் பேசியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறநானூற்றுத் தாயைப் புதைத்து தன் வாழ்வை உயிர்ப்பித்துக் கொண்டவன் இன்றைய தமிழன்.

புவியியலில் தமிழகம் டெல்லியிலிருந்து வெகுதூரத்தி லுள்ளது: தென் கோடியில் அது ஒதுக்கப்பட்டுள்ளது. வரலாற்று ரீதியாக 14ம் நூற்றாண்டு வரை தனித்த ஆட்சியைக் கொண்டிருந்த தமிழர்கள் – இன்று எங்கோ வட கோடியில் இருக்கிற அதிகார மையத்தில் பங்கேற்க துடிக்கிறார்கள். மற்ற மாநிலத்தவரைவிட, விசுவாசமுள்ளவராக டெல்லிக்கு காட்டிக் கொள்வதின் வழி, அதிகாரத்துக்குள் செல்ல முனைகிறார்கள். எதையாவது செய்து, தேர்தல் திருவிழாவில் முண்டியடித்து டெல்லிக்குப் போய்விட நினைக்கிறான் இன்றைய தமிழன்.

சீக்கியர்கள் தமக்கிழைக்கப்பட்ட அநீதிகளுக்கெதிராக நீதிமன்றத்தை சூறையாடினார்கள். யாரும், எதுவும் சொல்ல இயலவில்லை. அந்த இனத்தைப் பகைத்துக் கொள்ளப் பயம். தன்மேல் செருப்பு வீசிய சீக்கிய செய்தியாளரை "மன்னித்து விட்டேன்" என்கிறார் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம்: ஒன்றும் செய்யாதீர்கள் என்று சொன்னது சிதம்பரத்தின் நாக்கு அல்ல: சீக்கிய இனத்தின் போர்க்குணத்தால் டெல்லிக்குள் ஓடிக் கொண்டிருக்கும் அச்சம். மறுபடி சீக்கிய இனத்தை உசுப்பி விட்டு, இந்தியா இரத்த பூமியாவதை அதிகார மையம் விரும்ப வில்லை.

கோவையில் வழக்குரைஞர்கள் நடத்திய ஆர்ப் பாட்டத்தில் *(09.04.2009)* ஒரு முழக்கம் தென்பட்டது.

"மானமுள்ள சீக்கியன செருப்பிலே அடிக்கிறான்

வெறுப்பிலே அடிக்கிறான்

மானங்கெட்ட தமிழன் ஸீட்டுக்காக அலையறான்"

சுயநலம் தமிழனை துப்புரவாக மானமில்லாமல் செய்து விட்டது என்பதை மெய்ப்படுத்தும் காரியத்தை தமிழ்த் தலைவர்கள் செய்து முடித்து விட்டார்கள்.

மக்கள் எப்போதும் நியாய, அநியாயங்களுக்கெதிராய் போராடும் நேர்கோட்டிலேயே சென்றுகொண்டிருக்கிறார்கள். சொன்ன சொல் காத்தல், நேர்மை, உண்மை, இதனாலேயே ஒவ்வொரு பிரச்னையையும் எதிர்கொள்ளும் தீரம் – மக்களிடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவுகிறது. அவர்களிடம் இன்னொரு சுயபுத்தியற்ற – சிந்தனை யில்லாத குணமும் இருக்கிறது. தலைவர்கள் வழிகாட்டுவார்கள் என்கிற நம்பிக்கை அது. சூதும் வாதும் மிக்க தலைமைகள் நேர்கோடுகளை வளைத்து, ஒடித்து, முறித்து, தம்முன்னேற்றம் ஒன்றையே பிரதானமாய் வைப்பதை, இந்த மக்களும் ஆதரித்துப் பேச வேண்டியவர்களாய் ஆகிவிடுகிறார்கள். மக்களின் சிந்திப்பை பிறழ்வழியில் செலுத்தி, கெட்டுப்போக வைத்தவர்கள் இந்த முன்னோடிகள் தாம்:

தமது சொந்தங்களுக்காக உலகம் முழுவதினும் தமிழர்கள் போராடிக்கொண்டிருக்கிறார்கள். "பிரிட்டன் பிரதமர் இப்போதே போர் நிறுத்தம் செய்யப் பேசவேண்டும். இனப் படுகொலைக்கு உடனே முடிவு கட்டுங்கள்" என்று இங்கிலாந்து தலைநகர் லண்டன் நாடாளுமன்றத்தின் முன் ஒரு லட்சத்திற்கும் மேலாய் தமிழர்கள் இரவு, பகல் தொடர்ந்து போராட்டம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கு தமிழர்கள் சாகும் வரை நாடாளு மன்ற முன்வெளியில் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இங்குள்ள தலைமைகள் நாடாளுமன்றத்திற்குள் போவதற்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

தற்போது சிங்கள அரசுக்கு நெருக்கடியைத் தந்து கொண்டிருப்பது உலகம் முழுவதும் பரவிக்கிடக்கின்ற ஈழத் தமிழர் நடத்துகின்ற போராட்டங்கள் தாம். அந்தப் போராட்டங்கள் உண்டு பண்ணுகிற அழுத்தங்கள் தாம்: இந்த அழுத்தத்தால் ஈழத்தமிழர் பிரச்னையில் இதுவரை எதிர்முகம் கொண்டிருந்த உலக நாடுகள், போர்நிறுத்தம் செய்யச் சொல்கிறன.

கொடுங் குளிர்நாடுகளில் ஈழத் தமிழர்கள் ஒற்றுமையை உயர்த்துகிற வேளையில், அதில் கால்பங்கு பணிகூட ஆற்றாத இங்குள்ள தமிழன் தேர்தல் குளிரில் முடங்கிக் கிடக்கிறான்.

தன்னலம் விட்டு தன்மானத்தோடு ஒன்று சேர்ந்தவர்கள் புலம் பெயர் தமிழர்கள்.

தன்மானம் விட்டு தன்னலத்தோடு கூட்டுச் சேர்ந்தனர் இங்குள்ள தமிழர்கள்.!

**கீற்று இணையம் - 16.04.2009.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. இந்திய மௌனமும் தமிழக எதிர்வினையும்

ஈழத் தமிழர்களின் உரிமைக்குப் போராடிய தமிழரசுக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்கும் அப்போது பிரதமராக இருந்த பண்டார நாயகாவுக்கும் இடையில் நிகழ்ந்த ஒப்பந்தம் பண்டா – செல்வா ஒப்பந்தம்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய அந்த ஒப்பந்தம் 1958–ம் ஆண்டு ஏற்பட்டது. 1958 ஏப்ரல் மாதம் ஒன்பதாம் தேதி புத்த பிக்குகள் 200 பேர் பண்டார நாயகாவின் இல்லத்தை நோக்கி, பண்டா செல்வா ஒப்பந்தத்தை கிழித்தெறிய அணி வகுத்துச் சென்றனர். அவர்களை ஒன்று திரட்டி, முன்னடத்திச் சென்றவர் இலங்கையின் முன்னாள் அதிபர் ஜெயவர்த்தனா. ஈழத்தமிழரின் எதிர் அரசியலில் அதிபர்கள் எவரும் சளைத்தவர் அல்லர்.

பிரதமர் பண்டார நாயகா புத்ததுறவிகளைக் கையெடுத்துக் கும்பிட்டு அவர்கள் விரும்பியபடி ஒப்பந்தத்தை தூள் தூளாகக் கிழித்து வீசியெறிந்தார். ஒப்பந்தத்தை கிழித்தெறிந்த சேதி வெளிப்பட்டதும், சிங்களவர்கள், தலைநகர் கொழும்பில் தமிழர்கள்மீது தாக்குதல் தொடுத்தனர். தமிழர்கள் அகதிகளாக மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டனர். தமிழர் வாழும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் இதன் எதிர்வினைப் போராட்டங்களை தமிழர்கள் நடத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் தற்காப்புப் போராட்டங்களை நடத்தினர். சில இடங்களில் அது தாக்குதலாக மாறியது. இது கண்டு பொறுக்கமுடியாத சாகரபலன சூரியா என்ற எம்.பி, நாடாளு மன்றத்தில் பேசுகையில் "தமிழர்கள் எந்தப் பகுதியில் இருக்கி றார்களோ, அங்கு அவர்கள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். இதற்கு அரசாங்கம் இடம் கொடுக்கப் போகிறதா? சிங்களவர்கள் தமிழர்களால் அழிக்கப்பட்டுவிடும் ஆபத்து இருக்கிறது. இதற்கு இடம் கொடுக்கப் போகிறோமா?" என்று கேட்டார். அப்போது அம்பாந்தோட்டை எம்.பி. லக்ஷ்மண் ராசபக்ஷே குறுக்கிட்டு, "அவர்களை அழித்துவிடுங்கள்" என்றார். (ஈழம் - எஸ்.எம்.கோபாலரத்தினம் - பக்145)

1958 ஜுன் மாதம் மூன்றாம் தேதி நாடாளுமன்றக் கூட்டத்தில் பேசிய பிரதமர் பண்டார நாயகா "அதை எல்லாம் எனது அரசு முறியடித்துவிட்டது. தமிழர்களின் போராட்டங்கள் அடக்கப்பட்டுவிட்டன. இப்போது வடக்கு, கிழக்கிலும் எனது இராணுவம் தான் இருக்கிறது. இந்த இரு மாகாணங்களிலும் ஒவ்வொரு இராணுவ ஆளுநர்களைக் கொண்டு இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது" என்று அறிவித்தார். அந்த இரு மாகாணங்களிலும் வேறு நிர்வாகம் அமைக்க முயற்சி மேற்கொள்ளாமல், எனது இராணுவத்தின் மூலம் நான் பார்த்துக் கொள்வேன் என்று கூறினார்.

ஈழத்தமிழர் பிரதேசம் இன்று இராணுவத்தால் கொடூர மாகச் சிதைக்கப்பட்டு, அகதிகள் முகாமிற்கு அருகிலேயே கிளஸ்டர் குண்டுகள் வீசி பலபேர் கொலையாகியுள்ளனர். இரண்டாம் உலகப் போரின்போது, அமெரிக்கா நாகஷாகி, ஹிரோசிமாமீது வீசிய அணுகுண்டுக்கு அடுத்த நிலையில் அதிக கதிர்வீச்சும், நாசமும் விளைவிப்பது கிளஸ்டர் குண்டு. உலகில் ஏதொரு நாடும் அணுகுண்டையும், கிளஸ்டர் குண்டையும், பயன்படுத்தல் கூடாது என்ற புரிந்துணர்வு ஏற்பட்டு, நடைமுறையிலும் கைக்கொள்ளப்படுகிறது. நார்வே, ஸ்வீடன் போன்ற நாடுகளின் முன் முயற்சியால் 107 நாடுகள் ஒன்றுகூடி, கிளஸ்டர் குண்டுகளைப் பயன்படுத்தக் கூடாது என 2008 டிசம்பர் 3ந் தேதி, ஒரு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளன. சொந்தநாட்டின் மக்கள் மீதே குண்டு பொழிகிற இலங்கை அந்த உடன் படிக்கையில் கையெழுத்திட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. குண்டு வீசத் துணையாய் ரேடாரும், ரேடாரை இயக்குகிற பொறியாளர்களும், ஆயுதப் பயிற்சியும் அளித்து வருகிற இந்தியாவும் கையெழுத்திடவில்லை.

குண்டுப் பொழிவால் இடம் பெயர்ந்து வதங்கும் தமிழ் அகதிகளைப் பார்வையிட இலங்கை மனித உரிமை ஆணைக் குழு சென்றது. "பார்வையிடவும், விசாரித்து அறியவும் அனுமதி இல்லை" என இராணுவம் மறுத்து விட்டது.

"நாங்கள் நேரடியாக ஜனாதிபதியின் கீழ் இயங்கும் அமைப்பு – இடம் பெயர்ந்து அகதிகளாய் வந்துள்ள மக்களைச் சந்திப்பதற்கு எங்களுக்கு உரிமை உண்டு" என மனித உரிமை அமைப்பினர் தெரிவித்தபோது – அவ்வாறு சந்திக்க வேண்டு மானால் வன்னிப் பகுதி இராணுவத் தளபதியின், மூலமாக கடிதம் கொண்டு வந்தால் மட்டுமே அனுமதிக்க முடியும் என்று இராணுவம் மறுத்துத் திருப்பியனுப்பப் பட்டனர்.

தோற்றத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாக இருந்தாலும் இலங்கை இன்றளவும் யதார்த்தத்தில் இராணுவ அதிகார ஆட்சியே செலுத்தி வருகிறது.

2002 அக்டோபரில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மானுடத்தின் தமிழ்க்கூடல் மாநாட்டுக்குச் சென்றபோது, எங்களுக்கு இது மாதிரியான ஒரு நேரடி அனுபவம் நிகழ்ந்தது.

கவிஞர் இன்குலாப், ஓவியர் மருது, இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், தொல். திருமாவளவன், நான் – என்ற ஐவர் குழு சென்றிருந்தோம். நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேம சந்திரன், சிவாஜிலிங்கம் – ஆகியோர் எங்களுடன் பயணப்பட்டார்கள்.

கொழும்பிலிருந்து புறப்படுகிறபோது, சாயந்திரம் ஐந்து மணிக்குள்ளாக யாழ்ப்பாணத்துக்கு முன்னிருக்கும் சோதனைச் சாவடி கண்டத்தை தாண்டி விடவேண்டும் என்று அவர்கள் அவசரப்படுத்தினார்கள். இந்தக் கண்டத்தை தாண்டிவிட்டால் பிறகு எல்லாம் சுகமே என அவர்கள் திரைப்படக் காட்சியின் இறுதிபோல், சுபம் சொன்னார்கள். எல்லை இறுதியில் ஏற்படும் "கிளைமேக்ஸ்" காட்சியைத் தவிர்ப்பதற்காக, வெள்ளென ஐந்து மணிக்கே அவசரம் அவசரமாய்ப் புறப்பட்டோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மாவீரர் துயிலுமிடத்தைக் காண இடையில் விலகிப் போனதால் தாமதமாகிவிட்டது. இராணுவத் தடுப்பு அரணைத் தொடுகிறபோது மாலை ஆறு மணி. கூட வந்த சிவாஜிலிங்கம், தான் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடையாள அட்டையைக் காட்டினார். வெட்டரிவாளுக் கென்ன, குளிரா, வெயிலா! இராணுவ அதிகாரிகளிடம் அசைவில்லை. பிறகு கொழும்பிலுள்ள முக்கிய அமைச்சரிடம் சிவாஜிலிங்கம் பேசி, அந்த அமைச்சர் அங்கே உள்ள இராணுவத் தலைமை அதிகாரியிடம் பேச, அவர் தடுப்பு அரணிலிருந்த இராணுவ அதிகாரியிடம் பேசிய பிறகே கடந்து செல்ல அனுமதிக்கப்பட்டோம். இராணுவத்துக்கு ராணுவமே கட்டளையிட வேண்டும். அமைச்சர்களின் அதிகாரம் கூட செல்லுபடியாகாது என்ற உண்மை எங்களுக்கும் அப்போது புலனானது.

பாராளுமன்றத்தின் மூலமாகவோ, அமைச்சர்கள் வாயி லாகவோ வருபவை ஆலோசனைகள் தாம் - கட்டளைகள் அல்ல. ஆலோசனைகளை அதிகார வர்க்கம், தாங்கிப் பிடிக்க வேண்டுமென்றாலும் தூக்கியெறிய வேண்டுமென்றாலும் எதுவும் செய்யலாம். இராணுவத்துக்கு அதன் அதிகாரமே வழி நடத்துகிறது. அதிகாரவர்க்கத்துக்கும் அதன் சட்டங்களும், கட்டுக்கோப்புகளுமே தலைமைத்துவம் செய்கிறது.

உண்மையில் பிரதமர், அதிபர் என்ற பெயருடையவர் களுக்குப் பின்னால் அங்கு இராணுவம் ஆட்சி செய்கிறது. நாடாளுமன்றம் என்ற பெயரில் மக்களின் பிரதி நிதிகளின் கையிலுள்ள கொஞ்ச நஞ்ச உரிமைகளையும் இராணுவம் பறித்துக்கொண்டு, அவர்களைப் பொம்மைகளாக்கி, அதனினும் கேவலமாய் தம்முடைய கை பொம்மைகளாக்கி வேடிக்கை நடத்துகிறது.

தமிழினத்துக்கான உரிமைகளை ஒவ்வொன்றாய் பறித்தலும், இராணுவத்தின் கையில் அதிகாரங்களை ஒவ்வொன்றாய் கையளித்தலும் இணைவாக நடைபெற்று வந்துள்ளது என்பதை இலங்கையின் ஆட்சிப் பயணம் பற்றி ஒரு பார்வை வீசுகிற எவரும் கண்டுகொள்ள முடியும். பிரதமர் பண்டார நாயகாவின் பதிலும் அதையே பதிவு செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ ஆட்சி நடைபெறுகிற நாடுகளுடன் ஒட்டுறவு வைத்துக் கொள்வதில்லை என்ற நல்ல வெளியுறவுக் கொள்கையை இந்தியா கடைப்பிடிக்கிற அதே பொழுதில், இலங்கையுடன் நரித்தனமான வெளியுறவுக் கொள்கையைக் கைக்கொண்டு தொடர்கிறது.

இலங்கையில் 1956–லிருந்து நடைபெற்று வருகிற ராணுவ ஆட்சியைக் கண்டிக்காத இந்தியா, தன்னுடைய ஆளும் வர்க்கங்களுக்கான வேட்டைக்காடாக இலங்கையை சுருட்டிக் கொண்டே போகிறது.

தமிழினம் என்ற ஒன்று அங்கு வாழுகிறது என்ற கரிசனம் இந்தியாவுக்கு இருப்பதில்லை. தன்னுடைய ஆதிக்கத்தை நிலைப்படுத்த சிங்கள இன மேலாதிக்கத்துக்கு நெருக்கடியை ஏற்படுத்திட தமிழ்ப்போராளிக் குழுக்களுக்கு ஆயுதப் பயிற்சி தந்து கொம்பு சீவிவிடுவதும், அதைக் காட்டியே இலங்கை அரசை தன் கைவளைவுக்குள் கொண்டுவருவதும், அது நிறைவேறியபின் தமிழின ஒடுக்கு முறைக்குத் துணை செய்வதுமே – இந்திய நடைமுறையாக நீடித்து வருகிறது.

இந்தியாவின் முதல் பிரதமர் நேருவுக்கு வல்லரசுக் கனவு இல்லை. பஞ்சசீலக் கொள்கைகளை உருவாக்கி, அணி சேரா நாடுகள் என்ற ஒரு உலக அணியை உருவாக்கியவர் நடுநிலை நாடு என்ற கம்பீரத்தை நிலை நிறுத்துவதிலேயே குறியாக இருந்தார்.

இந்திரா காந்திக்கும், உலக மேலாதிக்க வல்லரசுக் கனவு இல்லை. ஆயினும் தென்கிழக்கு, ஆசியாவில் தானொரு மேலாதிக்கம் ஆகும் நினைப்பு லேசாய்த் துளிர்த்தது. பங்களா தேசம் உண்டாக வங்கப் போரை நடத்தினார். காலத்தில் நிலம் தாண்டி கால்வைத்த இந்தியப் படை போலவே, அவருடைய மகன் காலத்தில் கடல் தாண்டிக் கால் வைத்த இந்திய அமைதிப்படை இந்திய சண்டியர்த்தனத்தின் தொடர்ச்சியாகும்.

இலங்கையின் அரசியல் கோட்பாடு பௌத்த – சிங்கள நாடு என்பதாகும். அதனுடைய அரசியல் யாப்பே அவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. அது ஒரு அரசியல் சித்தாந்தம் அல்ல. மக்கள் சமுதாயத்தை முன்னெடுக்கும் கொள்கையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல. சமுதாயங்களை உள்ளடக்கிய கோட்பாடாக வடிவு பெறாத எவையும், அரசியல் சித்தாந்தத் தகுதியை இழந்து விடுகிறது. இன அழிப்புக் கொள்கை மட்டுமே அதன் அரசியல் கோட்பாடு.

1958ல் கொழும்பில் தமிழர்கள் மீது சிங்களக் காடையர்கள் தாக்குதல் நடத்தியபோது, பல்லாயிரமாய் தமிழர்கள் அகதிகளாகி கப்பல்களில் யாழ்ப்பாணம் அனுப்பப் பட்ட காலத்தில், தல்பவல சீவன் சதேரா என்ற புத்த பிக்கு ஒரு நிகழ்ச்சியில் (மே 26 1958) "ஒரு சிங்களவன் உயிருக்கு ஆயிரம் தமிழர்கள் சமம்" எனப் பேசினார். புத்தனுடைய சொல்லைப் புதைத்து விட்டு பல்லை வழிபடும் (கண்டி தலதா மாளிகை) புத்த பிக்குகள், பல்லுக்கு பல் என்று பழி எடுப்பதில் வியப்பேதும் இல்லை.

இலங்கையின் சுயநல யுக்திகளை அறிந்து கொண்டுள்ள போதிலும், இந்தியா விழுந்து விழுந்து உதவி செய்கிறது.

"இலங்கைத் தீவு இரு அரசுகளாக இருப்பதைவிட, ஓர் அரசாக இருக்க வைத்து அதனைக் கையாள்வதே, ஒப்பீட்டு நிலையில் இந்தியாவின் எதிர்கால நலனுக்குச் சாதகமானது. எனவே இந்தியா தமிழீழக் கோரிக்கையை, தமிழ் மக்களின் பிரச்னையை தனது நலனுக்கு உகந்த வகையில் ஓரளவு தீர்த்து வைப்பதும், தனது தலைமையை இலங்கை அரசை ஏற்க வைப்பதுமே, இந்தியாவின் பிரதான நோக்கமாய் இருக்கிறது." – என அரசியல் ஆய்வாளர் மு. திருநாவுக்கரசு குறிப்பிடுகிறார்.

தமிழீழப் பிரச்சினையை இந்தியா தீர்த்து வைக்கப் போவதில்லை: தீர்த்து வைப்பதும் இந்திய ஆதிக்க சக்திகளின் நலனுக்கு உகந்ததல்ல: எனவே எவ்வளவு காலம் முடியுமோ, அவ்வளவு காலம் இழுத்தடித்து இலங்கையைக் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருக்க என்னென்ன பண்ண முடியுமோ செய்து காட்டுகிறது.

ஒரு பகை நாடாக இந்தியாவைப் பாவித்து காய் நகர்த்து கிறது இலங்கை. இந்தியாவை எவ்வளவு பயன்படுத்தலாம் என்பது மட்டுமே அதன் குறி.

"அனைத்துக் கெடு" என்ற சிங்கள அரசின் கபட நாடகத்தைப் புரிந்திருந்தும் தானொரு வல்லரசாகி, தென்னாசியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவனாகி அமெரிக்கா போல் உலகப் பேரரசாகும் வலிந்த கற்பனையில் மிதப்பதால், இந்தியச் சாய்மானம் இலங்கையின் பக்கமாக நிற்கிறது.

மு. திருநாவுக்கரசு வரையறுப்பது போல்

"இன்றைய யுகத்தில் உலகளாவிய வர்த்தக் ஆதிக்கத்தில் யார் ஈடுபட்டாலும் அது ஏகாதிபத்தியம் தான். அதில் இடது வலது என்ற வேறுபாடு இல்லை. ஏகாதிபத்திய தத்துவமே அச்சாணியாகி விடுகிறது."

மக்கள் இந்தியாவை தமது தேசம் என்ற பற்றுக் கோட்டின் அடிப்படையில் நோக்குகின்றனர். ஏகாதிபத்தியம் நோக்கிய நகர்வில் முன்னேறிக் கொண்டிருக்கிற இந்தியா தங்களிடமிருந்து அந்நியப்பட்டுக் கொண்டிருக்கிறது என்ற சிந்திப்பு பெரும்பான்மையோருக்கு வரவில்லை.

இந்தியா என்ற ஏகாதிபத்தியத்தின் குறியீடு மன்மோகன் சிங். அவரது மௌனம் இந்திய மௌனம். இந்த மௌனம், இன்னொரு நாட்டின் இறையாண்மைக்குள் தலையிட முடியாது என்று சொல்லிக்கொண்டே ஆயுதமும் இராணுவப் பயிற்சியும், நிதியும் வழங்குகிற கள்ளமௌனம். இந்த மௌனம் தான் முன்னாள் வெளியுறவுத் துறைச் செயலாளராக இருந்த ஏ.பி.வெங்கடேசுவரன், "ஈழத்துக்குப் பதிலாக வங்காளியரைச் சார்ந்து, அல்லது பஞ்சாபியரைச் சார்ந்து ஈழம் போன்ற தொரு சிக்கல் தோன்றியிருக்குமானால், இந்தியாவில் மீண்டும் ஒரு வங்கப் போர் தொடங்கியிருக்கும்." என கொதிப்புற்று பதவி விலகச் செய்தது.

தமிழ்ச் சமூகத்தின் பல பகுதியினரும், இந்திய மௌனத்தை உடைக்க, ஈழத்தமிழரைக் காக்க குரல் எழுப்பி வருகின்றனர். பதினைந்து நாட்களுக்குள் போரை நிறுத்த இந்தியா வலியுறுத்தாவிட்டால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி துறப்பார்கள் என்று சர்வகட்சிக் கூட்டம் நிறைவேற்றிய தீர்மானம் செல்லாக்காசாகி உள்ளது. செல்லாக்காசாக்கச் செய்ததின் குரூர மகிழ்ச்சியை கருணாநிதி கும்பல் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஈழத்தமிழனின் அவலம் துடைக்க தமிழ்ச் சமூகத்தின் பற்பல கரங்கள் நீளுகின்றன. மாதம் அரைக்கோடி ரூபாயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதியமாக வாரிச் செல்லும் கணிணித் துறையினர் (Tidle Park) ஒரு பிற்பகலில் *(17.11.2008)* மனிதச் சங்கிலியில் கை கோர்த்தும் *13.12.2008* அன்று சென்னை கோயம்பேட்டில் ஒரு நாள் உண்ணா நோன்பு மேற்கொண்டும் பதிவு செய்தனர். தமிழகத்திலுள்ள *221* ஓவியர்களும் எரியும் தமிழ் மக்களுக்காக ஓவியப் படையல் செய்து *(14.11.2008* முதல் *21.11.2008* வரை) ஓவியங்கள் விற்ற தொகையை ஈழத்துக்கு உதவிடச் செய்திருக் கிறார்கள்.

திரைக் கலைஞர்களின் ஆவேசம் நம்மைப் பிரமிக்க வைக்கிறது. தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள், கலைஞர்கள் அமைப்பு, நடிகர் சங்கம், திரைத் தொழில் நுட்பக் கலைஞர்கள், சின்னத்திரைக் கலைஞர்கள், வழக்குரைஞர்கள், மீனவர்கள், திருநங்கையர், என மக்களின் பல பகுதியினரும் குரல் தந்துள்ளனர்.

இந்திய மெளனத்தை உடைக்கும் பணியில் தமிழக மக்கள் இன்னும் வெகுதூரம் பயணப்பட வேண்டியிருக்கிறது. இந்திய அரசுக்குத் துணைபோகும் கலைஞர் அரசையும் அசைக்க வேண்டியிருக்கிறது. மக்களது எதிர்வினைகள் அனைத்தையும் விழுங்கி மலைப்பாம்பாய் அசைகிறது இந்தியா. அது கருணா நிதியையும் விழுங்கி வயிற்றுக்குள் அடக்கி விட்டது. அதிகார மேலாண்மையே குறியாய் ஒத்த கருத்தோட்டத்தில் இயங்கு கிறவர்கள் உள்ளடங்கித்தான் போவார்கள்.

வி.பி.சிங் பிரதமராக இருந்தபோது 1990ல் இங்கிலாந்தின் இந்தியத் தூதுவராக இருந்தவர் குல்தீப் நய்யார். தன் வரலாற்றுப் பக்கங்களில் அவர் ஒரு நிகழ்வைப் பதிவு செய்கிறார். "1991ல் கருணாநிதியுடன் உரையாடியதை நினைத்துப் பார்க் கிறேன். சில மாதங்களுக்கு முன் நான் லண்டனில் இந்தியத் தூதுவராக இருந்தபோது அங்கு இலங்கையின் உயர் அதிகாரியாக இருந்த டிஎஸ்.ஆட்டிக்கல என்னைச் சந்தித்து, ஈழப்பிரச்சினை தீர்வதற்காக கருணாநிதியின் ஒத்துழைப்பை எவ்வாறு பெறுவது என்பது பற்றிக் கேட்டார். இதன் பின்னரே நான் கருணாநிதியை சந்தித்து உரையாடினேன். ஆனாலும் அவர் அது விசயத்தில் தனது அழுத்தமான மறுப்பைத் தெரிவித்துவிட்டார். அது மட்டுமின்றி புலிகள் பாசிச வாதிகள்: வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள்: தங்கள் செய்கைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித மனிதாபிமானத்தையும் கொண்டிராதவர்கள் என்றும் தெரிவித்தார். புலிகள் மீது சிறு அனுதாபமும் அவர் கொண்டிருக்கவில்லை. அந்த இயக்கத்துடன் எந்தவித உறவு களையும் வைத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை."

ஈழத்தமிழர் மீதான யுத்தத்தை நடத்துவது இலங்கை போல் ஒரு பார்வைக்கு தோன்றினாலும் இந்தியா தான் யுத்தத்தை நடத்துகிறது. டெல்லி, கொழும்பு கூட்டணி இந்த யுத்தத்தில் தெளிவாகி உள்ளது. இப்போது டெல்லி கொழும்பு கூட்டணியோடு, தமிழக அரசும் கூட்டுச் சேர்ந்துள்ளது. தமிழக எதிர்வினைகள் இன்னும் உறைப்பாய் விழுகையில் தான் இந்த முக்கூட்டு உடைபடும். சென்னை அசைந்தால் டெல்லி அசைய, டெல்லி அசைந்தால் இலங்கை அசைய, ஈழத் தமிழருக்கு ஒரு விடிவு பிறக்கலாம்.

காலச் சுவடு, நவம்பர் - 2009.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. எதிர்ப்பில் முகிழ்க்கும் பண்பாடு

"தேசப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்தவர்களை விடுதலை செய்"

"ஈழத்தமிழர் மீதான போரை நிறுத்து"

கோரிக்கைகளை முன்வைத்து திருச்செந்தூரிலிருந்து தொடர் வண்டியில் புறப்பட்ட 75 மாணவர்கள் 6.4.2009 அன்று காலை சென்னை எழும்பூர் ரயில்நிலையம் வந்தடைந்தனர். ஒவ்வொரு நிலையத்திலும் இறங்கி முழக்கமிட்ட அவர்களை, பலரும் வரவேற்று உற்சாகப்படுத்தி அனுப்பினர். எழும்பூர் வந்த போது மாணவர்களை வரவேற்க ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. வருகை தந்தார். இராசபக்ஷே என்னும் இட்லர் ஈழத்தில் இனப்படுகொலையை உச்சத்தில் நடத்திக் கொண்டிருக்கிற வேளையில், தமிழகத் தேசிய அரசியல் கட்சிகள் தேர்தல் கூட்டணிகளுக்குள் முடங்கிவிட்டதை மாணவர்கள் வெறுத்தனர்.

"வை.கோ.வைக் கேட்கிறோம் கூட்டணியை விட்டு வெளியேறுங்கள்

"திருமாவளவனைக் கேட்கிறோம் கூட்டணியிலிருந்து வெளியேறுங்கள்

"ராமதாஸைக் கேட்கிறோம் கூட்டணியை விட்டு வெளியேறுங்கள்

– என்று முழக்கம் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள், தெளிவான முடிவுடன் திட்டமிட்டு இதனைச் செய்தனர். ஒரு நாள் பயணத்தில் மட்டுமேயல்ல: முந்திய நாட்களில் தமக்கு கிடைத்த அனுபவங்கள், அதன் பேரில் நிகழ்த்திய உரையாடல்களின் முடிவில் இந்த முடிவு களுக்கு வந்தடைந்திருந்தார்கள்.

"ஈழப் பிரச்னைக்காக யார் போராடினாலும் அவர் களுடன் நிற்பேன். அது வேறு, அரசியல் வேறு" - என திருமாவளவன் பேசியதை, பிழைப்புவாதமாக மாணவர்கள் கண்டனர். அவ்வாறு முத்துதிர்த்த அவரே, ஈழப் பிரச்னையில் நாடகமாடும் கருணாநிதியுடன் கைகோர்த்திருந்ததைக் கண்டனர். ஈழப்பிரச்னையில் எதிர் நிலைப்பாடும் செயற் பாடும் உள்ளவர்களுடன் ஓரிடத்துக்கும் ரெண்டிடத்துக்கும் ஈழத்தை ஆதரிக்கும் கட்சிகள் உடன்பாடு கொண்டது மனச் சாட்சி கொண்டவர்களை எரிச்சல் ஊட்டியது. திருமா வளவனும், ராமதாசும் வரவேற்க வந்திருந்தால் அவர்களும் இந்த எதிர்வினையையே சந்தித்திருப்பார்கள். எதிர்ப்பு முழக்கங்களை எதிர்பார்க்காத வை.கோ. மாணவர்களை சமாதானப்படுத்திவிட்டு திரும்ப வேண்டியதாயிற்று.

மறுநாள் ம.தி.மு.க வெளியிட்ட அறிக்கையில் தன்னிலை விளக்கம் வெளிவந்தது.

"ஒரு சிலர் திட்டமிட்டுச் செய்த சம்பவம்தானே தவிர, மாணவர்கள் வை.கோ.வை அவமதிக்கவில்லை. மாணவர் அல்லாத இருவர் அரசியல்வாதிகளே வெளியேறுங்கள் என்றும், பிறிதொருவர் கூட்டணியை விட்டு வெளியே வாருங்கள், ஈழத் தமிழர் கூட்டணி அமையுங்கள் என்றும் கோசம் எழுப்பினர்... மாணவர் அல்லாத இன்னொருவர் அரசியல்வாதிகளை நம்பாதீர்கள் என்று கோசம் எழுப்பினார்" என்று பேசிய அறிக்கை - ஈழத் தமிழருக்காக வை.கோ. செய்த போராட்டங் களை வரிசைப் படுத்தியிருந்தது.

முழக்கம் வைத்தவர்கள் ஒன்றிரண்டு மாணவர்கள் மட்டுமே அல்ல: அனைவருமே! இன்னும் இசை ஒழுங்குடன் முழக்கங்கள் எழுப்பினர்.

"வேண்டாம் வேண்டாம் வை.கோ வேண்டாம்

"வேண்டாம் வேண்டாம் திருமா வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேண்டாம் வேண்டாம் ராம்தாஸ் வேண்டாம்"

மாணவர்கள் எழுப்பியிருந்தாலும் மற்றவர் எழுப்பி யிருந்தாலும் ஈழப் பிரச்னைக்கு எதிரான தேர்தல் கூட்டணி அரசியலை மறுக்கும் மக்களது கருத்தே அதில் வெளிப் பட்டது. தேர்தல் கூட்டணிக்குள் முடங்கிவிட்ட இந்த அரசியல் வாதிகளைப் பற்றி இலங்கை அரசுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச பயமும் நீங்கி, படுகொலைகளை வேகமாக நடத்தத் தூண்டியது.

"இந்தியாவில் தேர்தலொன்று நடைபெறவுள்ள நிலையில், தமிழ்நாட்டில் எழுந்திருக்கும் இந்தச் சூடான நிலைமை தணிந்து விடும். இதைக் கண்டுகொள்ளத் தேவையில்லை"

இலங்கை செய்தித்துறை அமைச்சர் லக்ஸ்மண் யாப்பா கூறியதை இங்கு கணக்கு வைக்கவேண்டும். கொள்கையற்றதுகள் தமிழக அரசியல் தலைமைகள் என்பது லக்ஸ்மண் யாப்பாவின் வாசகத்தின் மெய்ப் பொருள்.

எவரும் கற்றுக் கொடுத்துச் செய்தாரில்லை மாணவர்கள். தாம் காணவும், செயல்படுத்திடவும் எண்ணிய புதிய பண்பாட்டை இயல்பாக வெளிப்படுத்தினார்கள். இப்படி முகத்துக்கு நேரே முழக்கமிட்டிருக்கக் கூடாது; நாகரிகமாக நடந்து கொண்டிருக்க வேண்டுமென்று ஆசுவாசப்படுத்த முயல்கிறவர்கள் நேருக்குநேர் பேசுதல், வெளிப்படப் பேசுதல் என்ற கலாச்சாரத்தை அங்கீகரிக்காதவர்கள். இல்லாதவர்கள்; உள்ளொன்று வைத்து புறமொன்று செய்கிற கலாச்சாரத்தை அங்கீகரித்தவர்கள்; இப்படி நாகரீகம் பார்த்துப் பார்த்துத்தான அரை நூற்றாண்டுக்கால தமிழினம் உள்ளொடுங்கிப் போயுள்ளது.

அப்படி மாணவரல்லாத ஒருவர் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்ததாக, தவறாய் வழிகாட்டுதல் செய்ததாகச் சொன்னால் அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு உரிய குற்றவாளி முத்துக்குமார் தான். எவை எவை நாகரிகமானவையாகக் கருதப்படுகிறதோ அவைகளை, எது எது உயரிய மதிப்பீடாக (Values) கொள்ளப் படுகிறதோ அவற்றை உடைத்தெறிய வாருங்கள் மாணவர்களே, இளையோரே என்று அழைப்பு விடுத்தவர் அவர்தான். ஒவ்வொரு மாணவருக்குள்ளும் இருந்த முத்துக்குமார் அன்று எழுந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடனடியாக போரை நிறுத்து" என்ற கோரிக்கையை இந்திய அரசுக்கு முன்வைத்து, 13.4.2009 முதல் பேராசிரியர் சரசுவதி உள்ளிட்ட இருபது பெண்கள் சாகும் வரை உண்ணா நோன்பு மேற்கொண்டனர். ஆதரவு தெரிவித்து அரசியல் கட்சிகள் பேசவந்ததை அவர்கள் நிராகரித்தனர். ஈழப் பிரச்னைக்கு எதிரானவர்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்டுள்ள இந்த அரசியல்வாதிகள், ஈழப் பிரச்னைக்கு ஆதரவாக இருப்பதாய் மக்களுக்கு காட்டிக்கொள்ள இதைப் பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதால் ஒலிபெருக்கியைப் பிடிக்க அனுமதிக்கவில்லை. இதுவரை இல்லாத ஒரு புதிய பண்பாட்டை உண்ணா நோன்புக் களத்தில் அறிமுகம் செய்தார்கள்.

ஒவ்வொரு அசைவிலும் புதிய பண்பாட்டை பிறப்பிப்பது சுயசிந்திப்பும், சுயமரியாதையும் கொண்டவர்களுக்கு சாத்தியம்.

தனிமனிதனுக்குள்ளும் இயக்கத்துக்குள்ளும் போர்க் குணத்தை மேலெடுத்துச் செல்லும் அடிப்படைகள் இவை.

எதற்கும் அடிபணிந்து போகிற (அப்படியென்றால் தன்மான மற்ற என்று பொருள்), எதையும் பின்பற்றாளர் களாய் ஏற்கிற (அப்படியானால் சுயசிந்திப்பு அற்ற என்று பொருள்) வழக்கத்தைக் கொண்ட ஒரு கூட்டத்தை நூற்றாண்டாய் உருவாக்கி வைத்துள்ளோம். இதன் காரணமாய் போர்க்குணத்துடன் உருவாகிவரும் இளையோரை பழைய நிலைக்குத் தள்ள முயற்சிக்கிறோம்.

புதிய வரலாற்றுக் காலம் நம்முன்னே வந்துள்ளது. புதிய வரலாற்றைக் கையகப்படுத்திக் கொள்ள இளையோருக்கு புதிய பண்புகள் முக்கியமாகின்றன. அழுகி நாற்றமெடுக்கும் பழைய பண்புகள் தூக்கி எறியப்பட வேண்டியவை.

இந்திய விடுதலைப் போர் என்ற எழுச்சி, மனித குணங் களில் மாபெரிய மாற்றங்களைத் தோற்றுவித்தது: போராட்ட காலத்தில் ஓடிய வீரமும் ஈகமும், நேர்மையும், முன்மாதிரி யாகின. அதிகாரம் கைக்கு வந்த ஆகஸ்டு 15. 1948க்கு பின் இவை "செல்" அரித்த காகிதம் போல் பொல, பொலவென்று உதிர்ந்தன. அடுத்த கட்டத்துக்கு சமுதாயத்தை எடுத்துச் செல்லும் போர்க்குணம் தொலைத்தார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1965*ல் தமிழகத்தை உலுக்கியது மொழிப் போர். இந்தி மொழியை எதிர்த்த ஒரு போராட்டமாக மட்டுமே அதனைச் சுருக்கி விடக்கூடாது. ஒரு இனத்தின் மீது, வடஇந்திய அதிகாரமையத்தின் அடையாளமான இந்தி பேசும் தேசிய இனத்தின் ஒடுக்கு முறையை எதிர்த்த இன எழுச்சிப் போர் அது. எதிர்பார்ப்பு ஏதுமற்று, இளைய தலைமுறை அதைக் கையிலெடுத்தது. எதிர்பார்ப்புகளுடன் தேர்தல் அரசியல் நடத்தியவர்கள் அதன்பின் தமிழ்த் தேசிய எழுச்சி ஏற்படாமல் கவனித்துக் கொண்டார்கள்.

கூட்டணி அரசியலின் தொகுதி பேரத்தில் ஒரு இனத்தின் துயரை ஓரங்கட்டிய துரோகத்தை எதிர்த்த மாணவர்களை, பின்னர் ஏற்பாட்டாளர்கள் அழைத்துச் சென்று வை.கோ. விடம் வருத்தம் தெரிவிக்கச் செய்ததுதான் வேதனை தருவதாக அமைந்தது.

நிமிர்ந்து நிற்கும் குணத்தை வளைத்து முறிப்பது சமகால அரசியல். அதுவே சமகால வாழ்வியல். நிமிர்ந்து நிற்கும் போர்க் குணம், வாழ்வுக்குள்ளிருக்குமானால் வாழ்வே இயங்க முடியாமல் போகும் என்ற கருத்தும் உண்டுபண்ணப் பட்டிருக்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தனிமனிதனாக நடமாடுகிறான். அவனுடைய இயங்குதல் சமுதாயத்துக்குள் இருந்தாலும். தன்னை சமூகமனிதனாக உணர்வதில்லை. மாணவர்கள் சமூக மனிதனாக தம்மை உணரும் காலம் வந்து சேர்ந்திருக்கிறது. சுயசிந்தனையும் சுயமரியாதையும் உள்ள சமூகமனிதனாக மாணவர்கள் தங்களை வெளிப்படுத்திக் கொண்டார்கள் என்பதையே தொடர்வண்டி நிலைய நிகழ்வு காட்டுகிறது.

## 3

**ம**ரம் ஓய்வை விரும்பினாலும், காற்று சும்மா இருக்க விடுவதில்லை – என்ற வாசகம், காலத்தை, காலத்தின் முன்னகர்த்தலை உணர்த்துவதாக கொள்ளலாம். காலம் – தனக்குத் தேவையான பணிகளை, கருத்துக்களை, கொள்கை வகுத்தலை, செயல் முறைகளை மனித எத்தனிப்பு மூலம் நிறைவேற்றிக் கொள்கிறது என்பது இதன் பொருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு எழுத்து தொழில். அதைச் செயலாக்கும் சூழல், அமைதி தேவைப்படுகிறது. அமைதியாய் உட்கார்ந்து எழுத வேண்டுமென நினைக்கிறேன். அந்த நேரத்தில் படைப்பு மனோநிலை, என் பேனாவுக்கு மேல் சம்மணம் போட்டுக் கொண்டோ, இரட்டிணக் கால் போட்டு அமர்ந்து கொண்டோ இருக்கும். ஈழத்தில் பூவும், பிஞ்சும், காயும், கனியும் கொத்துக் கொத்தாய் குண்டு மழையால் உதிர்க்கப்படுகிற போது – நூறு பெண்கள் சாகும் வரை உண்ணா நோன்பிருக்கிறார்கள் என்ற செய்தி வந்தடைகிறபோது – அவர்களை நோக்கி நாம் ஓடுகிறோம். எழுத்துத் தவத்தைவிட காலம் நம் முன்னால் விட்ட பணியை நோக்கி நடக்கிறோம்.

அந்தத் தாய்மார்களுக்கும் குழந்தை, கணவர், தாய், தந்தை என்று குடும்ப உலகம் இருக்கிறது, ஆற்ற வேண்டிய கடமைகள் ஏராளம். அதைவிட்டு நகர்ந்து வேறொரு கடமை ஆற்றும் படி காலமும் சூழலும் இட்ட கட்டளையை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள். அவர்களையும் ஒரு புதிய களத்திற்கு தயார்படுத்தியது காலம்.

காலத்துக்குள்ளிருந்து, காலம் நிர்ப்பந்திக்கும் போராட்டங்களிலிருந்து அதை உணரும் நெஞ்சங்களிலிருந்து புதிய பண்பாடுகள் பிறக்கின்றன. நீதி மன்றங்களில் கனம் நீதிபதி அவர்களே, மேன்மைதங்கிய நீதிபதி அவர்களே மைலார்ட், யுவர்ஹானர் என்றே விளிக்கும் பழக்கம் இன்றும் தொடர்கிறது. வழக்குரைஞர் போராட்டத்தின்போது இத்தவறு களையப்படுகிறது. வழக்குரைஞர்கள் மீது நடத்தப்பட்ட ஜாலியன்வாலாபாக்கை விசாரிக்க வந்த நீதிபதி கிருஷ்ணா வழக்குரைஞர்களுக்கு எதிரான முடிவுகளை வழங்கியதில், உருவான எதிர்ப்பிலிருந்து இப்புதிய பண்பாட்டைக் கண்டெடுக்கிறார்கள். இவ்வாறு அழைக்கிற அடிமை மனோபாவத்திலிருந்து விடுபட வழக்குரைஞர்கள் முடிவெடுக்கிறார்கள்.

எதிர்ப்புக்குள்ளிருந்து தான் புதிய பண்பாட்டுத் தாவல் நிகழ்கிறது. பழைய பண்பாட்டுக் காவல்களையும் மீறி புதிய கீற்றுக்கள் அறிமுகமாகின்றன. முந்தைய பண்பாடு ஒரு காலனி ஆதிக்கம் போல் நம்மேல் அமுக்கிக் கொண்டுள்ள நிலையில், காலம் புதியவைகளை ஏந்தி வீரியமான மனிதர்கள் வழியே அறிமுகம் செய்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும் சமாதானப் படுத்துதல், சகித்துக் கொண்டு போதல் என்பது முந்தைய பண்பாடுகளுக்குள் ஆழமாய் வேரோடிய ஒன்று. எதையும் சமாதானப் படுத்துதல் என்பது ஒரு பொதுப் பண்பாகவே அரசியல் முதலான சகல தளங் களிலும் உருக்கொண்டுவிட்டது. உள்ளிருக்க வேண்டிய கலகப் பண்பு நீக்கப்படுகிறது.

நம் காலத்தில் கலகப்பண்புகளை முற்றாக நீக்கம் செய்தவர் காந்தியார். அவருக்குள் எப்போதும் ஒரு இந்து சாதுவின் மனம் இயங்கிக் கொண்டிருந்தது. சாதுவான, வீரியமற்ற, போர்க்குணம் நீக்கிய அரசியல் நடைமுறைகளை முன்மொழிந்தார் என்பது மட்டுமல்ல, மக்களும் கடைப் பிடிக்க வேண்டுமென கட்டாயம் செய்தார்.

மக்கள் கூட்டம் அப்படியில்லை. போர்க் குணமில்லாத நடைமுறையை அவர்களால் ஏற்க முடியவில்லை. காந்தியைத் தாண்டி கோபாவேசமான நடவடிக்கைகளில் ஒன்றுபட்டதால் இந்திய விடுதலை சாத்தியமானது.

ஏதொன்றையும் அறவழியில், அமைதி வழியில் தானாக உணர்ந்து செயல்படுதல் அதிகாரமையத்தின் செயல்படு முறை யல்ல. எதிர்ப்பு நிலையின் அளவுகளிலிருந்தே, அதிகாரமையம் தன்செயல்பாடுகளின் அளவை தீர்மானித்துக் கொள்ளும்.

சற்று முந்திய காலத்தில் போர்க்குணத்தை மட்டுப் படுத்தி, பின்னர் ஒரு கட்டத்தில் சமாதானப் படுத்துதல் என்பதையே கோட்பாடாக ஆக்கியவர் அண்ணா. எதிர்ப்பு அரசியலை போர்க்குணத்துடன் மேலெடுத்து செல்வதை பெரும்பாலும் அவர் பண்ணவில்லை. எதிர்க்கட்சியாக இருந்த போதும் மிதவாத, சமாதான அரசியலையே முன்னெடுத்தார்.

தேர்தல் பாதை இட்டுச் செல்லும் அரசியல் அதிகாரத்துக்கு போராட்டவழிகள் தேவையில்லை: மிதவாத வழியே போதும். போராட்டம் என்பதில் தொடங்கி அது போன்ற "பாவனை" செய்தல் என தொடர்ந்து கொண்டு போய்க் கொண்டிருத்தல் போதுமானது. "பாவலா" பண்ணுதல் ஒன்றே சமகால அரசியல் கலாச்சாரமாக வடிவம் கொண்டுள்ளது.

"நல்ல அரசியல் வாதி எந்தவாய்ப்பையும் ஒரு போதும் புறக்கணிக்க மாட்டார்" என ஜெயலலிதா எந்த நேரத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரோடும் சமரசம் செய்து கொள்ளலாம் என்பதை நாகரிக மான பொன்மொழியாக வெளிப்படுத்தியது வரை, இந்த "பாவலா" கலாச்சாரம் நீள்கிறது.

இன்றைய தலைமைகளில் இளைய தலைமுறைத் தலைவர்கள் எவரும் புதிய பண்பாடுகளிலிருந்து முளைத்த வர்கள் அல்ல: எங்கிருந்து புறப்பட்டு வந்தார்களோ, அதன் பழைய நாற்றத்தை தம்மோடு சுமந்து வந்தவர்கள். இவர்கள் புதியவர்கள் அல்ல, புதியதின் பெயரால் பிறப்பெடுத்த பழையவர்கள்.

பகத்சிங்காலும் முத்துக்குமாராலும் வழி நடத்தப்படுகிற இளையோர், மாணவர் அப்படியில்லை. முன்னர் சொல்லப் பட்ட, கற்பிக்கப்பட்ட பண்புகள் பொய்யானவை: தவறானவை என உள்ளுக்குள் இறக்கப்பட்டிருந்தவைகளை வெளியே எடுத்து எறிகிறார்கள். புதிய ஆளுமைப் பண்புகள் பிறப்பெடுக் கின்றன. இந்த ஆளுமைப் பண்புகளுள்ள சிலர் பலராகி, அவர்களைக் கொண்ட ஒரு பொது நீரோட்டம் உருவாகி - அதனை உருவாக்கிட நம் கடமை பல மடங்காக விரிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தொடரும் எழுத்துலக மௌனம்:

# நீங்களே யோசியுங்கள் நீங்கள் எப்படி ஆனீர்களென்று

**கே**ரள மாநிலம் கோழிக்கோடு நகரில் மக்களை வெளியேற்றி சட்டத்துக்குப் புறம்பாகக் கட்டப்பட்டிருந்த அடுக்கு மாடி உணவு விடுதியைத் திறந்துவைக்க வரவேண்டாம் என, அப்போதைய மாநில முதல்வர் உம்மன்சாண்டியை எழுத்தாளர் சுகுமார் அழிக்கோடு கேட்டுக் கொண்டார். எழுத்தாளருக் கென்ன ஆயிரங்கைகளா? ஆயிரந்தொண்டர்களா தடுக்க!. வேண்டுகோளைப் புறந்தள்ளி முதல்வர் உம்மன் சாண்டி அடுக்குமாடிக் கட்டிடத்தை திறந்து வைத்தார். ஆயிரம் கைகளைவிட வலிமைகொண்ட ஆயுதம் இலக்கியவாதியின் கையில் இருக்கிறது – அவன் பெற்ற இலக்கிய விருது அது. கேரளத்தின் மிக உயர்ந்த இலக்கிய விருதான எழுத்தச்சன் விருது அப்போது எழுத்தாளர் சுகுமாரன் அழிக்கோடுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஊழல் பேர்வழிகளுக்குத் துணை போன முதலமைச்சரின் கைகளிலிருந்து விருதைப் பெறமாட்டேன் என, விலக்கித் தள்ளினார் சுகுமாரன் அழிக்கோடு.

"சனநாயக மக்கள் விரோத அரசிடமிருந்து நான் பரிசு பெற விரும்பவில்லை. மோதல்கள் என்ற பெயரில் (Encounters) நூற்றுக்கணக்கான மக்களை, அப்பாவி இளைஞர்களைக் கொன்று குவித்த அரசின் எந்த அங்கீகாரமும் எனக்குத் தேவையில்லை."

காளிப்பட்டணம் ராமாராவ் என்ற தெலுங்கு எழுத்தாளர், "யக்ஞம்" என்ற தனது சிறுகதைத் தொகுதிக்கு ஆந்திர அரசு அளித்த பரிசையும் இதேபோல் மறுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு இரு ஆண்டுகள் முன் - ராமாராவ் எந்தக் காரணத்திற்காக பரிசை உதறி எறிந்தாரோ அதே காரணம் ரா.வீ. சாஸ்திரி என்ற புகழ்பெற்ற தெலுங்கு எழுத்தாளரையும் மறுக்கச் செய்தது. ஆந்திர அரசு அளித்த இலக்கிய பரிசைப் பெற மறுத்துவிட்டார். மோதல்கள் என்ற பெயரில் அப்பாவி மக்களையும் புரட்சியாளர்களையும் அழித்தொழிப்பு செய்த போலீஸ் அத்துமீறல்களுக்கு எதிர்வினையாகவே இதனைச் செய்கிறார்.

பிர்த்தானிய ஏகாதிபத்திய அடக்குமுறைகளுக்கு எதிராய் ஒரு இலக்கியவாதி தனது கம்பீரத்தையும் உயர்வையும் நிலை நிறுத்திய நிகழ்வு 1913-ல் நடந்தது. அமிர்தரசரஸ் அருகேயுள்ள ஜாலியன் வாலாபாக் திடலில் எல்லா வழியையும் அடைத்து விட்டு, தப்பியோட ஒரு வழியுமில்லாதபடி நூற்றுக்கணக்கில் மக்களைத் துப்பாக்கிக்குப் பலியாக்கினான் ஜெனரல் டயர். 1913-ல் நடந்த அந்த மக்கள் அழிப்பு நூற்றுக்கணக்கான மைல் களுக்கு அப்பால் வங்கத்திலிருந்த கவி தாகூரைக் கலக்கியது. 1905-ல் பிரித்தானிய அரசு அவருடைய மேதமையைக் கௌரவிக்க Knight hood (மாவீரர்) விருது வழங்கியிருந்தது. தனக்களிக்கப்பட்ட மாவீரர் விருதை ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் கண்டித்து திருப்பி அனுப்பிவிடுகிறார் தாகூர்.

இவர்கள் காட்டிய எதிர்ப்பின் புள்ளியில் தமிழகக் கவிஞர் அப்துல் ரகுமானைப் பொருத்திப் பார்க்க நாம் ஆசைப் படுகிறோம்.

அப்துல் ரகுமான் தி.மு.க. ஆட்சியில் அரசின் கிளையான வக்பு வாரியத் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார். வாரியத் தலைவர் பதவிக்கு உங்களை பரிந்துரை செய்யலாமென நினைக்கிறேன் என்று முதல்வர் கருணாநிதி சொன்னபோது, தயக்கமேதும் காட்டாமல் "சரி" என்கிறார். அந்தப் பதவி அவர்மீது திணிக்கப்பட்டதல்ல. அவருக்கும் உடன்பாடு என்பதால், மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டார்.

"மொத்தத்தில் நியாயங்களுக்கு எதிரான விவகாரங்களில் எந்தச் சூழலிலும் சமரசம் செய்து கொள்ளமாட்டேன் என்ற அடையாளம் எனக்கிருப்பதால், குறுக்கீடுகள் வராது. மீறி வந்தால், அத்தகைய குறுக்கீடுகள் என்னை வெற்றி கொள்ள முடியாது" - என உறுதி கூறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பொருத்திக் கொண்டுள்ள பதவியில் உங்களது நேர்மை, நிர்வாகத் திறன், கண்காணிப்பு – இவைபற்றியதல்ல எமது கேள்விகள். காலத்தால் ஆற்றாதுவிட்ட, விடப் போகிற கடமையைக் குறித்தே எம் கரிசனம் மையம் கொள்கிறது. அறிவுலகச் செயற்பாட்டாளர்கள் தம்மை அதிகாரத்தோடு இணைத்துக் கொள்கிறபோது – அறிந்தே ஈழப்படுகொலை முடிந்துவிட்டது. துயரம் நீளுகிறது. 2006–லிருந்து ஒரு லட்சம் மக்களும் 30 ஆயிரம் போராளிகளும் கொல்லப்பட்டார்கள். கடைசி இரு நாளில் 30 ஆயிரம் உயிர் கொய்யப்பட்டது. நேரடி நெறியாளன் இந்தியா. இந்நாட்டின் அங்கமான தமிழர்களையும் தாண்டி இந்தியா செய்தது துரோகம் என்றால், துரோகத்தின் வேர் தமிழகத்தில் இருந்தது. தமிழகத் துரோகத்தின் ஆணிவேர் கருணாநிதி தலைமையிலுள்ள தமிழக அரசு.

போரை நிறுத்து -- என்ற எழுச்சி தமிழகத்தில் தொடங்கிய போது, தமிழ்ப் படைப்பாளிகள் முன்னணி சார்பில் சென்னையில் நடத்தப் பெற்ற ஒருநாள் தொடர் முழக்க ஆர்ப் பாட்டத்திற்கு வந்து ரகுமான் உரையாற்றினார்; பின்னொரு நாளில் விழுப்புரத்தை மையம் கொண்டு இயங்கும் தமிழ்ப் படைப்பாளிகள் கூட்டமைப்பு சென்னையில் நடத்திய ஒரு நாள் உண்ணாநிலைப் போராட்டத்திலும் உரையாற்றினார். ஈழத்தில் கட்டவிழ்த்துவிடப்படும் இனப்படுகொலையை எதிர்த்து முன்னர் நிறைவு செய்த கடமையை, இப்போது அவர் ஆற்ற முடியுமா? முன்னர் பேசியது இப்போது வருமா என்ற கேள்வி எழுவது தவிர்க்கமுடியாது. சிந்தனையாளர்கள் கடைப்பிடிக்கிற மௌனம் அல்லது நடுநிலை, அல்லது கைக்கொள்கிற எதிர் நிலை பேராபத்தான விளைவுகளை உண்டாக்கும். முதலில்– அது அதிகார சக்திகளை மேலும் ஊக்கப்படுத்தும்; இரண்டா வதாய், எதன்மீதும், எவர்மீதும், எந்நாட்டின் மீதும் இக்கணத்தில் நம்பிக்கையற்றுப் போய்விட்ட தமிழ்ச் சமூகத்தை வன்முறைக்குள் தள்ளும்:

"உங்களுடைய யுத்தத்தை நாங்கள் நடத்தினோம்" – என இலங்கை ராசபக்ஷே வெளிப்படையாக அறிவித்தது – இந்திய அரசு தமிழர்களைப் பலி எடுத்தமைக்காக செலுத்திய காணிக்கை மட்டுமல்ல; ரகுமான் போன்றோர் நேசிக்கிற கலைஞருக்கு செலுத்தியதும் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருணாநிதி வழங்கிய பதவியை, அப்துல் ரகுமான் சூடிக் கொள்கிறார். கவிஞர்கள் ஈரோடு தமிழன்பன், மு. மேத்தா, கனிமொழி, சல்மா, தமிழச்சி, இமயம் - இப்படி தி.மு.க. இலக்கிய விசுவாசிகள் வட்டம் விரிவு பெறுகிறது. இவர்கள் அனைவரும் தி.மு.க. வுக்கு விசுவாசமாய் இருக்கிறார்களோ, இல்லையோ, கலைஞர் மீது எல்லையில்லா விசுவாசம் கொண்டவர்கள்.

குறிப்பாய் அப்துல் ரகுமானின் இப்போதைய உரை களில் மட்டுமல்ல, முந்தைய உரைகளிலும் மற்றவர்களுக்கு அவருடைய நாக்கில் வாளிருந்தது: கலைஞருக்கு அவருடைய நாக்கில் மயில்தோகை இருந்தது.

அரசாங்கம் காட்சிப்படுத்துகிற முகத்தை வேண்டாமென புறந்தள்ள முடிவதில்லை இவர்களால்: ஒரு அரசு எப்படி தன்னை மேடையேற்ற எண்ணுகிறதோ, அப்படியான பாத்திர மாக மாறுவதை சங்கடமாக உணர்வதில்லை இவர்களைப் போன்றவர்கள். தனக்குப் பிரியமான கலைஞரின் ஆதிக்க மனோநிலைக்கு உடந்தையாய் ஆகிற அப்துல் ரகுமானின்

"நாற்காலியில் உட்கார்ந்தால் தெய்வமாகி விடலாம்; உளறலும் வேதமாகிவிடும்"

என்ற வரிகள் வெந்து தனியாமல் இன்று கேள்வி எழுப்புகின்றன அவரிடமே.

விருதுகள் பெறுவது வேறு; அதிகாரத்தில் பங்கு பெறுவது வேறு; எவருடைய அதிகாரத்தில்? அதுவும் எந்தக் காலத்தில்?

இது என்ன காலம்? வதைபடும் ஈழத் தமிழினத்தின் காலம், உலகின் இருண்ட காலங்களில் எல்லாம் இருண்ட காலமாக இந்திகழ்வு இடம் பிடித்துள்ளது. சுய மரியாதை யுள்ள எந்தக் கலைஞனும் இந்தக் காலத்தின் குரலுக்கு செவி கொடுப்பான். வதைகளால் வலியும், வதைசெய்வோரிடம் சினமும் கொள்வான். இச்சினம் இந்திய, தமிழக அரசுகளுக்கு எதிரானதாக திரும்புதல் இயற்கை. ஆனால் அதிகாரத்தில் பங்கேற்றபின், தொண்டைக் குழிக்குள்ளே அடங்கிப் போகிறது எதிர்ப்பின் குரல்.

மனிதப் படுகொலைக்கு எதிராகத் தொடர்ந்து குரல் தருகிற கவிஞர் இன்குலாப், "மனிதன், தமிழன், படைப்பாளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற வகையில் இந்தக் கொடுமைகளுக்கு எதிராக செயல்பட வேண்டிய கடமை எனக்கிருக்கிறது. இந்தவகையில் 2006-ம் ஆண்டு தமிழக அரசின் தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தால் வழங்கப்பட்ட கலைமாமணி விருது, எனக்குக் கௌரவமாக அல்லாமல், முள்ளாகக் குத்திக் கொண்டிருக்கிறது. இதைத் தமிழக அரசிடமே திருப்பித்தருவது தான் எனது மனித கௌரவத்தை தக்க வைத்துக்கொள்வதாக அமையும்". என்று கலைமாமணி விருதை திருப்பி அனுப்பி, தன் கௌரவத்தைக் காத்துக் கொண்டுவிட்டார்.

ஈழப் படுகொலைகளுக்கு எதிராய் எந்தக் காரியமும் ஆற்றாத இந்திய அரசையும் துணைபோன கலைஞர் அரசையும் கண்டிக்கும் விதத்தில், கவிஞர் அறிவுமதி தமிழக அரசினால் தனக்களிக்கப்பட்ட திரைப்பட விருதுகள் தேர்வுக்குழு உறுப்பினர் பதவியை உதறி, உயர்ந்தார்.

"போடா போ, நீயும் உன் பத்மஸ்ரீ விருதும்" - என்று பத்மஸ்ரீ விருதையே திருப்பி அனுப்பினார் திரைப்பட இயக்குனர் பாரதிராஜா. ஈழப்படுகொலைகளைக் கண்டித்து திரைப்படக் கலைஞர்கள் நடத்திய ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் மட்டுமல்ல; எந்தக் கூட்டத்திலும், எந்த இடத்திலும் தன்னுடைய கருத்துக்களை வெளிப்படுத்தத் தயங்காத கவிஞர் தாமரை, கண்ணகியின் கருஞ்சாபம் - என்றொரு சாட்டை வீச்சுக் கவிதையை வெளிப்படுத்தினார்.

"இந்தக் கணத்தில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல. தமிழ் என்ற மொழிப் பிரதேசத்தில் வாழ்பவன் என்ற முறையில் என்னை ஒரு அகதியாக, நாடற்றவனாக, நிலமற்றவனாக, மிகக்குரூரமாக தோற்கடிக்கப்பட்டவனாக உணர்கிறேன். நாஜிகளால் படுகொலை செய்யப்பட்ட யூதர்கள் இவ்வாறுதான் உணர்ந்திருக்கக்கூடும்" என்று கவிஞர் மனுஷ்ய புத்திரனின் கண்ணீரும் கண்டனமுமான தலையங்கம் வெளி யானது.

*(உயிர்மை ஜூன் 2009)*

அடையாளமும் வாழ்வும் இழந்த தமிழ்ச் சமுதாயத்தின் மொத்த குரலையும் எதிரொலித்தது காலச்சுவடு தலையங்கம்.

*(ஜூன், 2009)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூலை, 2009 தீராநதி இதழில் வெளிப்பட்ட சி. மோகனின் ஒளிகொண்டு வருபவன், என்ற கவிதை விடுதலையை நேசிப்பாளர்களின் கர்ப்பப்பையை நிறைத்தது.

இவ்வாறு சில வெளிப்பாடுகள் தவிர பெரும்பாலான தமிழ் எழுத்தாளர்கள் மௌனம் காத்தனர். மௌனமோ, செயலற்ற தன்மையோ, நடுநிலையோ அல்லது எதிர்ப்பு நிலையோ இவையனைத்தும் இலங்கையின் இன அழிப்புக்குத் துணை செய்வதாகவே முடிந்தன. மூன்று லட்சம் பேர் வதை முகாம்களில் ஆற்றாது அல்லற்பட்டு அழுவதற்கு - இங்குள்ள அரசியல் துரோகங்களோடு, எழுத்தாளர் துரோகமும் இணைந்தது. அரசியல்வாதிகள் எந்தப் பிரச்னையிலும் மக்களுக்கு நேர்மையாயில்லை; அதுபோலவே ஈழப்பிரச்னை யிலும் இல்லை. ஆனால் சமூகத்தின் மனச்சாட்சி என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் எழுத்தாளன், தன் மனச் சாட்சியை இயங்க வைக்காமல் ஏன் செத்துப் போனான்?

பரபரப்பை உண்டு பண்ணும் ஒரு செயலாக இருந்த போதும், புதுமையான ஒரு போராட்டமுறையை கவிஞர் கரிகாலன், தமிழ்ப் படைப்பாளிகள் கூட்டமைப்பின் (விழுப்புரம்) ஜோதி நரசிம்மன் (அடியாள்- தன்வரலாற்று நூலின் ஆசிரியர்), ஒரு யோசனையை முன்வைத்தார்கள். ஒவ்வொரு படைப்பாளியும் எதிர்ப்பின் அடையாளமாய் தனது ஒரு நூலை நெருப்பிட்டுக் கொளுத்துவது என்பது திட்டம். இது ஊடகங்கள் வழியாய் போய்ச் சேர்ந்து உலகின் கவனத்தை ஈர்க்கும். பல்லாயிரக்கணக்கான எம் மக்கள் கொல்லப்படுவது கண்டும், அந்தக் கொடூரத்திலிருந்து மக்களைக் காக்க முடியாத எமது படைப்புக்களால் என்ன பயன் என்ற போர்க்குண அர்த்தம் இதனுள் ஊடாடுகிறது. கவிஞர் கரிகாலனும், ஜோதி நரசிம்மனும் முன்னுரைத்த இந்த முயற்சி படைப்பாளிகள் கண்டுகொள்ளாததால் கைவிடப்பட்டது.

ஈழத்தமிழர் தோழமைக் குரல் சார்பில் படைப்பாளிகள் சிலரும் தமிழுணர்வாளர்கள் பலருமாய் டெல்லி சென்று குரல் எழுப்பினர்.

அங்கொன்றும் இங்கொன்றுமாய் வெளிப்பட்ட எதிர் வினைகளில் ஒரு தொடர்ச்சி இல்லை. ஒரு நேரத்தில் செய்து, கடமை முடிந்தது என ஓய்ந்து விழுகிற மனப்பான்மை தென்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. கிராமங்களில் களையெடுப்பு, கதிரறுப்பு நடத்திய போது, மதியம் வரை மட்டுமே வேலை முடித்து வருவதற்கு "ஒரு நேரக்களை" என்று பேர். அதுபோல் ஒரு நேரக் கடமை யாற்றி, ஈழமக்கள் வதைபடல் நின்றுவிட்டதாக மௌனித்தோம். உலகின் ஆர்வலர்கள், யுத்த எதிர்ப்பாளர், அமைதி விரும்பு வோர் என அனைவரும் "இலங்கையில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொலை - இந்நூற்றாண்டின் கொடூரமான பாதகச் செயல்" என்று கண்டித்தனர்; ஆனால் எழுத்தாளர் களிடமிருந்து இப்படிப்பட்ட உக்கிரக் குரல் எழுந்து வர வில்லை. உயிரோடு கோழிக்கு ரோமம் பறிப்பதுபோல், உயிர் பறிக்கப்படுபவர்கள் தமிழர்கள் என்று கூட அல்ல. உலகின் இன்னொரு சகமனிதர்கள் என்று பார்க்கப்பட்டிருக்க வேண்டும். பார்த்திருந்தால், ஒரு துளி நெருப்பு - பல விளக்குகளை சுடர் விடச் செய்வதுபோல் - பிறமொழி - பிறநாடுகள் என அறிவுலகைப் பேசவைத்திருக்கும்.

இதற்கு முன்பொரு முறையும் தமிழக வரலாற்றில் இது போல் எழுத்தாளர்களின் செயல்பாடற்ற தன்மை நிகழ்ந்தது. கன்னட நடிகர் ராஜ்குமார் வீரப்பனால் கடத்தப் பட்டு வனத்துக்குள் வைக்கப்பட்ட நாட்களில், கன்னடத்தின் முன்னணி இலக்கியவாதிகள் பலர் சென்னை வந்து எங்களைச் சந்தித்து, பழ. நெடுமாறன் போன்றோர்தான் ராஜ்குமாரை மீட்கமுடியும் எனக் கேட்டுக் கொண்டனர். பழ. நெடுமாறனை சந்திக்க கன்னட எழுத்தாளர்களுக்கு துணை செய்தோம். அவர்கள் இனப் பற்றோடு வந்திருந்தனர். கவிஞர் சந்திரகாந்த பாட்டில் முதல் தேவனூரு மகாதேவா வரை வந்து உரையாடினர். இதே எழுத்தாளர்கள் 22.09.2002 அன்று மைசூரில் ஒன்று திரண்டு, தமிழகத்துக்கு காவிரிநீரை திறந்து விடக்கூடாது என முழக்கங்களிட்டு பேரணி நடத்தினர். அதையெல்லாம் தொலைக் காட்சியிலும் பத்திரிகை ஊடகங்களிலும் நாம் கண்டோம். கண்டபின்னும் தஞ்சை, திருச்சி விவசாயிகள் செத்தாலும் பரவாயில்லை என்று தமிழர்களாய் உணர்வதினும், இந்தியர் களாய் உணர்வதே சாலச் சிறந்தது என மேன்மக்களாய் இருக்க முடிவெடுத்தோம்.

மக்களின் நிகழ்ச்சி நிரலில் எது இல்லையோ அது பற்றி உரையாடல் செய்தல், தமிழிலக்கிய உலகின் யதார்த்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்துவருகிறது. குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட சூழலில், குறிப்பிட்ட பிரச்னைகள் கொதிநிலை கொள்கின்றன. கட்டு விரியனாய் இலங்கைப் பாசிசம் உயிர் விழுங்கியபடி நகர்ந்த வேளையில், இலக்கிய தளத்தில் செயற்கையாய் சில பிரச்னை களை எடுத்து மடியில் வைத்துக் கொண்டாடினார்கள். வங்கக் கடலின் இந்தக் கரையில் கலைஞர் உண்ணாநோன்பு இருந்த போது, அதே கடலின் இன்னொரு கரையில் ஆயிரக்கணக்கான மக்கள் மரணத்துக்குள் போய்க் கொண்டிருந்தார்கள். இது போன்ற எள்ளல் முரண்களில் இலக்கியவாதிகளும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

கடந்த 50 ஆண்டுகளில் சில பிரச்னைகள் நிலப் பிளவின் விறுவுகளுக்குள்ளிருந்து பீய்ச்சியடிக்கும் வாயு போல் தமிழ்ச் சமுதாயத்தில் மேலெழுந்து வந்திருக்கின்றன. தலித் விடுதலை, பெண்விடுதலை, சாதிமறுப்பு, சுற்றுச்சூழல் உரையாடல், கலாச்சாரத்தில் மேல் கீழ் மாற்றம், தேசிய இன விடுதலை எனப் பல முன்னணிக்கு வந்துள்ளன. யோசிப்புக்கு அப்பாற் பட்டு இன்னும் சில விடுபட்டிருக்கலாம்.

இப்பிரச்னைகளுக்குள் ஈடுபாட்டுடனான, உணர்வு பூர்வமான இடையீடு அவசியமானது. இப்பிரச்னையில் இடையீடு செய்கிற சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் பலரும் தேசிய இனப் போராட்டத்தை கணக்கில் கொள்ளாமல் ஒதுக்கியே வைக்கின்றனர். இன்றைய புதிய ஒழுங்கமைவில் தேசிய இனப்போராட்டம் முற்றுப்புள்ளியாகி விட்டதென்றோ, கவனிப்புக்குரியதல்லவென்றோ இவர்கள் கருதுகிறார்கள். இனவிடுதலை கோரி நடத்தப்படும் போராட்டம் வர்க்கப் போராட்டத்துக்கு எதிரானது, வன்முறையானது என்று பேசுகிறார்கள். இவ்வாறு உரை நிகழ்த்துபவர்களே, ருசியப் புரட்சியின் போது நடைபெற்றவைகளை வரவேற்கிறார்கள். ருசியப் புரட்சியின்போது நடைபெற்ற ரத்தக் களரியை டால்ஸ்டாய் விமரிசத்தார். "மேதகு கோமான் அவர்களே" - என அவரை விளித்து மார்க்சிம் கார்க்கி பதில் தந்ததையும் அறிவார்கள்.

இவை பற்றியெல்லாம் மேலதிகமாய் அறிந்துள்ள தோழர்களிடம் தொடுக்க வேண்டிய கேள்வி;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருமைத் தோழர்களே இந்த விவாதத்தில் நீங்கள் கோமான் டால்ஸ்டாய் பக்கமா, மார்க்சிம் கார்க்கி பக்கமா?"

தேசிய இனப் பிரச்னையில், மார்க்சிய லெனினியத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு, மார்ச்சிஸ்டு கம்யூனிஸ்ட்டு கட்சியின் கோட்பாட்டின் கீழ் நேரடியாய் நின்றியங்கும் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர், கலைஞர்கள் சங்கத்தினை நோக்கியே இக்கேள்வியை எழுப்புகிறேன்.

## 2

**பு**லம்பெயர்ந்து வாழும் தமிழர்களில் சில படைப்பாளிகள் இலங்கையர்கள் என்ற பெயரில் இங்கு உள் இறங்குகிறார்கள். அவர்கள் புலம்பெயர்ந்தது, அந்நாடுகள் தஞ்சமளித்தது, குடியுரிமையும் வாழ்வும் அளித்தது தமிழர்கள் என்பதால்தானே தவிர, சிங்களர் என்பதால் அல்ல. சிங்களருக்கு புலம்பெயர் அவலமே நிகழ வாய்ப்பில்லை. சிங்களரால் வாழ்வும், உயிரும் உரியப்பட்டு விரட்டப்பட்டவர்கள் என்பதால் மட்டுமே புலம்பெயர் வாழ்வு கிடைத்தது.

இன்று இவர்களுக்கு உரையாட ஒரு புதிய தளம் உருவாக்கப் பட்டிருக்கிறது. புலம் பெயர்ந்த இலங்கையர்கள் ஒன்று கூடல் என்ற பெயரில் அவர்கள் தமிழகத்திலும் ஈழத்திலும் உள்ளிறக்கப்படுகிறார்கள். லஷ்மண் கதிர்காமரின் உறவினர் அகிலன் கதிர்காமர் போன்றவர்கள் இதே வேலையாய் அலைகிறார்கள். புலிகளின் பின்னடைவுக்குப்பின், முஸ்லீம்கள், தலித்துகள், மலையகமக்கள் என புறக்கணிக்கப்பட்ட சிறு பான்மையினர் பற்றி, அவர்தம் உரிமை, அதிகார மீட்பு பற்றி அதிகமாகவே பேசுகிறார்கள். கொலை செய்யப்பட்ட லட்சக் கணக்கானவர்கள் பற்றி, முகாம்களில் வதைபடும் மூன்று லட்சம் மக்கள் பற்றி எந்தக் கரிசனமும் அற்று, இந்த இலங்கையர் வேறொரு திசையில் சீறுகிறார்கள். நாமெல்லோரும் இந்தியர் என்று வரும் இங்குள்ள குரல் போலவே, "நாமெல்லாம் இலங்கையர்கள்" என்று ஒலிக்கிற மஹிந்தாவின் குரலுக்கு அண்டக் கொடுப்பதாய் வெளிப்படுகிறார்கள் இவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹிந்தா கூறுவது போல, இலங்கையர் என்ற அடையாளம் தான் அவசியமென்றால், அது எதன் பொருட்டு என்பதை தோழர் அரிஹரன் தெளிவாக விவரிக்கிறார். (கீற்று இணையம் 2.8.2009)

"ஈழப்போருக்கு பின்னான இலங்கையில், பெரும்பகுதி உழைக்கும் மக்கள் இன அடையாளப்படுத்தப்பட்ட அரசியலில், சிறுபான்மையாகவும் பெரும்பான்மையாகவும் பிளவுபட்டுக் கிடக்கும் இன்றைய சூழலில், இலங்கையில் சிறுபான்மை இனங்களே கிடையாதென்றும் "நாம் அனைவரும் இலங்கை யர்களே" என்றும் மகிந்தா விடும் குரலில், மாறிவரும் பொருளாதாரச் சூழலில் இலங்கையை முற்றுகையிடும் அந்நியப் பொருளாதார ஆர்வங்களைக் காணமுடியும். இவை இன்றைய ஆசிய மூலதனத்தோடான உறவில் பின்னிப்பிணைந்து இலங்கையிலுள்ள இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தமது இலக்குக்கேற்பச் செலுத்துகின்றன.

"இலங்கையர்கள் எனும் தேசிய இன அடையாளத்தை, முழுமொத்த இலங்கை வாழ் இனக் குழுமத்துக்கும் பொருத்தி வைத்து, தமது நிதியாதாரத்தை இலங்கையில் பெருக்கும் பெரு முயற்சியில் மகிந்தாவினது குரலாக ஒலிக்கிறது. இது சிங்கள ஆளும் வர்க்கத்துக்கு மிகச் சாதகமான குறுகிய இலாபங்களை வழங்குவதால், இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களை ஒட்ட மொட்டையடித்து அவ்வினங்களைப் பெரும்பான்மைச் சிங்கள ஆதிக்கத்துள் உள்வாங்கி அழிப்பதற்கு மிக நேர்த்தியான சூழலை உருவாக்குகிறது.

"இன்று புலம்பெயர்ந்து மேற்குலகில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் இலங்கை அரசுக்குச் சார்பான அரசியலை முன்னெடுக்கும் இக்குழுக்கள் பல்வேறு வடிவங்களில் தமது முகமூடியைத் தயார்ப்படுத்தி வைத்திருக்கின்றன. அதனுள் தலித்துக்களுக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகளாக இருந்தாலும் சரி, அல்லது வன்னி மக்களுக்கு உதவும் அமைப்பு களாக இருந்தாலும் சரி, இவையாவும் இலங்கை அரசினது இன்றைய இனஅழிப்பு அரசியல் வியூகத்துக்கு வலுச் சேர்ப்ப தற்கான கூறுகளாகவே இனம் காணத்தக்கன.

"புலம்பெயர் வாழ் இலங்கையரின் ஒன்றுகூடல் என்பது கூட ஒரு கோணல் தனமான வாசகம்தான்.... தமிழர்கள் புலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ந்து வாழும் தேசங்களில் இத்தகைய தலைப்புகளில் நடத்தும் இலங்கையர்கள் என்ன சொல்லவருகிறார்கள் என்பது மிக அவசியமாக இனங் காணத்தக்கது.

"இலங்கையைவிட்டு புலம்பெயர்ந்து மேற்குலகில் வாழும் இலங்கையர்களுக்குள் பற்பல கூறுகள், பிளவுகள் இருக்கும் போது இலங்கையர்கள் எனும் பொது அடையாளம் அவசியமாக இருக்கிறதென்றால், பிறகெதற்குத் தலித்துவ அடையாளம்? பிரதேச அடையாளம்? மதஞ் சார்ந்த குழும அடையாளம்? கலாச்சாரத் தேசியம் பேசுபவர்கள் எதற்காக இலங்கையர்கள் எனும் அடையாளத்துக்குள் ஒரு இனத்தின் தனித்துவத்தையும், உரிமையையும் மறைப்பது? தமிழ்த் தேசிய இன அடையாளத்தை மறுப்பவர்கள் பின்பு தலித்துவ அடையாளத்தை எதற்காகத் தூக்கிப்பிடிப்பது? மலையகத் தேசியத்தையும் இஸ்லாமியத் தேசியத்தையும் பற்றிப் பேசுவது? ஒடுக்குமுறைகள் யாவும் ஒடுக்குறைகளாகவே இருக்கும்போது – அதில் ஒரு கூறை மறைத்துவிட்டு மறுகூறை தூக்கிப்பிடிப்பதால் எந்தவுரிமை யையும் பெற்றுவிட முடியாது. இத்தகைய நடத்தையானது சிங்கள ஆளும் வர்க்கத்தினது கனவை நிறைவேற்றும் கயமைக்குப் பலியான அரசியல் வாழ்வாகும்.

"இலங்கையர்களுக்கு இலங்கைத் தேசியம் என்ற அடையாளந்தான் இருக்கமுடியும். இதன் அடிப்படையில்தான் சிங்கள இனவெறி அரசானது, தமிழர்கள் என்பதற்காக அனை வரையும் இனவொடுக்குமுறைக்குள் உட்படுத்தியது. அங்கே தலித்தோ அல்லது பிரதேசப் பிரஜைகளோ முதலெதிரி களாகவும், சிறப்பாகவும் பார்க்கப்படவில்லை. எனினும் செயற்கையான இலங்கையர்கள் எனும் அடையாளத்துக் கூடாக இயங்கும் அரசியலை முன்னெடுக்கும், இந்த ஓடுகாலிக் கூட்டங்கள் இலங்கை அரசினது கைக்கூலிகளாவார்கள் என்பதை நாம் புரிந்தாகவேண்டும். இவர்களுக்கு முகமூடி தயாரித்து வால்கட்டி இயக்கும் இலங்கையின் இன்றைய முடிவுக்கு, உலக ஏகாதிபத்தியங்களது பிழைப்புவாத அரச தந்திரமே வழிகாட்டுகிறது"

– இவ்வாறு புலம்பெயர் இலங்கையர் எனும் அடையாளத்துடன் இவர்கள் செயற்படும் நோக்கத்தை தோழர் அரிஹரன் தெளிவாகக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையர்கள் எனும் முழக்கத்தூடாக வெளிப்படும் அரசியலை "நுண்மான் நுழைபுலம் கொண்ட" இலக்கிய வாதிகள் கிரகிக்க முடியாமல் போகலாம்! ஆனால் எல்லா வற்றையும் பொருளாதார அரசியலிலிருந்து பார்க்கும் தோழர்கள், ஏகாதிபத்திய நாடுகளின் அரச பயங்கரவாதம் இலங்கை மீது கவிவதை - தமது நலனுக்கேற்ப இலங்கை இனச்சிக்கலைச் செலுத்த முயலும் கயமை அரசியலை ஏன் காண மறுத்தார்கள்?

உடைபடுகிறவர்களது உளவியல், உடைக்கும் உளவியலாக உருவெடுக்கும். மனிதவேட்டைக்கு எதிராக உருவெடுக்கும் எதிர்வினைகள் அப்போது வரையறைக்குட்பட்டதாக அமையாது. உடைபடுபவர்கள் உடைப்பவர்களாக எதிர் வினையைத் தொடங்குவார்களாயின் அவை அழகாக இருக்க வேண்டு மென்ற அவசியமும் இல்லை.

"குழந்தை தோளில் சரிகிறது

நெஞ்சுக்குள் ஏதோ குமைகிறது

நீங்கள் அகதியானது உங்களுக்குச் சரி

என்னை ஏன் அகதியாக்கி, அலைச்சலாக்கி....

மடிபற்றி எழுகிறது கேள்வி"

கவிஞர் கி.பி. அரவிந்தன் பேசுவது போல பால்குடி குழந்தைக்கு கேள்விகள் எழக்கூடாது. அனாதரவாகும் இந்தக் குழந்தைகள் கூட்டம் கூட்டமாய் பெருகி எதிர்காலத்தின் மடி இழுத்துக் கேள்வி எழுப்புகிறபோது, கொடூரம் நாம் எதிர் பார்ப்பதை விட கொடூரமாய் இருக்கும்.

பறையும் கவிதையும் அவரோடு பிறந்தவை என்று சொல்லும்படி, மலையாளக் கவிஞர் கடம்பனிட்ட ராம கிருஷ்ணன், பழங்குடி மக்களின் விடுதலையை இசைத்தபடி அவர்களோடு வலம்வந்தார். இடதுசாரிச் சிந்தனையாளரான அவர் 1996ல் இடதுசாரி சனநாயக முன்னணியின் சட்டமன்ற உறுப்பினர் ஆனார். கேரள மாநில நூலகத் தலைவரும் ஆனார். அதிகாரத்தோடு இணைந்த பின் அவருடைய பறையும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காண பாடலும் இல்லாமல் போயின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயநாடு பழங்குடி இன மக்களின் உரிமைகளுக்காக அதன் தலைவி போராளி சி.கே.ஜானு தலைமையில் இடது கம்யூனிஸ்டு கட்சியின் ஆட்சியை எதிர்த்து இரண்டு மாதங்கள் போராட்டம் நடந்தது. தலைமைச் செயலகத்தைச் சுற்றி குடிசைகள் அமைத்து முற்றுகைப் போராட்டத்தை பழங்குடி மக்கள் நடத்தினார்கள். முன்னர் பழங்குடியின மக்களுக்காக ஆட்சியாளரை எதிர்த்து கடம்பனிட்ட ராமகிருஷ்ணன் எழுதிய "நீங்கள் யோசியுங்கள் நீங்கள் எப்படி ஆனீர்களென்று" என்ற பாடல் முற்றுகைப் போராட்டத்தில் முழங்கிக் கொண்டிருந்தது. அதிகாரத்துக்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சியினர் எப்படி மாறிப் போனார்களென்பதை அவரது இந்தப் பாடல் சொல்லிக் கொண்டிருந்தது. ஆனால் கடம்பனிட்ட ராமகிருஷ்ணனைக் காணோம். பாடலுக்குரியவரே இடதுசாரி அரசியல் அதிகாரத்தில் ஐக்கியமாகி இருந்தார்.

தீராநதி, ஆகஸ்டு 2009.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. முத்துக்குமாரைக் கொலை செய்தோம்

சென்னை சாஸ்திரிபவன் முற்றத்தில் இருபத்தி எட்டு வயது முத்துக்குமார் 2009 சனவரி 29 ஆம் நாள் காலை 10.30 மணிக்கு உடலில் பெட்ரோல் ஊற்றிக் கொண்டு எரிந்தார். நடுவணரசு ஊழியர்கள் பணியில் அமர்ந்திருந்தார்கள். சனவரி 30 காந்தி மறைந்த நாள், சாதாரணமாய் ஒரு துணி கொண்டு மறைப்பதுபோல் அந்த துக்க தினத்தை மூடிவிட்டு, தமிழ்ச் சமுதாயம் தனது இறப்பின் பின்னால் அணி திரள வைத்தார். ஊற்றிக் கொண்டது இரண்டு லிட்டர் பெட்ரோல் அல்ல, எரிந்தது அந்த உடல் மட்டுமேயல்ல; தமிழகம் முழுமையையும் எரிய வைக்கும் பெட்ரோல் கிடங்கு ஒன்று எழுதி வைத்த கடிதத்துக்குள் இருந்தது.

"ஒன்று படடா தமிழா - பெருந்துயர்

ஓடப் படை நடத்து,

செத்துப் போனாலும்

வித்தாகி முளைத்த முத்து"

என தங்களுக்குள் இன்னும் மிச்சமுள்ள தமிழுணர்வை வெளிப்படுத்தி அண்ணா நகர்ப் பகுதி தி.மு.க. இலக்கிய அணியை டிஜிட்டல் பேனர் போடவைத்தது: இயக்கத்தின் தொடக்க நாட்களில் தம் கைவசம் கொண்டிருந்து, இப்போது வேண்டாமென பரணில் வீசியெறிந்திருந்த அல்லது தேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யற்றுப் போன சாதுரிய மொழி நடையைப் பயன்படுத்திட வாய்ப்பு வந்தது.

புதிதாக வருகிற ஒரு கருத்து அல்லது நடைமுறை சமூகத்தின் பொதுப்புத்திக்கு முதலில் அதி தீவிரமாகத் தோன்றும் - பிறமொழிச் சொற்கள் கலக்காமல் முத்துக்குமார் தூய தமிழில் பேசத் தொடங்கிய ஒன்பது பத்தாம் வகுப்புக் கட்டத்தில் மற்ற மாணவர்களுக்கு - மக்களுக்கு அது விசித்திர மாய்த் தோன்றியது. மற்றவர்கள் கேலியும் கிண்டலும் செய்தார்கள். சக மாணவ மாணவியர் என்ன சிந்திக்கிறார் களோ அதையே சிந்தித்து, அவர்களுடைய பாதை எதுவோ, அதிலேயே பயணித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். திரைப் படம், தொலைக்காட்சிப் பெட்டிகளால் மூட்டம் போட்டுப் பழுக்க வைக்கப்பட்ட மாணவ சமுதாயத்துக்குள் முத்துக் குமாரால் தொடர முடியவில்லை. மாணவர்களிடம் நிகழ்த்திய உரையாடல் சராசரி நிலையிலிருந்து முரண்பட்டது. ஆசிரியர் களிடம் முன் வைத்த கேள்விகள் பதில் சொல்லத் திராணி யற்றுத் திரும்பின. மீறல் நோக்கிலேயே போய்க் கொண்டி ருந்ததால், "பிஞ்சில் பழுத்த பழம்" என்ற பட்டம் பதிப்பது எளிதாகியது. பத்தாம் வகுப்பில் அவர் பெற்ற மதிப்பெண் 426. பள்ளியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவரைவிட மூன்று மதிப்பெண் குறைவு. -"கெட்டிக்காரப்பயல் இப்படி வீணாய்ப் போகிறானே" என்றுதான் அப்போதும் பொதுப் புத்திக் காரர்கள் முத்துதித்தார்கள்.

"இவன் நிறையப் பேசுறான், கெட்டுப் போறான்" என்ற கருத்து வீட்டில் உருவாகியிருந்தது. மேலே படிக்க வைக்க வசதி இல்லை. அப்போது ஒரு தமிழாசிரியர் ஜெயமுருகன் - அவனுடைய படிப்புச் செலவினை ஏற்கிறேன் என முன் வந்து வீட்டில் பேசினார். பக்கத்தில் நாலு மாவடி ஊரிலிருந்த மேநிலைப் பள்ளியில் அவனைச் சேர்த்து விட்டார். சிறப்புத் தமிழ்ப் பிரிவு எடுத்தான். தமிழ்நாடு வணிகர் சங்கத் தலைவர் வெள்ளையன் ரூபாய் ஆயிரம் உதவி செய்தார். அவனிட மிருந்து அறிவு பொங்கிய வேளையில் - கெட்டுப் போன கஞ்சி நுரைத்துப் பொங்கி நாற்றம் வீசுவதாக மேநிலைப்பள்ளி ஆசிரியர்கள் நினைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்மார்னிங் சொல்லச் சொன்னார்கள் – முத்துக்குமார் "காலை வணக்கம்" என்றான். ஒரு ஆசிரியர் மோசமாகப் பேசியதால் இனி இந்தப் பள்ளிப் படிப்புக்கு நான் லாயக் கில்லை என்று வெளியேறினான். சுய சிந்தனையாளர்கள் பலர் கண்ட உண்மை அது. புதிய தேடலுக்கு கலாசாலைப் படிப்பு எப்போதும் துணை வந்ததில்லை என்ற உண்மை அது.

நாலுமாவடியிலிருந்து ஏழு கிலோமீட்டர் தொலை விலுள்ள அம்மன்புரத்திலிருந்தார் ஓய்வு பெற்ற ஆசிரியர் தமிழ்மாறன். திலீபன் மன்றம் வைத்து விடுதலைப் போராட்ட உணர்வுகளை இளைய நெஞ்சங்களில் பதிவு செய்து கொண்டி ருந்தார். முத்துக்குமார் அவருடைய நேரடி மாணவனாக ஈழ விடுதலை, அயர்லாந்து விடுதலை பற்றிய செய்திகளை உள்ளிறக்கிச் சேமித்துக் கொண்டிருந்தான். அவர் வீட்டிலிருந்து நூல்களை எடுத்து வருவான். இரவு 11 மணி வரை அவருடன் பேசுவான். இருபது நூல்கள் படிப்பதைவிட இரண்டு மணி நேரப் பேச்சில் பெறமுடியும் என்பது அவனது முடிவு. தமிழ் மாறனின் வசிப்பிடம் ஏழு கி.மீ. தொலைவு, அவர் வீட்டிலே புத்தகங்களுக்குள் வசித்து, அவருடனே நீண்டநேரம் விவாதித்து, இரவு 11 மணிக்கு அவர் வீட்டிலிருந்து புறப்பட்டு நடந்தே வீடு திரும்புதல் வழக்கமாகியது.

அடுத்த கட்டத்தில் தமிழ்மாறன் புரட்சிகர மா.லெ இயக்கத் தொடர்பில் செயல்படுகிறார். முத்துக்குமாரும் அந்தப் புள்ளியில் கால் பதிக்கிறான். மார்க்சிய லெனினிய வாசிப்பு, விவாதம் என முத்துக்குமார் பெருக்கம் கொண்டது இக்காலத்தில் தான். தமிழ்த் தேசிய நலன்களுக்கு முன்னுரிமை கொடுக்கப் படாத மா.லெ இயக்கப் போக்கில் தமிழ்மாறன் முரண் படுகிறார். தமிழீழ விடுதலைப் போராட்டம் உச்சம் கொண்டி ருக்கும் கால கட்டம்; தாயகத் தமிழர் பிரச்னையையும் ஈழத் தமிழர் போரையும் இரண்டையும் "மேக்காப் பூட்டில்" சமமமாகக் கொண்டு செல்ல வேண்டுமென்ற அவர் கருத்து முறிக்கப்பட, அதிலிருந்து வெளியேற வேண்டிய காலம் வந்து சேருகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1

ஒரு கதவு திறந்து வெளிச்சம் கிடைத்ததும் - அது போதுமானதாக இல்லை; இன்னொன்றைத் திறக்க முயலுகின்றன தேடலின் கரங்கள். ஒவ்வொரு வெளிச்சமும் பின் போக பின் போக - புதிய புதிய வெளிச்சங்களைத் தொட முயல்கிறது தேடல்.

எது செய்யப்படக்கூடாதென்று நம்முடைய புத்தியில் ஏற்றப்பட்டிருக்கிறதோ, அதையெல்லாம் உடைக்கிற மீறலை முத்துக்குமாருக்கு கொடையளித்தது இந்தத் தேடல்.

நமது புத்தியில் நிலை கொண்ட கருத்துக்களில் எவை எவைகளுக்கு எந்தக் குப்பைக் கூடையோ, அந்த குப்பைக் கூடைகளை தயார்ப்படுத்தி அவைகளுக்குள் வீசியதின் அடையாளம் அவர் எழுதிய அந்தக் கடிதம்.

ஜனநாயக ஆட்சியில் மகஜர் கொடுப்பது அனுமதிக்கப் பட்ட வடிவம். வேறு எந்த ஒரு போராட்டமும் சட்டம், ஒழுங்கு அமைதிக்குக் கேடு என தீவிரவாத அடையாளங் களாகப் பார்க்கப்படுகின்றன. மகஜர் கொடுப்பது, அமைதி வழி, அறவழிப்போர், அடுத்த தேர்தல் வரை காத்திருப்பு போன்றவை சனநாயகம் பிறக்கும்போது தோன்றிய வேர்ப் புழுக்களாக முத்துக்குமார் கண்டான். நோய்களை மருந்தாக எண்ணுகிற தமிழ் மனப்பான்மையை "ஒட்டு மொத்த தமிழினத்தையும் மகஜர் கொடுக்கும் ஜாதியாக மாற்றிய அந்த மரபை அடித்து உடையுங்கள். மனு கொடுக்கச் செல்பவன் எவனாக இருந்தாலும் அவனை நம்பாதீர்கள். உண்ணா விரதத்தையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு களம் காணுங்கள்"

- சுண்டிக் கேட்கிற முத்துக்குமார் வெளிப்பட்டான்.

பாலஸ்தீன விடுதலைப் போராளி யாசர் அராபத் ஐ.நா மன்றத்தில் முதன் முறையாக அழைக்கப்பட்ட போது "நான் ஒரு கையில் ஆலிவ் கொத்தோடும் (அமைதியின் குறியீடு) இன்னொரு கையில் துப்பாக்கியோடும் வந்திருக்கிறேன்" (I



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

have come with olive branch and a Gun) என்றார். உண்மையில் துப்பாக்கியோடு ஐ.நா. அவையில் பேசிய முதல் மனிதர் அவர்.

ஈழ மக்களின் உரிமைகள் ஒவ்வொன்றாய் பறிக்கப்பட்டு சிங்களப் பேரினத்தால் இன ஒடுக்குமுறை கட்டவிழ்த்து விடப் பட்டபோது காந்தி காட்டிய வழியில் ஆலிவ் கொத்தை மட்டுமே ஏந்தி 28 வருடங்கள் போராடி தமிழினம் தோல்வி கண்டது. காந்தியும் காந்திக்கு முந்திய புத்தனும் ஈழத்தில் தோல்வி கண்டார்கள்.

எவை நாகரிகமானவையாக உயரிய மதிப்பீடுகளாகக் கருதப்படுகின்றனவோ, அவைகளை உடைத்தெறிய முத்துக்குமார் தயங்கவில்லை. அவைகளிடத்தில் புதிய மாற்றை யோசித்தான்.

சித்தர்கள் என்றொரு பெரிய சிந்தனையாளர்கள் குழு இடைக்கால தமிழ்ச் சமுதாயத்தில் இருந்தது. விளங்காத, உருப் படாத பழைய மதிப்பீடுகளை உடைக்கச் சொன்னார்கள். உடைப்புகளின் பதிலியாக மாற்றை முன் வைக்காமல் போனார்கள். மாற்றை முன் வைத்த புரட்சியாளர்களாக மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனினும், இந்தியாவில் அம்பேத்கர், தமிழகத்தில் பெரியாரும் வந்தார்கள். அந்தத் தடத்தில் நடந்த முத்துக்குமார் மகஜர் - அமைதிவழி அறப்போர் என்பதற்கு மாற்றாய் "களம் காணுங்கள்" என்று இளைய தலைமுறை நோக்கி அழைப்புவிட்டது - மகஜர் கொடுக்கும் மரபை உடைத்தெறியுங்கள் என்ற ஒற்றை முன் வைப்பு மட்டுமே அல்ல; பொதுப்புத்தியில் தழுவப்படுகிற அனைத்து புனிதங் களையும், மதிப்பீடுகளையும் உடைத்தெறியக் கூப்பிட்டதின் அடையாளம். "களம் காணுங்கள்" என்ற சொல் - குறிப்பிட்ட காலத்தின் தவிர்க்க முடியாத கட்டளையில் உருவாகிற ஒரு சொல், எய்யப்பட்ட குறியை விட கூடுதலாய் இன்னும் பல அர்த்தங்களையும் கூட்டி வரும் என்பது மெய்யானது.

ஆளும் தலைமைகள், அதிகார வர்க்க குழுக்கள் என்ன சொல்கிறார்களோ அதை நிறைவேற்றுபவர்களாக, உண்மையான அரசுப் பணியாளர்கள் இருக்கவேண்டும் என காந்தி நினைத்ததற்கு மாறானது - முத்துக்குமாரின் அணுகுமுறை.

"இதுவரை காலமும் அப்பாவி மக்களுக்கெதிராக இருந்தாலும் தமிழகத்தின் பெருமைகளில் ஒன்றாகத்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறீர்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த தருணத்தில், நீங்கள் மக்கள் பக்கமாக இருந்தால் மட்டுமே மக்களிடம் இழந்திருக்கிற பெருமையை மீட்டெடுக்க முடியும். ஒரு முறை சக தமிழர்களுக்காக அர்ப்பணித்துப் பாருங்கள். மக்கள் உங்களைத் தங்கத் தட்டில் வைத்துத் தாங்குவார்கள்"

அடக்குமுறையின் பிரதான கருவியான போலீஸ் துறையை நோக்கி மக்களின் அருகிருப்பீர் என அழைக்கிறார். போலீஸ் அதிகார ரூபமாக இருந்தாலும், அதனுள்ளிருக்கும் மானுட நேயத்தைத் தொட்டுப் பார்க்கிறார்.

ஆனால் மனித நேயத்தை, மானுட அன்பை உதறியவர் களாய், அதிகாரத்துக்குக் கீழ்ப்படியும் அடிமைகளாய் போலீஸ் நடந்து கொள்ளவேண்டுமென்பது - காந்தியாரின் கருத்தாக இருந்தது. உலக முழுவதிலுமிருந்து காலனியாதிக்க முறை வேரோடு பிடுங்கி எறியப்படும் எத்தனங்கள் அதிகப்பட்டு வந்த வேளையில், செளரி- செளரா காவல்நிலையத்தினர் சொந்த ரத்தங்களைச் சுட மறுத்து வரலாற்றுக் கடமையை ஆற்றினார்கள். "இன்று பிரிட்டானிய ஆட்சியின் கட்டளைக்கு அடிபணிய மறுப்பவர்கள் நாளைய ஆட்சியில் நான் கட்டளையிடுகிறபோதும் மறுப்பார்கள்" – என மக்களோடு நின்ற செளரி செளரா காவல்துறையினரின் வரலாற்றுக் கடமையை நிராகரித்தது காந்திக்கும், அவர்களை மக்களின் கூட்டாளி களாகப் பாவிக்க நினைக்கும் முத்துக்குமாருக்கும் வெகுதூரம். காந்தி, நமது காலத்திலேயே கடக்கப்பட வேண்டியவர்.

"தமிழனது தோலினால் செய்த செருப்புக்களைப் போடுவது எனது விருப்பம்"

பிந்தனுவெள சிறைக் கைதிகளை, அதுவும் தமிழ்க் கைதி களை வதைத்துக் கொன்றபோது சிங்களக் காடையர்கள் கூறியது இப்படி. கொடூர மனங்களுக்கு எதிராக, தாய்த் தமிழகம் மட்டும் எதிர் வினையாற்றினால் போதாது. பிற மாநிலங்களில் வாழும் தேசிய இனச் சகோதரர்களையும் தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர் களையும் இணையுமாறு முத்துக்குமார் அழைக்கிறார்.

"போராடிக் கொண்டிருக்கும் எங்கள் சகோதரர்களுக்கு உங்கள் ஆதரவும் உள்ளதென மத்திய அரசுக்குத் தெரியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துங்கள். அரசுகளில் அங்கம் வகிக்கக்கூடிய உங்கள் தேசிய இனங்களைச் சேர்ந்தவர்களை எம் கரத்தைப் பலப்படுத்தக் கோருங்கள்" என்கிறார்.

ஒரு தேசிய இனப் படுகொலைக்கு இன்னொரு தேசிய இனச் சகோதரர்கள் கண்டனம் எழுப்பி, கரம் கொடுக்க வேண்டும்; கண்டு கொள்ளாமலிருப்பது வரலாற்றுப் பிழை. தேசிய இனங்களின் உரிமைக்கான போராட்டத்தை ஒவ்வொரு தேசிய இனமும் உணரச் செய்யும் முயற்சியைத் தமிழர் விடுதலைக்கு ஆதரவாக நீங்களும் எம்மோடு நிற்பீராக என அழைத்து முன்வைக்கிறார்.

## 2

தமிழக அரசியல் தலைமைகள் மக்களின் எந்தப் பிரச்னையிலும் நேர்மையாக இல்லை – அது போல ஈழப் பிரச்னையிலும். மக்களுக்கு நேர்மையாக இருத்தல், இயங்குதல் எனும் ஒரே ஒரு முகம் மட்டுமே அரசியல் தளம் முதல் எல்லாத் தளங்களையும் சரி செய்து தமிழ்ச் சமூகத்தை புணரமைக்கும் என்று அவர் கருதினார். அத்தகையதொரு பண்பாட்டுப் புரட்சி தேவை என வலியுறுத்துகிறபோது – "தேனெடுத்தவன் புறங்கையை நக்காமலா இருப்பான்" என்று இவருடைய பம்மலாட்டத்தையெல்லாம் பார்த்தால் ரொம்பவே நக்கியிருப்பார் போலிருக்கிறதே". என்கிறார்.

ஒன்னாம் நம்பர் அரசியல்வாதி முதல்வர் கருணாநிதியைப் பற்றிக் கூறியதாக மட்டுமே இதனைக் கொள்ளாமல், அதையும் தாண்டி விரித்துக்கொண்டு போகலாம். இன்று அரசியல் அதிகாரத்தின் உச்சபட்ச இருக்கையில் அமர்ந்திருக்கிற அவர் மட்டுமல்ல; அதிகார மையங்களுக்குள் செல்லவும், அதனைச் சுவைக்கவும் போட்டியிடும் அரசியல் தலைமைகள் எல்லோரும் வித்தியாசமில்லாமல் மக்களை மக்களாக மட்டுமே வைத்திருவே வழி செய்கிறார்கள். சுய சிந்தனை, சுய செயல்பாடு என்ற வட்டத்துக்குள் பயணிக்கும் திராணியற்றவர்களாக மக்களை வைத்திருப்பதிலேயே கவனம் கொள்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அனைத்துக் கண்களும் இப்போது முல்லைத் தீவை நோக்கி; தாய்த் தமிழகம் உணர்வு பூர்வமாக உங்கள் பக்கம் தான் நிற்கிறது. வேறு ஏதாவது செய்யவேண்டும் எனவும் விரும்புகிறது. ஆனால் என்னசெய்வது, உங்களுக்கு அமைந்தது போன்ற உன்னத தலைவன் எங்களுக்கில்லையே"

முத்துக்குமார் குமுறுகையில் மக்களுக்கு உண்மையா யில்லாத, ஏமாற்றுதலும் வளைத்தலுமாய் மக்களை வசப்படுத்தும் தலைமைகளை உடைக்க எத்தனிக்கும் ஆவேசம் வெளிக் கொட்டுகிறது.

"என் உடலை காவல்துறை அடக்கம் செய்துவிட முயலும். விடாதீர்கள். என் பிணத்தைக் கைப்பற்றி, அதைப் புதைக்காமல் ஒரு துருப்புச் சீட்டாக வைத்திருந்து போராட் டத்தைக் கூர்மையாக்குங்கள்" - என்று தன் உடலை வைத்து அரசியல் செய்யுமாறு வெளிப்படையாய் எழுதியது முத்துக்குமார் மட்டுமேயாகும். பொது அமைதி, பொது ஒழுங்கு என்று ஆதிக்க சக்திகள் நம்முள் இறக்கி வைத்திருக்கும் மதிப்பீடுகளை உடைக்கிற போக்கு இது.

"வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம் உங்கள் கைகளுக்கு மறுபடியும் வந்து சேர்ந்திருக்கிறது. பொதுவாக உலக சரித்திரத்தில் இப்படியெல்லாம் நடப்பதில்லை. கடந்த முறை நடந்தது போல் உங்கள் போராட்டத்தின் பலன்களை சுயநலமிகள் திருடிக் கொள்ள விட்டு விடாதீர்கள்."

*1965* இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை, இன விடுதலைப் போர் என்ற இடத்துக்கு எடுத்துச் செல்லத் தவறி தேர்தல் மூலதனமாக்கிக் கொண்ட தி.மு.க.வின் இழிதகைமையை முத்துக்குமார் சுட்டிக்காட்டுகிறார். *1967* ல் ஆட்சிக்கு வந்தபின் "இனி மாணவர்கள் போராட வேண்டியதில்லை. இந்தி எதிர்ப்பும், தமிழ்ப் பாதுகாப்பும் எங்கள் ஆட்சியின் கையில் பத்திரமாக உள்ளது." என்று போர்க்குணத்தைக் கைவிடச் சொன்ன வஞ்சகம், *30* ஆண்டுகளின் பின்தான் முத்துக்குமார் கடிதம் மூலம் தமிழருக்கு உணர்த்தப்பட வேண்டியதானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

இலங்கை இனப் படுகொலைப் போரை இந்தியா நடத்துகிறது. இந்திய ராடார்கள் அடித்து வீழ்த்தப்பட்டதில் இந்தியப் பொறியாளர்கள் இருவர் காயமுற்ற சேதி வந்த போது, இந்தியாவின் கள்ளத்தனம் அம்பலமாகியது. ஆனாலும் ஈழத் தமிழ்ப் பிரதேசத்தில் நடக்கும் போருக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என இந்தியா பசப்பியது. இதைக் "கள்ள மௌனம்" என்ற சொல்லால் சுட்டுகிறார். இதைவிட கூடுதலாய் "இந்திய ஏகாதிபத்தியம்" என்றொரு மிகச் சரியான சொல்லைப் பயன்படுத்துகிறார் முத்துக்குமார்.

தென்னாசியாவில் தானொரு வல்லரசாக, சீனாவுக்குப் போட்டியாக வளர முயலுகிறது இந்தியா. இந்திய முதலாளிகள், பன்னாட்டு முதலாளிகளாய் மாறி வெகுகாலமாகிவிட்டது. அளவு மாறுதல் குணமாறுதலை உண்டாக்குமென்ற விஞ்ஞான வரையறையின்படி வல்லரசாக மாற வேண்டுமென்பது இந்தியப் பெரு முதலாளிகளின் தீராத ஆசை. அது மக்களின் விருப்பமல்ல; மக்கள் சாதாரண சராசரி வாழ்க்கையே வேண்டுகிறார்கள்.

இந்தியா, சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா, போன்ற நாடுகள் இலங்கையில் ஆதிக்கம் பெற போட்டி போடுகின்றன. இதன் காரணமாய் போட்டி போட்டுக் கொண்டு ஈழத்தில் இனப்படுகொலையை நடத்துகிறார்கள் - இந்திய ஆட்சி யாளர்கள்.

பிரான்ஸ் நாட்டில் சீக்கியர்கள் டர்பன் (தலைப்பாகை) அணிவது தடை செய்யப்பட்டிருந்தது. பிரான்ஸ் அதிபர் சாகோசி இந்திய வருகையில் இது குறித்துப் பேசி, தடையை நீக்க பிரதமர் மன்மோகன் சிங் ஆவண செய்ய வேண்டும் என சீக்கிய அமைப்புக்கள் கோரின. பிப்ரவரி 25 ஆம் நாள் டெல்லி வந்த சாகோசியிடம் பிரதமர் மன்மோகன் சிங் தலைப்பாகைத் தடை பற்றிப் பேசினார். சில சூழ்நிலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர, மற்றபடி தலைப்பாகை அணிவதற்கு தடை ஏதுமில்லை என விளக்கிய சாகோசி, இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

அதிபர் சாகோசி டெல்லி வந்தபோது பிரதமர் மன்மோகன் சிங் மருத்துவமனையில் இருந்தார். மருத்துவ மனையிலிருந்தபோதும், தன்னித்தின் மீதான சிறு கலாச்சாரத் தடையைக் கூடத் தாங்கிக் கொள்ளத் தயாரில்லை. ஆவர் சாகோசியிடம் கோரியது ஒரு இந்தியனாய் அல்ல; ஒரு சீக்கியனாய்; ஆனால் ஒரு நாட்டின் பிரதமர்– தலைப்பாகை விசயத்துக்கு தலைகொடுக்கிற பிரதமர், "குபீர்" விமானங்களின் குண்டு மழையால் ஆயிரமாயிரம் தமிழர்களின் தலைகள் மண்ணில் சிதறிக்கப்படுவது பற்றிக் கவலை கொள்ளவில்லை.

இலங்கையைக் கண்டிக்காத இந்தியாவை –இந்தியாவைக் கண்டிக்காத சர்வதேச சமூகத்தை –தன்னுயிரைப் போக்கிக் கொள்வதின் வழி கண்டித்தது முத்துக்குமார் என்ற இருபத்தி யெட்டு வயது. எந்த வகையில் சொன்னாலும் ஏறாது என்பது – இந்த மரணத்திற்கான குறியீடு. வெளிப்பாட்டுக்கான எல்லா வழிகளும் அடைப்பட்டுவிட்டன – ஒரு விசயம் உரிய இடத்துக்குப் போய்ச் சேருகிறதா, சேர்ந்த விசயம் உரிய முறையில் கவனம் பெறுகிறதா என்ற அம்சங்கள்தான் வெளிப் பாடு என்பதின் பெறுமதியாகும். இந்த அம்சங்கள் இல்லாது போயின், வெளிப்பாடு தன் அர்த்தத்தை இழந்து விடுகிறது. எல்லா வழிகளையும் அடைத்துவிட்ட ஏகாதிபத்தியத்தின் காதுகளில் ஏறாது என்றானபோது, வியட்னாமின் புத்தபிக்கு அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராக முதன்முதலாய் தீக்குளித்து உலகுக்கு உணர்த்தினார்.

தமிழ்ச் சமூகத்துடன், அதன் உளவியலுடன் ஒத்துப் போக முடியாத பல பக்கங்கள் முத்துக்குமாருக்கு. அதன் கரடு தட்டிய பழைய குணப்பாங்கு அவருக்கு ஏற்புடையதல்ல. அவர் தமிழ்த் தேசியச் சிந்தனையுடன் வளர்ந்த மார்க்சியர்; கடந்த 50 ஆண்டுகளாய் தமிழ்ச் சமூகம் வரித்துக் கொண்ட புதிய குணப்பாங்குகள் பழைய குணக்கேடுகளிலும் பெரிதான ஆபத்தை விளைவிப்பவை எனக் கருதினார். திராவிட இயக்கங்களின் கலாச்சாரமும், பெரியார் வழியிலிருந்து நீங்கிய சாதி, மத, அரசியலும், போர்க்குணமற்ற தமிழ்ச் சமூகத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு பண்ணின. இன்று சமூகத்தின் தலையில் இரட்டினக் கால் போட்டு "ஐம்" மென்று உட்கார்ந்து ஆட்டம் போடும் புதிய கேடுகள் – அவரைத் துளைத்து வேதனை செய்யும் வண்டுகளாகின.

1. தேர்தல் அரசியல் - அதற்காய் எதையும் செய்ய எத்தனிக்கும் தமிழர்கள்
2. "மகஜர்" கலாச்சார மரபு
3. சாதி, மத, சமூக, அநீதி
4. போராட்டத்தின் பின்னாலான பலன்களை சுயநலமிகள் அமுக்கிக் கொள்ளல்
5. இந்திய ஏகாதிபத்தியத்தின் மோசடி
6. சர்வதேச சமூகத்தின் பாசாங்கு

தன் கடிதத்தின் இறுதியில் அநீதிகளுக்கெதிரான உங்கள் சகோதரன் என்று முடிக்கிறார். அநீதிகளை எதிர்க்கும் எல்லா சனநாயக வழிகளும் அடைபட்டுவிட – தன் சுதந்திரமான சிந்தனைகள் எவரிடத்தும் போய்ச் சேராத அநாதைகளாகி விடுகிற சாத்தியத்தைத் தடுப்பதற்காக முத்துக்குமார் இந்த வகை மரணவாயிலைத் தேர்வு செய்தார். இவ்வகை மரணத்துக்குள் செல்ல இந்த அநீதிகளால் நிர்பந்திக்கப்பட்டார்.

பிரச்னைகளை சாதி, மதம், குடும்பம், குழு, கட்சிகள் என்ற அளவுகோலிலேயே பேசிப் பேசிப் பழக்கப்பட்டுப் போன நம்மில் பலரும் இதற்குக் காரணமாயிருந்திருக்கிறோம். முத்துக்குமார் எழுப்பியவை சமூகத்தை நோக்கி எழுப்பப் பட்டவை என்று பொத்தாம் பொதுவாக தட்டிவிட்டு விடாமல், நம்மை நோக்கி எய்யப்பட்டவை என்ற பொறுப்புடன் பதில் களும், செயல்களும் காணவேண்டும். கேள்விகளின் வெளியை (Space) விட, பதில்களின் வெளி பல மடங்கு விரிவானது, பொறுப்பானது. தட்டிக்கழிக்கும் "ஜால்சாப்பு"கள், போக்குகளை விட பொறுப்பை ஏற்கும் பதில்களின் வெளியையே அவர் விரும்பினார்.

பகத்சிங்கை தூக்கிலிட்டோம்; முத்துக்குமாரைக் கொலை செய்தோம். புதிதாய்ப் பிறந்த கன்றுக்குட்டிபோல் தளதளப்பும் துடிப்புமாய் தாவத் துடித்த முத்துக்குமாரின் சிந்தனைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கொள்ள இயலாமல் மூச்சை நெரித்து நிறுத்தினோம். முத்துக்குமாரின் சாவு – தீக்குளிப்பு அல்ல. தற்கொலை அல்ல, அது ஒரு கொலை.

கொலைக்குற்றவாளிகள் வரிசையிலே யார், யார்?

முதலில் இந்தியா.

இந்தியத் துரோகத்திற்கு ஆணிவேராய் நின்ற முதல்வர் கருணாநிதி.

அகில இந்திய காங்கிரஸார்.

எந்தப் பிரச்சனையிலும் நேர்மையில்லாதது போல் ஈழப்பிரச்சனையிலும் உண்மையாயில்லாத தமிழக அரசியல்வாதிகள்.

எல்லாவற்றையும் பொதுப்புத்தி என்னும் கரடு தட்டிப்போன பார்வையிலிருந்தே பார்த்தும் செயல்பட்டும் வந்திருக்கிற நீங்களும் நானும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. பூக்கூடையில் மினுக்கும் கத்தி

**2008ம்** ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருதை மேலாண்மை பொன்னுசாமி பெற்றிருக்கிறார்.

விருது அறிவிக்கப் பெற்றதும் அவருடைய முதல் நேர் காணல் குமுதம், (07.01.2009), ச. செந்தில்நாதன் எழுதிய பாராட்டுக் கட்டுரை (தீக்கதிர் – 29.12.08) மூன்றாவதாய் – புத்தகம் பேசுது (சனவரி 2009) இதழில் "கரிசல் காட்டின் வார்த்தை மனிதன்" என்று வந்தன.

எந்த வம்பு தும்பும் பண்ணாமல் மூன்று இதழ்களும் அவருடைய படைப்புகளின் ஆதார அம்சமான சமூக நெருக்கத்தை மேல் நோக்கிக் கொண்டு சென்றிருக்கின்றன. அவரது இலக்கிய மேன்மை யாது என்ற கேள்வி எழுப்பி, வம்பு தும்பு பண்ணுகிறவர்கள் ஏற்கனவே இருக்கிறார்கள்.

சிலநேரங்களில் சில படைப்பாளிகள், சாகித்ய அகாதமி விருது பெறாததினாலேயே தகுதி பெற்றவர்களாகி விடு கிறார்கள். சாகித்ய அகாதமி விருது பெறாதவர்கள் என்று ஒரு தனித் தகுதியே உருவாக்குவது நல்லது. உண்மையில் இந்த விருதைவிட மேலானதும் சாதாரண மக்களின் எழுத்துக் காரன் என்பதுமான உயரிய விருதை மேலாண்மை ஏற்கனவே பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாண்மை பொன்னுசாமி எந்த நிலையிலிருந்தும் எழுத முடியும் என்பதின் சாட்சியாய் நிற்பவர்: எழுத்துக்கு நிலை முக்கியமல்ல என்று எளிய சாதாரணவாழ்வு நிலையிலிருந்து அறிமுகம் பெற்றவர். குமுதம் இதழ் குறிப்பிட்டிருப்பது போல், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த படைப்பாளி. த.மு.எ.ச. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த கலை இலக்கிய அமைப்பு: மேலாண்மை பெற்ற விருது த.மு.எ.ச. முகாமுக்கு கிடைத்ததாக குமுதம் குறிப்பிட்டுள்ளது. அத்தோடு கட்சிக்குக் கிடைத்த முதல் சாகித்ய அகாதமி விருதாகவும் நீட்டிப்பு பெறுகிறது. த.மு.எ.ச போன்ற கலை இலக்கிய அமைப்புகள் சமுதாயம் பற்றிய புரிதலில் இயங்குபவை. அதன் சமுதாயப் புரிதலில் கட்சி அரசியல் முக்கியப் பங்காற்றுகிறது.

அரசியல் நீக்கிய இலக்கிய வெளிப்பாடு என்பதில் எனக்கு நம்பிக்கையில்லை. அவ்வாறு இயங்கவும் ஏலாது. உலையில் போடுமுன் அரிசி கழுவுவது போல் களைந்து நீக்கி விடக்கூடியது அல்ல: அது அரிசிக்குள் அமர்ந்திருக்கும் சத்து போன்றது. ஒவ்வொருவருக்குள்ளும் வேர்கொண்டு இயங்கும் சமூகம் பற்றிய பார்வையே அரசியல்: சமூகத்துள் இயங்கும் எவரொருவரும் மனிதன் தாண்டியும், சுற்றிலும் இயங்கும் நிலைமைகளுக்குத் தொடர்பற்றும் சிந்தித்து விட முடியாது. இந்த உணர்தல்களின் திரட்சியே ஒருவருக்குள் தான் என்ற "சுயம்" உருக்கொள்ளச் செய்கிறது.

தனி இலக்கியக் கோட்பாடு என்ற சிலாகிப்பில், அதை அப்படியாக உருவகிப்பதில் ஒரு அரசியல் ஓடுகிறது. அவ்வாறு பயணிப்பதாக எண்ணுகிற தனி இலக்கியப் பயணிகளுக்கு எதிர்த்திசையில் வெளிப்படையான அரசியலோடும், அரசியல் இயக்கத்தின் வழிகாட்டுதலோடும் இலக்கியப் பங்களிப்பை வழங்கிக் கொண்டிருப்பவர் மேலாண்மை பொன்னுசாமி.

## 1

"இன்றைய யுகத்தில் உலகளாவிய வர்த்தக ஆதிக்கத்தில் யார் ஈடுபட்டாலும், அது ஏகாதிபத்தியம்தான். அதில் இடது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது என்ற வேறுபாடு இல்லை. ஏகாதிபத்திய தத்துவமே அச்சாணியாகிவிடுகிறது".

(ஒற்றை மைய உலக அரசியலில் போரும் சமாதானமும் – மு. திருநாவுக்கரசு)

இந்திய முதலாளிகள் உலகளாவிய வர்த்தகப் போட்டியில் குதித்து, பன்னாட்டு முதலாளியமாக மாறி வெகு காலமாகி விட்டது. பன்னாட்டு முதலாளியம் சொந்த மண்ணையும் சுரண்டும், எல்லைகள் தாண்டியும் விழுங்கும். சுயதிட்டமிடல், அதன்வழி மக்களின் சுய பொருளியல் வாழ்வு என்ற கருதுகோள் தான் மார்க்சிய வழியாகும்: ஆனால் பன்னாட்டு முதலாளிய டாடா நிறுவனம் தனது கார் உற்பத்தி தொழில் அமைக்க, நந்திக்கிராம் வட்டார மக்களது வாழ்வாதாரங் களை அபகரித்துக் கொள்ள அனுமதித்து மக்களின் எதிரியாக முகம் காட்டியது மார்க்சிஸ்ட் அரசு. சமூக அக்கறை கொண்ட கலை இலக்கியவாதி என்ற முறையில் மேலாண்மையோ, அல்லது கலை இலக்கிய அமைப்பு என்ற முறையில் த.மு.எ.ச. வோ அசூயை கொண்டிருக்கவேண்டும். அவர்களிடமிருந்து கிடைத்தது பெருத்த மௌனம்.

"காட் ஒப்பந்தத்தையும் உலகமயமாக்கத்தையும் எதிர்த்துப் போராடிய கம்யூனிஸ்டுகள் பத்தாண்டுகளுக்கு முன் பரிகசிக்கப் பட்டார்கள்" என்று கூறுகிறார் மேலாண்மை. (குமுதம் 07.01.2009) சமூக எழுச்சியோடு இணைந்து செல்கிற எவரும் பரிகசிக்க மாட்டார்கள் என்பது தான் உண்மை: யதார்த்தத்தில் அதே காலகட்டத்தில் நாங்கள் வேறு தளத்தில் நின்று போராடினோம். மக்களின் வாழ்வாதாரத்தை நிர்மூலமாக்கி முளைக்கிற எந்த மெகா திட்டங்களையும் மக்கள் சக்தி எதிர்க்கும் என்கிற போது, நந்திகிராம் முயற்சி உலகமயத்துள் சேர்த்தியா, அல்லது மக்கள் மயத்துள் அடங்குவதா? மக்கள் மயமாக இருந் திருந்தால் மக்களே அதைப் பாதுகாத்திருப்பார்கள். இல்லாத போது, மக்கள் சக்தி எதிர்க்கும் என்பதற்கு தமிழகத்தில் எழுந்து, பீறிடும் கொந்தளிப்புகளுக்கு தலைமைச் சாட்சியாக இருக்கும் நீங்கள் (மீனம்பாக்கம் விமான நிலைய விரிவாக்கம், கந்தர்வ கோட்டை எரிசாராய தொழிற்சாலை) நந்திக் கிராமில் தொண்டையை இறுக்கிக் கொண்டீர்களே, நீங்கள் சுட்டிக் காட்டும் பரிகசிப்பு மறுபடி உங்களை நோக்கியே அரங்கேற வாய்ப்புத் தந்தீர்களே, அது எப்படி?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

சாதிய ஒடுக்குமுறை, மதவெறிக்கு எதிரான உங்களின் போராட்டப் பயணம் தொடரட்டும்: பாராட்டுக்குரியது தொடரவேண்டும். ஆனால் சாதிக்குள், மதத்துக்குள் அடங்கிய தமிழர்கள் தான் முல்லைப் பெரியாறு விவசாயப் பெரு மக்களாக இருக்கிறார்கள். உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கும் பிறகும் முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்ந்த சண்டித்தனம் செய்கிற கேரள இடதுசாரி அரசை கலைஞனின் மனசாட்சி கண்டித்திருக்க வேண்டுமா இல்லையா? இடது சாரி அரசாக இருந்தாலும் தன்னினம் காக்கிற இன உணர்வோடு இருக்கிறபோது, தமிழக விவசாயிகள் வெம்புகிறார்களே என்ற இன உணர்வை கழற்றி வைத்துவிட்டீர்களே எதனால்?.

கேரள அரசு, தனது அரசு என்ற தன்னிலையிலிருந்து பிறக்கிற மௌனம் த.மு.எ.ச.வின் மௌனம். இந்நிகழ்வில் தனது மக்கள் பற்றிக் கவலை கொள்ளாமல் கட்சிக்காக தமிழக விவசாயிகளைப் புறக்கணித்து "இரு மாநில அரசுகளும் பேசித் தீர்க்க வேண்டும்" என்று ஒதுங்குகிற சர்வ தேசியம் கடைசி மூச்சை விட்டுக் கொண்டிருக்கிறது என்று கொள்ள லாமா?

"உலக மயம் இன்று உழவர்களைத் தாக்குகிற போது, அறிவு ஜீவிகள் மௌனம் காக்கிறார்கள்" (குமுதம் 7.1.2009) என்று குறிப்பிடுகிற மேலாண்மை அவர்களே நல்லது! உலக மயம் தாக்கினால் உழவர்களுக்கு வேதனை. கேரளமயம் தாக்கினால், வேதனையில்லை என்ற புதிய அகராதியை நீங்களே எழுதக் கற்றது எப்படி? ஆனால் ஐந்து தென்மாவட்டங்களின் விவசாயிகளின் நெஞ்சாங்குலையை வகிர்ந்து எடுக்கிற காரியத் துக்கு துணைபோகிறபோது, "ஒடுக்கப்பட்ட, ஏழை, எளிய, விவசாயப் பெண்களைப் பற்றி" எழுதியதாக நீங்கள் உரிமை கொண்டாடுவது யதார்த்தமாக இல்லாமல் போய்விடுகிறது.

மார்க்சிய ஒளியில் சமூகத்தின் பிரச்னைகளைப் பார்க் கிறீர்கள். மற்றெல்லாப் பிரச்னைகளையும் மார்க்சிய ஒளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிற நீங்கள், தமிழ்த் தேசிய நலன்கள் என்று வருகிற போது மட்டும் கட்சி ஒளியில் பார்க்கிறீர்கள் என்று தானே அர்த்தம். 1950, 60 – களில் தி.மு.க. வின் வளர்ச்சியும், அந்தக் கால கட்டத்தில் வரலாறு உங்களை விலக்கிவைத்திருந்ததும் தமிழ்த் தேசிய நலன்களை ஒதுக்கிய சர்வதேசியத்தால் விளைந்த வரலாற்றுப் பிழை என்பதை உணருவீர்களா?

ஒரு படைப்பாளி வேறு எவரினும் மேலாய் சுயசிந்தனை யோடு இயங்கக் கடமைப்பட்டவன். சுயசிந்தனையோடு என்பது தன் மக்களுக்குத் தான் நேர்மையாக இருத்தல் என்பதை அடிக்களனாகக் கொண்டது. இந்தச் சுயசிந்தனைதான், சமூகத்தின் மனச்சாட்சியாக படைப்பாளியை இயங்க வைக்கிறது. நாமெல்லாம் இந்த உறவின் அடிப்படையில் இயங்குபவர்கள் என்ற நேயத்தில், தமிழ்த் தேசிய நலன்கள் பற்றி பரிசீலனை செய்யுங்கள் என்று கோரலாமா? மக்கள் என்று குறிப்பிடுவது தேசிய இனம் தான். இந்த மார்க்சிய அளவு கோலை சுலபமாக முறித்துப் போட்டு, முறிந்த குச்சி கொண்டு முதுகு சொறிந்து கொள்கிறீர்கள். ஒடுக்கு முறை என்பது நீங்கள் கருதுவது போல வர்க்கம் என்ற ஒற்றைத் தளத்தில் மட்டும் உருவாவது அல்ல. மதமாக, இனமாக, சாதியாக, பெண்ணடிமைத் தனமாக பல வகைகளில் உருவாகும் என்பதை ஏற்கிறீர்களா?

## 3

தன்னை உலக தாதாவாக வெளிப்படுத்திக் கொள்ள அமெரிக்கா வியட்னாமில் கால் வைத்தபோது, வியட்னாம் விடுதலைக்கு ஆதரவாய் குரல் தந்தீர்கள்.

கியூபா விடுதலைக்குப் போராடியபோது, எழுச்சிக் குரல் உங்களுடையது.

சிலியில் உதித்த முதல் கம்யூனிச ஆட்சியை ஏகாதி பத்தியம் கொலை செய்தபோது – எதிர்ப்பில் உங்களோடு நாங்களும் கரம் கோர்த்தோம்.

ஈராக் மீது நிகழ்த்திய ஆக்கிரமிப்பைக் கண்டித்து


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"பீரங்கிக்கு எதிராய் தூரிகைகள்" என்று நீங்கள் அணி திரட்டியதில் நாங்கள் கலந்து கொண்டிருக்கிறோம்.

இப்போதும் பாலஸ்தீனிய விடுதலைக்காக குரல் கொடுத்து அந்த மக்கள் இஸ்ரேலிய விமானங்களின் குண்டுப் பொழிவால் துவம்சம் செய்யப்படுகிற போது, கண்டித்து அந்த மக்களுக்கு ஊக்கம் கொடுத்து வருகிறீர்கள்.

விடுதலை எழுச்சிகளுக்கு உலகெலாம் ஓடிப் போய் தாங்குற நீங்கள் இங்கிருந்து கூப்பிடுதூரத்தில் இருக்கிற ஈழம் --அங்கு நடைபெறும் விடுதலைப் போராட்டத்தைக் கண்டு கொள்ளாமல் மௌனம் சாதிக்கிறீர்கள். அது தொப்புள் கொடி உறவாகவும் இருக்கிறது. சர்வதேசிய வாதிகளுக்கு தொப்புள் கொடி உறவு தேவை இல்லை போல.

குறிப்பிட்ட இனம் ஒரு நாட்டில் ஒடுக்கப்படும் போது, வேறு நாடுகளிலுள்ள அதை ஒத்த இனம் அல்லது இன்னொரு நாட்டிலுள்ள அதன் சொந்த இனம் ஒடுக்கப்படும் இனத்துக்காக குரல் எழுப்புவது, ஆதரிப்பது இயற்கை. பிரிட்டனில் அயர்லாந்தினர் மீது ஆங்கிலேயர் இன ஒடுக்கு முறை புரிந்த போது, அமெரிக்காவில் வாழ்ந்த அயர்லாந்து இனத்தவர் போராட்டங்களில் ஈடுபட்டார்கள். அயர்லாந்தின் விடுதலைக்காக உதவினார்கள். *(ஐயாயிரம் மைல்களுக்கு அப்பாலிருக்கிற இந்தத் தமிழகத்தில் கூட 1950களில் வளரும் நிலையில் அப்போதிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அயர்லாந்தின் விடுதலைக்காக பேசியதை நான் கண்டிருக்கிறேன்).*

கனடாவில் பிரெஞ்சு இனத்தவர் (கியூபெக்) மீது ஆங்கிலேயர் இன ஒடுக்குமுறை புரிந்தபோது, அதற்கெதிராக சொந்த ரத்தத்துக்காக பிரெஞ்சுக்காரர்கள் குரல் எழுப்பினார்கள். ஆனால் இஸ்ரேல் பாலஸ்தீனத்தில் மீது குண்டு பொழிந்து கொலை செய்வதினும் கூடுதலாய், இலங்கை இராணுவம் தமிழின மக்களைச் சாகடிக்கிற போது, உங்கள் மௌனம் அவர்களைக் கொல்லாமல் கொல்கிறது. மட்டுமல்ல: காங்கிரஸ் கட்சிக்கு அடுத்த நிலையில் நாட்டுப்பற்றோடு விளங்கும் உங்களிடமிருந்து எதிர்ப்புக்குரலும் வருகிறது. *(தமிழ் ஈழத் தனியரசுக்கு ஆதரவுக்குரல்களா? – உ.ரா.வரதராசன் – 19.12.2008 தினமணி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநிர்ணய உரிமை அல்லது விடுதலைப் போராட்டம் என்பதை, ஒரு இனத்தின் மீது இன்னொரு இனத்தின் ஒடுக்கு முறை இருக்கிறதா இல்லையா என்ற அடிப்படையிலிருந்து தீர்மானிக்க வேண்டும். யார் ஆதரிக்கிறார்கள், யார் எதிர்க்கி றார்கள் என்ற பக்கத்திலிருந்து முடிவு காணவேண்டியது அல்ல. அண்மையில் தனி நாடான கொசோவா விடுதலையை, போஸ்னிய விடுதலையை அமெரிக்கா ஏகாதிபத்திய சக்தியும் அதன் தொங்கு சதைகளும் ஆதரிக்கின்றன என்ற காரணத் தினால், அந்த விடுதலைகளுக்கு எதிர்ப்பு நிலை எடுக்க வேண்டியதில்லை. செர்பானிய இனத்தின் ஒடுக்கு முறை இன்னொரு இன மக்கள் மீது இருந்ததா இல்லையா என்பது தான் அடிப்படை.

தென்னாசியாவில் தன்னை ஒரு வல்லரசாக உருவாக்கிக் கொள்ள என்னும் இந்திய விரிவாக்க நலனுக்கு இலங்கைத் தீவு இரு நாடுகளாகப் பிரிவது உகந்தது அல்ல. ஓரரசாக இலங்கை தனது கட்டுப்பாட்டுக்குட்பட்ட பகுதியாக இருக்க வேண்டும் என்பதே இந்திய ஆளும் வர்க்கக் குழுக்களின் விருப்பம். எனவே தமிழீழக் கோரிக்கையை தனது நலனுக்கு ஏற்ற வகையில் ஓரளவு தீர்த்து வைப்பதும், இலங்கைப் பேரின வாதத்துக்குட்பட்டு சமரசமாகப் போக வைப்பதுமான இந்திய அரசின் நிலைப்பாடே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடாக இருக்கிறது. அவ்வாறெனில் இந்தியா வல்லரசாக வளருவதற்கும் இலங்கையின் பேரின ஒடுக்கு முறைக்கும் துணை போகிற நிலையில் இருக்கிறீர்கள். தருக்க ரீதியாக அந்த இடதுக்குத்தானே நீங்கள் தள்ளப்படுகிறீர்கள்.

கவிஞர் இன்குலாப் கூறியதை அப்படியே நான் வழி மொழிகிறேன். "இதே ஒடுக்குமுறை சிங்களவருக்கு நடந்தி ருந்தால்: தமிழர்கள் பெரும்பான்மையாக இருந்து, சிங்கள இனம் சிறுபான்மை இனத்தவராக இருந்து – தமிழர்களால் இந்தக் கொடூரம் நிகழ்த்தப்பட்டிருக்குமானால், அப்போதும் நாங்கள் எதிர்த்துக் குரல் கொடுத்திருப்போம். மார்க்சியவாதி களாகிய நாங்கள் சிறுபான்மை சிங்களர் பக்கமே அப்போது நிற்போம்: சிங்களரின் சுயநிர்ணய உரிமை, அது தடை செய்யப் படும்போது, தனிச்சிங்கள நாட்டு விடுதலைக்காக நாங்கள் துணை நின்றிருப்போம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டம், ஈழத்தமிழர்களின் துயரம், தாயகத் தமிழர்கள் எதிர்வினைகள், இவைகளைக் கண்ட பின்பும் இத்தனையும் உள்விழுங்கி அசையும் மலைப்பாம்பான இந்தியாவுக்கு,

"தனித்தமிழ் ஈழ ஆதரவுக் குரல்கள், தமிழ் மக்களின் மனிதநேய உணர்வுகளை மடை திருப்ப முயல்வதை அனுமதிக்க முடியாது." (தினமணி - 19.12.2008 உ.ரா. வரதராசன் கட்டுரை) என்று துணைக் குரலாய் ஒலிக்கிற போது இனத்துரோகம் என்ற சொல்லால் இதைச் சுட்டுவதோடும் போதாது; மார்க்சிய துரோகம் என்ற சொல்லும் பொருத்தமாய் அமைகிறது.

குமுதம் நேர்காணலில் இதுவரை சிந்தித்தவை பற்றி மட்டுமே நீங்கள் பேசி இருக்கிறீர்கள். நீங்கள் இதுவரை சிந்திக் காதவை பற்றி நாங்கள் பேசுகிறோம். இனிமேலும் தொடர்ந்து நீங்கள் மார்க்சிய ஒளியிலேயே சிந்திக்க வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம்.

"வன்னிப்பகுதி மீதான படையெடுப்பில் அப்பாவி மக்கள் எவரும் கொல்லப்படவில்லை. புலிகள் மட்டுமே கொல்லப்படுகிறார்கள்" என்று ராஜபக்சே கூறுவதை இந்தியா போலவே நீங்களும் நம்பித் தொலைக்கிறீர்கள் போல: புலி களைத் தானே கொல்கிறார்கள்: கொல்லட்டும் என்று ஊமங் காடையாக உட்கார்ந்திருப்பது போல் உங்களது செயல்பாடும் அசைவும் உள்ளன. ஒன்று புரிகிறது. நீங்களும் இந்தியாவின் இடத்தில் இருக்கிறீர்கள்.

இன்று பாசிச இஸ்ரேல், பாலஸ்தீன காஷா பகுதி மீது நடத்துகிற போரை நிறுத்தச் சொல்கிற இந்தியா, அதை விடக் கொடுமையான இலங்கைத் தாக்குதலை ஒப்புக்குக் கூட நிறுத்தச் சொல்லவில்லை.

இரண்டாம் உலக யுத்தத்தில் நாகசாகி, கிரோஷிமா மீது அமெரிக்க வீசிய அணுகுண்டுகளை விட அதிக கதிர்வீச்சும் சேதாரமும் விளைவிக்கக் கூடியவை கொத்துக் குண்டுகள் (Cluster Bomb) "இந்தக் கொத்துக் குண்டுகளை போரில் பயன் படுத்தக் கூடாது" என கடந்த டிசம்பரில் நார்வே, சுவிடன் ஆகிய நாடுகளின் முயற்சியில் போஸ்லேயில் கூடிய 103 நாடுகள் கூட்டத்தில் உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னியில் இடம் பெயர்ந்த அகதிகள் முகாம்கள் மீதே இந்தக் கொத்துக் குண்டுகளை வீசி கொத்துக் கொத்தாய் மக்களைக் கொன்று குவித்திருக்கிறது இலங்கை இராணுவம். இஸ்ரேலை கண்டிக்கிற நீங்களும் இந்தியாவைப் போலவே இந்த கொடுஞ் செயலை கண்டித்ததாய் தெரியவில்லையே.

சிங்கள ராணுவத்தால் துவம்சம் செய்யப்படுகிற தமிழர் களையும், அவர்களுக்காக குரல் கொடுக்கிற தமிழக ஆறு கோடி தமிழர்களையும், உலகத் தமிழர்களையும் விட, சிங்களர் களே முக்கியம் என்று உதவுகிற இந்தியக் கரங்களை முறிக்க எங்களுடன் உங்கள் கரங்களும் எழுமா என்று கேட்கத் தோன்றுகிறது.

கள முனையில் இறந்த பெண் புலிகளின் உயிரற்ற உடலை சிங்களச் சிப்பாய்கள் பாலியல் வன்முறை செய்த புகைப்படங்களும், செய்திகளும், ஒலிக்காட்சிகளும், கண்டி ருப்பீர்கள். சிங்கள சிப்பாய்களே அதைப் படம் எடுத்துக் கொண்டாடி இருக்கிறார்கள். உயிரற்ற உடலை - செத்த பிணத்தை காமவெறி கொண்டு நோக்கும் போது, பெண்கள் கூட அல்ல: பெண்ணுடல்கள் மீது மீறப்பட்ட பாலியல் உரிமைகள் குறித்து பேசப் போகிறோமா? அவர்களை புலி களாகப் பார்க்கவா, தமிழ்ப் பெண்களாகப் பார்க்கவா? கேள்விகளை யாரை நோக்கி வீச? பெண்ணுரிமை பேசும் அனைவரிடமுமா, பெண்கள் பற்றி எழுதுகிற நாம் எல்லோருமே, குறிப்பாக விவசாய பெண்களைப் பற்றி அதிகம் எழுதி இருக்கிற நீங்களுமே பதில் சொல்லி ஆகவேண்டும். அதே நேரத்தில் விடுதலைப் புலிகள் இதுவரை சிங்களத்தி ஒருத்தியையாவது தீண்டியது உண்டுமா, ஆயிரம் பொய்ச் செய்திகள் பரப்பும் சிங்கள வெறியர்கள் கூட அப்படி ஒரு செய்தி சொன்ன வரலாறு உண்டா என்ற கேள்வியையும் எழுப்பி விடை சொல்லி ஆக வேண்டும்.

ஒரு படைப்பாளியின் ஒட்டு மொத்தப் பணியையும் இந்த ஒரு கோணத்தில் இருந்து மட்டுமே மதிப்பிடத் தோன்றுகிறதா என்ற கேள்வி எழலாம்: என்ன செய்வது, கோட்பாடு என ஒன்றிருக்கிறதே! வேறு எவருடையதாக இருந்தாலும், ஒதுக்கித் தள்ளிவிட முடியும். ஆனால் கோட் பாடுகளின் அடிப்படையிலேயே, குறிப்பாக அரசியல் கோட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டின் நிலைப்பாட்டிலேயே படைக்கிற ஒருவரை அந்த அளவுகோல் கொண்டு தானே பார்க்க வேண்டி இருக்கிறது. பூக்கூடைக்குள் கை விட்டால் கத்தி தட்டுப்படுகிறது! கூப்பிய கைகளுக்ககுள் மறைந்திருக்கும் ஆயுதத்தை விட, மலர்களுக்கு நடுவே மறைத்து வைத்திருக்கும் ஆயுதத்திற்கு என்ன பெயர் சூடுவது?

தீராநதி பிப்ரவரி- 2009.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. காலத்தின் அவசியமா உலகத் தமிழ் மாநாடு?

"இது என்ன காலம்?

நுழைவாயிலில் அமர்ந்து கொண்டு

நம் வீடு எங்கேயென்று

தேடிக் கொண்டிருக்கிறோம்"

– பாடியவர் பஞ்சாபிக் கவிஞர் மஞ்சித் திவானா.

வீடு எங்கே, ஊர் எங்கே, நிலம் எங்கே, வாழ்வு எங்கே என்ற மிகப்பெரிய கேள்விகளுடன் துக்கித்து நிற்கிற ஈழத் தமிழருக்காக எழுதப்பட்டது போல் தோன்றுகிறது. சொந்த பூமியிலே முள்வேலிகளுக்குள் அடைபட்டுப் போன தமிழ் அகதிகளின் கேள்வி இது.

சீக்கியரின் புனிதத் தலமான அமிர்தசரஸ் பொற் கோயிலின் மீது தொடுக்கப்பட்ட ஆஃப்ரேஷன் புளூஸ்டார் -தாக்குதலில் அலைக்கழிவுக்குள்ளான சீக்கியரின் நிலை பற்றிப் பேசுகிறது இக்கவிதை.

ஆபரேஷன் புளூஸ்டாரை நடத்தியவர் சாதாரண ஆள் அல்ல; தென்னாசியாவை தன் கட்டுக்குள் வைத்து ஆண்ட பிரதமர் இந்திராகாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திராகாந்தியை சுட்டுக் கொன்ற கொலையாளிகளைப் போற்றிப் பாராட்டி பொற்கோயிலுக்குள் அவர்களின் உருவப்படத்தை வைத்து இன்றளவும் வழிபட்டு வருகிறார்கள். டெல்லியிலும், பொற்கோயிலும் சீக்கியர் மீது நிகழ்த்தப்பட்ட வன்முறைக்கு வருத்தம் தெரிவித்து கொலையாளிகள் படம் முன்பு சோனியா காந்தி மன்னிப்புக் கோரிய சமகால நிகழ்வு – *2009*, மே – நாடாளுமன்றத் தேர்தலின் போது நடந்தது.

பஞ்சாபியருக்கு வரலாறு மீண்டது போல் அல்லது அவர்கள் தமது வரலாற்றை மீட்டெழுதிக் கொண்டது போல், ஈழத்தமிழருக்கு நிகழுமானால், அது உண்மையில் தமிழ்ப் பிரதேசத்தின் வசந்தம் மீட்டெடுக்கப்படும் காலமாக அமையும்.

"ஆயிரம் இட்லர்கள் சேர்ந்தாலும், ஒரு இராசபக்ஷேக்கு ஈடாக மாட்டார்கள். ஆயிரம் கோயபல்ஸ்கள் இணைந்தாலும் ஒரு கோத்தபய ராசபக்ஷேக்கு சமமாக முடியாது".

அமிர்தசரஸில் சோனியாகாந்தியை மண்டியிடச் செய்ததுபோல் ஒப்பில்லாக் குரூரங்களின் உற்பத்தியாளர்களை மண்டியிடச் செய்ய ஈழத்தமிழர்களுக்கு வலிமையில்லை. தமது வலிமையை மறுபடி சேகரித்துக்கொள்ள இத்தனை ஆண்டுகள் என காலவரையறை ஏதும் செய்யமுடியாத பின்னடைவு.

பிணங்களுக்கூடாக ஒரு பெண் தப்பி வந்த ஒரு நிகழ்ச்சியை போராசிரியர் சரசுவதி விவரித்தார். முகாம்களில் ஒவ்வொரு நாளும் பிணங்கள் குவிகின்றன. ஒரு வாரத்தில் *1400* பேர் மரணமடைவதாக ஐ.நா. குறிப்பு ஒன்று கூறுகிறது. சிங்களச் சிப்பாய்களுக்குப் பிணங்களைப் புணருவது பிடிக்கும்; பிணங்களின் நாற்றம் பிடிக்காது. லாரிகளில், வேன்களில் குவியல் குவியலாகப் பிணங்கள் ஏற்றப் படுகையில், வாகன ஓட்டுநருக்குப் பணம் கொடுத்து பிணங்களோடு பிணமாய் மறைந்துகொள்வார்கள். அப்படி தப்பித்து வந்து ஒரு பெண் மீது பதினைந்து பிணங்கள் கிடந்தனவாம். பிணத்தைக் கொட்டுகிற இடத்திலிருந்து தப்பித்து வர, அங்கேயும் பணம் அளக்க வேண்டும். சில லட்ச ரூபாய் செலவில் உயிர் தப்பி வந்தாள் அந்தப் பெண்.

யானையின் கால்பட்ட சிறு புழுப்போல், மொழி, இன, வரலாறு சார்ந்த அடையாள அரசியல்கள் அழிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றன. இத்தகைய அடையாளங்களிலிருந்து எழுகின்ற எதிர்ப்புக் குரல்கள் தேச விரோத, மனித விரோத, பயங்கர வாதக் கருத்துக்களாக அனைத்து அரசுகளாலும் ஏகாதிபத்தி யங்களாலும் பார்க்கப்படுகின்றன. உலகமயமும், உலகமயத்தின் பொருட்டு தேசிய அரசியலை அழிப்பதும், அது பயங்கரவாத ஒடுக்கு முறையாக முன்னிறுத்தப்படும் காலமாக தற்போதைய கால மாற்றம் நிகழ்ந்துள்ளது.

ஏகாதிபத்தியங்களின் உலகமயமாக்கலுக்கும், தேசிய, இன, மொழி, விடுதலைப் போராட்டங்களை பயங்கரவாதமாக உருவகித்து ஒடுக்குவதற்கும் இடையே உள்ள உறவை தேச பக்தி அறிஞர்கள் புரிந்து கொள்ளவில்லை.

அண்மையில் வெளிவந்துள்ள "புதிய தலைமுறை" என்ற வாரஇதழ் (1.10.2009 தலையங்கம்) இந்தியாவை வல்லரசாக ஆக்கிக் காட்ட இன்றைய இளைஞர்களை அழைக்கிறது. "இந்தியா வல்லரசாக மாற வேண்டுமெனில், மாற்றம் எனும் மாமந்திரம் எல்லோரிடையேயும், குறிப்பாக இளைஞர் மத்தியில் பரவவேண்டும். அதற்கு ஏன் மாற்றம் வேண்டும், எதில் மாற்றம் வேண்டும் என்னும் சிந்தனைகள் புதிய தலைமுறை யினரிடையே எழவேண்டும்" – என்று வெளிப்படையாக அறிவிக்கிறது. மாறத் தடையாக இருப்பவைகள் எவை?

"மனித நேயத்தை மீறி ஓங்கி விட்ட இனப்பற்றும், நாட்டின் நலனை விஞ்சிவிட்ட மொழிப் பற்றும்" எனப் பட்டியலிடுகிறது. இனப்பற்று, மொழிப்பற்று போன்ற தேசிய இன அடையாளங்களை நாட்டு நலனுக்கு எதிராகக் காணுகிற இந்தப் பார்வை – ஆளும் வர்க்கக் குழுக்களின், அதிகார நிலையிலிருப்போரின் இயல்பான கருத்தாக இருக்கிறது. தேசிய இன அடையாள அரசியலை மறுக்கிறதோடல்லாமல், அவைகளை நாட்டு நலனுக்கெதிரானதாகக் காட்டுவது அரச பயங்கரவாதம் – புதிய தலைமுறை இதழின் ஆசிரியர் மாலன் என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டும்.

உலகமயம், தாராளமயம் தனியார் மயம் – என்பவை தேசியப் பொருளியல் மீதான ஏகாதிபத்தியப் போர். இந்தப் போரைத்தான், இந்தியா உட்பட அனைத்து விரிவாதிக்க நாடுகளும் அரசியல் தளத்தில் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என அறிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பருந்தின் கால்களில் அகப்பட்ட சின்னஞ் சிறு கோழிக்குஞ்சைத் தீர்த்துக் கட்டுவதற்கு, மிகப்பெரிய சனநாயக நாடான இந்தியா முதல் சீனா, பாகிஸ்தான் வரை அனைத்துப் பயங்கரவாதிகளும் அணிவகுத்தார்கள். சமீபகால வரலாற்றின் ஒப்பில்லா இனப் படுகொலையைச் செய்து முடித்தார்கள். இங்கு இந்தியாவின் பாத்திரம் என்ன?

சிங்களப் பாசிசத்தின் (1) பின்புலமாக (2) துணையாக (3) நேரடி நெறியாளனாக மூன்று கட்டங்களாய் நின்றது இந்தியா. இந்த மூன்று கட்டங்கள் தென்னாசியாவில், ஒரு வல்லரசாக விரிவாதிக்கமாக வளர்ந்து வந்த இந்தியாவின் படிநிலை வெளிப்பாடுகள். இந்திய விருப்பம் சார்ந்தே இலங்கை இயங்க வேண்டும் என்பதின் அர்த்தமாக மட்டுமல்ல. வல்லரசு சார்ந்தே பிறநாடுகள் இயங்க வேண்டுமென்பதின் நிரூபணமும் ஆகிறது. இது போன்று துணைக்கிரகங்கள் சுற்றுவதைத்தான் மாலன் போன்ற தேசப்பற்றாளர்களும், பொக்ரான் அணுகுண்டு சோதனைக்கு வித்திட்ட அப்துல்கலாம் போன்றவர்களும் விரும்புகிறார்கள்.

ஈழப்போர் ஒரு இனமக்களின் அடையாள மீட்புப் போர். 2001– செப்டம்பர் 11– க்குப் பிறகு எந்தவொரு இன மக்களின் எழுச்சிகளையும், விடுதலைப் போராட்டங்களையும், ஒடுக்குமுறைக்கு எதிரான மக்கள் அணிவகுப்பையும் பயங்கரவாதம் எனவும் “பயங்கரவாதத்துக்கு எதிரான போர்” எனவும் தனியொரு கொள்கையாக்கி நடைமுறைப்படுத்த ஏகாதிபத்தியங்களும், இந்திய வல்லாதிக்கமும் தயங்கவில்லை.

இது எவருடைய உலகு?

அரச பயங்கரவாதிகளின் உலகு.

இது என்ன காலம்?

ஈழத்தமிழர்களின் இழவுக் காலம்.

காலத்தைப் பற்றிய கவலையில்லாமல் -

கோவையில் ஒன்பதாவது உலகத்தமிழ் மாநாட்டை அறிவித்திருக்கிறார் முதல்வர் கருணாநிதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

இப்போது வேறொரு புதிய திருப்பம் நிகழ்ந்துள்ளது. உலகத் தமிழாராய்ச்சிக் கழகத்தின் தலைவரான நெபுரூ கொராஷிமாவினதும், அக்கழகத்தினுடையதும் ஒப்புதல் பெறாமலே மாநாடு அறிவிப்புச் செய்யப்பட்டது. அவருடைய ஒப்புதல் பெறுவதற்காக, தனக்கு வேண்டிய, சொன்ன சொல்கேட்கும் பிள்ளைகளான ஒரு தமிழறிஞர் குழுவை அமைத்தார். நெபுரூ கொராஷிமா திட்டவட்டமாக மறுத்து விட்டார். பதிலாக-அதற்கான, முன் தயாரிப்புக்களைச் செய்து முடிக்க கால அவகாசம் தேவைப்படுவதால், 2011, சனவரியில் வைத்துக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார். கருணாநிதிக்கு தேர்தல் அவசரம். ஆகவேதான் ஒன்பதாம் உலகத் தமிழ் மாநாட்டுக்குப் பதில் முதலாவது உலகச் செம்மொழித் தமிழ் மாநாடு என மாற்றி அறிவித்துள்ளார் முதல்வர் கருணாநிதி; பெயர்தான் மாறுகிறதே தவிர - தமிழ் மக்களைத் திசை திருப்பி அரசியல் ஆதாயம் தேடுகிற ஒன்றுதான் நோக்கம்.

"கீழை நாடுகளின் பண்பாட்டு ஆராய்ச்சியாளர்களின் 26-வது காங்கிரஸ் (Congress of Orientalists) 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் டெல்லியில் கூடியது. அதற்கென அழைக்கப் பட்ட பிரதிநிதிகளில் தமிழ் அல்லது திராவிட மொழிகள் அல்லது பண்பாட்டுத் துறைகளின் ஆராய்ச்சியில் ஈடுபட்டி ருப்போர் டெல்லியில் ஒன்றுகூடி இக்கழகத்தை அமைத்தனர். இதன் நோக்கம் தமிழ்மொழி, இலக்கியம், சமயங்கள், தத்துவம் முதலிய பண்பாட்டுத் துறைகளில் ஆராய்ச்சிகளை வளர்ப்ப தாகும். தென்னிந்திய மொழி இலக்கியங்களும், பண்பாடு களும், தென்கிழக்கு ஆசியப் பண்பாட்டு ஆராய்ச்சியும் என்ற அகன்ற எல்லைக்குட்பட்டு, தமிழ்ப் பண்பாட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது அதன் நோக்கம்.

ஆண்டுதோறும் உலகில் எப்பகுதியில் தமிழ் - அல்லது தென்னிந்தியப் பண்பாட்டில் எத்துறையில் ஆராய்ச்சி நடப்பினும் அதனைச் சேகரித்து ஆண்டறிக்கையொன்று வெளியிடுவது. முதல் அறிக்கை கடந்த 5 ஆண்டுகளுக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ச்சிக் குறிப்புகளைத் திரட்டி வெளியிடுவது அந்த அறிக்கை 1966 -க்குள் வெளியிடப்பட வேண்டும்.

இரண்டாவது பகுதித் திட்டமாக 1966-ல் தமிழ்நாட்டுக் கருத்தரங்கை நடத்துவது. (Conference Seminar of Tamil Studies).

இந்த நிறுவனத்திற்கு 'International Association of Tamil' Research (சர்வதேச தமிழ் ஆராய்ச்சிக் கழகம்) என்று பெயரிடப்பட்டது. இக்கழகத்தின் தலைவராக பேராசிரியர் போலியசோவும், தாமஸ் பர்ரோ, எப்.பி.ஜே.கூப்பர், பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், பேராசிரியர் மு.வரதராசனார் ஆகிய நால்வரும் துணைத் தலைவர்களாகவும், கமீல் சுவலபிலும், சேவியர் தனிநாயகமும் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

1965 ஜுன் மாதத்திலேயே உலக முழுவதிலுமுள்ள தமிழாராய்ச்சியாளர்களுக்கு இக்கழகத்தில் சேர அழைப்பு அனுப்பப்பட்டது. தமிழ் ஆராய்ச்சிகளில் ஏதாவது ஒரு துறையில், அல்லது தமிழக வரலாறு, பண்பாடு இவற்றோடு தொடர்புகொண்ட ஒரு துறையில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு நூல்கள் எழுதியவர்களுக்கு மட்டுமே உறுப்பினர்களாகச் சேர்ந்து கொள்ளுமாறு அழைப்பு அனுப்பப்பட்டது. அவ்வாறு உறுப்பினர்களைச் சேர்த்த பிறகு தமிழாராய்ச்சி மாநாட்டுக் கருத்தரங்கை நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

இது பொது மாநாடு அல்ல, கருத்தரங்க மாநாடு என்பதையும், இதில் தரமான ஆராய்க்கிக் கட்டுரைகளைப் பெற்று அவற்றை எழுதியவர்களையே மாநாட்டு உறுப்பினர் களாக அழைத்தல் வேண்டும் என்பதையும் மாநாட்டு அமைப்பாளர்கள் கவனத்தில் கொண்டிருந்தார்கள்".

(இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு - இலக்கிய உலகம் எதிர்பார்ப்பது என்ன?

பேராசிரியர் நா.வானமாமலை - தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் வெளியீடு - 1968)

இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். அப்போது கூட உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு என்றுதான் அறிவிக்கப் பட்டிருந்தது. உலகத் தமிழ்மாநாடு என சுருக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைப் பொது மாநாடாக மாற்றிவிடக் கூடாதென்பதிலும், இது கருத்தரங்க மாநாடு என்பதிலும் ஏற்பாட்டாளர்கள் கவனமாக இருந்தார்கள். பொது மாநாடாக மாற்றி விடுகையில், கொண்டாட்டமாக, ஆர்ப்பரிப்பாக ஆகிவிடுமென்று கருதினார்கள்.

"சர்வதேசத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் (International Association of Tamil Research) முதல் மாநாடு மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் நடைபெற்றது. "தமிழும் தமிழர் பண்பாடும் உலக ஆராய்ச்சியாளர்களால் போற்றப்படுகிற தென்பதற்கு முதல் மாநாடு ஓர் அயல்நாட்டில் நடை பெற்றதும், அம்மாநாட்டில் அயல்நாட்டுப் பிரதிநிதிகள் பலர் பங்கு பெற்றதும் சிறந்த சான்று" - என் நா.வானமாமலை குறிப்பிடுகிறார்.

"1966-ல் தமிழ்மாநாட்டுக் கருத்தரங்கை நடத்த சர்வதேச ஆராய்ச்சிக் கழகம் (International Association of Tamil Research) முடிவெடுத்தது. 1965 - ஜுனிலேயே உலகெங்குமுள்ள தமிழா ராய்ச்சியாளர்களுக்கு இக்கழகத்தில் சேர அழைப்பு விடுக்கப் பட்டது. மாநாடு நடப்பதற்கு ஓராண்டுக்கு முன்னரே ஐந்து முக்கியப் பிரிவுகளில் எழுதப்பட வேண்டிய கட்டுரைப் பொருள் களைப் பிரித்தனர். இவ்வைந்து பிரிவுகளும் தமிழாரா்ய்சிசக்கு தமிழ் வளர்ச்சிக்கு மிக முக்கியமானவை.

1. இலக்கியக் கொள்கைகள், 2. தமிழ்ச்சமூக வரலாறு, 3. தென்கிழக்காசியப் பண்பாடு, 4. மொழி (அமைப்பு வகை மொழியியல், வரலாற்று வகை மொழியியல், திராவிட மொழி களின் ஒப்பீட்டு மொழியியல், தமிழை, தமிழரல்லாதோருக்கு கற்பிக்கும் வழிமுறைகள், தமிழ் மொழியில் பாடங்களைத் தொகுத்தல் எனப்பல), 5. மொழிப்பெயர்ப்புத் திட்டங்கள்.

இத்துறையில் இதுவரை அதிகமான ஆராய்ச்சிகள் நிகழ்ந்த தில்லை. எனவே, புதிய திசைகளில் தமிழாராய்ச்சியைத் திருப்பிவிட இம்முயற்சி பயன்படும் என அமைப்பாளர்கள் கருதினார்கள்.

ஐந்து துறைகள் குறித்து ஒவ்வொரு துறைக்கும் தேவையான இதுவரை வெளிவந்த நூல்களைப் பற்றி முழு ஆராய்ச்சி நடத்துவதும், ஆராய்ச்சிக்கான பயிற்சியை நடத்துவது பற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோசனை கூறுவதும் இக்குழுக்களனைத்தையும் உள்ளடக்கிய ஆராய்ச்சிக் கழகத்தின் முழுப் பணியாகும்".

(இரண்டாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாடு - இலக்கிய உலகம் எதிர்பார்ப்பதென்ன? பேராசிரியர் நா.வானமாமலை)

முதல் உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுக்கான் பணிகள் எவ்வாறு பகுக்கப்பட்டு, எவ்வாறு நிறைவேற்றப்பட்டன என்று காணுவதின் வழியாக, தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் எவை என அறிய முடியும். முக்கியமாக எதிர்காலத் திட்டமிடல்களை முழுமையாகச்செய்ய முடியும்.

முதல் உலகத்தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவில் முடிவுற்ற பின்னர் செய்யத் தவறியதும், செய்ய வேண்டியது மான பணிகளை நா.வா.விரிவாகப் பட்டியலிட்டார். மொழிப் பாதுகாப்பில், மொழிவளர்ச்சியில் உண்மையான ஈடுபாடு கொண்ட ஒரு தமிழ்நெஞ்சத்தின் கருத்துக்களாய் இவை வெளிப்படுத்தப்பட்டன.

இதுபோன்ற தமிழ் அறிஞர்களின் விமர்சனம் கணக்கில் கொள்ளப்பட்டிருந்தால், அண்ணா ஆட்சிக்காலத்தில் நடை பெற்ற இரண்டாவது உலகத்தமிழ் மாநாடு வெற்றியடைந் திருக்கும்.

பொது மாநாடாக நடத்துவதன் வழி பெருந்திரளான மக்களை ஈர்க்க எண்ணி வெகுமயப்படுத்தினர். மக்களுக்கான நிகழ்ச்சிகளாக தனிப்பிரித்துக் கொள்வது சரியானது தான். மக்களிடமிருந்து மொழியைப் பிரித்து தங்களுக்கான ரகசியக் குகையாக தனிமைப்படுத்திக் கொண்டவர்கள் தமிழ் அறிஞர்கள் என்ற பழி முன் இருந்து வந்தது. ஆனால் ஆராய்ச்சி வயல் களுக்கு நீர்தளும்பப் பாய்வதற்கான பணிகள் - ஏற்கனவே பெற்ற அனுபவங்களிலிருந்து திட்டமிடப்பட்டிருக்க வேண்டும்.

இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டுக்கான தயாரிப்புகள் அவ்வாறு நடைபெறவில்லை. மாநாட்டுச் செயற்குழு ஒன்று, முதலமைச்சர் அண்ணா தலைமையில் தமிழறிஞர்களே இல்லாமல், முழுக்க அலுவலர்களைக் கொண்டதாக உருவானது. கலைமகள் இதழின் ஆசிரியர் கி.வா.ஜெகந்நாதன், தாம்பரம் கிறித்துவக் கல்லூரி முதல்வர் தவிர, தமிழ் வாசனை படாத ஒரு குழுவாக அமைக்கப்பட்டது. இக்குழுதான் இம்மாநாட்டின் ஆராய்ச்சி அலுவல்களை வடிவமைத்து வழிநடத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனால் ஆராய்ச்சிக் கருத்தரங்கை நடத்த வழி காட்டுவதற்கு வேறு ஒரு இணைப்புக்குழு தேவை. அக்குழுவில் பலதுறை ஆராய்ச்சியாளர்கள் மட்டும் அங்கம் வகிக்க வேண்டும். அத்தகையதோர் குழுவே ஆராய்ச்சிப் பணியை வழிநடத்த முடியும். அத்தகையதோர் குழு அமைக்கப்பட்டதா என்பது யாருக்கும் தெரியாது. அமைக்கப்பட்டிருந்தாலும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அனுப்ப ஆராய்ச்சியாளர்களுக்கு அழைப்பு அனுப்புவது போன்ற வேலைகளில் அக்குழு ஈடு பட்டதாகத் தெரியவில்லை" – என்று நா.வா.சுட்டிக் காட்டினார்.

"இத்திட்டங்களை நிறைவேற்ற தமிழாராய்ச்சியிலும், இலக்கியங்களைப் பரப்புவதிலும் ஈடுபட்டுள்ள பல்கலைக் கழகங்கள், கலை, இலக்கிய மன்றங்கள், (அமைப்புகள்) எழுத்தாளர் மன்றங்கள், வாசகர் வட்டங்கள், தனி ஆராய்ச்சி யாளர்கள், அனைவருடைய ஒத்துழைப்பையும் பெறுவது அவசியம்" - என்று வழி காட்டினார்.

தமிழ் ஆராய்ச்சியாளர்கள், தமிழறிஞர்களின் வழிகாட்டல் கவனத்தில் கொள்ளப்படவில்லை. சமகாலத்தில் நாம் எழுப்புகிற கேள்விகள் அல்ல இவை. 1968 சனவரியில் சென்னையில் நடந்த இரண்டாம் உலகத் தமிழ்மாநாடும், 1981--ல் எம்.ஜி.ஆர். ஆட்சியில் மதுரையில் நடந்த ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடும், 1995–ல் அம்மையார் ஜெயலலிதா நடத்திய ஏழாம் உலகத் தமிழ் மாநாடும் இக்கேள்விகளுக்கான பதில் களை வழங்காமலே தொடர்ந்தன. உண்மையான தமிழை, தமிழ் வளர்ச்சியைப் புறக்கணித்தன. தனிமனிதப் புகழ்பாடுதலில் ஒடுங்கித் தாழ்ந்தன.

அண்ணாவின் காலத்தில் திட்டமிடப்பட்ட மாநாடு அறிஞர்களின் ஒன்றுகூடல் என்பதிலிருந்து சரிந்து கொண் டாட்டம், ஆர்ப்பரிப்பு என்ற புள்ளிகளுக்கு இறங்கியது. அப்போது மாநாட்டின் முழுப்பொறுப்பையும் ஏற்றிருந்தவர் கருணாநிதி என்று சொல்கிறார்கள்.

தலைநகர் சிலைகளால் நிறைந்தது. சிலை திறப்பு விழாக்கள் இரு நாட்கள் தொடர்ந்தன. பழம் பெருமை பேசும் அலங்கார ஊர்திகள் அணிவகுத்தன. சென்னையின் அனைத்துக் கலை அரங்குகளும் கலை நிகழ்ச்சிகளால் அதிர்ந்தன. சொற் பொழிவு அருவிகள் மக்களை நீராட வைத்தன. கவியரங்க ஆற்றில் மக்கள் நீந்தினார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விழுந்தாலும் விதைபோல விழுவார்

எழுந்தாலும் சூரியன் போல் எழுவார்"

– என்று அண்ணாவைப் பற்றி கவிஞர் அப்துல் ரகுமான் பாடிய கவிதை வரிகள் மாநாடு நடந்த தீவுத்திடலை அதிரச் செய்தது. ஆர்ப்பரிப்பு, ஆரவாரம், கொண்டாட்டம் என்று அப்போது தொடங்கிய கடல்கோள் இந்த ஒன்பதாம் மாநாட்டிலும் தொடர இருக்கிறது.

ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒலிம்பிக் போட்டி. ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை உலக கால்பந்துப் போட்டி. ஆண்டுக்கு ஒருமுறை உழவர் பொங்கல். அதுபோல் உலகத் தமிழ் மாநாடு இத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று வரையறை இருக்கிறதா?

ஒரேயொரு விதிதான்; அண்ணா நடத்தினர்; எம்.ஜி.ஆர். நடத்தினார். மூன்றாவதாய் அம்மையார் நடத்தினர். இப்போது நான் என்ற கணக்கைத் தவிர, வேறு ஆண்டுக் கணக்குகள் எதுவுமில்லை. *1969* முதல் ஐந்து முறை முதலமைச்சராக இருந்தும், ஒரு உலகத்தமிழ் மாநாடு கூட நடத்தியதில்லையே என்ற கணக்கைச் சரிசெய்ய இப்போது ஒன்பதாவது உலகத் தமிழ்மாநாடு.

ஏதொன்றையும், ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருப்பவர் களோடு தொடர்புபடுத்தி ஆய்வுக் கட்டுரைகள் வழங்க தமிழறிஞர்கள் காத்திருக்கிறார்கள். மடியிலேயே தயாராக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆய்வு செய்து தயாரிக்க உலகத்தமிழறிஞர்கள் கால அவகாசம் வேண்டுமென கேட்டதால் ஆறுமாதம் தள்ளிவைக்கப்படுகிறதாம். அறிவிப்பை வெளியிடுகையில் தமிழறிஞர்கள் ஔவை நடராசன், மா. நன்னன், வா.செ.குழந்தைசாமி, கவிக்கோ அப்துல் ரகுமான், கவியரசு வைரமுத்து அருகிருந்தார்கள்.

"கும்பிடுகிற என் கைகள்,

ஒரே கைகள்தான்:

கால்கள் தான் மாறிக் கொண்டே இருக்கின்றன"

என்று பெருமையாய் ஒப்புதல் வாக்குமூலம் தந்தார் ஒரு தமிழறிஞர். இது இவர்கள் தகுதியைச் சுட்டிக்காட்டப் போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தொல்காப்பியர் விருது முதல்விருது கலைஞருக்கு வழங்கப்பட வேண்டும்" – என்று அறிவித்துள்ளார் பேராசிரியர் தமிழண்ணல். எப்படி இருந்த இவர் இப்படி ஆகிவிட்டாரே என்ற வருத்தம் மிஞ்சுகிறது.

"மன்னவனும் நீயோ, வளநாடும் உன்னதோ

உன்னை அறிந்தோ தமிழை ஓதினேன்"

என்று சிலிர்த்தெழுந்த தன்மான உரை - இவர்களுக்கு இன்று இலக்கியச் சுவைக்கான வரிகள் மட்டுமே.

நவீன இலக்கிய வட்டத்தில் இயங்குகிற கலை இலக்கிய வாதிகள், கம்பீரம் காட்டி, கம்பீரமாய் உள்ளடங்கிப் போவதற்கு வாய்ப்பு உள்ளது. அடையாள விரும்பிகள் எல்லா வட்டத்திலும் இருக்கிறார்கள். எனக்குரிய இடம் எங்கே என்று அலைகிறவர்களை, ஏற்கனவே சென்னை சங்கமம் நடத்திய அனுபவம் உள்ளவர்களால் உள்ளிழுத்துக் கொள்வது எளிது.

தனக்குள் வீங்கிப் பெருத்த படைப்பாளுமை பற்றிய மிதமிஞ்சிய கணிப்பில் பிறக்கும் அறிவுச் செருக்கு ஒன்றுண்டு. சிங்கம் போல் கர்ஜிக்கும். யானை போல் பிளிறும். அங்கீகாரத்தின் முன், மு.சுயம்புலிங்கத்தின் யானை போல் அடங்கிப் போகும்.

"ஐம்பது பைசாவுக்கு

கால் மடக்கி,

கையேந்துகிறது

எங்கள் ஊர் யானை"

மொழிவளர்ச்சியை உறுதிசெய்யும் ஆய்வுகளோ, புதிய ஆக்கங்களோ, உருப்படியாய் எதுவொன்றும் நிறைவேறாது என்பதை உறுதிபடச் சொல்வதற்குரிய முக்கிய ஆவணமாக நமக்கு இருப்பது திராவிட முன்னேற்றக் கழகங்களின் (தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க.) பாரம்பரியக் கலாச்சாரமும், கலைஞரின் சுபாவமும்தான்.

கருத்துத் திரட்சியை விட, காட்சிப்படுத்துதலை முதன்மையாகக் கொண்டு வேரூன்றி வளர்ந்த கட்சி தி.மு.க. முதலில் அவர்கள் கற்றலில், எழுதுவதில் தான் தமது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல், சமுதாய சீர்திருத்தப் பணிகளைத் தொடங்கினார்கள். வாசிப்பு, கற்றல் என்ற எழுத்து மொழியைத் தாண்டி அடுத்த கட்டத்தில் நாடகம், திரைப்படம் - போன்ற காட்சி மொழியைப் பிரதானமாக்கினார்கள். அலங்காரம், அடுக்குமொழி, உவமான உவமேயங்கள், நாடகம் போல் பேச்சு விவரிப்பு - என சொற்பொழிவும் காட்சிரூபமாய் ஆக்கப்பட்டது.

"எங்கள் பேச்சுக்கு ஓராயிரம் வாக்குகள் என்றால் எம்.ஜி.ஆர். முகத்துக்கு ஒரு லட்சம் வாக்குகள்" என்று அண்ணா மேடைப்பேச்சில் சொன்னது உண்மையானது.

காட்சி ஊடகமான திரைப்படத்தை முதன்மைப்படுத்தி வளர்ந்தார்கள். அவர்களின் அரசியல் வளர்ச்சிக்கு இந்தக் காட்சி ஊடகம் ஆதாரமானது.

"தணிக்கை செய்யாது திரைப்படங்களை அனுமதித்தால், இரண்டு ஆண்டுகளில் திராவிட நாட்டு விடுதலை பெற்று விடுவேன்" என்று அண்ணா அப்போது பேசுவார். மொழி, நாடு - என்பவைகளில் உண்மையான தீவிர ஈடுபாடு எதுவுமில்லாமல், அர்ப்பணிப்பு உணர்வு ஏதுமற்று ஒரு இயக்கம் இருபது ஆண்டுகளில் ஆட்சியைக் கைப்பற்ற முடிந்ததெனில் கருத்துப் பதிவைவிட காட்சிப் பதிவுகளை நடைமுறைகளாய்க் கட்டியமைத்தது காரணம். வங்கக் கடலின் அந்தக் கரையில் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழ்மக்கள் மரணத்திற்குள் போய்க்கொண்டிருந்த வேளையில், அதே கடலின் இந்தக் கரையில் உண்ணா நோன்பை அரங்கேற்றிக் கொண்டிருந்தது இதனுடைய உச்சம் எனலாம்.

காலம் பற்றிய கணிப்பில்லாமல், ஒன்பதாம் உலகத் தமிழ் மாநாடு எனவும், அதை மாற்றி முதலாவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு எனவும், காலத்தை மக்களின் கண்களிலிருந்து மறைக்க மேற்கொள்ளும் முயற்சியாகும் இது. உலகத்தமிழர் சிவந்த கண்கள் கவனித்துக்கொண்டு இருக்கின்றன.

"இம்மாநாட்டில் எத்துறைகளில் தமிழாராய்ச்சி நிகழும்? தமிழ்மொழி வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும், பண்பாட்டு முன்னேற்றத்திற்கும் எவ்வாறான வழிகளை இம்மாநாடு சுட்டிக்காட்டப் போகிறது? தமிழ்ப் பண்பாட்டின் எவ்வெத் துறைகளில் புதிய புதிய ஆராய்ச்சிகள் துவங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும்? தமிழின் பெருமையையும், தமிழிலக்கியச் செல்வங் களின் சிறப்பையும் உலகறியச் செய்ய எவ்வித முயற்சிகள் இம்மாநாட்டில் மேற்கொள்ளப்படும்? கேரளம், கருநாடகம் ஆந்திரம் முதலிய அண்டை மாநிலங்களின் வரலாறு கலெல்லாம் அண்மையில் எழுதப்பட்டிருக்கும் பொழுது தமிழகத்தின் தொடர்ச்சியான வரலாறு வரையப்படவில்லையே? அது குறித்து வரலாற்றறிஞர்கள் என்ன முயற்சிகளை மேற் கொள்ளப் போகின்றனர்? தமிழை உயர் தனிச் செம்மொழி என்று வானளாவப் புகழும் நாம், அம்மொழியை அயல் நாட்டினர் கற்றுக் கொள்வதற்கு எவ்விதத்தில் உதவிசெய்யப் போகின்றோம்? இம்மாநாடு இத்துறையில் ஏதேனும் வழி காட்டுமா? அயல்நாட்டினர் மொழிகளையும், இலக்கியங்களையும் அறிந்து சுவைப்பதற்கு ஏதேனும் ஏற்பாட்டை இம்மாநாடு செய்யுமா? தமிழர் பண்பாட்டில் சகோதர மொழிகள் பேசு வோர் பண்பாட்டோடு ஒப்பிட்டு, இந்தியப் பண்பாட்டிற்கு தமிழர் பண்பாடு அளிக்கும் சிறப்பான அம்சங்களை எடுத்துக் காட்டுமா? மானிடவியல் துறைகளில் சமூக வளர்ச்சி, சமயதத்துவம், கலைகள் முதலியவற்றில் எல்லாம் எத்தகைய ஆராய்ச்சிகள் புதிதாகத் தொடங்கப்படும்? பண்டைக்காலம் முதல் கடல் கடந்து அயல்நாடுகளோடு தமிழர் கொண்டுள்ள தொடர்புகளின் மூலம் ஏற்பட்ட பண்பாட்டுக் கலப்புகள் பற்றியும் அவை இன்றிருக்கும் நிலைகள் பற்றியும் எத்தகைய ஆராய்ச்சிகள் நிகழும்?”

நம்முடையவை போலவும், சமகாலத்தினுடையவை போலவும் தோற்றம் தருகிற இந்த வினாக்கள்-தமிழுணர்வும் சமுதாய அக்கறையும் கொண்ட நா.வா. போன்றோரது சிந்தையில் தோன்றியவை. இந்தக் கேள்விகளுக்குப் பதில் தரப்படாமலே அண்ணா ஆட்சியில் நடந்த 1968 – மாநாடு முடிந்தது. எம்.ஜி.ஆர் ஆட்சியில் 1981–ன் மதுரை மாநாடும், அம்மையார் ஜெயலலிதாவின் 1995–ன் தஞ்சை மாநாடும் விடைகள் வழங்கப்படாமலே நடந்தேறின. இப்போது கருணாநிதி ஆட்சியில் முதலாவது உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு!

முக்கியமான அம்சம் இன்னுமொன்றுண்டு; அது – கருணாநிதியின் குருதியில் கலந்து விட்டிருக்கிற அரசியல்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இயல்பாகிப் போன "விழாமோகம்", "தன்புகழ் வேட்கை". அது இன்று பல கழகங்களின் அரசியல் கலாச்சாரமாக ஊத்தம் கொண்டுவிட்டது. ஒரு நாலு மீட்டர் பாலம் கூட இன்று தானாகத் திறந்து கொள்ளாது.

## 3

"உலகில் வேறெங்கும் நடக்காத ஒரு கொடூரம் தமிழகத்தின் வெகு அருகில் உள்ள இலங்கையில் நடந்தும், அதற்கான எதிர்ப்பு இந்தியாவிலிருந்து எழவில்லை. இதற்குப் பதில் கேட்கத்தான் இந்தியாவுக்குப் புறப்பட்டேன். ஆனால் விஷா ரத்து செய்யப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டேன்" – என்கிறார் எலீன் ஷான்டர் என்ற பெண்மணி.

இவர் அமெரிக்காவின் புகழ்பெற்ற மருத்துவர், மனித உரிமைப் போராளி. ஈழத் தமிழர்களுக்கு எதிரான கொடுமை களை கடந்த நான்கு ஆண்டுகளாக எதிர்த்துப் பேசிக் கொண்டிருப்பவர். அமெரிக்காவில் ஒரு மாநாட்டில் இவரது உரையைக் கேட்ட கவிஞர் வைரமுத்து – "எலின் ஷான்டர் ஒரு வெள்ளைக்கார தமிழச்சி" என வியந்தாராம். (வைரமுத்து இன்று யாருடைய கைகளுக்குள் ஒடுங்கிக் கிடக்கிறார் என்பதை பலர் அறியச் செய்யவே இந்த வாசகம்).

எலின் ஷான்டரை இந்தியாவுக்கு அழைத்து வந்து, பேசச் செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தியாவுக்கு வர ஒருமாதம் முன்பே விஷா கிடைத்துவிட்டது. புறப்பட இரு நாட்களிருக்கையில், அவரது விஷா இந்திய அரசால் ரத்து செய்யப்பட்டது. தினமணி போன்ற நாளிதழ்கள் முன் பக்கத்தில் தலைப்பிட்டு எழுதின. நரக வேதனை அனுபவிக்கும் தமிழர்களின் குரலை – இந்தியாவுக்குள் ஒலித்து விடுவார் என்று இந்திய அரசின் தண்டு வடத்தில் ஓடிக்கொண்டிருந்த அச்சம்தான் விஷா மறுப்பாக உருவெடுத்தது.

"இலங்கையின் நேரடி நெறியாளனாய் இயங்கியது ஏன் என்று இந்தியாவைக் கேட்பதாக இருந்தேன்" - என்று எலின் ஷான்டர் தெரிவித்திருந்தது ஒரு குமட்டில் (கன்னத்தில்) குத்துவிட்டு மறு குமட்டில் எடுப்பதுபோல் இந்தியாவுக்கு வலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்தது. தமிழகத்தைச் சேர்ந்த ஒரு மத்திய அமைச்சர் விஷா ரத்து செய்யப்படுவதில் முனைப்புக் காட்டினார் என்று எலின் ஷான்டர் தெரிவித்திருக்கிறார்.

தமிழினப் பாதுகாப்பு பற்றி உரை நிகழ்த்த, கேள்வி எழுப்ப வந்தவரே விஷாரத்து மூலம் தண்டிக்கப்படுகிறார். கருணாநிதி வருத்தம் கொள்ளவில்லை; வழக்கமாய் அவர் செய்யும் வித்தையான கடிதம் எழுதியும் கண்டிக்கவில்லை. உலக முழுதும் உள்ள தமிழர்கள் அவரை "தமிழினப் பகைவராகக் காணுவதில், அர்த்தம் உள்ளது; தமிழினத்தைக் காக்காமல், தமிழின மக்கள் பேசும் மொழியைக் காப்பது என்பது எவ்வளவு நூதனமான விளையாட்டு! தமிழை - தமிழர்களிடமிருந்து பிரித்து பூஜையறைப் படமாக உயர்த்தி மாட்டி விட ஒரு மாநாடு. தமிழர்களைக் கொன்றது போலவே அப்படியே தமிழையும் கொன்று விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கு இழைத்தோருக்கு
நன்மை செய்வது
குடும்பத்துக்குள், நட்பு
வட்டத்துக்குள், தனிமனித
உறவில் அவர்களின்
மனதை வெல்ல
சாத்தியப்படலாம். ஆனால்
கூட்டியக்க தன்னிலைகள்
செயல்படும் அரசியல்
அடக்குமுறையின்போது -
ஆக்கிரமிப்பு போரின்போது
- ராணுவ ஆட்சியின்போது
இந்த சாத்வீகம் -
பல்லாயிரக்கணக்கான
மக்களைச் சாவுகொடுக்கும்
'பலித் தத்துவமாகவே'
மாறும்.

சோழன் படைப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியேட்டிவ் ஸ்டுடியோ